# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

## 2017 ஆம் ஆண்டு யூன் மாதம் 16 ஆம் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி

*(2017.06.19 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*

## உண்ணாட்டரசிறை

**2017, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்காக வருமானவரி விதிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கானதொரு சட்டமூலம்**

*நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 200.00** **தபாற் செலவு : ரூபா 165.00**

## பாகம் I
## பிரிவுகளின் ஒழுங்கமைப்பு


| பிரிவுகள் | தலையங்கம் | பக்கம் |
|---|---|---|
| 1. | சுருக்கப்பெயர். | 1 |


## அத்தியாயம் I
## வருமானவரி விதிப்பு


| | | |
|---|---|---|
| 2. | விதிக்கின்ற ஏற்பாடு. | 1 |


## அத்தியாயம் II

## வருமானவரி அடிப்படை
### பகுதி I : வரிவிதிக்கப்படற்பாலதான வருமானம்


| | | |
|---|---|---|
| 3. | வரிவிதிக்கப்படற்பாலதான வருமானம். | 2 |


### பகுதி II : வரிமதிப்பிடற்பாலதான வருமானம்


| | | |
|---|---|---|
| 4. | வரிமதிப்பிடற்பாலதான வருமானம். | 3 |
| 5. | ஊழிய வருமானம். | 3 |
| 6. | வியாபார வருமானம். | 6 |
| 7. | முதலீட்டு வருமானம். | 7 |
| 8. | ஏனைய வருமானம். | 9 |


### பகுதி III: விலக்களிக்கப்பட்ட தொகைகள்


| | | |
|---|---|---|
| 9. | விலக்களிக்கப்பட்ட தொகைகள். | 9 |


### பகுதி IV : கழிப்பனவுகள்


| | | |
|---|---|---|
| 10. | பொதுவான கழிப்பனவு. | 10 |
| 11. | பிரதான கழிப்பனவு. | 12 |
| 12. | வட்டிச் செலவு. | 12 |
| 13. | வர்த்தகக் கையிருப்புக்கான அனுமதிப்பு. | 12 |
| 14. | பழுதுபார்த்தல்களும் சீராக்கல்களும். | 14 |
| 15. | ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திச் செலவுகளும் கமத்தொழிற்சார் ஆரம்பச் செலவுகளும். | 15 |

| பிரிவுகள் | தலையங்கம் | பக்கம் |
|---|---|---|
| 16. | தேய்மான அனுமதிப்புகளும் சமச்சீராக்கும் அனுமதிப்புகளும். | 16 |
| 17. | வியாபாரச் சொத்துக்களையும் பொறுப்புக்களையும் தேறிப் பெறுவதன்மீதான நட்டங்கள். | 17 |
| 18. | நிதிசார் ஆகுசெலவின் கழிக்கத்தக்க தொகை. | 18 |
| 19. | வியாபார அல்லது முதலீட்டு நட்டங்கள். | 19 |

## அத்தியாயம் III
## வருமானவரி அடிப்படையைக் கணக்கிடுதல்

### பகுதி I : கணக்கிடும் முறை

| | | |
|---|---|---|
| 20. | வரிமதிப்பீட்டாண்டிலான மாற்றம். | 22 |
| 21. | கணக்கீட்டு முறை. | 22 |
| 22. | பண அடிப்படையிலான கணக்கீடு. | 24 |
| 23. | ஒன்றுதிரளும் அடிப்படையிலான கணக்கீடு. | 24 |
| 24. | அறவிடமுடியா கடன்களுட்பட தொகைகளின் எதிர்மாறாக்குகை. | 27 |

### பகுதி II : நீண்டகால ஒப்பந்தங்கள்

| | | |
|---|---|---|
| 25. | நீண்டகால ஒப்பந்தங்கள். | 28 |
| 26. | வெளிநாட்டு நாணயமும் நிதிசார் சாதனங்களும். | 30 |
| 27. | ஒரு கொடுப்பனவை அல்லது தொகையைக் கணித்தல். | 32 |
| 28. | நேரடியற்ற கொடுப்பனவுகள். | 33 |
| 29. | கூட்டாகச் சொந்தமாக வைத்திருக்கப்பட்ட முதலீடுகள். | 33 |
| 30. | நட்டஈடும் அறவீட்டுக் கொடுப்பனவுகளும். | 34 |
| 31. | ஆண்டுத்தொகைகள், தவணைப்பண விற்பனைகள் மற்றும் நிதிக் குத்தகைகள். | 34 |
| 32. | இஸ்லாமிய நிதிக் கொடுக்கல்வாங்கல்கள். | 37 |
| 33. | இணையாளர்களுக்கிடையே கட்டுப்பாடற்ற நியமமும் ஒழுங்கேற்பாடுகளும். | 37 |
| 34. | வருமானத்தைப் பிரித்தல். | 38 |
| 35. | வரித்தவிர்ப்பு முறைமைகள். | 39 |

## அத்தியாயம் IV
## சொத்துக்களும் பொறுப்புக்களும்

### பகுதி I : ஈட்டுகைகளையும் நட்டங்களையும் கணக்கிடுதல்

| பிரிவுகள் | தலையங்கம் | பக்கம் |
|---|---|---|
| 36. | ஈட்டுகைகளையும் நட்டங்களையும் கணக்கிடுதல். | 42 |
| 37. | ஒரு சொத்தின் ஆகுசெலவு. | 43 |
| 38. | பெறப்பட்ட பிரதிபயன். | 44 |
| 39. | தேறிப்பெறுகை. | 45 |
| 40. | பொறுப்புக்கள். | 47 |
| 41. | தொகைகளின் எதிர்மாறாக்குகை, கணிப்பு மற்றும் அவற்றுக்கான நட்டஈடு. | 48 |

**பகுதி II : சொத்துக்களைத் தேறிப்பெறுதல்**

| | | |
|---|---|---|
| 42. | வர்த்தகக் கையிருப்பினதும் ஏனைய மாற்றீட்டுச் சொத்துக்களினதும் ஆகுசெலவு. | 49 |
| 43. | சொத்து வைத்திருக்கையுடன் தேறிப்பெறுகை. | 51 |
| 44. | வாழ்க்கைத்துணைக்கு அல்லது முன்னைய வாழ்க்கைத்துணைக்குச் சொத்தைக் கைமாற்றுதல். | 51 |
| 45. | இறப்பின்மீது சொத்தைக் கைமாற்றுதல். | 52 |
| 46. | ஓர் இணையாளருக்கு அல்லது பிரதிபயன் எதுவுமின்றி சொத்தைக் கைமாற்றுதல். | 52 |
| 47. | மாற்றீட்டுடன் சுய இச்சையின்றி சொத்தின் தேறிப்பெறுகை. | 55 |
| 48. | தனிவேறாக்கலின்மூலமான தேறிப்பெறுகை. | 56 |
| 49. | பிணையம், நிதிக்குத்தகை அல்லது தவணைப்பண விற்பனை என்றவகையான கைமாற்றுகை. | 57 |
| 50. | மூலதனச் சொத்துக்களின் கைமாற்றுகையைப் பதிவுசெய்தல். | 58 |
| 51. | செலவுத்தொகைகளைப் பிரித்தொதுக்குதலும் பெறப்பட்ட பிரதிபயனும். | 59 |

அத்தியாயம் V

**ஆட்களின் வகைகள்**

**பகுதி I : தனியாட்களும் உருவகங்களும்**

| | | |
|---|---|---|
| 52. | தகைமையளிக்கின்ற கொடுப்பனவுகளும் நிவாரணங்களும். | 59 |

**பகுதி II : பங்குடைமைகள்**

| | | |
|---|---|---|
| 53. | பங்குடைமைகள். | 60 |
| 54. | பங்குடைமை வருமானம் அல்லது நட்டம். | 62 |
| 55. | பங்காளர்களுக்கு வரிவிதித்தல். | 63 |

| பிரிவுகள் | தலையங்கம் | பக்கம் |
|---|---|---|
| 56. | பங்குடைமை அக்கறைக்கான செலவுதொகையும் பெறப்பட்ட பிரதிபயனும். | 64 |

**பகுதி III : நம்பிக்கைப்பொறுப்புக்கள்**

| | | |
|---|---|---|
| 57. | நம்பிக்கைப்பொறுப்புக்களுக்கான வரிவிதிப்பு. | 65 |
| 58. | பயனுகரிகளுக்கான வரிவிதிப்பு. | 68 |
| 59. | கூறு நம்பிக்கைப்பொறுப்புக்களுக்கான வரிவிதிப்பு. | 69 |

**பகுதி IV : கம்பெனிகள்**

| | | |
|---|---|---|
| 60. | கம்பெனிகளுக்கான வரிவிதிப்பு. | 70 |
| 61. | பங்குதாரர்களுக்கான வரிவிதிப்பு. | 71 |
| 62. | வரியனுப்புகை. | 71 |

**பகுதி V : உருவகங்கள்**

| | | |
|---|---|---|
| 63. | உருவகங்களுக்கும் உறுப்பினர்களுக்கும் இடையேயான சொத்துக் கையாளுகைகள். | 72 |
| 64. | கட்டுப்பாட்டிலான மாற்றம். | 72 |

அத்தியாயம் VI

**விசேட கைத்தொழில்கள்**

**பகுதி I : பெற்றோலியத் தொழிற்பாடுகள்**

| | | |
|---|---|---|
| 65. | பெற்றோலியத் தொழிற்பாடுகள். | 74 |

**பகுதி II : நிதிநிறுவனங்களும் காப்புறுதி உருவகங்களும்**

| | | |
|---|---|---|
| 66. | வங்கித்தொழில். | 76 |
| 67. | காப்புறுதித் தொழில். | 76 |

**பகுதி III : அரசசார்பற்ற ஒழுங்கமைப்புகளும் தரும நிறுவனங்களும்**

| பிரிவுகள் | தலையங்கம் | பக்கம் |
|---|---|---|
| 68. | அரசசார்பற்ற ஒழுங்கமைப்புகளும் தரும நிறுவனங்களும். | 80 |

## அத்தியாயம் VII

### சர்வதேசம்

### பகுதி I : வதிவும் மூலங்களும்

| | | |
|---|---|---|
| 69. | வதிவுள்ள ஆட்கள். | 81 |
| 70. | வதிவிட மாற்றம். | 84 |
| 71. | வருமான மூலமும் வெளிநாட்டு நட்டங்களைப் புறத் தொதுக்குதலும். | 84 |
| 72. | நேரடியாக உள்ளடக்கப்படவேண்டிய மூலமும் கழிக்கப்படவேண்டிய தொகைகளும். | 86 |
| 73. | கொடுப்பனவுகளின் மூலம். | 87 |
| 74. | வெளிநாட்டு மூலம். | 92 |

### பகுதி II : இரட்டை வரிவிதிப்பு உடன்படிக்கைகள்

| | | |
|---|---|---|
| 75. | இரட்டை வரிவிதிப்பு உடன்படிக்கைகளும் பரஸ்பர நிருவாக உதவி உடன்படிக்கைகளும். | 92 |

### பகுதி III : கைமாற்றல் விலையிடுதல்

| | | |
|---|---|---|
| 76. | இணையாளர்களுக்கிடையேயான சர்வதேசக் கொடுக்கல் வாங்கல்களிலிருந்தான இலாபங்களும் வருமானமும் அல்லது நட்டமும். | 94 |
| 77. | இணையாளர்களுக்கிடையேயான கொடுக்கல் வாங்கல்களிலிருந்தான இலாபங்களும் வருமானமும் அல்லது நட்டமும். | 101 |
| 78. | பிணக்குத்தீர்த்துவைத்தற் குழாம். | 106 |
| 79. | தலைமையலுவலகச் செலவினம். | 108 |

### பகுதி IV : இரட்டை வரிவிதிப்பிலிருந்தான நிவாரணம்

| | | |
|---|---|---|
| 80. | வெளிநாட்டு வரி வரவு. | 108 |
| 81. | வெளிநாட்டு வரி வரவைக் கணக்கிடுதல். | 108 |

பிரிவுகள் தலையங்கம் பக்கம்

## அத்தியாயம் VIII
### வரிசெலுத்துகை நடவடிக்கைமுறை

#### பகுதி I : செலுத்துகைகளுக்கான முறைகளும் காலமும்

82. செலுத்துவதற்கான முறைகளும் காலமும். 110

#### பகுதி II : பிடித்துவைத்தல்மூலம் செலுத்தப்படற்பாலதான வரி

83. தொழில்தருநர்களினாலான பிடித்துவைத்தல். 111
84. முதலீட்டு விபரத்திரட்டுகளிலிருந்தான பிடித்துவைத்தல். 112
85. சேவைக் கட்டணங்களிலிருந்தும் ஒப்பந்தக் கொடுப்பனவு களிலிருந்துமான பிடித்துவைத்தல். 113
86. பிடித்துவைக்கப்பட்ட அல்லது பிடித்துவைக்கப்பட்டதாகக் கொள்ளப்பட்ட வரிபற்றிய கூற்றுக்களும் அதன் செலுத்துகைகளும். 115
87. பிடித்துவைத்தற் சான்றிதழ்கள். 117
88. இறுதிப் பிடித்துவைத்தற் செலுத்துகைகள். 118
89. இறுதியானதற்ற பிடித்துவைத்தல் வரிக்கான வரவு. 120

#### பகுதி III : தவணைப்பணத்தின்மூலம் செலுத்தப்படற்பாலதான வரி

90. காலாண்டுத் தவணைப்பணத்தின்மூலம் வரிசெலுத்துதல். 121
91. செலுத்தப்படற்பாலதான மதிப்பிடப்பட்ட வரிபற்றிய கூற்று. 124
92. செலுத்தப்படற்பாலதான மதிப்பிடப்பட்ட வரிபற்றிய கூற்று தேவைப்படாது. 125

#### பகுதி IV : வரிமதிப்பீட்டின்மீது செலுத்தப்படற்பாலதான வரி

93. வருமானம் மற்றும் மூலதன ஈட்டுகைகள் பற்றிய விபரத்திரட்டு. 126
94. வருமானம்பற்றிய விபரத்திரட்டு தேவைப்படாதவை. 129
95. வரிமதிப்பீடு. 130
96. முதலீட்டுச் சொத்துக்கள் தேறிப்பெறப்படுவதன் மீது பங்குடைமைகளினாலும் நம்பிக்கைப் பொறுப்புக்களினாலும் வரி செலுத்தப்படுதல். 130

*பிரிவுகள்* *தலையங்கம்* *பக்கம்*

பாகம் II

அத்தியாயம் IX

**நிருவாக ஏற்பாடுகள்**

**பகுதி I : இச்சட்டத்தின் நிருவாகம்**

| | | |
|---|---|---|
| 97. | அலுவலர்கள். | 131 |
| 98. | தத்துவங்களைக் கையளித்தல். | 132 |
| 99. | உண்ணாட்டரசிறை ஊக்குவிப்பு நிதியம். | 134 |
| 100. | அந்தரங்கத்தன்மை. | 134 |
| 101. | தகவலளிப்போர். | 137 |

**பகுதி II : வரிசெலுத்துநர் பதிவும் வரிசெலுத்துநர் இனங்காணல் இலக்கங்களும்**

| | | |
|---|---|---|
| 102. | பதிவு. | 138 |
| 103. | வரிசெலுத்துநர் இனங்காணல் இலக்கங்கள். | 139 |

**பகுதி III : பகிரங்க விதிப்புகள்**

| | | |
|---|---|---|
| 104. | பிணிக்கின்ற பகிரங்க விதிப்புக்கள். | 140 |
| 105. | ஒரு பகிரங்க விதிப்பை ஆக்குதல். | 141 |
| 106. | ஒரு பகிரங்க விதிப்பை மீளப்பெறுதல். | 141 |

**பகுதி IV: தனிப்பட்ட விதிப்புக்கள்**

| | | |
|---|---|---|
| 107. | தனிப்பட்ட விதிப்புக்கள். | 142 |
| 108. | ஒரு தனிப்பட்ட விதிப்புக்கான விண்ணப்பத்தை மறுத்தல். | 144 |
| 109. | ஒரு தனிப்பட்ட விதிப்பை ஆக்குதல். | 145 |
| 110. | ஒரு தனிப்பட்ட விதிப்பை மீளப்பெறுதல். | 146 |
| 111. | தனிப்பட்ட விதிப்புக்களை வெளியிடுதல். | 147 |

**பகுதி V : தொடர்பாடல்கள், படிவங்கள் மற்றும் அறிவித்தல்கள்**

| | | |
|---|---|---|
| 112. | வரிசெலுத்துநருடனும் ஏனைய ஆட்களுடனுமான தொடர்பாடல்கள். | 147 |
| 113. | இலத்திரனியல் வரிமுறைமையைப் பயன்படுத்துதல். | 149 |

| பிரிவுகள் | தலையங்கம் | பக்கம் |
|---|---|---|
| 114. | படிவங்களும் அறிவித்தல்களும். | 150 |
| 115. | அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள். | 151 |
| 116. | குறைபாடு செல்லுபடியாந்தன்மையைப் பாதிக்காது. | 151 |
| 117. | பிழைகளை நிவர்த்திசெய்தல். | 152 |
| 118. | வரிசெலுத்துநரின் தகவலுக்கான உரிமை. | 152 |
| 119. | வருமதியான தேதிகள். | 153 |


## அத்தியாயம் X
**பதிவேடுவைத்திருத்தலும் தகவல் சேகரித்தலும்**

| | | |
|---|---|---|
| 120. | கணக்குகளும் பதிவேடுகளும். | 153 |
| 121. | நிதிநிறுவனங்களின் கடப்பாடுகள். | 155 |
| 122. | தகவல், சொத்துக்கள் மற்றும் காணிக்கான அணுக்கம். | 155 |
| 123. | தகவல் பெறுவதற்கான அறிவித்தல். | 160 |
| 124. | ஆணைப்பத்திரத்துடன் தேடுகையிடுதலும் கைப்பற்றுதலும். | 162 |
| 125. | ஆணைப்பத்திரத்துடன் தேடுகையையும் கைப்பற்றுகையையும் ஆணைப்பத்திரமின்றித் தேடுகையையும் நிறைவேற்றுதல். | 164 |


## அத்தியாயம் XI
**வரி விபரத்திரட்டுகள்**

| | | |
|---|---|---|
| 126. | வரி விபரத்திரட்டுகள். | 167 |
| 127. | அறிவித்தலைக் கோப்பிடும்படி தேவைப்படுத்துதல். | 168 |
| 128. | விபரத்திரட்டானது முறையான அதிகாரியினால் கொடுத்துதவப் பட்டதாகக் கருதப்படுதல். | 168 |
| 129. | தகவல் விபரத்திரட்டுகள். | 169 |
| 130. | விபரத்திரட்டுகைகளைக் கோப்பிடுவதற்கான காலநீடிப்பு. | 169 |
| 131. | முறையாகக் கோப்பிடப்பட்ட வரி விபரத்திரட்டு. | 169 |


## அத்தியாயம் XII
**வரி மதிப்பீடுகள்**

| | | |
|---|---|---|
| 132. | சுய வரிமதிப்பீடுகள். | 169 |
| 133. | செலுத்தத்தவறிய வரிமதிப்பீடுகள். | 170 |
| 134. | முற்கூட்டிய வரிமதிப்பீடுகள். | 172 |
| 135. | திருத்தப்பட்ட அல்லது மேலதிக வரிமதிப்பீடுகள். | 174 |
| 136. | சுய வரிமதிப்பீடொன்றுக்கான திருத்தமொன்றைச் செய்வதற்கான விண்ணப்பம். | 177 |

*பிரிவுகள்* *தலையங்கம்* *பக்கம்*

## அத்தியாயம் XIII
### ஆட்சேபனைகளும் மேன்முறையீடுகளும்

| | | |
|---|---|---|
| *137.* | ஆட்சேபனைகள். | *178* |
| *138.* | சட்டம் மேலோங்கல். | *179* |
| *139.* | நிருவாக மீளாய்வு. | *179* |
| *140.* | நிருவாக மீளாய்விலிருந்தான மேன்முறையீடு. | *180* |
| *141.* | எண்பிப்பதற்கான பொறுப்பு. | *182* |
| *142.* | மேன்முறையீடுகள், தொகைகளின் சேகரிப்பை இடைநிறுத்துவதில்லை. | *182* |
| *143.* | வரிமதிப்பீட்டின் இறுதியாந்தன்மை. | *182* |
| *144.* | வரி மேன்முறையீட்டு ஆணைக்குழுவின் முடிபுக்கெதிரான மேன்முறையீடு. | *183* |

## அத்தியாயம் XIV
### வரிக்கான பொறுப்பும் வரி செலுத்துகையும்

| | | |
|---|---|---|
| *145.* | வரி செலுத்துநரின் பொறுப்பும் வருமதியான தேதியும். | *184* |
| *146.* | பிரதிநிதிகளின் பொறுப்பும் கடப்பாடுகளும். | *185* |
| *147.* | கூட்டிணைக்கப்படாத குழுக்களின் அலுவலர்கள். | *190* |
| *148.* | ஒடுக்குதலையடுத்துப்பின்னர் வரிக்கான பொறுப்பு. | *191* |
| *149.* | உருவகங்களின் முகாமையாளர்கள். | *192* |
| *150.* | மீளளிக்கத்தக்க தொகைகள். | *193* |
| *151.* | செலுத்துகைக்கான காலநீடிப்பு. | *194* |
| *152.* | செலுத்துகையிலான தவறுகை. | *195* |
| *153.* | வரிக்கான முன்னுரிமை. | *196* |
| *154.* | வரித் தனிசுகளின் செலுத்துகைக்கான ஒழுங்குமுறை. | *197* |
| *155.* | நாணயம். | *198* |

## அத்தியாயம் XV
### வட்டி

| | | |
|---|---|---|
| *156.* | பொதுவானவை. | *198* |
| *157.* | குறைபடச் செலுத்துகைகளின்மீதான வட்டி. | *198* |
| *158.* | மீளளிக்கத்தக்க தொகைகளின்மீதான வட்டி. | *198* |
| *159.* | வட்டி வீதம். | *199* |

## அத்தியாயம் XVI
### வரியின் அறவீடு

| | | |
|---|---|---|
| *160.* | பொதுவானவை. | *200* |
| *161.* | சேகரிப்புக்கான காலவரையறைகள். | *200* |

| பிரிவுகள் | தலையங்கம் | பக்கம் |
|---|---|---|
| 162. | சேகரிக்கத்தக்கனவல்லாத தொகைகளை அழித்தொதுக்கல். | 200 |
| 163. | நீதிமன்ற வழக்குநடவடிக்கைகள். | 200 |
| 164. | சோந்தை. | 201 |
| 165. | வரி செலுத்துநரின் ஆதனத்துக்கெதிரான நிறைவேற்றுகை. | 203 |
| 166. | கைப்பற்றப்பட்ட ஆதனத்தின் விற்பனை. | 205 |
| 167. | விட்டுநீங்கல் தடைக் கட்டளை. | 208 |
| 168. | வங்கிமுறிவில் முன்னுரிமை. | 210 |
| 169. | செலுத்துகைகளுக்கெதிரான எதிரீடு. | 210 |
| 170. | மூன்றாந்திறத்தவரான கடனாளிகள். | 211 |
| 171. | அறிவித்தலுக்கு இணங்கியொழுகுதல். | 213 |
| 172. | சொத்துக்களைப் பேணிக்காத்தல். | 215 |
| 173. | கட்டுப்பாடுடைய கைமாற்றம்பெறுநர்கள். | 218 |
| 174. | கைமாற்றப்பட்ட வரிப் பொறுப்புக்கள். | 218 |
| 175. | பெறுநர்கள். | 218 |

## அத்தியாயம் XVII
### தண்டங்கள்

| | | |
|---|---|---|
| 176. | தண்டங்கள். | 220 |
| 177. | வரிசெலுத்துநர்தகவலிலான மாற்றங்களைப் பதிவுசெய்வதற்கு அல்லது அறிவிப்பதற்குத் தவறுதல். | 222 |
| 178. | வரி விபரத்திரட்டைப் பிந்திக் கோப்பிடுதல். | 222 |
| 179. | பிந்திய செலுத்துகை. | 223 |
| 180. | அசட்டையாக அல்லது மோசடியாகக் குறைபடச் செலுத்துகை. | 224 |
| 181. | போலியான அல்லது பிழைவழியுய்க்கும் கூற்றுக்கள். | 224 |
| 182. | ஆவணங்களைப் பேணுவதற்கு அல்லது வசதிகளை வழங்குவதற்குத் தவறுதல். | 226 |
| 183. | மூன்றாந்திறத்தவர் அறிவித்தலுக்கு இணங்கியொழுகத் தவறுதல். | 227 |
| 184. | கைமாற்றல் விலையிடுதல் தண்டங்கள். | 227 |
| 185. | தகவல் கொடுப்பதற்கான அறிவித்தலுக்கு இணங்கியொழுகத் தவறுதல். | 228 |

## அத்தியாயம் XVIII
### குற்றவியல் வழக்குநடவடிக்கைகள்

| | | |
|---|---|---|
| 186. | குற்றவியல் வழக்குநடவடிக்கைகள். | 228 |
| 187. | உதவுதலும் உடந்தையாகவிருத்தலும். | 230 |
| 188. | வரையறைகளின் காலப்பகுதி. | 230 |
| 189. | வரி தட்டிக்கழிப்பு. | 230 |

| பிரிவுகள் | தலையங்கம் | பக்கம் |
|---|---|---|
| 190. | வரி நிருவாகத்துக்குத் தடையாகவிருத்தல். | 231 |
| 191. | இரகசியம் பேணுவதற்குத் தவறுதல். | 232 |
| 192. | வரி அலுவலர்களினாலான தவறுகள். | 232 |
| 193. | தவறுகளை இணக்குதல். | 233 |


## அத்தியாயம் XIX
### ஒழுங்குவிதிகள்


194. ஒழுங்குவிதிகள். 235


## அத்தியாயம் XX
### பொருள்கோடல்


195. பொருள்கோடல். 236

196. இணை ஆட்கள். 263

197. வீட்டுடைச்செலவினம். 264

198. நிதிசார் சாதனங்கள். 266


## அத்தியாயம; XXI
### விசேட ஏற்பாடுகள்


199. பரஸ்பர நிருவாக உதவி உடன்படிக்கைகளை நடைமுறைப்படுத்துதல் (97). 267

200. வரிச் சட்டத்தின் பொருள்கோடலும் ஐயங்களைத் தவிர்த்தலும். 269

201. ஒவ்வாமை ஏற்பாடு. 271


## அத்தியாயம் XXII
### தற்காலிகச் சலுகைகளும் நிலைபெயர்கால ஏற்பாடுகளும்


202. தற்காலிகச் சலுகைகள். 271

203. நீக்கங்களும் பேணல்களும். 272

204. நிலைபெயர்கால ஏற்பாடுகள். 273

| பிரிவுகள் | தலையங்கம் | பக்கம் |
|---|---|---|

**அட்டவணைகள்**

முதலாம் அட்டவணை 274
வரி வீதங்கள்

இரண்டாம் அட்டவணை 283
முதலீட்டு ஊக்குவிப்புகள்

மூன்றாம் அட்டவணை 288
விலக்களிக்கப்பட்ட தொகைகள்

நான்காம் அட்டவணை 292
தேய்மான அனுமதிப்புகளும், சமச்சீராக்கும்
அனுமதிப்புகளும் வரிமதிப்பிடற்பாலனவான விதிப்பனவுகளும்

ஐந்தாம் அட்டவணை 296
தகைமையளிக்கின்ற கொடுப்பனவுகளும் நிவாரணங்களும்

ஆறாம் அட்டவணை 299
தற்காலிகச் சலுகைகள்

**உண்ணாட்டரசிறை**

*ச.வ.-ஓ. 23/2017*

# 2017, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்காக வருமானவரி விதிப்பதற்கு ஏற்பாடுசெய்வதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

*சுருக்கப் பெயர்.*

**1**. இச்சட்டம், 2017 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

## அத்தியாயம் I

### வருமானவரி விதிப்பு

*விதிக்கின்ற ஏற்பாடு.*

**2**. (1) ஒவ்வொரு வரிமதிப்பீட்டாண்டுக்குமான வருமான வரியானது-

(அ) அவ்வாண்டுக்காக வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்தைக் கொண்டுள்ள ஆளொருவரினால்; அல்லது

(ஆ) அவ்வாண்டின்போது இறுதிப் பிடித்துவைத்தல் கொடுப்பனவைப் பெறுகின்ற ஆளொருவரினால்,

செலுத்தப்படற்பாலதாதல் வேண்டும்.

(2) ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்காக ஆளொருவரினால் செலுத்தப்படற்பாலதான வருமான வரியின் தொகை, (1) ஆம் உட்பிரிவின்கீழ் செலுத்தப்படற்பாலனவான தொகைகளின் மொத்தமாதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ் ஆளொருவரினால் செலுத்தப்படற்பாலதான வருமான வரியானது-

2-PL 005251 -535 (2017/06)

(அ) இச்சட்டத்துக்கான முதலாம் அட்டவணையில் தரப்பட்டுள்ள வருமான வரியின் இயைபான வீதங் களை அவ்வாளின் வரிவிதிக்கப்படற்பாலதான வருமா னத்துக்கு ஏற்புடையதாக்குவதன்மூலமும்;

(ஆ) இச்சட்டத்தின் 80 ஆம் பிரிவின்கீழ் அவ்வாண்டுக்காக அவ்வாளினால் உரிமைகோரப்பட்டு அவருக்கு அனுமதிக்கப்பட்ட ஏதேனும் வெளிநாட்டு வரி வரவைக் கழிப்பதன்மூலமும்; அத்துடன்

(இ) இச்சட்டத்தின்கீழ் அவ்வாண்டுக்காக அவ்வாளுக்கு வழங்கப்பட்ட அல்லது அனுமதிக்கப்பட்ட வேறேதே னும் வரி வரவைக் கழிப்பதன்மூலமும்,

கணக்கிடப்படுதல் வேண்டும்.

(4) ஓராம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் ஆளொரு வரினாற் செலுத்தப்படற்பாலதான வருமானவரியானது, ஒவ்வோர் இறுதிப் பிடித்துவைத்தற் கொடுப்பனவுக்கும் இச்சட்டத்துக்கான முதலாம் அட்டவணையில் தரப்பட்டுள்ள இயைபான வீதத்தை ஏற்புடைய தாக்குவதன்மூலம் கணக்கிடப் படுதல் வேண்டும்.

## அத்தியாயம் II

## வருமானவரி அடிப்படை

### பகுதி I : வரிவிதிக்கப்படற்பாலதான வருமானம்

வரிவிதிக்கப் படற்பாலதான வருமானம்.

**3.** (1) இரண்டாம் உட்பிரிவுக்கமைய, வரிமதிப்பீட்டாண் டொன்றுக்காக ஆளொருவரின் வரி விதிக்கப்படற்பாலதான வருமானம், ஒவ்வோர் ஊழியத்திலிருந்தும், வியாபாரத்தி லிருந்தும், முதலீட்டிலிருந்தும் மற்றும் ஏனைய மூலங்களிலி ருந்தும் அவ்வாண்டுக்காக அவ்வாளின் வரிமதிப்பிடற்பாலதான வருமானத்தின் மொத்தத்துக்குச் சமமானதாகவிருத்தல் வேண் டும்.

(2) ஒரு வரிமதிப்பீட்டாண்டின் வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்தைக் கணிப்பதில், 52 ஆம் பிரிவின்கீழ் அவ்வாண்டுக்கான தகைமையளிக்கின்ற கொடுப்பனவுகளும் நிவாரணங்களும் கழிக்கப்படுதல் வேண்டும்.

(3) ஒவ்வோர் ஆளினதும் மற்றும் ஒவ்வொரு மூலத்திலிருந்துமான வரிவிதிக்கப்படற்பாலதான வருமானம் தனிவேறாகத் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

## பகுதி II : வரிமதிப்பிடற்பாலதான வருமானம்

வரிமதிப்பிடற்பாலதான வருமானம்.

**4**. ஊழியம், வியாபாரம், முதலீடு அல்லது வேறு மூலத்திலிருந்து வரிமதிப்பீட்டாண்டொன்றுக்காக ஆளொருவரின் வரிமதிப்பிடற்பாலதான வருமானம் பின்வருவனவற்றுக்குச் சமமானதாகவிருத்தல் வேண்டும்:-

(அ) வதிவுள்ள ஆளொருவரின் விடயத்தில், அவ்வாண்டுக்காக ஊழியத்திலிருந்தான, வியாபாரத்திலிருந்தான, முதலீட்டிலிருந்தான அல்லது வேறு மூலத்திலிருந்தான, அம்மூலமானது எங்கெங்கு எழுகின்றதாயிருப்பினும், அவ்வாளின் வருமானத்துக்கும்; அத்துடன்

(ஆ) வதிவற்ற ஆளொருவரின் விடயத்தில், வருமானமானது இலங்கையில்எழுகின்ற அல்லது இலங்கையிலுள்ள மூலமொன்றிலிருந்து பெறப்படுகின்ற அளவுக்கு, அவ்வாண்டுக்காக ஊழியத்திலிருந்து, வியாபாரத்திலிருந்து, முதலீட்டிலிருந்து அல்லது வேறு மூலத்திலிருந்து அவ்வாளின் வருமானத்துக்கும்.

ஊழிய வருமானம்.

**5**. (1) ஒரு வரிமதிப்பீட்டாண்டுக்காக ஊழியத்திலிருந்தான தனியாளொருவரின் வருமானம், அவ்வாண்டுக்காக அத்தனியாளின் ஊழியத்திலிருந்து பெறப்பட்ட ஈட்டுகைகளாகவும் இலாபங்களாகவும் இருத்தல் வேண்டும்.

(2) ஒரு வரிமதிப்பீட்டாண்டுக்காகத் தனியாளொருவரின் ஊழியத்திலிருந்தான ஈட்டுகைகளையும் இலாபங்களையும் கணக்கிடுவதில் பின்வருவன உள்ளடக்கப்படுதல் வேண்டும்:-

(அ) சம்பளக் கொடுப்பனவுகள், கூலிகள், லீவு வேதனங்கள், மேலதிகநேர வேதனங்கள், கட்டணங்கள், ஓய்வூதியங்கள், தரகுகள், பணிக்கொடைகள், மிகையூதியங்கள் மற்றும் வேறு ஒத்த கொடுப்பனவுகள்;

(ஆ) ஏதேனும் வாழ்க்கைச்செலவுப்படி, உணவுப்படி, வாடகை, களியாட்ட அல்லது பயணப்படி உட்பட, தனிப்பட்ட படியின் கொடுப்பனவு;

(இ) தனியாளினால் அல்லது தனியாளின் இணையாளரொருவரினால் உறப்பட்ட செலவுகளின் கொடுத்துத் தீர்த்தலை அல்லது மீளளிப்பை வழங்குகின்ற கொடுப்பனவுகள்;

(ஈ) ஊழிய நிபந்தனைகளுக்குத் தனியாளின் உடன்பாட்டுக்கான கொடுப்பனவுகள்;

(உ) தொழில் மிகைக்கான அல்லது ஊழியத்தின் இழப்புக்கான அல்லது முடிவுறுத்துகைக்கான கொடுப்பனவுகள்;

(ஊ) மூன்றாம் உட்பிரிவுக்கமைய ஊழியரின் சார்பில் இளைப்பாற்று நிதியமொன்றுக்குச் செய்யப்பட்ட இளைப்பாற்று உதவுதொகைகளும் ஊழியம் தொடர்பில் பெறப்பட்ட இளைப்பாற்றுக் கொடுப்பனவுகளும்;

(எ) தனியாளின் அல்லது தனியாளுடன் இணைந்த ஆளொருவரின் நன்மைக்காக வேறோராளுக்கான கொடுப்பனவுகள் அல்லது கைமாற்றங்கள்;

(ஏ) ஒரு தனியாளினால் அல்லது தனியாளுடன் இணைந்த ஆளொருவரினால் ஊழியத்தின் பயனைக்கொண்டு பெறப்பட்ட அல்லது பெற்றுக்கொள் நன்மைகளின் நியாயமான சந்தைப்பெறுமதி;

(ஐ) ஊழியம் தொடர்பில் பெறப்பட்ட நன்கொடைகளுட்பட, வேறு கொடுப்பனவுகள்; அத்துடன்

(ஒ) பங்குகளுக்காக ஊழியரின் உதவுதொகையினால் குறைக்கப்பட்டவையும், பங்குகளைக் கொள்வதற்கான விருப்புத் தெரிவொன்றை அல்லது உரிமையைப் பிரயோகித்தலின் விளைவாகப் பங்கீடுசெய்யப்பட்டவையுமான பங்குகள் உட்பட, ஊழியர் பங்குத்திட்டமொன்றின்கீழ் அந்நேரத்தில் பங்கீடுசெய்யப்பட்ட பங்குகளின் சந்தைப் பெறுமதி.

(3) வரிமதிப்பீட்டாண்டொன்றுக்காகத் தனியாளொருவரின் ஊழியத்திலிருந்தான ஈட்டுகைகளையும் இலாபங்களையும் கணக்கிடுவதில் பின்வருவன விலக்கப்படுதல் வேண்டும்:-

(அ) விலக்களிக்கப்பட்ட தொகைகளும் இறுதிப் பிடித்து வைத்தற் கொடுப்பனவுகளும்;

(ஆ) தொழில்தருநரின் சார்பில் தனியாளினால் உறப்பட்ட செலவுகளின் கொடுத்துத்தீர்த்தல் அல்லது மீளளிப்பும்;

(இ) சமமான நியதிகளின்மீது எல்லா முழுநேர ஊழியர்களுக்கும் நன்மையானது கிடைக்கக்கூடியதாகவிருக்குமிடத்து, ஆளின் பல்மருத்துவ, மருத்துவ அல்லது சுகாதாரக் காப்புறுதிச் செலவுகளின் கொடுத்துத் தீர்த்தல் அல்லது மீளளிப்பும்;

(ஈ) கொடுப்பனவுகளின் அளவு, வகை அல்லது அடிக்கடியானதன்மை காரணமாக நியாயமற்றவையாகவுள்ளவையும் அல்லது அவற்றுக்குக் கணக்குக் காட்டுதல் அல்லது அவற்றைத் தனியாளுக்குக் குறித்தொதுக்குதல் தொழில்தருநருக்கு நிருவாக ரீதியில் செயல்முறைக்கு உகந்ததற்றதாகவுள்ளவையுமான, ஓரங்காட்டப்படாத அடிப்படையில் ஊழியர்களுக்குச் செய்யப்பட்ட அக்கொடுப்பனவுகளையும் அல்லது ஒன்று திரளுகின்ற நன்மைகளும்;

(உ) (இரண்டாம் உட்பிரிவின் (ஓ) என்னும் பந்தியிற் குறிப்பீடுசெய்யப்பட்ட) ஓர் ஊழியர் பங்குத்திட்டத்தின்கீழ் ஊழியரொருவருக்கு அந்நேரத்தில் வழங்கப்பட்ட பங்குகளைக் கொள்வதற்கான உரிமையின் அல்லது விருப்புத்தெரிவின் பெறுமதி; அத்துடன்

(ஊ) ஆணையாளர் தலைமையதிபதியினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான நிபந்தனைகளுக்கமைய, அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்ட ஓர் ஓய்வூதிய, சகாய அல்லது சேமிப்பு நிதியத்துடன் அல்லது அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்ட சகாய அல்லது சேமிப்புச் சங்கத்துடன் ஊழியரொருவரின் கணக்குக்குத் தொழில் தருநரினால் அளிக்கப்பட்ட உதவுதொகைகள்.

வியாபார வருமானம்.

**6**. (1) ஒரு வரிமதிப்பீட்டாண்டுக்காக வியாபாரமொன்றிலிருந்தான ஆளொருவரின் வருமானம், அவ்வாண்டுக்காக வியாபாரத்தை நடாத்துவதிலிருந்து அவ்வாளின் ஈட்டுகைகளாகவும் இலாபங்களாகவும் இருத்தல் வேண்டும்.

(2) ஒரு வரிமதிப்பீட்டாண்டுக்காக வியாபாரமொன்றை நடாத்துவதிலிருந்து ஆளொருவரின் ஈட்டுகைகளையும் இலாபங்களையும் கணக்கிடுவதில் பின்வருவன உள்ளடக்கப்படுதல் வேண்டும்:-

(அ) சேவைக் கட்டணங்கள்;

(ஆ) வர்த்தகக் கையிருப்புத் தொடர்பில் பெறப்பட்ட பிரதிபயன்;

(இ) IV ஆம் அத்தியாயத்தின்கீழ் கணக்கிடப்பட்டவாறு வியாபாரத்தின் மூலதனச் சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் தேறிப்பெறுகையிலிருந்தான ஈட்டுகைகள்;

(ஈ) ஆளினது வியாபாரத்தின் தேய்மானத்துக்குட்படத்தக்க சொத்துக்களின் தேறிப்பெறுகையின்மீது இச்சட்டத்

துக்கான இரண்டாம் அல்லது நான்காம் அட்டவணையின்மூலம் உள்ளடக்கப்படுவதற்குத் தேவைப்பட்ட தொகைகள்;

(ஊ) வியாபாரத்தை நடாத்துவதற்கான ஆற்றலின்மீதான மட்டுப்பாட்டை ஏற்றுக்கொள்வதற்கான பிரதிபயனாகப் பெறப்பட்ட தொகைகள்;

(ஊ) வியாபாரம் தொடர்பில் ஆளினாற் பெறப்பட்ட நன்கொடைகள்;

(எ) வியாபாரத்துடன் பயனுள்ளவகையில் சம்பந்தப்பட்டவையும், ஒரு முதலீட்டிலிருந்து அவ்வாளின் வருமானத்தைக் கணக்கிடுவதில் வேறுவகையாகச் உள்ளடக்கப்படவேண்டியவையும், பெறப்பட்டவையுமான தொகைகள்; அத்துடன்

(ஏ) இச்சட்டத்தின்கீழ் சேர்க்கப்படுவதற்குத் தேவைப்படுத்தப்பட்ட வேறு தொகைகள்.

(3) ஒரு வரிமதிப்பீட்டாண்டுக்காக வியாபாரமொன்றை நடாத்துவதிலிருந்து ஆளொருவரின் ஈட்டுகைகளையும் இலாபங்களையும் கணக்கிடுவதில் பின்வருவன விலக்கப்படுதல் வேண்டும்:-

(அ) விலக்களிக்கப்பட்ட தொகைகளும் இறுதிப் பிடித்துவைத்தற் கொடுப்பனவுகளும்; அத்துடன்

(ஆ) ஓர் ஊழியத்திலிருந்து ஆளின் வருமானத்தைக் கணக்கிடுவதில் உள்ளடக்கப்பட்ட தொகைகள்.

7. (1) ஒரு வரிமதிப்பீட்டாண்டுக்காக முதலீடொன்றிலிருந்து ஆளொருவரின் வருமானம் அவ்வாண்டுக்காக அம்முதலீட்டிலிருந்தான அவ்வாளின் ஈட்டுகைகளாகவும் இலாபங்களாகவும் இருத்தல் வேண்டும். முதலீட்டு வருமானம்.

(2) ஒரு வரிமதிப்பீட்டாண்டின்போது முதலீடொன்றிலிருந்து பெறப்பட்ட அல்லது பெற்றுக்கொள்ளப்பட்ட ஆளொருவரின் ஈட்டுகைகளையும் இலாபங்களையும் கணக்கிடுவதில் பின்வருவன உள்ளடக்கப்படுதல் வேண்டும்:-

(அ) பங்கிலாபங்கள், வட்டி, கழிப்பனவுகள், விதிப்பனவுகள், ஆண்டுத்தொகைகள், இயற்கை வளக் கொடுப்பனவுகள், வாடகைகள், கட்டுப்பணங்கள் மற்றும் அரசுரிமைப்பணங்கள்;

(ஆ) IV ஆம் அத்தியாயத்தின்கீழ் கணக்கிடப்பட்ட முதலீட்டுச் சொத்துக்களின் தேறிப்பெறுகையிலிருந்தான ஈட்டுகைகள்;

(இ) முதலீட்டை நடாத்துவதற்கான ஆற்றல் மீதான மட்டுப்பாட்டை ஏற்றுக் கொள்வதற்கான பிரதிபயனாகப் பெறப்பட்ட தொகைகள்;

(ஈ) முதலீடு தொடர்பில் ஆளினாற் பெறப்பட்ட நன்கொடைகள்;

(உ) லொத்தர்கள், பந்தயம்பிடித்தல் அல்லது சூதாட்டம் என்பவற்றிலிருந்து வெற்றியீட்டுதல்; அத்துடன்

(ஊ) இச்சட்டத்தின்கீழ் உள்ளடக்கப்படுவதற்குத் தேவைப்படுத்தப்பட்ட வேறு தொகைகள்.

(3) ஒரு வரிமதிப்பீட்டாண்டுக்கான முதலீட்டிலிருந்து ஆளொருவரின் ஈட்டுகைகளையும் இலாபங்களையும் கணக்கிடுவதில் பின்வருவன விலக்கப்படுதல் வேண்டும்:-

(அ) விலக்களிக்கப்பட்ட தொகைகளும் இறுதிப் பிடித்து வைத்தற் கொடுப்பனவுகளும்; அத்துடன்

(ஆ) ஓர் ஊழியத்திலிருந்து அல்லது வியாபாரத்திலிருந்து அவ்வாளின் வருமானத்தைக் கணக்கிடுவதில் உள்ளடக்கப்படுகின்ற தொகைகள்.

ஏனைய வருமானம்.

**8**. (1) ஒரு வரிமதிப்பீட்டாண்டுக்காக ஏனைய மூலங்களிலிருந்து ஆளொருவரின் வருமானம், ஓர் அமய மற்றும் மீண்டு வரும் தன்மையினவான இலாபங்களை உள்ளடக்காமல், அவ்வாண்டுக்காக எத்தகையதுமான எம்மூலத்திலிருந்தேனும் அவ்வாளின் ஈட்டுகைகளாகவும் இலாபங்களாகவும் இருத்தல் வேண்டும்.

(2) எத்தகையதுமான எம்மூலத்திலிருந்தேனும் ஆளொருவரின் ஈட்டுகைகளை அல்லது இலாபங்களைக் கணக்கிடுவதில், பின்வருவன விலக்கப்படுதல் வேண்டும்:-

(அ) விலக்களிக்கப்பட்ட தொகைகளும் இறுதிப் பிடித்து வைத்தற் கொடுப்பனவுகளும்; அத்துடன்

(ஆ) ஓர் ஊழியத்திலிருந்து, வியாபாரத்திலிருந்து அல்லது முதலீட்டிலிருந்து அவ்வாளின் வருமானத்தைக் கணக்கிடுவதில் உள்ளடக்கப்படுகின்ற தொகைகள்.

## பகுதி III : விலக்களிக்கப்பட்ட தொகைகள்

விலக்களிக்கப்பட்ட தொகைகள்.

**9**. (1) இச்சட்டத்துக்கான மூன்றாம் அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்ட தொகைகள், வரிசெலுத்துகையிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

(2) முரணாகவுள்ள ஏதேனும் சட்டம் எவ்வாறிருப்பினும், இச்சட்டத்தினால் விதிக்கப்பட்ட வரியிலிருந்து எவரேனுமாளுக்கான அல்லது ஏதேனும் தொகைக்கான விலக்களிப்பு வழங்கப்படுதலாகாதென்பதுடன், இச்சட்டத்தின் ஏற்புடைமையைப் பாதிக்கின்ற அல்லது பாதிப்பதாகக் கொள்ளப்படுகின்ற உடன்படிக்கையொன்று, இச்சட்டத்தில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறு தவிர, செய்து கொள்ளப்படுதலுமாகாது.

(3) இரண்டாம் உட்பிரிவானது, வேறொரு சட்டத்திலுள்ள ஏற்பாடொன்றுக்கு அல்லது இச்சட்டம் தொடங்கும் தேதியில் வலுவிலுள்ள உடன்படிக்கையொன்றுக்கு ஏற்புடையதாதலாகாது.

## பகுதி IV : கழிப்பனவுகள்

**10.** (1) (அ) ஒருவரது ஊழியத்திலிருந்தான வருமானத்தைக் கணக்கிடுவதில் கழிப்பனவுகள் எதுவும் செய்யப்படுதலாகாது. பொதுவான கழிப்பனவுகள்.

(ஆ) ஆளொருவரின் வருமானத்தைக் கணக்கிடுவதில் பின்வரும் கழிப்பனவுகள் செய்யப்படுதலாகாது:-

(i) அவ்வாளினால் உறப்பட்ட வீட்டுடைச் செலவினம் (பிரிவு 197);

(ii) இச்சட்டத்தின்கீழ் செலுத்தப்படற்பாலதான வரி;

(iii) ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் மீறுகைக்காக ஏதேனும் நாட்டின் ஓர் அரசாங்கத்துக்கு அல்லது ஓர் அரசாங்கத்தின் அரசியல் உட்பிரிவுக்குச் செலுத்தப்படற்பாலனவான வட்டியும், தண்டங்களும், குற்றப்பணங்களும்;

(iv) விலக்களிக்கப்பட்ட தொகைகளை அல்லது இறுதிப் பிடித்துவைத்தற் கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்வதில் ஆளொருவரினால் உறப்பட்ட அளவுக்குச் செலவினம்;

(v) ஊழியரொருவரின் வருமானத்தைக் கணக்கிடுவதில் இளைப்பாற்று உதவுதொகைகள் உள்ளடக்கப்பட்டாலொழிய அல்லது குறித்துரைக்கப்பட்ட எவையேனும் நிபந்தனைகளுக்கமைய ஆணையாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்பட்ட ஓய்வூதிய, சகாய அல்லது சேமிப்பு நிதியமொன்றுக்கு அல்லது சகாய அல்லது சேமிப்புச் சங்கமொன்றுக்குத் தொழில்தருநரொருவரினால் கொடுக்கப்படும் உதவுதொகையொன்றை அவை கொண்டிருந்தாலொழிய, இளைப்பாற்று உதவுதொகைகள்;

(vi) ஒரு கம்பெனியின் பங்கிலாபங்கள்;

(vii) களியாட்டத்துக்கான செலவீடுகள் அல்லது செலவுகள்;

(viii) ஆளொருவர் தமது நிதிசார் கணக்குகளில் ஓர் ஒதுக்குக்குக் கைமாற்றியுள்ள தொகையொன்று அல்லது இதுவரை உறப்படாத ஆனால் ஓர் எதிர்கால வரிமதிப்பீட்டாண்டில் உறப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட செலவினங்களுக்கான அல்லது நட்டங்களுக்கான நிதி ஏற்பாடு;

(ix) லொத்தர்கள், பந்தயம்பிடித்தல் அல்லது சூதாட்டம் என்ற வியாபாரத்தை நடாத்துவதிலிருந்து உறப்பட்ட தொகைகள்தவிர, லொத்தர்கள், பந்தயம்பிடித்தல் அல்லது சூதாட்டத்தின்மீது உறப்பட்ட தொகைகள்; அல்லது

(x) ஆணையாளர் தலைமையதிபதியினால் குறித்துரைக்கப்பட்ட வரிகள் அல்லது வேறு அறவீடுகள்.

(2) எந்தக் கொடுப்பனவிலிருந்து அத்தியாயம் VIII இன் பகுதி II இன்கீழ் வரியைப் பிடித்துவைப்பதற்கு ஆளொருவருக்கு அனுமதியளிக்கப்படுகின்றதோ அந்தக் கொடுப்பனவிலிருந்தான கழிப்பனவொன்று அவ்வாளுக்கு அனுமதிக்கப்படுமிடத்து, பிடித்துவைக்கப்பட்ட அவ்வரியானது ஆணையாளர் தலைமையதிபதிக்குச் செலுத்தப்படும்வரை அக்கழிப்பனவானது அனுமதிக்கப்படுதலாகாது.

(3) இச்சட்டத்தினால் வெளிப்படையாக அனுமதிக்கப்பட்டவாறு தவிர கழிப்பனவெதுவும் அனுமதிக்கப்படுதலாகாது.

(4) ஒன்றுக்குமேற்பட்ட கழிப்பனவுகள் ஏற்புடையனவாகுமிடத்து, மிக்க குறிப்பான கழிப்பனவு, அது ஒரு கழிப்பனவு மறுக்கப்படுவதனை விளைவித்தாலுங்கூட, ஏற்புடையதாக்கப்படுதல் வேண்டும்.

**11.** (1) ஒரு வரிமதிப்பீட்டாண்டுக்காக வியாபாரமொன்றிலிருந்து அல்லது முதலீடொன்றிலிருந்து ஆளொருவரின் வருமானத்தைக் கணக்கிடுவதில், அவ்வாளினால் ஆண்டின் போது செலவுகள் உறப்படும் அளவுக்கும் அவ்வியாபாரத்திலிருந்து அல்லது முதலீட்டிலிருந்து வருமானத்தைத் தோற்றுவிப்பதிலுமான அச்செலவுகள் கழிக்கப்படுதல் வேண்டும். *பிரதான கழிப்பனவு.*

(2) ஒரு மூலதனத் தன்மையினதான செலவுக்காகக் கழிப்பனவெதுவும் (1) ஆம் உட்பிரிவின்கீழ் அனுமதிக்கப்படுதலாகாது.

(3) இப்பிரிவில், "மூலதனத் தன்மையினதான செலவு" என்பது, பன்னிரெண்டு மாதங்களுக்கு மேற்பட நீடிக்கின்ற நன்மையொன்றை விளைவிக்கின்ற செலவொன்றை உள்ளடக்கும்.

**12.** பதினோராம் பிரிவின் நோக்கங்களுக்காக ஆளொருவரின் கடன் கடப்பாட்டின்கீழ் ஒரு வரிமதிப்பீட்டாண்டின்போது அவ்வாளினால் உறப்பட்ட வட்டி, பின்வரும் அளவுக்கு வருமானத்தைத் தோற்றுவிப்பதில் உறப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்:- *வட்டிச் செலவு.*

(அ) அக்கடன் கடப்பாடு, பணம் கடன்பெறுவதில் உறப்பட்டவிடத்து, அப்பணம் வருமானம் தோற்றுவதில் ஆண்டின்போது பயன்படுத்தப்படுமிடத்து அல்லது ஆண்டின்போது பயன்படுத்தப்படும் சொத்தொன்றைக் கொள்வதில் பயன்படுத்தப்பட்டவிடத்து; அத்துடன்

(ஆ) வேறேதேனும் விடயத்தில், கடன் கடப்பாடு, வருமானம் தோற்றுவதில் உறப்பட்டவிடத்து.

**13.** (1) ஒரு வரிமதிப்பீட்டாண்டுக்கான வியாபாரத்திலிருந்து, அவ்வியாபாரத்தின் வர்த்தகக் கையிருப்புத் தொடர்பில் ஆளொருவரின் வருமானத்தைக் கணக்கிடும் நோக்கங்களுக்காக, (2) ஆம் உட்பிரிவின்கீழ் கணக்கிடப்படும் அனுமதிப்பானது கழிக்கப்படுதல் வேண்டும்:- *வர்த்தகக் கையிருப்புக்கான அனுமதிப்பு.*

(2) அனுமதிப்பானது பின்வருமாறு கணக்கிடப்படுதல் வேண்டும்:-

(அ) வரி மதிப்பீட்டாண்டுக்காக வியாபாரத்தின் வர்த்தகக் கையிருப்பின் ஆரம்பப் பெறுமதி; கூட்டுக

(ஆ) ஆண்டின்போது வியாபாரத்தின் வர்த்தகக் கையிருப்பின் ஆகுசெலவில் உள்ளடக்கப்பட்டனவும் ஆளினால் உறப்பட்டனவுமான செலவுகள்; கழிக்க

(இ) ஆண்டுக்கான வியாபாரத்தின் வர்த்தகக் கையிருப்பின் மூடு பெறுமதி.

(3) வரிமதிப்பீட்டாண்டொன்றுக்கு ஒரு வியாபாரத்தின் வர்த்தகக் கையிருப்பினது ஆரம்பப் பெறுமதி, முன்னைய வரிமதிப்பீட்டாண்டின் முடிவிலுள்ள அவ்வியாபாரத்தின் வர்த்தகக் கையிருப்பின் மூடுபெறுமதியாகவிருத்தல் வேண்டும்.

(4) ஒரு வரிமதிப்பீட்டாண்டுக்காக வியாபாரமொன்றின் வர்த்தகக் கையிருப்பின் மூடுபெறுமதி பின்வருவனவற்றுள் எது குறைவாகவுள்ளதோ அதுவாகவிருத்தல் வேண்டும்:-

(அ) ஆண்டின் முடிவில் வியாபாரத்தின் வர்த்தகக் கையிருப்பின் ஆகுசெலவு; அல்லது

(ஆ) ஆண்டின் முடிவில் வியாபாரத்தின் வர்த்தகக் கையிருப்பின் சந்தைப் பெறுமதி,

(5) வர்த்தகக் கையிருப்பின் மூடுபெறுமதி (4) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்திக்கிணங்கத் தீர்மானிக்கப்படுமிடத்து, வர்த்தகக் கையிருப்பின் ஆகுசெலவு அப்பெறுமதிக்கு மீளநிர்ணயிக்கப் படுதல் வேண்டும்.

பழுது பார்த்தல்களும் சீராக்கல்களும்.

**14.** (1) ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்காக ஆளொருவரின் தேய்மானத்துக்குட்படத்தக்க சொத்துக்களின் பழுதுபார்த்தல் களுக்கான அல்லது சீராக்கல்களுக்கான மற்றும் 11 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் தேவைப்பாடுகளை ஈடுசெய்வதற்கான செலவுகள், அவை மூலதனத் தன்மையினவாகவிருப்பினும் இல்லாவிடினும் கழிக்கப்படுதல் வேண்டும்.

(2) ஆளொருவரின் தேய்மானத்துக்குட்படத்தக்க சொத்துத் தொடர்பில் ஒரு வரிமதிப்பீட்டாண்டுக்காக வழங்கப்பட்ட (1) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட கழிப்பனவுகள்-

(அ) பின்வருவனவற்றை விஞ்சுதலாகாது:-

(i) வகுப்பு 4 ஐச் சேர்ந்த தேய்மானத்துக்குட் படத்தக்க சொத்துக்கான பழுதுபார்த்தலின் அல்லது சீராக்கலின் விடயத்தில், முன்னைய ஆண்டின் முடிவில் சொத்தின் குறைந்துசெல் லும் பெறுமதியின் ஐந்து சதவீதம் (நான்காம் அட்டவணையின் பந்தி 4(3));

(ii) மற்றெல்லா விடயங்களிலும், முன்னைய ஆண் டின் முடிவில் சொத்தின் குறைந்துசெல்லும் பெறுமதியின் இருபது சதவீதம் (நான்காம் அட்டவணையின் பந்தி 4(3)); அத்துடன்

(ஆ) செலவுகள் எந்த ஒழுங்குமுறையில் உறப்படுகின்ற னவோ அந்த ஒழுங்குமுறையில் அனுமதிக்கப்படுதல் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவிலுள்ள வரையறையின் விளைவாக எந்த விஞ்சுதலான செலவுக்காகக் கழிப்பனவொன்று அனுமதிக்கப்படாதிருக்கவேண்டுமோ அந்த விஞ்சுதலான செலவு, சொத்தின் தேய்மான அடிப்படையுடன் சேர்க்கப்படுதல் வேண்டும் (நான்காம் அட்டவணையின் பந்தி (3) ).

**15.** (1) பதினோராம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் தேவைப் பாடுகளைப் பூர்த்திசெய்கின்ற ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செலவுகளும் கமத்தொழிற்சார் ஆரம்பச் செலவுகளும், அவை மூலதனத்தன்மையினவானவையாகவிருப்பினும் அல்லாவிடினும் கழிக்கப்படலாம்.

*ஆராய்ச்சியும் அபிவிருத்திச் செலவுகளும் கமத்தொழிற்சார் ஆயத்தநிலைச் செலவுகளும்.*

(2) இப்பிரிவில்-

"கமத்தொழிற்சார் ஆரம்பச் செலவுகள்" என்பது, பின்வருவனவற்றில் ஆளினால் உறப்பட்ட செலவுகள் என்று பொருளாகும்:-

(அ) பயிர்ச்செய்கைக்காக அல்லது விலங்கு வேளாண்மைக்காக ஏதேனும் காணியைத் தயாராக்குதல்;

(ஆ) பந்தி (அ) வில் குறிப்பீடு செய்யப்பட்ட காணியில் தாவரங்களைப் பயிர்செய்தல்;

(இ) பந்தி (அ) வில் குறிப்பீடுசெய்யப்பட்ட காணியின் மீது வளர்ப்பதற்காகக் கால் நடைகளை அல்லது கோழிகளைக் கொள்வனவு செய்தல்; அல்லது

(ஈ) மீன் வளர்ப்பதற்காகத் தாங்கிகளை அல்லது குளங்களைப் பேணுதல் அல்லது எவையேனும் உள்நாட்டு நீர்ப்பரப்புகளைத் துப்புரவாக்குதல் அல்லது தயாராக்குதல் மற்றும் விடயத்துக்கேற்ப, அத்தகைய தாங்கியில், குளத்தில் அல்லது உள்நாட்டு நீர்ப்பரப்புகளில் வளர்க்கப்படுவதற்கான மீனைக் கொள்வனவு செய்தல்;

"ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திச் செலவுகள்" என்பது, பின்வருவனவற்றில் ஆளினால் உறப்பட்ட செலவுகள் என்று பொருளாகும்:-

(அ) இலங்கையிலுள்ள ஏதேனும் நிறுவனத்தினூடாக ஆளின் வியாபாரத்தைத் தரமுயர்த்துவதற்காக (அல்லது ஆளினால் அல்லது இலங்கையிலுள்ள ஏதேனும் ஆராய்ச்சி நிறுவனத்தினூடாக, சூழற்சார் நட்புறவான உயர்பெறுமதிக் கமத்தொழிற் சார் உற்பத்திப் பொருட்கள் தொடர்பான ஏதேனும் புத்தாக்கம் அல்லது ஆராய்ச்சிக்காக) ஏதேனும் அறிவியற்சார், கைத்தொழிற்சார், கமத்தொழிற்சார் அல்லது வேறேதேனும் ஆராய்ச்சியைக் கொண்டுநடாத்துவதில்; அல்லது

(ஆ) ஆளின் வியாபாரத்தை அபிவிருத்திசெய்யும் மற்றும் வியாபார உற்பத்திப் பொருட்களைச் சீராக்கும் நடைமுறையில் அல்லது இலங்கைக்கு நன்மைபயக்கவேண்டிய நடைமுறையில்;

ஆனால் இச்சட்டத்தின்கீழான சொத்தொன்றின் ஆகுசெலவில் வேறுவகையாக உள்ளடக்கப்படும் உறப்பட்ட செலவுகளை விலக்கிவைத்தல் வேண்டும்.

தேய்மான அனுமதிப்புகளும் சமச்சீராக்கும் அனுமதிப்புகளும்.

**16.** (1) ஒரு வரிமதிப்பீட்டாண்டுக்காக வியாபாரமொன்றிலிருந்தான ஆளொருவரின் வருமானத்தைக் கணக்கிடும் நோக்கங்களுக்காக,-

(அ) இரண்டாம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட தேய்மான அனுமதிப்புகள் கழிக்கப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) நான்காம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட சமச்சீராக்கும் அனுமதிப்புகள் கழிக்கப்படுதல் வேண்டும்.

(2) தேய்மான அனுமதிப்புகள் பின்வருவனவாகும்:-

(அ) ஒரு வியாபாரத்திலிருந்து ஓர் ஆளின் வருமானத்தைத் தோற்றுவதில் ஒரு வரிமதிப்பீட்டாண்டின் முடிவில் அவ்வாளினால் சொந்தமாக வைத்திருக்கப்பட்டு, அவரினாற் பயன்படுத்தப்பட்ட தேய்மானத்துக்குட்படத்தக்க சொத்துக்கள் தொடர்பில் வழங்கப்பட்டவை; அத்துடன்

(ஆ) இச்சட்டத்துக்கான இரண்டாம் அல்லது நான்காம் அட்டவணையின் ஏற்பாடுகளுக்கிணங்கக் கணக்கிடப்பட்டவை.

(3) ஒரு குறிப்பிட்ட வரிமதிப்பீட்டாண்டு தொடர்பில் வழங்கப்பட்ட தேய்மான அனுமதிப்புகள் அவ்வாண்டில் எடுத்துக் கொள்ளப்படுதல் வேண்டுமென்பதுடன், பின்னையவொரு வரிமதிப்பீட்டாண்டிற்குப் பிற்போடப்படுதலுமாகாது.

(4) சமச்சீராக்கும் அனுமதிப்புகள்-

(அ) (i) ஒரு வரிமதிப்பீட்டாண்டின்போது தேறிப் பெறப்பட்ட; அத்துடன்

(ii) அவ்வாண்டில் அல்லது முன்னையவோர் ஆண்டில் அவை தொடர்பில் தேய்மான அனுமதிப்புகள் வழங்கப்பட்ட,

தேய்மானத்துக்குட்படத்தக்க சொத்துக்கள் தொடர்பில் செய்யப்படுகின்றனவாகும்; அத்துடன்

(ஆ) இச்சட்டத்துக்கான இரண்டாம் அல்லது நான்காம் அட்டவணையின் ஏற்பாடுகளுக்கிணங்கக் கணக்கிடப்படுகின்றனவாகும்.

வியாபாரச் சொத்துக் களையும் பொறுப்புக் களையும் தேறிப் பெறுவதன் மீதான நட்டங்கள்.

**17**. (1) ஒரு வரிமதிப்பீட்டாண்டுக்கான வியாபாரத்திலிருந்து ஆளொருவரின் வருமானத்தைக் கணக்கிடும் நோக்கங்களுக்காக, (2) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் ஆண்டின் போதான தேறிப்பெறுகையிலிருந்து அவ்வாளின் நட்டமொன்று கழிக்கப்படுதல் வேண்டும். இந்நட்டமானது IV ஆம் அத்தியாயத்தின்கீழ் கணக்கிடப்படுதல் வேண்டும்.

(2) சொத்துக்களும் பொறுப்புக்களும் பின்வருவனவாகும்:-

(அ) வியாபாரமொன்றிலிருந்தான வருமானத்தைத் தோற்றுவிப்பதில் அவ்வியாபாரத்தின் மூலதனச் சொத்துக்கள் எந்தளவுக்குப் பயன்படுத்தப்பட்டனவோ அந்தளவுக்கு அச்சொத்துக்கள்; அத்துடன்

(ஆ) (i) பணம் கடன் பெறுவதில் உறப்பட்ட கடன் கடப்பாடாகவுள்ள பொறுப்பொன்றின் விடயத்தில், அவ்வியாபாரத்திலிருந்து வருமானத்தைத் தோற்றுவதில் அப்பணம் எந்தளவுக்குப் பயன்படுத்தப்பட்டதோ அல்லது அப்பணத்தைக் கொண்டு கொள்வனவு செய்யப்பட்ட சொத்தொன்று எந்தளவுக்குப் பயன்படுத்தப்பட்டதோ அந்தளவுக்கு அவ்வியாபாரத்தின் பொறுப்புக்கள்; அத்துடன்

(ii) வேறேதேனும் பொறுப்பின் விடயத்தில், அவ்வியாபாரத்திலிருந்தான வருமானத்தைத் தோற்றுவதில் எந்தளவுக்குப் பொறுப்பு உறப்பட்டதோ அந்தளவுக்கு அவ்வியாபாரத்தின் பொறுப்புக்கள்.

*நிதிசார் ஆகுசெலவின் கழிக்கத்தக்க தொகை.*

**18.** (1) ஒரு வரிமதிப்பீட்டாண்டுக்காக வியாபாரமொன்றை நடாத்துவதிலிருந்து, 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித்தொழிற் சட்டத்தின் கருத்துக்குட்பட்ட உரிமம்பெற்ற வர்த்தக வங்கி அல்லது உரிமம்பெற்ற விசேடித்த வங்கிதவிர, ஓர் உருவகத்தின் வருமானத்தைக் கணக்கிடுவதில் கழிக்கப்பட்ட நிதிசார் ஆகுசெலவுகளின் தொகை, (2) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட வரையறைகளினுள் நிதிசார் சாதனங்களுக்கு ஏற்றிக்கூறப்படற்பாலனவான நிதிசார் ஆகுசெலவுகளின் தொகையை விஞ்சுதலாகாது.

(2) அவ்வரையறையானது பின்வரும் வாய்ப்பாட்டுக்கிணங்கக் கணிப்பீடுசெய்யப்படுதல் வேண்டும்:-

A X B

'A' என்பது உருவகத்தின் வழங்கப்பட்ட பங்கு மூலதனத்தினதும் ஒதுக்குகளினதும் மொத்தமாகவிருக்குமிடத்து; அத்துடன்

'B' என்பது-

(அ) உற்பத்திசெய்கின்ற உருவகமொன்றின் விடயத்தில், 3 என்னும் இலக்கமாகவுள்ள விடத்து,- அத்துடன்

(ஆ) உற்பத்திசெய்கின்ற உருவகமொன்று தவிர்ந்த உருவகமொன்றின் விடயத்தில், 4 என்னும் இலக்கமாகவுள்ளவிடத்து.

(3) ஓராம் உட்பிரிவின் விளைவாக எந்த நிதிசார் ஆகுசெலவுகளுக்காகக் கழிப்பனவொன்று மறுக்கப்படுகின்றதோ அந்த நிதிசார் ஆகுசெலவுகள், முன்கொணரப்பட்டுப் பின்வரும் ஆறு வரிமதிப்பீட்டாண்டுகளுள் எதனதும்போது உறப்பட்டனவாக, ஆனால் ஆண்டுக்காக (2) ஆம் உட்பிரிவிலுள்ள ஏதேனும் பயன்படுத்தப்படாத வரையறையின் அளவுக்கு மட்டுமே, கொள்ளப்படுதல் வேண்டும்.

(4) நிதிசார் சாதனங்களின்மீதான நட்டங்கள் எச்சூழ்நிலைகளில் நிதிசார் சாதனங்களின்மீதான ஈட்டுகைகளுக்கெதிராக மட்டும் எதிரீடு செய்யப்படலாமோ, அச்சூழ்நிலைகளை ஆணையாளர் தலைமையதிபதி குறித்துரைக்கலாம்.

(5) இப்பிரிவில், "ஒதுக்குகள்" என்பது, ஏதேனும் சொத்தின் மீள்பெறுமதிமதிப்பீட்டிலிருந்து எழுகின்ற ஒதுக்குகளை விலக்கி வைக்கின்றது.

வியாபார அல்லது முதலீட்டு நட்டங்கள்.

**19.** (1) ஒரு வரிமதிப்பீட்டாண்டுக்காக வியாபாரமொன்றிலிருந்தான ஆளொருவரின் வருமானத்தைக் கணக்கிடுவதில் பின்வருவன கழிக்கப்படுதல் வேண்டும்:-

(அ) வேறேதேனும் வியாபாரத்திலிருந்து ஆண்டுக்காக அவ்வாளின் கழிக்கப்படாத நட்டம்; அத்துடன்

(ஆ) அவ்வியாபாரத்திலிருந்து அல்லது வேறேதேனும் வியாபாரத்திலிருந்து முன்னைய ஆறு வரிமதிப்பீண்டாண்டுகளுள் எதற்காகவும் அவ்வாளின் கழிக்கப்படாத நட்டம்.

(2) அவ்வாள், கழிக்கப்படாத நட்டத்தின் அல்லது நட்டத்தின் பாகம் எந்த வருமானக் கணக்கிடுதலில் அல்லது கணக்கிடுதல்களில் கழிக்கப்படுகின்றதோ அந்த வருமானக் கணக்கிடுதலை அல்லது கணக்கிடுதல்களைத் தெரிவுசெய்யலாம். ஆயின், (1) ஆம் உட்பிரிவின்கீழ் நட்டம் கழிக்கப்படக் கூடுமாயின் அது கழிக்கப்படுதல் வேண்டும்.

(3) ஓராம் மற்றும் (2) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், ஆளொருவருக்கு நட்டமொன்று ஏற்படுமிடத்தும், இந்நட்டம் இலாபமொன்றாகவிருப்பின் அதன்மீது குறைவான வீதத்தில் வரிவிதிக்கப்படுமிடத்தும், அதே குறைவான வீதத்தில், குறைந்ததாகவுள்ள குறைவான வீதத்தில் வரிவிதிக்கப்பட்ட வருமானத்தை அல்லது விலக்களிக்கப்பட்ட தொகைகளைக் கணக்கிடுவதில் மட்டுமே நட்டமானது கழிக்கப்படுதல் வேண்டும். நட்டமானது இலாபமொன்றாகவிருப்பின் இலாபமானது விலக்களிக்கப்படின், விலக்களிக்கப்பட்ட தொகைகளைக் கணக்கிடுவதில் மட்டுமே நட்டமானது கழிக்கப்படுதல் வேண்டும்.

(4) ஒன்று முதல் (3) வரையிலான உட்பிரிவுகளின் ஏற்பாடுகள், (5) ஆம் உட்பிரிவிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய, ஒரு முதலீட்டிலிருந்தான வருமானத்தையும் ஒரு முதலீட்டிலிருந்தான கழிக்கப்படாத நட்டங்களையும் பின்வரும் வகையில் கணக்கிடுவதற்கு ஏற்புடையனவாதல் வேண்டும்:-

(அ) ஒரு முதலீட்டிலிருந்தான வருமானத்தைக் கணக்கிடுவதில் ஒரு வியாபாரத்திலிருந்தான கழிக்கப்படாத நட்டங்கள் கழிக்கப்படலாம்;

(ஆ) ஒரு முதலீட்டிலிருந்தான வருமானத்தைக் கணக்கிடுவதில் மட்டுமே ஒரு முதலீட்டிலிருந்தான கழிக்கப்படாத நட்டங்கள் கழிக்கப்படுதல் வேண்டும்.

(5) நூற்றித்தொண்ணூற்று நான்காம் பிரிவுக்கமைய, ஒரு முதலீட்டுச் சொத்தின் தேறிப்பெறுகையிலிருந்தான ஈட்டுகையொன்று, வேறொரு முதலீட்டுச் சொத்தின் கையுதிர்ப்பின்மீதான ஏதேனும் நட்டத்தின்மூலம் கழிக்கப்படுதலாகாது.

(6) இப்பிரிவில் -

ஒரு வியாபாரத்திலிருந்து அல்லது முதலீட்டிலிருந்து வரிமதிப்பீட்டாண்டொன்றுக்காக ஆளொருவரின் "நட்டம்" அவ்வியாபாரத்திலிருந்து அல்லது முதலீட்டிலிருந்து அவ்வாளின் வருமானத்தைக் கணக்கிடுவதில் அவ்வருமானத்தைக் கணக்கிடுவதில் சேர்க்கப்பட்ட தொகைகளின்மீது இச்சட்டத்திற்கிணங்கக் கழிக்கப்பட்ட தொகைகளின் விஞ்சுதலாக (இப்பிரிவின்கீழ் அல்லது 25 ஆம் பிரிவின் (5) ஆம் உட்பிரிவின்கீழ்தவிர) கணக்கிடப்படுதல் வேண்டும்; அத்துடன்

"கழிக்கப்படாத நட்டம்" என்பது, இப்பிரிவின்கீழ் அல்லது 25 ஆம் பிரிவின் (5) ஆம் உட்பிரிவின்கீழ் ஆளொருவரின் வருமானத்தைக் கணக்கிடுவதில் கழிக்கப்பட்டிராத நட்டத்தொகை என்று பொருளாகும்.

## அத்தியாயம் III

## வருமானவரியின் கணக்கீடு

### பகுதி I : கணக்கிடும் முறை

*வரிமதிப் பீட்டாண்டிலான மாற்றம்.*

**20.** (1) வரிமதிப்பீட்டாண்டு என்பது, ஏதேனுமாண்டின் ஏப்பிறல் முதலாம் நாளன்று தொடங்குகின்றதும், உடனடியாக அடுத்துப்பின்வரும் ஆண்டில் மாச்சு முப்பத்தோராம் நாளன்று முடிவடைகின்றதுமான பன்னிரெண்டு மாதகாலப்பகுதி என்று பொருளாகும்.

(2) நம்பிக்கைப்பொறுப்பு அல்லது கம்பெனியொன்று அதன் வரிமதிப்பீட்டாண்டுக்கான மாற்றத்துக்காக ஆணையாளர் தலைமையதிபதிக்கு விண்ணப்பிக்கலாம் என்பதுடன், ஆணையாளர் தலைமையதிபதி, ஆணையாளர் தலைமையதிபதி தகுதியெனக் கருதுகின்றவாறான அத்தகைய நியதிநிபந்தனைகளின்மீது, அம்மாற்றத்தை அங்கீகரிக்கலாம். அங்கீகாரத்துடன் இணைந்த ஒரு நியதிக்கு அல்லது நிபந்தனைக்கு இணங்கியொழுகுவதற்கு ஒரு நம்பிக்கைப்பொறுப்பு அல்லது கம்பெனி தவறினால், ஆணையாளர் தலைமையதிபதி ஓர் அங்கீகாரத்தை இல்லாதொழிக்கலாம்.

(3) ஒரு நம்பிக்கைப்பொறுப்பின் அல்லது கம்பெனியின் வரிமதிப்பீட்டாண்டிலான மாற்றம், அந்நம்பிக்கைப்பொறுப்பு அல்லது கம்பெனி அத்தியாயம் VIII இன்கீழ் தவணைப் பணங்களின்மூலமும் வரிமதிப்பீட்டின்மீதும் வரிசெலுத்த வேண்டிய காலத்தை மாற்றியமைப்பதனை விளைவித்தல் வேண்டும்.

*கணக்கீட்டு முறை.*

**21.** (1) இச்சட்டத்தினால் வேறுவகையில் ஏற்பாடுசெய்யப்பட்டாலொழிய, ஆளொருவரின் வருமானத்தைக் கணக்கிடுவதில் உள்ளடக்கப்படுதல்களினதும் கழிப்பனவுகளினதும் காலமிடுகை, பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நெறிகளுக்கிணங்கச் செய்யப்படுதல் வேண்டும்.

(2) தனியாளொருவர், ஊழியத்திலிருந்தான அல்லது முதலீட்டிலிருந்தான அத்தனியாளின் வருமானத்தைக் கணக்கிடுவதில் வருமானவரி நோக்கங்களுக்காகப் பண அடிப்படையில் கணக்கிடுதல் வேண்டும்.

(3) வியாபாரத்தை நடாத்துகின்ற தனியாளொருவர் அல்லது உருவகமொன்று, ஒன்றுதிரளுகை அடிப்படையின்மீது வருமானவரி நோக்கங்களுக்காகக் கணக்கிடுதல் வேண்டும்.

(4) ஆளொருவர் (2) ஆம், (3) ஆம் உட்பிரிவுகளில் குறிப்பீடு செய்யப்பட்ட மூலங்களைத் தவிர்ந்த ஏனைய மூலங்களிலிருந்தான அவரது வருமானத்தை, ஒன்றில் பண அல்லது ஒன்றுதிரளுகை அடிப்படையின்மீது, எது அவ்வாளின் வருமானத்தை முறையாகக் கணிப்பீடுசெய்கின்றதோ அதில் வருமானவரி நோக்கங்களுக்காக வேறுவகையில் கணக்கிடுதல் வேண்டும்.

(5) இரண்டாம் மற்றும் (3) ஆம் உட்பிரிவுகளுக்கமைய, ஆணையாளர் தலைமையதிபதி, எழுத்திலான அறிவித்தல்மூலம், குறிப்பிட்ட கணக்கீட்டு முறையைப் பயன்படுத்தும்படி ஆளொருவரைத் தேவைப்படுத்தலாம் அல்லது ஆளொருவரின் கணக்கீட்டுமுறையை மாற்றுவதற்கு அவ்வாளின் விண்ணப்பத்தை அங்கீகரிக்கலாம். அவ்வாளின் வருமானத்தை முறையாகக் கணப்பீடுசெய்வதற்குப் புதியமுறை அவசியமாகவுள்ளதென ஆணையாளர் தலைமையதிபதி திருப்திப்படுதல் வேண்டும்.

(6) ஆளொருவரின் கணக்கீட்டு முறை மாறுமிடத்து, விடயமெதுவும் விட்டுவிடப்படாதவகையில் அல்லது ஒரு தடவைக்கு மேற்படக் கணக்குக்கெடுக்கப்படாதவகையில், மாற்றத்தை அடுத்துவரும் வரிமதிப்பீட்டாண்டில் சீர்ப்படுத்தல்கள் செய்யப்படுதல் வேண்டும்.

**பண அடிப்படையிலான கணக்கீடு.**

***22.*** *(1) கணக்கீட்டின் பண அடிப்படையின்கீழ், ஆளொருவர் -*

*(அ) அவ்வாளினால் கொடுப்பனவு பெறப்படும்போது அல்லது அவ்வாளுக்குக் கிடைக்கக்கூடியதாக்கப்படும் போது தொகையொன்றைப் பெறுகின்றார்; அத்துடன்*

*(ஆ) அவ்வாளினால் செலுத்தப்படும்போது ஒரு செலவை அல்லது வேறு தொகையை உறுகின்றார்.*

*(2) இப்பிரிவின் நோக்கத்துக்காக, ஒரு தொகையொன்று தொடர்பாகப் பெறப்பட்ட கொடுப்பனவு பின்வருவனவற்றை உள்ளடக்குதல் வேண்டும்:-*

*(அ) ஒன்றில் ஆளின் அறிவுறுத்தலின் பேரில் அல்லது ஏதேனும் சட்டத்தின்கீழ் அவ்வாளின் சார்பில் பயன்படுத்தப்பட்டது;*

*(ஆ) அவ்வாளின் நன்மைக்காக மீள்முதலீடு செய்யப்பட்டது, ஒன்றுதிரட்டப்பட்டது அல்லது மூலதனமாக்கப் பட்டது;*

*(இ) அவ்வாளின் நன்மைக்காக கணக்கொன்றுக்கு வரவு வைக்கப்பட்டது அல்லது ஏதேனும் ஒதுக்குக்கு அல்லது ஒரு கடனாழ் நிதியத்துக்கு அல்லது காப்புறுதி நிதியத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டது;*

*(ஈ) அமைவழியான பெறுகை.*

**ஒன்றுதிரளும் அடிப்படையிலான கணக்கீடு.**

***23.*** *(1) ஒன்றுதிரளும் அடிப்படையிலான கணக்கீட்டின்கீழ், ஆளொருவர் -*

*(அ) தொகையொன்று அவ்வாளினால் பெறப்படத்தக்கதாக விருக்கும்போது அத்தொகையைப் பெற்றுக் கொள்கின்றார்; அத்துடன்*

(ஆ) செலவொன்று அல்லது வேறு தொகை அவ்வாளினால் செலுத்தப்படற்பாலதாகவிருக்கும்போது அதனை உறுகின்றார்.

(2) தொகையொன்று, உரித்துடைமையின் நிறைவேற்றுகைக்கான காலம் பிற்போடப்படினும் அல்லது உரித்துடைமையானது தவணைப்பணங்களில் செலுத்தப்படற்பாலதாக இருப்பினும் கூட, ஆளொருவர் அதனைப் பெறுவதற்கு உரித்துடையவராக வரும்போது அவ்வாளினால் பெறப்படத்தக்கதாதல் வேண்டும்.

(3) பொறுப்பைத் தீர்மானிக்கின்ற எல்லா நிகழ்வுகளும் ஏற்பட்டு அந்தப் பொறுப்பின் தொகையை நியாயமான செம்மையுடன் தீர்மானிக்கமுடியுமாக இருக்கும்போது, ஆனால் அத்தொகை தொடர்பில் பொருளாதாரச் செயல்நிறைவேற்றம் ஏற்படுவதற்கு முன்னரல்லாது, தொகையொன்று அவ்வாளினால் செலுத்தப்படற்பாலதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(4) மூன்றாம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக, பொருளாதாரச் செயல்நிறைவேற்றம்-

(அ) சேவைகளை அல்லது சொத்துக்களைக் கொள்ளுதல் தொடர்பில், அச்சேவைகள் அல்லது சொத்துக்கள் வழங்கப்படும் நேரத்தில்;

(ஆ) சொத்தொன்றைப் பயன்படுத்துதல் தொடர்பில், அச்சொத்து பயன்படுத்தப்படும் நேரத்தில்; அத்துடன்

(இ) வேறேதேனும் விடயத்தில், பொறுப்பை முழுமையாகக் கொடுத்துத்தீர்ப்பதில் அவ்வாள் கொடுப்பனவு செய்யும் நேரத்தில்,

ஏற்படுகின்றது.

(5) ஒன்றுதிரளுகை அடிப்படையில் வருமானத்தைக் கணக்கிடுகையில் (6) ஆம் அல்லது (7) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட செம்மையின்மையொன்று ஏற்படுமிடத்து-

(அ) அச்செம்மையின்மையைப் பரிகரிப்பதற்கு, கொடுப்பனவு பெறப்படும் நேரத்தில் அல்லது செய்யப்படும் நேரத்தில் அல்லது கருதப்பட்ட செம்மையின்மை ஏற்பட்ட நேரத்தில் தோதான சீர்ப்படுத்தல்கள் செய்யப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) இச்சட்டத்தின் II ஆம் பாகத்தில் குறித்துரைக்கப்பட்ட வரிமதிப்பீடுகளின் திருத்தத்திற்கான காலவரையறைகள் எவ்வாறிருப்பினும், ஆணையாளர் தலைமையதிபதி, செம்மையின்மையானது எந்த வரிமதிப்பீட்டாண்டில் தொடக்கத்தில் ஏற்பட்டதோ அந்த வரிமதிப்பீட்டாண்டில் தோதான சீர்ப்படுத்துகையை உள்ளடக்கும்படி அவ்வாளைத் தேவைப்படுத்தலாம்.

(6) செம்மையின்மையொன்று பின்வருமாறு ஏற்படுகின்றது:-

(அ) ஆளொருவர் உரித்துடையவராகவுள்ள அல்லது அவ்வாள் செய்வதற்குக் கடப்பாடுடையவராகவுள்ள குறிப்பிட்ட தொகையைக் கொடுப்பனவு செய்வதற்காக அவ்வாள் கணக்கிடும்போது; அத்துடன்

(ஆ) நாணயப்பெறுமதிமதிப்பீடுகளிலான மாற்றத்தினால் உட்பட, வித்தியாசமான ஒரு தொகை, விடயம் தேவைப்படுத்துகின்றவாறு, அவ்வாளினால் பெறப்பட்ட அல்லது செய்யப்பட்ட கொடுப்பனவொன்றினால் அந்த உரித்துடைமை அல்லது கடப்பாடு அடுத்துப் பின்னர் திருப்திசெய்யப்படும்போது.

(7) பின்வரும் சந்தர்ப்பங்களில் செம்மையின்மையொன்று ஏற்படுகின்றதெனக் கருதப்படுகின்றது:-

(அ) ஆளொருவர் செய்வதற்குக் கடப்பாடுடையவராகவுள்ள குறிப்பிட்டவொரு தொகையின் கொடுப்பனவுக்காக அவ்வாள் கணக்கிடும்போது; அத்துடன்

(ஆ) கடப்பாடு எழுவதிலிருந்து மூன்றாண்டுகளினுள் அவ்வாளினால் கொடுப்பனவொன்று செய்யப்படுவதன்மூலம் அக்கடப்பாடு அடுத்துப்பின்னர் திருப்திப்படுத்தப்படாதபோது.

அறவிட முடியாக் கடன்கள் உட்பட தொகைகளின் எதிர் மாறாக்குகை.

**24.** (1) ஆளொருவர் அவ்வாளின் வருமானத்தைக் கணக்கிடுவதில் செலவொன்றைக் கழிக்குமிடத்தும், அவ்வாள் அச்செலவைப் பின்னர் அறவிடுமிடத்தும், அவ்வாள், அறவிடும் நேரத்தில், அவ்வாளின் வருமானத்தைக் கணக்கிடுவதில் அறவிடப்பட்ட தொகையை உள்ளடக்குதல் வேண்டும்.

(2) அவ்வாறு செய்வதற்கான சட்டப்படியான கடப்பாடு காரணமாக ஆளொருவர், அவ்வாளின் வருமானத்தைக் கணக்கிடுவதில் தொகையொன்றை உள்ளடக்குமிடத்தும், அவ்வாள் அத்தொகையைப் பின்னர் மீளளிக்குமிடத்தும், அவ்வாள், மீளளிக்கும் நேரத்தில், அவ்வாளின் வருமானத்தைக் கணக்கிடுவதில் மீளளிக்கப்பட்ட தொகையைக் கழித்தல் வேண்டும்.

(3) ஒன்றுதிரளுகை அடிப்படையில் வருமானத்தைக் கணக்கிடுமிடத்து, ஆளொருவர் செய்வதற்குக் கடப்பாடுடைய செலவொன்றைக் கழித்து அச்செலவை உறுவதற்கான கடப்பாடொன்றைப் பின்னர் அவ்வாள் உரிமைதுறக்குமிடத்து, அவ்வாள், உரிமைதுறக்கும் நேரத்தில், அவ்வாளின் வருமானத்தைக் கணக்கிடுகையில் உரிமைதுறக்கப்பட்ட தொகையை உள்ளடக்குதல் வேண்டும்.

(4) ஒன்றுதிரளுகை அடிப்படையின்மீது வருமானத்தைக் கணக்கிடுகையில் ஆளொருவர், அவ்வாள் உரித்துடையவராகவுள்ள தொகையொன்றை உள்ளடக்கி அவ்வாள் பின்னர்–

(அ) அத்தொகையைப் பெறுவதற்கான உரித்துடைமையை உரிமைதுறக்குமிடத்து; அல்லது

(ஆ) அத்தொகையானது அவ்வாளின் கடன்கோரிக்கை ஒன்றாக அமைகின்ற விடயத்தில், அவ்வாள் அக்கடனை அறவிடமுடியாததாகப் பதிவழிக்கின்றவிடத்து,

(5) ஆம் உட்பிரிவு ஏற்புடையனவாதல் வேண்டும்.

(5) ஆறாம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, அவ்வாள், உரிமைதுறந்த அல்லது பதிவழித்த நேரத்தில், அவ்வாளின் வருமானத்தைக் கணக்கிடுகையில் உரிமைதுறந்த அல்லது பதிவழித்த தொகையைக் கழிக்கலாம்.

(6) அறுபத்தாறாம் பிரிவுக்கமைய (வங்கித்தொழிற் செயற்பாடுகள்), ஆளொருவர் கொடுப்பனவைத் தொடர்வதில் நியாயமான நடபடிகளை எடுத்து அந்த உரித்துடைமை அல்லது கடன்கோரிக்கை திருப்திப்படுத்தப்படமாட்டாதென நியாயமான முறையில் அவ்வாள் நம்பினாலொழிய, தொகையொன்றைப் பெறுவதற்கான உரித்துடைமையை அவ்வாள் உரிமை துறக்க முடியாது அல்லது கடன் கோரிக்கையொன்றை அறவிடமுடியாத தாகப் பதிவழிக்கமுடியாது.

## பகுதி II : நீண்டகால ஒப்பந்தங்கள்

நீண்டகால ஒப்பந்தங்கள்.

**25.** (1) வியாபாரமொன்றை நடாத்துகின்றவரும் அவ்வியாபாரம் தொடர்பில் ஒன்றுதிரளும் அடிப்படையின்மீது வருமான வரி நோக்கங்களுக்காகக் கணக்குக்காட்டுகின்றவரும், நீண்டகால ஒப்பந்தமொன்றுக்குத் திறத்தவராகவுள்ளவருமான ஆளொருவருக்கு இப்பிரிவு ஏற்புடையதாதல் வேண்டும்.

(2) நீண்டகால ஒப்பந்தம் தொடர்பாக அவ்வாளின் வருமானத்தைக் கணக்கிடுகையில் உள்ளடக்கப்படவேண்டிய அல்லது கழிக்கப்படவேண்டிய தொகைகள் ஒவ்வொரு வரிமதிப்பீட்டாண்டின்போதும் பூர்த்திசெய்யப்பட்ட ஒப்பந்தத்தின் நூற்றுவீத அடிப்படையின்மீது கணக்குக்கெடுக்கப்படுதல் வேண்டும்.

(3) பூர்த்திசெய்தலின் நூற்றுவீதம், ஒப்பந்தம் தொடங்கும் நேரத்தில் தீர்மானிக்கப்பட்டவாறு ஒப்பந்தத்துக்குக் குறித்தொதுக்கப்பட்டவையும் ஒரு வரிமதிப்பீட்டாண்டு முடிவடையு முன்னர் உறப்பட்டவையுமான மொத்தச் செலவுகளை மதிப்பிடப்பட்ட மொத்த ஒப்பந்தச் செலவுகளுடன் ஒப்பிடுவதன்மூலம் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(4) நீண்டகால ஒப்பந்தமானது எவ்வரிமதிப்பீட்டாண்டில் முடிவடைந்ததோ அவ்வரிமதிப்பீட்டாண்டில் அல்லது ஏதேனும் முந்திய வரிமதிப்பீட்டாண்டில் அவ்வரிமதிப்பீட்டாண்டிற்காக அவ்வொப்பந்தம் பூர்த்திசெய்யப்பட்டு அவ்வாளுக்கு அவ்வொப்பந்தத்துக்கு ஏற்றிக்கூறப்படற்பாலதான கழிக்கப்படாத நட்டமொன்று உள்ளவிடத்து (5) ஆம் உட்பிரிவு ஏற்புடையதாதல் வேண்டும். ஒரு வரிமதிப்பீட்டாண்டிற்கான வியாபாரத்தின் கழிக்கப்படாத நட்டம், அவ்வாண்டுக்கான ஒப்பந்தத்திலிருந்து நட்டமொன்று உள்ள அளவுக்கு நீண்டகால ஒப்பந்தமொன்றுக்கு ஏற்றிக்கூறப்படற்பாலதாதல் வேண்டும்.

(5) ஆணையாளர் தலைமையதிபதி, கழிக்கப்படாத நட்டத்தைப் பின்னெடுத்துச்சென்று 19 ஆம் பிரிவின் நோக்கங்களுக்காக முன்னைய வரிமதிப்பீட்டாண்டொன்றுக்கான கழிக்கப்படாத நட்டமொன்றாக அதனைக் கொள்வதற்கு அனுமதிக்கலாம். பின்னெடுத்துச்செல்லப்பட்ட தொகை, நட்டமானது எந்த வரிமதிப்பீட்டாண்டுக்காகப் பின்னெடுத்துச்செல்லப்பட்டதோ அந்த வரிமதிப்பீட்டாண்டுக்கான ஒப்பந்தத்திலிருந்து இலாபம், ஏதேனும் இருப்பின், அதற்கு வரையறுக்கப்படுதல் வேண்டும்.

(6) ஒரு வரிமதிப்பீட்டாண்டுக்கான நீண்டகால ஒப்பந்தத்திலிருந்தான இலாபம் அல்லது நட்டமொன்று, அவ்வாண்டுக்கான ஒப்பந்தத்தின் கீழான வருமானத்தில் உள்ளடக்கப்பட்ட தொகைகளை அவ்வாண்டுக்கான ஒப்பந்தத்தின் கீழான கழிப்பனவுகளுடன் ஒப்பிடுவதன்மூலம் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(7) இப்பிரிவில்-

"நீண்டகால ஒப்பந்தம்" என்பது,-

(அ) உற்பத்திக்கான, நிறுவுகைக்கான அல்லது நிர்மாணத்துக்கான அல்லது அவை ஒவ்வொன்றும் தொடர்பான, தொடர்புபட்ட சேவைகளின் செயல்நிறைவேற்றத்துக்கான; அத்துடன்

(ஆ) ஒப்பந்தத்தின்கீழான வேலை தொடங்குகின்ற திலிருந்து பன்னிரெண்டு மாதங்களினுள் பூர்த்திசெய்யப்படாத,

ஓர் ஒப்பந்தம் என்று பொருளாகும்.

''கழிக்கப்படாத நட்டம்'' என்பது, ஒரு வியாபாரம் தொடர்பில், 19 ஆம் பிரிவிற் கொடுக்கப்பட்ட பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

வெளிநாட்டு நாணயமும் நிதிசார் சாதனங்களும்.

**26.** (1) நான்காம் மற்றும் (5) ஆம் உட்பிரிவுகளுக்கமைய, அத்தியாயம் II இன் பகுதிகள் II அல்லது IV இன் ஏற்பாடுகளின்கீழ் ஆளொருவர் ஒரு வியாபாரத்திலிருந்தான அல்லது முதலீட்டிலிருந்தான வருமானத்தைக் கணக்கிடுவதில் ஒரு நிதிசார் சாதனம் தொடர்பான தொகையொன்றை அவ்வாள் உள்ளடக்க வேண்டியவராகவிருக்குமிடத்து அல்லது தொகை யொன்றைக் கழிக்கக்கூடியவராகவிருக்குமிடத்து, நிதிசார் நிறுவனமொன்றாகவுள்ள அவ்வாளுக்கு இப்பிரிவு ஏற்புடைய தாதல் வேண்டும்.

(2) அத்தொகையானது எந்நேரத்தில் உள்ளடக்கப்படவேண் டுமோ அல்லது கழிக்கப்படவேண்டுமோ அந்நேரமானது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நெறிகளுக்கிணங் கத் தீர்மானிக்கப்படுதல் வேண்டும். அத்தொகை எவருக்குக் குறித்தொதுக்கப்படவேண்டும், அதன் அளவு மற்றும் இயல்பு என்பனவற்றையும் அந்நெறிகள் தீர்மானிக்கின்றன.

(3) குறிப்பாக, பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நெறிகள், நியாயமான பெறுமதிக் கணக்கீட்டு அடிப்படையிலான (குறியிலிருந்து சந்தைக்கு) தொகையொன்றை உள்ளடக்குதலை அல்லது கழிப்பதனை அவை தேவைப்படுத்தினாலுங்கூட பின்வருவனவற்றைப் பொருட்படுத்தாது, ஏற்புடையனவா கின்றன:-

(அ) இப்பகுதியின் ஏனைய ஏற்பாடுகள்;

(ஆ) அத்தொகைகள் இதுவரை பெறப்பட்டிருப்பினும், உறப்பட்டிருப்பினும் அல்லது தேறிப்பெறப்பட்டி ருப்பினும் அல்லாவிடினும்; அத்துடன்

(ஆ) அத்தொகைகள் மூலதன அல்லது அரசிறைத் தன்மையினவாக இருப்பினும் அல்லாவிடினும்.

(4) ஆணையாளர் தலைமையதிபதியின் எழுத்திலான முன்னங்கீகாரத்துடன், ஆளொருவர் பின்வரும் சந்தர்ப்பங்களில், ஒரு வியாபாரத்திலிருந்தான அல்லது முதலீட்டிலிருந்தான வருமானத்தைக் கணக்கிடுகையில் ஒரு நிதிசார் சாதனம் தொடர்பாகத் தொகையொன்றை உள்ளடக்கலாம் அல்லது தொகையொன்றைக் கழிக்கலாம்:-

(அ) தேறிப்பெறப்படும்போது;

(ஆ) இழப்புக்காப்புவணிக நோக்கங்களுக்காக நிதிசார் சாதனம் செய்துகொள்ளப்பட்டுள்ளவிடத்து உட்பட, தொகையின் இயல்பும் நேரமிடுகையும் தொடர்பாகக் குறித்துரைக்கப்பட்ட பரிகரிப்பொன்றைப் பயன்படுத்து தல்; அத்துடன்

(இ) அத்தொகையானது இலங்கை ரூபாக்கள் தவிர்ந்த ஒரு நாணயத்திலுள்ளவிடத்து, இச்சட்டத்தின் நோக்கங்க ளுக்காக அத்தொகை கணக்குக்கெடுக்கப்பட்ட தேதி யன்று வெளிநாட்டு நாணயத்துக்கும் இலங்கை ரூபாக்களுக்குமிடையே ஏற்புடையதாகின்ற செலாவணி வீதத்தில் அத்தொகை இலங்கை ரூபாக்களுக்கு மாற்றப்படவேண்டும் எனத் தேவைப்படுத்துகின்றமை போன்ற குறித்துரைக்கப்பட்ட மாற்றல் முறையொன் றைப் பயன்படுத்துதல்.

(5) ஆணையாளர் தலைமையதிபதி, வேறோராளுக்கு அல்லது வகுப்பினரான ஆட்களுக்கு இப்பிரிவு எந்தளவுக்கு ஏற்புடையதா கின்றதோ அந்த அளவைக் குறித்துரைக்கலாம்.

(6) ஐந்தாம் உட்பிரிவின்கீழ் ஆணையாளர் தலைமையதிபதியினால் ஏற்புடையற்பாலதான குறித்துரைப்பொன்று இல்லாதிருக்கையில், இச்சட்டத்தின்கீழ் கணக்குக்கெடுக்கப்பட்ட தொகையொன்று இலங்கை ரூபாக்களில் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன், தொகையொன்று இலங்கை ரூபாக்கள் தவிர்ந்த வேறு நாணயத்தில் இருப்பின் அத்தொகை, இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, அத்தொகை கணக்குக்கெடுக்கப்படும் தேதியன்று அவ்வெளிநாட்டு நாணயத்துக்கும் இலங்கை ரூபாக்களுக்குமிடையே ஏற்புடையதான இலங்கை மத்திய வங்கிச் செலாவணி வீதத்தில் இலங்கை ரூபாக்களாக மாற்றப்படுதல் வேண்டும்.

ஒரு கொடுப்பனவை அல்லது தொகையைக் கணித்தல்.

**27.** (1) ஆளொருவரின் வருமானத்தைக் கணக்கிடுவதில் சேர்க்கப்படவேண்டிய அல்லது கழிக்கப்படவேண்டிய ஒரு கொடுப்பனவு அல்லது தொகை, ஆணையாளர் தலைமையதிபதியினால் குறித்துரைக்கப்பட்டவாறான தொகையில் அல்லது வேறேதேனும் விடயத்தில், சந்தைப் பெறுமதிக்கிணங்கக் கணிக்கப்படுதல் வேண்டும்.

(2) கொடுப்பனவொன்றின் தொகை, இச்சட்டத்தின் அத்தியாயம் VIII இன் பகுதி II இன்கீழானகொடுப்பனவிலிருந்து பிடித்து வைக்கப்பட்ட ஏதேனும் வரிக்கான குறைப்பின்றி கணிக்கப்படுதல் வேண்டும்.

(3) சந்தைப்பெறுமதி பின்வருமாறு தீமானிக்கப்படுதல் வேண்டும்:-

(அ) 33 ஆம் பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட கட்டுப்பாடற்ற நியமத்துக்காக உரிய கவனம் செலுத்தியும்; ஆனால்

(ஆ) சொத்தொன்றின் விடயத்தில், சொத்தின் கைமாற்றத்தின் மீதான ஏதேனும் மட்டுப்பாட்டுக்கு அல்லது சொத்தானது பணத்திலான அல்லது பணத்தின் பெறுமதியிலான கொடுப்பனவாக வேறுவகையில் மாற்றப்படத்தக்கதல்ல என்ற நிகழ்வுக்குக் கவனம் செலுத்தாமலும்.

**28.** (1) ஆளொருவர் ஒரு கொடுப்பனவிலிருந்து நேரடியற்ற முறையில் நன்மைபெறக்கூடியவிடத்து அல்லது ஒரு கொடுப்பனவின் பணம்பெறுநர் எவரெனப் பணிக்கக்கூடியவிடத்து அத்துடன் கொடுப்பனவானது அவ்வாளுக்கு நன்மையக்க வேண்டுமெனச் செலுத்துநர் உட்கருதக்கூடியவிடத்து (2) ஆம் உட்பிரிவு ஏற்புடையதாதல் வேண்டும். நேரடியற்ற கொடுப்பனவுகள்.

(2) ஆணையாளர் தலைமையதிபதி, ஆளொருவருக்குச் சேர்ப்பிக்கப்பட்ட எழுத்திலான அறிவித்தல்மூலம்-

(அ) அவ்வாளைக் கொடுப்பனவு பெறுநராகக் கொள்ளலாம்;

(ஆ) அவ்வாளைக் கொடுப்பனவின் செலுத்துநராகக் கொள்ளலாம்; அல்லது

(இ) அவ்வாளைக் கொடுப்பனவின் பெறுநராகவும் கொடுப்பனவின் பெறுநராகக் கருதப்படும் ஆளுக்குச் சமமான கொடுப்பனவொன்றைச் செய்பவராகவும் கொள்ளலாம்.

(3) இப்பிரிவில், ஒரு கொடுப்பனவின் செலுத்துநரினது உட்கருத்து, செலுத்துநரின் இணையாளரினது அல்லது செலுத்துநருடனான அல்லது செலுத்துநரின் இணையாளரொருவருடான ஒழுங்கேற்பாட்டின்கீழ் மூன்றாந்திறத்தவரினது உட்கருத்தை உள்ளடக்கும்.

**29.** (1) வேறோராளுடன் கூட்டாகச் சொந்தமாக வைத்திருக்கப்பட்ட முதலீட்டிலிருந்து ஆளொருவரின் வருமானத்தைக் கணக்கிடுகையில், உள்ளடக்கப்படவுள்ளவையும் கழிக்கப்படவுள்ளவையுமான தொகைகள் கூட்டுச்சொந்தக்காரர்களிடையே முதலீட்டிலான அவர்களின் அக்கறைகளின் விகிதாசாரப்படி பங்கீடு செய்யப்படுதல் வேண்டும். கூட்டாகச் சொந்தமாக வைத்திருக்கப்பட்ட முதலீடுகள்.

(2) கூட்டுச் சொந்தக்காரர்களின் அக்கறைகளை நிச்சயிக்க முடியாதவிடத்து, அவை சமமானவையாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

**நட்டஈடும் அறவீட்டுக் கொடுப்பனவுகளும்.**

**30.** ஆளொருவர் அல்லது அவ்வாளின் இணையாளர், பின்வருவனவற்றுக்காக நட்டஈடளிக்கின்ற அல்லது அவற்றின் அறவீட்டைக் குறிக்கின்ற தொகையொன்றைப் பெற்றுக்கொள்ளுமிடத்து, அதாவது-

(அ) அவ்வாள் பெற்றுக்கொள்ளுவதற்கு எதிர்பார்க்கின்ற அல்லது எதிர்பார்த்த வருமானம் அல்லது வருமானத்தைக் கணக்கிடுவதில் உள்ளடக்கப்பட வேண்டிய ஒரு தொகை; அல்லது

(ஆ) அவ்வாள் உற்றுள்ள அல்லது உறுவதற்கு அவ்வாள் எதிர்பார்க்கின்ற அல்லது எதிர்பார்த்த வருமானத்தைக் கணக்கிடுவதிலான ஒரு நட்டம் அல்லது கழிக்கப்பட வேண்டிய ஒரு தொகை,

24 ஆம் பிரிவுக்கமைய, நட்டஈட்டுத்தொகை அவ்வாளின் வருமானத்தைக் கணக்கிடுவதில் உள்ளடக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அதற்காக நட்டஈடளிக்கப்பட்ட தொகையிலிருந்து அதன் இயல்பைப் பெறுகின்றது.

**ஆண்டுத் தொகைகள், தவணைப்பண விற்பனைகள் மற்றும் நிதிக் குத்தகைகள்.**

**31.** (1) ஒரு நிதிக்குத்தகையின்கீழ் அல்லது தவணைப்பண விற்பனையின்கீழ் சொத்தொன்றைக் கொள்வதில் ஆளொருவரினால் செய்யப்பட்ட கொடுப்பனவுகள், விடயம் தேவைப்படுத்துகின்றவாறு, குத்தகைகொடுநரால் அல்லது விற்பனையாளரால் குத்தகைபெறுநருக்கு அல்லது வாங்குநருக்கு அளிக்கப்பட்ட கடனொன்றின்கீழான வட்டியாகவும் மூலதனத்தின் மீள்கொடுப்பனவாகவும் கொள்ளப்படுதல் வேண்டும்.

(2) ஆண்டுத்தொகையொன்றின்கீழ் ஆளொருவருக்குச் செய்யப்பட்ட கொடுப்பனவுகள், ஆண்டுத்தொகையின் செலுத்துநருக்கு அவ்வாளினால் அளிக்கப்பட்ட கடனின்கீழான வட்டியாகவும் மூலதனத்தின் மீள்கொடுப்பனவாகவும் கொள்ளப்படுதல் வேண்டும்.

(3) ஓராம் மற்றும் (2) ஆம் உட்பிரிவுகளின்கீழ் வட்டியும் மூலதன மீள்கொடுப்பனவும், ஆறுமாதங்களுக்கொரு தடவைக் கான அல்லது ஆணையாளர் தலைமையதிபதி குறித்துரைக்கக் கூடியவாறான அத்தகைய வேறு காலப்பகுதிக்கான கூட்டு வட்டியுடனான இணைந்த கடனொன்றாக அக்கடன் இருந்த தென்றாற்போன்று கணக்கிடப்படுதல் வேண்டும்.

(4) பிரிவு 49 நிதிக்குத்தகைகள் மற்றும் தவணைப்பண விற்பனைகளின் கீழான கைமாற்றங்கள் தொடர்பான மேலதிக ஏற்பாடுகளைச் செய்கின்றது.

(5) ஆணையாளர் தலைமையதிபதி, வட்டிப் பதிலீடுகள் தொடர்பான வேறு எவையேனும் நிதியளிப்பு முறைகளைக் குறித்துரைக்கலாம்.

(6) இப்பிரிவின் நோக்கங்களுக்காக-

"ஆண்டுத்தொகை" என்பது, பின்வருமாறு செலுத்தப்படற் பாலதான தொகையொன்றை உள்ளடக்காது:-

(அ) ஜீவனாம்சம் அல்லது பராமரிப்புப்பணக் கொடுப்பனவு என்ற வகையாக நீதிமன்றக் கட்டளையொன்றின்கீழ்; அல்லது

(ஆ) முறையாக நிறைவேற்றப்பட்ட பிரிந்துவாழ்தல் உறுதியின்கீழ் ஒரு வாழ்க்கைத்துணைக்கு;

"இணைந்த கடன்" என்பது, பின்வருமாறான கடன் என்று பொருளாகும்:-

(அ) அதன்கீழ் கடன் பெறுநரினாலான கொடுப்பனவுகள் பகுதியளவில் வட்டிக்கொடுப்பனவையும் பகுதியளவில் மூலதன மீள்கொடுப்பனவையும் குறிக்கின்றது;

(ஆ) வட்டிப்பாகம், ஒவ்வொரு கொடுப்பனவும் செய்யப்படும் நேரத்தில் நிலுவையாகவுள்ள மூலதனத்தின்மீது கணக்கிடப்படுகின்றவிடத்து; அத்துடன்

(இ) வட்டிவீதம், கடன் காலத்தின்போது ஒருசீரான தாக உள்ளவிடத்து;

"நிதிக்குத்தகை" என்பது, பின்வருமாறான குத்தகை என்று பொருளாகும்:-

(அ) குத்தகை உடன்படிக்கை, குத்தகைக்காலம் முடிவடைந்ததனை அடுத்துப்பின்னர் சொத் தாண்மைக் கைமாற்றத்துக்காக ஏற்பாடு செய்யு மிடத்து அல்லது குத்தகைபெறுநர், நிர்ணயிக் கப்பட்ட அல்லது முன்னர் ஊகித்த விலைக் காகக் குத்தகைக்காலம் முடிவுற்றபின்னர் சொத்தைக் கொள்வதற்கு விருப்புத்தெரிவைக் கொண்டவராகவுள்ளவிடத்து;

(ஆ) குத்தகைக்காலம் சொத்தின் பயன் நுகர் காலத் தின் எழுபத்தைந்து சதவீதத்தை விஞ்சுமிடத்து;

(இ) குத்தகைக்காலம் முடிவுற்றபின்னர் சொத்தின் மதிப்பிடப்பட்ட சந்தைப்பெறுமதி, குத்தகை ஆரம்பிக்கும்போது அதன் சந்தைப்பெறு மதியின் இருபது சதவீதத்துக்குக் குறைவாக வுள்ளவிடத்து;

(ஈ) சொத்தின் பயன் நுகர் காலத்தின் கடைசி இருபத் தைந்து சதவீதத்துக்கு முன்னர் தொடங்குகின்ற குத்தகையொன்றின் விடயத்தில், குறைந்தபட்சக் குத்தகைக்கொடுப்பனவுகளின் தற்போதைய பெறுமதி, குத்தகைக்காலத்தின் ஆரம்பத்தில் சொத்தின் சந்தைப்பெறுமதியினது தொண் ணூறு சதவீதத்துக்குச் சமமாக அல்லது அதனை விஞ்சுவதாக உள்ளவிடத்து; அல்லது

(உ) சொத்தானது குத்தகைபெறுநருக்கென்றே உள்ளவிடத்தும், குத்தகைக்காலம் முடிவுற்ற பின்னர் சொத்தானது குத்தகைபெறுநர் தவிர்ந்த வேறு எவரேனுமாளுக்குச் செயல் முறையில் பயனுள்ளதாகவிருக்காதவிடத்தும்;

"தவணைப்பண விற்பனை" என்பது, நிலுவையாகவுள்ள விற்பனை வரும்படிகளின்மீது செலுத்தப்படற்பால தான வணிகக் காலாகால வட்டிக்காக ஏற்பாடு செய்கின்ற விற்பனையொன்றைத் தவிர்க்கின்றது; அத்துடன்

"குத்தகைக் காலம்" என்பது, குத்தகையொன்றைப் புதுப்பிப்ப தற்கான விருப்புத்தெரிவைக் குத்தகைபெறுநர் கொண்டுள்ள மேலதிகக் காலப்பகுதியை உள்ளடக்கும்.

இஸ்லாமிய நிதிக் கொடுக்கல் வாங்கல்கள்.

**32.** ஏதேனும் இஸ்லாமிய நிதிக் கொடுக்கல்வாங்கலிலிருந்து எழுகின்ற வருமானம், பொருளளவில் இஸ்லாமிய நிதிக் கொடுக்கல்வாங்கல்கள் சாராதவற்றுக்குச் சமமாகவுள்ள வாறான ஒத்தமுறையில் வரிக்கமைந்ததாதல் வேண்டும்.

இணையாளர் களுக்கிடையே கட்டுப்பாடற்ற நியமமும் ஒழுங்கேற்பாடு களும்.

**33.** (1) இணைந்துள்ள ஆட்களுக்கிடையே ஒழுங்கேற்பா டொன்று உள்ளவிடத்து, அவ்வாட்கள், அவர்களின் வருமானத் தையும் செலுத்தப்படற்பாலதான வரியையும் கட்டுப்பாடற்ற நியமத்துக்கிணங்கக் கணக்கிடுதல் வேண்டும்.

(2) தனிப்பட்ட ஆட்களுக்கிடையே செய்யப்பட்டிருக்கக்கூடிய ஒழுங்கேற்பாடுகளைப் பிரதிபலிப்பதற்கு வருமானத்தைக் கணக்கிடுவதில் உள்ளடக்கப்படவேண்டிய அல்லது கழிக்கப்பட வேண்டிய தொகைகளைக் கணிப்பதற்கும் இயல்புபடுத்துவதற் கும் பங்கீடுசெய்வதற்கும் குறித்தொதுக்குவதற்கும் கட்டுப்பாடற்ற நியமம் இணைந்துள்ள ஆட்களைத் தேவைப்படுத்துகின்றது.

(3) ஆணையாளர் தலைமையதிபதி, வர்த்தமானியிலான வெளியீட்டின்மூலம் கட்டுப்பாடற்ற விலையைத் தீர்மானிக்கும்

நோக்கத்துக்காகக் கட்டுப்பாடற்ற உடன்படிக்கைகள் எம்முறையில் செய்துகொள்ளப்படவேண்டுமோ அம்முறையைக் குறித்துரைக்கலாம்.

(4) ஆணையாளர் தலைமையதிபதியின் அபிப்பிராயத்தில் ஆளொருவர் (1) ஆம் உட்பிரிவுக்கிணங்கியொழுகத் தவறுமிடத்து, ஆணையாளர் தலைமையதிபதி (1) ஆம் உட்பிரிவுக் கிணங்கியொழுகச் சீர்ப்படுத்தல்களைச் செய்யலாம் என்பதுடன், ஆணையாளர் தலைமையதிபதி-

(அ) கடன் நிதியளிப்பை ஒப்புரவு நிதியளிப்பாக மீள இயல்புபடுத்துதல் உட்பட, இணைந்துள்ள ஆட்களுக்கிடையே செய்யப்பட்ட ஒழுங்கேற்பாடொன்றை மீள இயல்புபடுத்தலாம்;

(ஆ) ஏதேனும் வருமானம், நட்டம், தொகை அல்லது கொடுப்பனவின் மூலத்தையும் வகையையும் மீள இயல்புபடுத்தலாம்; அத்துடன்

(இ) மொத்தவிற்பனைவரவின் அடிப்படையில் செலவினத்தைப் பங்கீடு செய்யலாம் மற்றும் குறித்தொதுக்கலாம்.

**34.** (1) ஆளொருவர் வேறோராளுடன் வருமானத்தைப் பிரிப்பதற்கு எத்தனிக்குமிடத்து, ஆணையாளர் தலைமையதிபதி, எழுத்திலான அறிவித்தலொன்றை வழங்குவதன்மூலம் செலுத்தப்படற்பாலதான வரியிலான ஏதேனும் குறைப்பைத் தடுக்கலாம்.

வருமானத்தைப் பிரித்தல்.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட அறிவித்தலொன்று ஒவ்வோராளினதும் வருமானத்தைக் கணக்கிடுவதில் உள்ளடக்கப்படவேண்டிய அல்லது கழிக்கப்படவேண்டிய தொகைகளைக் கொண்டிருக்கலாம் அல்லது ஏதேனும் வருமானம், நட்டம், தொகை அல்லது கொடுப்பனவின் மூலத்தையும் வகையையும் மீள இயல்புபடுத்தலாம்.

(3) வருமானத்தைப் பிரிப்பதற்கு எத்தனிக்கின்ற ஆளொரு வருக்கான குறிப்பீடு, பின்வருவனவற்றுக்காக இணைந்துள்ள ஆட்களுக்கிடையேயான ஒழுங்கேற்பாட்டுக்கான குறிப்பீ டொன்றை உள்ளடக்குகின்றது:-

(அ) பெறப்படவேண்டிய தொகையொன்றின் கைமாற்றம் உட்பட, (நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல்) சொத்தொன்றைக் கைமாற்றுவதற்காகவும்;

(ஆ) கைமாற்றுநர், சொத்திலிருந்து (தற்போதைய அல்லது எதிர்கால) நன்மைக்கான ஏதேனும் சட்டப்படியான அல்லது உட்கிடையான உரிமையை வைத்திருக்கு மிடத்து; அத்துடன்

(இ) கைமாற்றத்துக்கான காரணங்களுள் ஒன்று எவரேனும் ஆளினால் செலுத்தப்படற்பாலதான வரியைக் குறைப்ப தாகவிருக்குமிடத்து.

(4) (அ) மற்றைய வாழ்க்கைத்துணையினால்; அல்லது

(ஆ) மற்றைய வாழ்க்கைத்துணை எந்தப் பங்குடைமை யில் பங்காளராகவிருக்கின்றாரோ அந்தப் பங்கு டைமையினால்,

கொண்டு நடாத்தப்பட்ட அல்லது பிரயோகிக்கப்பட்ட ஏதேனும் வியாபாரத்தில் அளிக்கப்பட்ட சேவைகளுக்காக வாழ்க்கைத் துணையொருவர் வருமானம் பெறுமிடத்து, அவ்வருமானம், அவ்வியாபாரத்தை அல்லது மற்றைய வாழ்க்கைத்துணை பங்காளராகவுள்ள அப்பங்குடைமையைக் கொண்டு நடாத்து கின்ற வாழ்க்கைத்துணையின் வருமானத்தில் உள்ளடக்கப்படுதல் வேண்டும்.

வரித்தவிர்ப்பு திட்டங்கள்.

**35.** (1) ஆணையாளர் தலைமையதிபதி,-

(அ) திட்டமொன்று செய்யப்பட்டுள்ளது அல்லது நிறை வேற்றப்பட்டுள்ளது;

(ஆ) திட்டம் சம்பந்தமாக ஆளொருவர் வரி நன்மையைப் பெற்றுள்ளார்; அத்துடன்

(இ) திட்டத்தின் பொருளைக் கருத்திற்கொண்டு,திட்டத்தைச் செய்துகொண்ட அல்லது நிறைவேற்றிய ஆள் அல்லது ஆட்களில் ஒருவர், (ஆ) என்னும் பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்ட ஆள் வரி நன்மையைப் பெறுவதனை இயலச்செய்யும் தனியான அல்லது பிரதானமான நோக்கத்துக்காக அவ்வாறு செய்தாரென முடிபுசெய் யப்படலாம்,

எனத் திருப்திப்படுமிடத்து இப்பிரிவு ஏற்புடையதாதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தில் எது எவ்வாறிருப்பினும், ஆணையாளர் தலைமையதிபதி, அத்திட்டம் செய்துகொள்ளப்படவில்லை அல்லது நிறைவேற்றப்படவில்லையென்றாற் போன்று அல்லது அத்திட்டத்தைச் செய்துகொள்வதற்கான அல்லது நிறைவேற்று வதற்கான நியாயமான மாற்றுவழி அதற்குப் பதிலாகச் செய்துகொள்ளப்பட்டிருக்கும் அல்லது நிறைவேற்றப் பட்டிருக்கும் என்றாற்போன்று அல்லது எவரேனும் ஆளினால் செலுத்தப்படற்பாலதான வரித்தொகையைக் குறைக்கின்ற அல்லது குறைக்கும் பயனைக்கொண்டதாகவிருக்கும் ஏதேனும் கொடுக்கல்வாங்கல், செயற்கையானது அல்லது பொய்யானது என்றாற்போன்று வரிநன்மையைப் பெற்ற ஆளின் வரிப் பொறுப்பைத் தீர்மானிக்கலாம்; அத்துடன், அத்திட்டத்தினால் பாதிக்கப்பட்ட வேறெவரேனுமாளின் வரிப்பொறுப்புக்கான நட்டஈடளிக்கும் சீர்ப்படுத்தல்களையும் அவர் செய்யமுடியும்.

(3) தீர்மானம் அல்லது சீர்ப்படுத்தல் ஒன்று செய்யப்படு மிடத்து, ஆணையாளர் தலைமையதிபதி, அத்தீர்மானத்துக்கு அல்லது சீர்ப்படுத்தலுக்குப் பயன்கொடுக்கின்ற வரிமதிப்பீ டொன்றை வழங்குதல் வேண்டும்.

(4) மூன்றாம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட வரிமதிப்பீடானது, அத்தீர்மானம் அல்லது சீர்ப்படுத்தல் எந்த வரிமதிப்பீட்டாண்டு தொடர்பானதோ அந்த வரிமதிப்பீட்டாண்டின் கடைசி நாளிலி ருந்து ஐந்து ஆண்டுகளினுள் சேர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(5) இப்பிரிவின் நோக்கங்களுக்காக-

"திட்டம்" என்பது, வெளிப்படையானதாயினும் அல்லது உட்கிடையானதாயினும் மற்றும் வலுவுக்கிடத்தக்க தாயினும் அல்லதாயினும், ஏதேனும் நடவடிக்கை முறையை, நம்பிக்கைப் பொறுப்பை, மானியத்தை, உடன்படிக்கையை, ஒழுங்கேற்பாட்டை, புரிந் துணர்வை, வாக்குறுதியை, திட்டத்தை, உத்தேசத்தை அல்லது பொறுப்பேற்பை உள்ளடக்கும்;

"வரி நன்மை" என்பது, பின்வருவன என்று பொருளாகும்:-

(அ) ஒரு கழிப்பனவு, வரவு, எதிரீடு அல்லது தள்ளுபடி என்ற காரணத்தின்மீது உட்பட, வரிசெலுத்து வதற்கான பொறுப்பிலான குறைப்பு;

(ஆ) வரிசெலுத்துவதற்கான பொறுப்பைப் பிற்போடு தல்;

(இ) வரிசெலுத்துவதிலான தாமதம் காரணமாக எழுகின்ற வேறேதேனும் அனுகூலம்; அல்லது

(ஈ) பின்வருவனவற்றை விளைவிக்கின்ற எதுவும்:-

(i) விலக்களிக்கப்பட்ட வருமானமாக அல் லது வேறுவகையில் வரிக்கு அமைந்த தாகவிராத முழுமொத்த அரசிறைத் தொகை; அல்லது

(ii) வேறுவகையில் வரிக்கு அமைந்தாக விருக்கும் தொகையொன்றுக்கு வரிவிதிக் கப்படாமை.

## அத்தியாயம் IV

### சொத்துக்களும் பொறுப்புக்களும்

### பகுதி I : ஈட்டுகைகளையும் நட்டங்களையும் கணக்கிடுதல்

**36.** (*1*) ஒரு சொத்தின் அல்லது பொறுப்பின் தேறிப்பெறுகையிலிருந்து ஆளொருவரின் ஈட்டுகை, அச்சொத்துக்காக அல்லது பொறுப்புக்காகப் பெறப்பட்ட பிரதிபயனின் பணத்தொகை, தேறிப்பெறப்பட்ட நேரத்தில் அச்சொத்தின் அல்லது பொறுப்பின் ஆகுசெலவை எத்தொகையினால் விஞ்சுகின்றதோ அத்தொகையாதல் வேண்டும்.

*ஈட்டுகைகளையும் நட்டங்களையும் கணக்கிடுதல்.*

(*2*) ஒரு சொத்தின் அல்லது பொறுப்பின் தேறிப்பெறுகையிலிருந்து ஆளொருவரின் நட்டம், அச்சொத்துக்காக அல்லது பொறுப்புக்காகத் தேறிப்பெறப்பட்ட நேரத்தில் பெறப்பட்ட பிரதிபயனின் பணத்தொகையை அச்சொத்து அல்லது பொறுப்பின் ஆகுசெலவு எத்தொகையினால் விஞ்சுகின்றதோ அத்தொகையாதல் வேண்டும்.

(*3*) முதலீட்டுச் சொத்தொன்றின் தேறிப்பெறுகையின்மீது ஆளொருவரினால் செய்யப்பட்ட ஈட்டுகை, ஓர் ஊழியத்திலிருந்து அல்லது வியாபாரத்திலிருந்து அவ்வாளின் வருமானத்தைக் கணக்கிடுவதில் உள்ளடக்கப்பட்ட ஈட்டுகையின் ஏதேனும் பாகத்தினால் குறைக்கப்படுதல் வேண்டும்.

(*4*) ஆளொருவரினால் சொந்தமாக வைத்திருக்கப்பட்ட சொத்து அல்லது பொறுப்பு இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வருமான மூலங்களின் தோற்றுவிப்பில் பயன்படுத்தப்படுமிடத்து, அச்சொத்தின் ஆகுசெலவும் அதற்காகப் பெறப்பட்ட பிரதிபயனும் ஒவ்வொரு மூலத்தையும் தோற்றுவிப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட பாகங்களின் சந்தைப்பெறுமதிக்கிணங்க ஒவ்வொரு மூலத்திற்குமிடையே பங்கீடு செய்யப்படுதல் வேண்டும்.

**37.** (1) இச்சட்டத்துக்கமைய,ஆளொருவரின் சொத்தினது ஆகுசெலவு பின்வருவனவற்றின் பணத்தொகையாதல் வேண்டும்:- ஒரு சொத்தின் ஆகுசெலவு.

(அ) இயைபானவிடத்து, சொத்தின் நிர்மாணம், உற்பத்தி அல்லது தயாரிப்பு என்பன மீதான செலவினம் உட்பட, சொத்தைக் கொள்ளுவதில் அவ்வாளினால் உறப்பட்ட செலவினம்;

(ஆ) சொத்தை மாற்றியமைப்பதில், சீராக்குவதில், பேணுவதில் அல்லது பழுதுபார்ப்பதில் அவ்வாளினால் உறப்பட்ட செலவினம்;

(இ) சொத்தைக் கொள்ளுவதிலும் தேறிப்பெறுவதிலும் அவ்வாளினால் உறப்பட்ட இடைநேர்விளைவான செலவினம்; அத்துடன்

(ஈ) இரண்டாம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட வருமானத் தொகைகள்.

(2) ஒரு வருமானத் தொகையானது-

(அ) அவ்வாளின் வருமானத்தைக் கணக்கிடுவதில் நேரடியாகச் உள்ளடக்கப்படுவதற்கு அத்தியாயம் II இன் பகுதி II இனால் தேவைப்படுத்தப்பட்ட ஒருதொகையாக அல்லது விலக்களிக்கப்பட்ட தொகையாக அல்லது ஆளின் இறுதிப் பிடித்துவைத்தல் கொடுப்பனவாக இருத்தல் வேண்டும்;

(ஆ) பந்தி (அ) விலான பரிகரிப்பு, சொத்தானது ஆளொருவரினால் கொள்ளப்படுவதிலிருந்து அல்லது அவ்வாளின் சார்பில் (1) ஆம் உட்பிரிவின் பந்தி (ஆ)

அல்லது (இ) இல் குறிப்பிடப்பட்ட வகையினதான செலவினத்தை வேறோராள் உறுவதை விளை விக்கின்றதாகவிருத்தல் வேண்டும்.

(3) ஒரு சொத்தின் ஆகுசெலவானது, நுகர்வுச்செலவினம், தவிர்க்கப்பட்ட செலவினம் மற்றும் ஆளொருவரின் வருமானத்தைக் கணக்கிடுவதில் அது கழிக்கப்படுமளவுக்கு அல்லது வேறொரு சொத்தின் ஆகுசெலவில் உள்ளடக்கப்படும் அளவுக்கு அச்செலவினம் என்பவற்றை உள்ளடக்குதல் ஆகாது.

(4) இப்பிரிவில், சொத்தொன்றைக் கொள்ளுவதில் அல்லது தேறிப்பெறுவதில் ஆளொருவரினால் உறப்பட்ட "இடைநேர் விளைவான செலவினம்" என்பது, பின்வருவனவற்றை உள்ள டக்குதல் வேண்டும்-

(அ) விளம்பரப்படுத்தற் செலவினம், கைமாற்றல் வரிகள், தீர்வைகள் மற்றும் வேறு கைமாற்றற் செலவினம்;

(ஆ) சொத்தின் சொத்தாண்மையை நிலைநாட்டுதலில் பேணிக்காத்தலில் அல்லது பாதுகாப்பதிலான செல வினம்; அத்துடன்

(இ) பந்தி (அ) அல்லது (ஆ) வில் குறிப்பீடு செய்யப்பட்ட செலவினம் தொடர்பாக, கணக்காளர், முகவர், ஏலவிற்பனையாளர், தரகர், ஆலோசகர், சட்ட மதியுரைநர், நில அளவையாளர் அல்லது பெறுமதி மதிப்பீட்டாளர் என்போரின் சேவைகளுக்கான ஊதி யம்.

பெறப்பட்ட பிரதிபயன்.

**38.** (1) இச்சட்டத்துக்கமைய, குறிப்பிட்டவொரு நேரத்தில் ஆளொருவரின் சொத்துக்காகப் பெறப்பட்ட பிரதிபயன்-

(அ) தேறிப்பெறப்பட்ட நேரத்தில் தீர்மானிக்கப்பட்ட பொருள்வகையிலான ஏதேனும் பிரதிபயனின் நியாய மான சந்தைப்பெறுமதி உட்பட, அச்சொத்துக்காக அவ்வாளினால் பெறப்பட்ட அல்லது பெறப்படற்பால தான தொகைகள்;

(ஆ) பின்வருவனவுட்பட, சொத்தைச் சொந்தமாக வைத்திருத்தல் தொடர்பில் அவ்வாளினால் பெறப்பட்ட தொகைகள்:-

(i) சொத்தின் பெறுமதியை மாற்றியமைப்பதிலிருந்து அல்லது குறைப்பதிலிருந்து பெறப்பட்ட தொகைகள்; அத்துடன்

(ii) பழுதுபார்ப்பதற்கான அல்லது வேறுவகையான, பொருத்தனை என்றவகையாக உட்பட, அச் சொத்திலிருந்து பெறப்பட்ட தொகைகள்; அத்துடன்

(இ) அச்சொத்தைத் தேறிப்பெறுதல் தொடர்பில் அவ்வாளினால் பெறப்பட்ட தொகைகள் அல்லது எதிர்காலத்தில் தொகையொன்றைப் பெறுவதற்கு அவ்வாளுக்குள்ள உரித்துடைமை.

(2) ஒரு சொத்தைப் தேறிப்பெறுவதற்காகப் பெறப்பட்ட பிரதிபயன், விருப்புத்தெரிவின் வழங்குகையின்மீது ஆளொருவர் ஏதேனும் வருமானம் அல்லது ஈட்டுகை தொடர்பிலான வரிக்கு அமைந்தவராகவிராதிருப்பின் மட்டுமே அச்சொத்துத் தொடர்பான விருப்புத்தெரிவின் வழங்குகைக்கான பிரதிபயனை உள்ளடக்குதல் வேண்டும்.

(3) ஒரு சொத்துக்காகப் பெறப்பட்ட பிரதிபயன், விலக்களிக்கப் பட்ட தொகையொன்றை, இறுதிப் பிடித்துவைத்தல் கொடுப்பன வொன்றை அல்லது, வர்த்தகக் கையிருப்பின் விடயத்திற்றவிர அத்தியாயம் II இன் பகுதி II இன்கீழ் அவ்வாளின் வருமானத்தைக் கணக்கிடுவதில் நேரடியாக உள்ளடக்கப்பட வேண்டிய தொகையொன்றை உள்ளடக்குதலாகாது.

**39**. இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, சொத்தொன்றைச் சொந்தமாக வைத்திருக்கின்ற ஆளொருவர், பின்வரும் சந்தர்ப்பங்களில் அச்சொத்தைத் தேறிப்பெறுபவராகக் கொள்ளப்படுதல் வேண்டும்:- தேறிப் பெறுகை.

(அ) அச்சொத்தானது விற்கப்படும்போது, கொடுத்து மாற்றப்படும்போது, கைமாற்றப்படும்போது, பகிர்ந் தளிக்கப்படும்போது, இல்லாதாக்கப்படும்போது, மீட்கப்படும்போது, அழித்துவிடப்படும்போது, காணாமற்போகும்போது, முடிவுறும்போது, பறிமுதல் செய்யப்படும்போது அல்லது ஒப்படைக்கப்படும்போது, அவ்வாள் சொத்தின் சொத்தாண்மையை இழக்கும் போது;

(ஆ) தனியாளொருவரின் இறப்புக் காரணமாக உட்பட, இல்லாதொழிகின்ற ஆளொருவரின் சொத்தின் விடயத்தில் அவ்வாள் இல்லாதொழிவதற்கு நேர்முன்னர்;

(இ) வர்த்தகக் கையிருப்பு தவிர்ந்த சொத்தின் அல்லது தேய்மானத்துக்குட்படத்தக்க சொத்தின் விடயத்தில், அச்சொத்தைச் சொந்தமாக வைத்திருப்பதிலிருந்து பெறப்பட்ட பிரதிபயனின் பணத்தொகை அச்சொத்தின் ஆகுசெலவை விஞ்சுமிடத்து;

(ஈ) ஆளொருவரினால் சொந்தமாக வைத்திருக்கப்பட்ட கடன்கோரிக்கையாகவுள்ளதும் அக்கடன்கோரிக்கை திருப்திசெய்யப்படமாட்டாதென அவ்வாள் நியாயமான முறையில் நம்புகின்றதுமான சொத்தின் விடயத்தில், அக்கடன்கோரிக்கையைத் தொடர்வதில் அவ்வாள் நியாயமான நடவடிக்கைகளை எடுத்துள்ளவிடத்தும் அவ்வாள் அக்கடனை அறவிடமுடியாக் கடனாகப் பதிவழிக்குமிடத்தும்;

(உ) வர்த்தகக் கையிருப்பு, தேய்மானத்துக்குட்படத்தக்க சொத்து, ஒரு வியாபாரத்தின் மூலதனச் சொத்து அல்லது ஒரு முதலீட்டுச் சொத்து என்பவற்றின் விடயத் தில், அச்சொத்தானது அவ்வகைகளுள் ஏதேனுமொன் றாக இல்லாதொழியும் அத்தகையவொரு வகையில் அச்சொத்தை அவ்வாள் பயன்படுத்துவதற்கு ஆரம்பிப் பதற்கு நேர்முன்னர்; அத்துடன்

(ஊ) 70 ஆம் பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட சூழ்நிலைகளில். (வதிவிட மாற்றம்).

**40**. (1) ஆளொருவரின் பொறுப்புக்கான ஆகுசெலவுகளும் அதற்காகப் பெறப்பட்ட பிரதிபயனும் 37 ஆம், 38 ஆம் பிரிவுகளுக் கிணங்க, பொறுப்புக்கள்.

(அ) ஒரு சொத்துக்கான குறிப்பீடு ஒரு பொறுப்புக்கான குறிப்பீடு என்றாற்போன்று;

(ஆ) அப்பொறுப்பைத் தேறிப்பெறுவதில் உறப்பட்ட செலவினம் அப்பொறுப்பின் ஆகுசெலவுகளில் சேர்க்கப் பட்டுள்ளது என்றாற்போன்று; அத்துடன்

(இ) அப்பொறுப்பை உறுவது தொடர்பில் பெறப்பட்ட தொகைகள் அப்பொறுப்புக்காகப் பெறப்பட்ட பிரதி பயனில் சேர்க்கப்படுகின்றன என்றாற்போன்று,

தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(2) இச்சட்டத்துக்கமைய, பொறுப்பொன்றைச் செலுத்த வேண்டியவராகவுள்ள ஆளொருவர் பின்வரும் சந்தர்ப்பங்களில் அப்பொறுப்பைத் தேறிப்பெறுபவராகக் கொள்ளப்படுதல் வேண்டும்:-

(அ) அப்பொறுப்பானது கைமாற்றப்படும்போது, திருப்தி செய்யப்படும்போது, இல்லாதாக்கப்படும்போது, விடுவிக்கப்படும்போது அல்லது முடிவுறும்போது உட்பட, அவ்வாள் அப்பொறுப்பைச் செலுத்தவேண்டியவராக இல்லாதொழியும்போது;

(ஆ) தனியாளொருவரின் இறப்புக் காரணமாக உட்பட, இல்லாதொழிகின்ற ஆளொருவரின் பொறுப்பினது விடயத்தில், அவ்வாள் இல்லாதொழிகின்றமைக்கு நேர்முன்னர்; அத்துடன்

(இ) 70 ஆம் பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட சூழ்நிலைகளில். (வதிவிட மாற்றம்).

(3) எவையேனும் ஒழுங்குவிதிகளுக்கமைய, பகுதி II இன் ஏற்பாடுகள், அவசியமான எவையேனும் இசைவாக்கங்களுடன், அவை சொத்துக்களுக்கு ஏற்புடையனவாகும் ஒரு முறைக்கொத்த தாகப் பொறுப்புகளுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

தொகைகளின் எதிர்மாறாக்குகை, கணிப்பு மற்றும் அவற்றுக்கான நட்டஈடு.

**41.** (1) இருபத்திநான்காம் பிரிவுக்கமைய,ஆளொருவர், சொத்தின் அல்லது பொறுப்பின் ஆகுசெலவில் செலவினத்தை உள்ளடக்கி அச்செலவினத்தைப் பின்னர் அறவிடுமிடத்து, அவ்வாள் விடயம் தேவைப்படுத்துகின்றவாறாக, அச்சொத்துக் காக அல்லது பொறுப்புக்காகப் பெறப்பட்ட பிரதிபயனில் அறவிடப்பட்ட தொகையை உள்ளடக்குதல் வேண்டும்.

(2) இருபத்திநான்காம் பிரிவுக்கமைய,ஒரு சொத்துக்காக அல்லது பொறுப்புக்காகப் பெறப்பட்ட பிரதிபயனில் பெறப்பட்ட தொகையை ஆளொருவர் உள்ளடக்குமிடத்தும் அத்தொகையைப் பின்னர் மீளளிக்குமிடத்தும், அவ்வாள் மீளளிக்கப்பட்ட தொகை யைச் சொத்தின் ஆகுசெலவில் உள்ளடக்கலாம்.

(3) (அ) ஒரு சொத்துக்காக அல்லது பொறுப்புக்காக உள்ளபடியான அல்லது எதிர்பார்க்கப்பட்ட ஆகு செலவுகள் அல்லது எதிர்பார்க்கப்பட்டு ஆனால் பெறப்படாத பிரதிபயனின் அறவீட்டுக்காக நட்டஈடளிக்கின்ற அல்லது அதனைக் குறிக்கின்ற; அல்லது

(ஆ) ஒரு சொத்தின் பெறுமதியிலான இழப்புக்காக அல்லது பொறுப்பின் அதிகரிப்புக்காக நட்ட ஈடளிக்கின்ற அல்லது அதனைக் குறிக்கின்ற,

தொகையொன்றை ஆளொருவர் அல்லது அவ்வாளின் இணை யாளரொருவர் பெற்றுக்கொள்ளுமிடத்து, அவர், இச்சட்டத் தின்கீழ் செய்யப்பட்ட வேறேதேனும் சீர்ப்படுத்தலுக்கமைய, விடயம் தேவைப்படுத்துகின்றவாறாக, நட்டஈட்டுத்தொகை அச்சொத்துக்காக அல்லது பொறுப்புக்காகப் பெறப்பட்ட பிரதி பயனில் உள்ளடக்கப்படுதல் வேண்டும்.

## பகுதி II : சொத்துக்களைத் தேறிப்பெறுதல்

வர்த்தகக் கையிருப் பினதும் ஏனைய மாற்றீட்டுச் சொத்துக் களினதும் ஆகுசெலவு.

**42.** (1) ஆளொருவரின் வியாபாரத்தினது வர்த்தகக் கையிருப்பின் ஆகுசெலவைத் தீர்மானிக்கும் நோக்கங்களுக்காக-

(அ) தேய்மானத்துக்குட்படத்தக்க சொத்துக்களின் பழுது பார்த்தல், சீராக்கல் அல்லது தேய்மானம் தொடர்பில் தொகையெதுவும் உள்ளடக்கப்படுதலாகாது; அத்துடன்

(ஆ) பந்தி (அ) வின் ஏற்பாடுகளுக்கமைய, வர்த்தகக் கையிருப்பின் ஆகுசெலவில் உள்ளடக்கப்படுவதற்குத் தகவுடைய தொகைகளுக்காக உள்ளீர்த்தல் செலவு முறை பயன்படுத்தப்படுதல் வேண்டும் (பிரிவு 37).

(2) முன்றாம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட சொத்தொன்றின் சொந்தக்காரர், முதல் வரும் -முதல் செல்லும் முறைக்கிணங்க அல்லது சராசரிச் செலவுமுறைக்கிணங்கச் சொத்தின் ஆகுசெலவு தீர்மானிக்கப்படவேண்டுமென விருப்பம் தெரிவிக்கலாம். தெரிவுசெய்யப்பட்டதும், இம்முறையானது, ஆணையாளர் தலைமையதிபதியின் எழுத்திலான அனுமதியுடன் மட்டுமே மாற்றப்படுதல் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட சொத்துக்கள், வர்த்தகக் கையிருப்பாக அல்லது மாற்றீட்டு வகையினவாகவும் உடனடியாக இனங்காணப்படமுடியாதனவாகவும் உள்ள, ஆணையாளர் தலைமையதிபதியினால் குறித்துரைக்கப்பட்ட வேறேதேனும் வகையினதான சொத்தாகவிருத்தல் வேண்டும்.

(4) இப்பிரிவில்-

"உள்ளீர்த்தல் செலவுமுறை" என்பது, எந்தப் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுநெறியின் கீழ் வர்த்தகக் கையிருப்பின் ஆகுசெலவானது, நேரடிச் சொத்து ஆகுசெலவுகள், நேரடித் தொழிலாளர்

செலவுகள் மற்றும் தொழிற்சாலை மேந்தலைச் செலவுகள் என்பவற்றின் பணத்தொகையாகவுள்ளதோ அந்தப் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுநெறி என்று பொருளாகும்;

"சராசரிச் செலவுமுறை" என்பது, ஆளொருவரினால் சொந்தமாக வைத்திருக்கப்பட்ட அவ்வகையினதான எல்லாச் சொத்துக்களினதும் எடைவீதமளிக்கப்பட்ட சராசரி ஆகுசெலவின் அடிப்படையின்மீது அவ்வாளினால் சொந்தமாக வைத்திருக்கப்பட்ட குறிப்பிட்டவகையினதான மாற்றீட்டுச் சொத்துக்களுக்கு எந்தப் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நெறியின்கீழ் ஆகுசெலவுகள் குறித்தொதுக்கப்படுகின்றனவோ அந்தப் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுநெறி என்று பொருளாகும்;

"நேரடித் தொழிலாளர் ஆகுசெலவுகள்" என்பது, வர்த்தகக் கையிருப்பைத் தயாரித்தலுடன் நேரடியாகத் தொடர்புபட்ட தொழிலாளர்களின்மீது ஆளொருவரினால் உறப்பட்ட செலவினம் என்று பொருளாகும்;

"நேரடிச் சொத்து ஆகுசெலவுகள்" என்பது, வர்த்தகக் கையிருப்பாக அமைகின்ற அல்லது தயாரிக்கப்பட்ட வர்த்தகக் கையிருப்பின் முக்கியமான பாகமாக வருகின்ற ஏதேனும் சொத்தை அல்லது சொத்துக்களைக் கொள்ளுவதில் ஆளொருவரினால் உறப்பட்ட செலவினம் என்று பொருளாகும்;

"தொழிற்சாலை மேந்தலைச் செலவுகள்" என்பது, நேரடித் தொழிலாளர் மற்றும் நேரடிச் சொத்து ஆகுசெலவுகள் தவிர, வர்த்தகக் கையிருப்பைத் தயாரிப்பதில் ஆளொருவரினால் உறப்பட்ட எல்லாச் செலவினமும் என்று பொருளாகும்; அத்துடன்

"முதல் வரும் - முதல் செல்லும் முறை" என்பது, ஆளொருவரினால் சொந்தமாக வைத்திருக்கப்பட்ட அவ்வகையினதான சொத்துக்கள், அவை கொள்ளப்படும் ஒழுங்குவரிசைப்படி தேறிப்பெறப்படுகின்றன என்ற ஊகத்தின் அடிப்படையில் மாற்றீட்டுச் சொத்தொன்றுக்கு எந்தப் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுநெறியின் கீழ் செலவுகள் குறித்தொதுக்கப்படுகின்றனவோ அந்தப் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுநெறி என்று பொருளாகும்.

**43.** முப்பத்தொன்பதாம் பிரிவின் பந்தி (இ) முதல் (ஊ) வரையிலான எவையேனும் முறைகளுள் எவற்றிலும் ஆளொருவர் சொத்தொன்றைத் தேறிப்பெறுமிடத்து- *சொத்து வைத்திருக்கையுடன் தேறிப்பெறுகை.*

(அ) அவ்வாள் அச்சொத்தின் சொத்தாண்மையை இழந்துள்ளார் என்றும் தேறிப்பெறப்பட்ட நேரத்தில் சொத்தின் சந்தைப் பெறுமதிக்குச் சமமான தேறிப்பெறுகை தொடர்பிலான தொகையொன்றைப் பெற்றுக் கொள்கின்றார் என்றும் கொள்ளப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) அவ்வாள் அச்சொத்தை மீளக்கொள்ளுதல் செய்து அக்கொள்ளுதலில் (அ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட தொகையிலான செலவினத்தை உறுபவராகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

**44.** இறப்பின்மீது அல்லது ஒரு மணநீக்கத் தீர்ப்பின் அல்லது நல்லெண்ணத்துடனான பிரிந்துவாழ்தல் உடன்படிக்கையின் பாகமாக தனியாளொருவர் ஒரு சொத்தை வாழ்க்கைத்துணை ஒருவருக்கு அல்லது முன்னைய வாழ்க்கைத்துணை ஒருவருக்குக் கைமாற்றி இப்பிரிவு ஏற்புடையதாவதற்கான தெரிவித்தலொன்று அவ்வாழ்க்கைத்துணையினால் அல்லது முன்னைய வாழ்க்கைத் துணையினால் எழுத்தில் விருப்பம் செய்யப்படுமிடத்து- *வாழ்க்கைத் துணைக்கு அல்லது முன்னைய வாழ்க்கைத் துணைக்குச் சொத்தைக் கைமாற்றுதல்.*

(அ) அத்தனியாள், தேறிப்பெறுகைக்கு நேர்முன்னர் சொத்தின் தேறிய ஆகுசெலவுக்குச் சமமாக அத்தேறிப் பெறுகை தொடர்பிலான தொகையொன்றைப் பெற்றுக் கொள்பவராகக் கொள்ளப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) அவ்வாழ்க்கைத்துணை அல்லது முன்னைய வாழ்க்கைத்துணை, அச்சொத்தைக் கொள்வதில் (அ) என்னும் பந்தியில் குறிப்பீடுசெய்யப்படும் தொகையிலான செலவினத்தை உறுபவராகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

இறப்பின்மீது சொத்தைக் கைமாற்றுதல்.

**45.** நாற்பத்திநான்காம் பிரிவுக்கமைய,தனியாளொருவர், வேறோராளுக்குச் சொத்தின் சொத்தாண்மையைக் கைமாற்றுதல் என்றவகையாக இறப்பின்மீது சொத்தொன்றைத் தேறிப்பெறுமிடத்து-

(அ) அத்தனியாள், தேறிப்பெறும் நேரத்தில் சொத்தின் தேறிய ஆகுசெலவுக்குச் சமமாக அத்தேறிப்பெறுகை தொடர்பிலான தொகையொன்றைப் பெற்றுக்கொள்பவராகக் கொள்ளப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) அச்சொத்தின் சொத்தாண்மையைக் கொள்ளுகின்ற ஆள் கொள்ளுதலில் (அ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்படும் தொகையிலான செலவினத்தை உறுபவராகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

ஓர் இணையாளருக்கு அல்லது பிரதிபயன் எதுவுமின்றி சொத்தைக் கைமாற்றுதல்.

**46.** (1) இப்பிரிவுக்கும் **44** ஆம், **45** ஆம் பிரிவுகளுக்கும் அமைய, ஆளொருவர், அவ்வாளின் இணையாளரொருவருக்குச் சொத்தொன்றின் சொத்தாண்மையைக் கைமாற்றுதல் என்ற வகையாக அல்லது நன்கொடை என்ற வகையாக வேறெவரேனுமாளுக்குக் கைமாற்றுதல் என்ற வகையாகச் சொத்தொன்றைத் தேறிப்பெறுமிடத்து-

(அ) அவ்வாள், அச்சொத்தின் சந்தைப்பெறுமதியினது கூடுதலான பெறுமதிக்குச் சமமான தேறிப்பெறுகை தொடர்பிலான தொகையொன்றை அல்லது அத்தேறிப் பெறுகைக்கு நேர்முன்னர் அச்சொத்தின் தேறிய ஆகு செலவைப் பெற்றுக்கொள்பவராகக் கொள்ளப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) அச்சொத்தின் சொத்தாண்மையைக் கொள்ளுகின்ற ஆள், கொள்ளுதலில் (அ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட தொகையிலான செலவினத்தை உறுபவ ராகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(2) தனியாள் ஒருவர், அத்தனியாளின் இணையாளரொரு வருக்குச் சொத்தொன்றின் சொத்தாண்மையைக் கைமாற்றுதல் என்ற வகையாக அச்சொத்தைத் தேறிப்பெறுமிடத்தும் (3) ஆம் உட்பிரிவின் தேவைப்பாடுகள் ஈடுசெய்யப்படுமிடத்தும்-

(அ) அத்தனியாள், தேறிப்பெறுகைக்கு நேர்முன்னர் சொத்தின் தேறிய ஆகுசெலவுக்குச் சமமாக அத்தேறிப் பெறுகை தொடர்பிலான தொகையொன்றைப் பெற்றுக் கொள்பவராகக் கொள்ளப்படுதல் வேண்டும்; அத்து டன்

(ஆ) இணையாளர், சொத்தைக் கொள்ளுவதில் பந்தி (அ)வில் குறிப்பீடுசெய்யப்பட்ட தொகையிலான செல வினத்தை உறுபவராகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடு கள் பின்வருமாறாதல் வேண்டும்:-

(அ) தனியாள் தொடர்பாக ஓர் இணையாளர் என்பது, திருமணம் அல்லது மகவேற்பு என்றவகையாக உட்பட, தனியாளின் பிள்ளை, வாழ்க்கைத்துணை, பெற்றோர், பாட்டன் பாட்டி, பேரப்பிள்ளை, உடன்பிறந்தவர், மாமி, மாமா, மருமகன், மருமகள் அல்லது முதல் மாமன் பிள்ளை என்று பொருளாகும்; அத்துடன்

(ஆ) ஒரு சொத்து என்பது, ஆளினால் கைமாற்றம் செய்யப்பட்டபின்னர் மூன்றாண்டுகளினுள் இணையாளரின் பிரதான வதிவிடமாக வரும் இலங்கையில் அமைந்துள்ள ஒரு காணியிலான அல்லது கட்டிடத்திலான அக்கறை என்று பொருளாகும்;

(4) ஒரு வியாபாரத்தின் வர்த்தகக் கையிருப்பு, தேய்மானத்துக் குட்படத்தக்க சொத்து, முதலீட்டுச் சொத்து அல்லது மூலதனச் சொத்து என்பனவாகவுள்ள சொத்தொன்றை ஆளொருவர் அவ்வாளின் இணையாளரொருவருக்கு சொத்தின் சொத்தாண்மையைக் கைமாற்றுதல் என்ற வகையாகத் தேறிப்பெறுமிடத்தும் (5) ஆம் உட்பிரிவின் தேவைப்பாடுகள் ஈடுசெய்யப்படுமிடத்தும்-

(அ) அவ்வாள், தேறிப்பெறுகைக்கு நேர்முன்னர் சொத்தின் தேறிய ஆகுசெலவுக்குச் சமமாக அத்தேறிப்பெறுகை தொடர்பிலான தொகையொன்றைப் பெற்றுக்கொள்பவராகக் கொள்ளப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) இணையாளர், சொத்தைக் கொள்ளுவதில் பந்தி (அ)வில் குறிப்பீடுசெய்யப்பட்ட தொகையிலான செலவினத்தை உறுபவராகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(5) நான்காம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகள் பின்வருமாறாகும்:-

(அ) அவ்வாள் அல்லது இணையாளர் உருவகம் ஒன்றாகவிருக்கின்றமை;

(ஆ) சொத்து அல்லது சொத்துக்கள், அவ்வாளினால் கைமாற்றப்பட்டபின்னர் உடனடியாக இணையாளரின் வியாபாரமொன்றினது வர்த்தகக் கையிருப்பு, தேய்மானத்துக்குட்படத்தக்க சொத்துக்கள், முதலீட்டுச் சொத்துக்கள் அல்லது மூலதனச் சொத்துக்களாகவுள்ளமை;

(இ) கைமாற்றப்பட்ட நேரத்தில்-

(i) அவ்வாளும் இணையாளரும் வதிவுள்ளவர்களாக இருக்கின்றமை; அத்துடன்

(ii) இணையாளர் அல்லது இணைப் பங்குடைமையொன்றின் விடயத்தில் அதன் பங்காளர்களுள் எவரும் வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டவர்களாகவிராதிருக்கின்றமை; அத்துடன்

(ஈ) ஆகக்குறைந்தது ஐம்பது சதவீதத்திலேனும் சொத்தில் தொடர்ச்சியான அடிப்படைச் சொத்தாண்மை இருக்கின்றமை.

மாற்றீட்டுடன் சுய விருப்பின்றி சொத்தின் தேறிப்பெறுகை.

**47.** (1) தேறிப்பெறுகைக்குமுன்னர் ஆறுமாதங்களினுள் அல்லது தேறிப்பெறுகைக்குப்பின்னர் ஓராண்டினுள் ஆளொருவர் 39 ஆம் பிரிவின் (அ) என்னும் பந்தியில் தரப்பட்டுள்ள எம்முறையிலேனும் சொத்தொன்றைச் சுயவிருப்பின்றித் தேறிப்பெறுமிடத்தும் அதேவகையினதான மாற்றீட்டுச் சொத்தைக் கொள்ளுமிடத்தும் இவ்வுட்பிரிவு ஏற்புடையதாவதற்கு எழுத்தில் விருப்பம் தெரிவிக்குமிடத்தும், அவ்வாள்,

(அ) பின்வருவனவற்றின் கூட்டுமொத்தத்துக்குச் சமமான தேறிப்பெறுகை தொடர்பிலான தொகையொன்றைப் பெற்றுக்கொள்பவராகவும்:-

(i) தேறிப்பெறுகைக்கு நேர்முன்னர் சொத்தின் தேறிய ஆகுசெலவு; அத்துடன்

(ii) தேறிப்பெறுகை தொடர்பில் பெற்றுக்கொள்ளப்பட்ட தொகைகள் மாற்றீட்டுச் சொத்தைக் கொள்ளுவதில் உறப்பட்ட செலவினத்தை எத்தொகையினால் விஞ்சுகின்றதோ, ஏதேனுமிருப்பின், அத்தொகை; அத்துடன்

(ஆ) பின்வருவனவற்றின் கூட்டுமொத்தத்துக்குச் சமமான மாற்றீட்டுச்சொத்தைக் கொள்ளுவதிலான செலவினத்தை உறுவதாகவும்:-

(i) பந்தி (அ) (i) இல் குறிப்பீடு செய்யப்பட்ட தொகை; அத்துடன்

(ii) மாற்றீட்டுச் சொத்தைக் கொள்ளுவதில் உறப்பட்ட செலவினம், தேறிப்பெறுகை தொடர்பில் பெறப்பட்ட தொகைகளை எத்தொகையினால் விஞ்சுகின்றதோ, ஏதேனுமிருப்பின், அத்தொகை,

கொள்ளப்படுதல் வேண்டும்.

(2) ஒரு கம்பெனியிலுள்ள ஒரு பிணையத்தை அதே கம்பெனியிலான அல்லது வேறொரு கம்பெனியிலான வேறொரு பிணையத்துடன் மாற்றீடு செய்தல் (ஒன்றிணைவு, ஒன்றிணைவை இல்லாதாக்குகை அல்லது மீளவமைத்தலின் விளைவாக உட்பட) எந்தச் சூழ்நிலைகளில் சுய விருப்பு இல்லாத தேறிப்பெறுகையாக அமைகின்றதோ அந்தச் சூழ்நிலைகளை ஆணையாளர் தலைமையதிபதி குறித்துரைக்கலாம்.

தனிவேறாக்கலின் மூலமான தேறிப்பெறுகை.

**48.** (1) நாற்பத்தொன்பதாம் பிரிவுக்கமைய, ஒரு சொத்தின் அல்லது அதன் பாகத்தின் குத்தகை என்ற வகையாக உட்பட, ஓராளினால் சொந்தமாக வைத்திருக்கப்பட்ட சொத்தொன்று தொடர்பிலான உரிமைகள் அல்லது கடப்பாடுகள் வேறோராளுக்குக் குறித்தளிக்கப்படுமிடத்து, அப்போது-

(அ) உரிமைகள் அல்லது கடப்பாடுகள் நிரந்தரமாகவுள்ளவிடத்து, அந்த ஆள் அச்சொத்தின் பாகத்தைத் தேறிப்பெறுபவராகக் கொள்ளப்படுதல் வேண்டும், ஆனால் ஏதேனும் புதிய சொத்தை அல்லது பொறுப்பைக் கொள்ளுபவராகக் கொள்ளப்படுதலாகாது; அத்துடன்

(ஆ) அவ்வுரிமைகள் அல்லது கடப்பாடுகள் தற்காலிகமான வையாக அல்லது எதிர்பாராதவையாக உள்ளவிடத்து, அவ்வாள் அச்சொத்தின் அல்லது பொறுப்பின் பாகத்தைத் தேறிப்பெறுபவராகக் கொள்ளப்படுத லாகாது, ஆனால் விடயம் தேவைப்படுத்துகின்ற வாறாக, புதிய சொத்தைக் கொள்பவராக அல்லது புதிய பொறுப்பை உறுபவராகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(2) உரிமைகள் அல்லது கடப்பாடுகள், ஐம்பது ஆண்டுகளுக்கு மேற்பட அவை நிலைத்திருக்கக்கூடியனவாக இருக்கும்போது நிரந்தரமானவையாகக் கருதப்படுதல் வேண்டும்.

*பிணையம், நிதிக்குத்தகை அல்லது தவணைப்பண விற்பனை என்ற வகையான கைமாற்றுகை.*

**49.** (1) வேறோராளுக்குச் செலுத்தப்படவேண்டிய கடனொன்றுக்குப் பிணைப்பொறுப்பளிப்பதற்கு ஆளொருவர் சொத்தொன்றின்மீதான ஈடொன்றை (சட்டப்படியான அல்லது ஒப்புரவான) அல்லது ஒத்த வடிவத்திலான பிணைப் பொறுப்பை வழங்குமிடத்து-

(அ) முதலாவது ஆள் அச்சொத்தை அல்லது அதன் ஏதேனும் பாகத்தைத்தேறிப்பெறுபவராகக் கொள்ளப் படுதலாகாது, ஆனால் அச்சொத்தை இன்னமும் சொந்தமாக வைத்திருப்பவராகவும் பிணைப் பொறுப்பளிக்கப்பட்ட கடனாகவுள்ள பொறுப் பொன்றை உற்றிருப்பவராகவும் கொள்ளப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) மற்றைய ஆள் அச்சொத்தை அல்லது அதன் ஏதேனும் பாகத்தைக் கொள்ளுபவராகக் கொள்ளப்படுதலாகாது, ஆனால் பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கடனைச் சொந்தமாக வைத்திருப்பவராக மட்டுமே கொள்ளப்படு தல் வேண்டும்.

(2) சொத்தொன்று நிதிக்குத்தகையொன்றின்கீழ் குத்தகைக்குக் கொடுக்கப்படுமிடத்து, குத்தகைகொடுநர் சொத்தின் சொத்தாண் மையைக் குத்தகைபெறுநருக்குக் கைமாற்றுபவராகக் கொள்ளப் படுதல் வேண்டும்.

(3) நாற்பத்தாறாம் பிரிவுக்கமைய, ஆளொருவர், தவணைப் பண விற்பனை ஒன்றின்கீழ் அல்லது (2) ஆம் உட்பிரிவின்கீழான நிதிக்குத்தகையின்கீழ் சொத்தொன்றைக் கைமாற்றுமிடத்து-

(அ) கைமாற்றத்துக்கு நேர்முன்னர் சொத்தின் சந்தைப் பெறுமதிக்குச் சமமான கைமாற்றம் தொடர்பிலான தொகையொன்றை அவ்வாள் பெற்றுக்கொள்பவராகக் கொள்ளப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) சொத்தைக் கொள்ளுகின்ற ஆள் அச்சொத்தைக் கொள்வதில் (அ) என்னும் பந்தியில் குறிப்பீடுசெய்யப் பட்ட தொகையிலான செலவினத்தை உறுபவராகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(4) நிதிக்குத்தகையொன்றின்கீழான குத்தகைபெறுநர் ((2) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட கொடுக்கல்வாங்கல்தவிர) குத்தகைபெறுநருக்குச் சொத்தாண்மை சென்றடைவதற்கு முன்னர் குத்தகைகொடுநருக்கு அச்சொத்தைத் திருப்பிக் கொடுக்குமிடத்து, குத்தகைபெறுநர் குத்தகைகொடுநருக்குச் சொத்தின் சொத்தாண்மையை மீண்டும் கைமாற்றுபவராகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(5) இப்பிரிவில்,"நிதிக்குத்தகை" மற்றும் "தவணைப்பண விற்பனை" என்பன, 31 ஆம் பிரிவிலுள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**50.** ஒரு மூலதனச் சொத்தின் கைமாற்றத்தை ஏற்றுக்கொள்வ தற்கு, பதிவுசெய்வதற்கு அல்லது எவ்வகையிலும் அங்கீகரிப்ப தற்குச் சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனுமாள், அக்கைமாற்றம் தொடர்பில் இச்சட்டத்தின்கீழ் செலுத்தப்படற் பாலதான ஏதேனும் வரி செலுத்தப்பட்டுள்ளது அல்லது வரி செலுத்துகைக்கான திருப்திகரமான ஒழுங்கேற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன அல்லது அத்தகைய வரியெதுவும் செலுத்தப் படற்பாலதல்ல எனத் திருப்திப்பட்டாலொழிய, அக்கைமாற் றத்தை ஏற்றுக்கொள்ளுதலோ, பதிவுசெய்தலே அல்லது அங்கீகரித்தலோ ஆகாது. மூலதனச் சொத்துக்களின் கைமாற்றுகை யைப் பதிவுசெய்தல்.

செலவுத் தொகைகளைப் பிரித்தொதுக்குதலும் பெறப்பட்ட பிரதிபயனும்.

**51.** *(1)* ஆளொருவர், ஒரேநேரத்திலான கைமாற்றம் என்ற வகையாக அல்லது ஒரே ஒழுங்கேற்பாட்டின் பாகமாக ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சொத்துக்களைக் கொள்ளுமிடத்து, ஒவ்வொரு சொத்தையும் கொள்ளுவதில் உறப்பட்ட செலவினம் கொள்ளுதல் நேரத்தில் அவற்றின் சந்தைப்பெறுமதிகளுக் கிணங்கச் சொத்துக்களுக்கிடையே பிரித்தொதுக்கப்படுதல் வேண்டும்.

*(2)* ஆளொருவர், ஒரேநேரத்திலான கைமாற்றம் என்றவகையாக அல்லது ஒரே ஒழுங்கேற்பாட்டின் பாகமாக ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சொத்துக்களைத் தேறிப்பெறுமிடத்து, ஒவ்வொரு சொத்தையும் தேறிப்பெறுவதில் பெற்றுக்கொள்ளப் பட்ட தொகைகள், தேறிப்பெறுதல் நேரத்தில் அவற்றின் சந்தைப் பெறுமதிகளுக்கிணங்கச் சொத்துக்களுக்கிடையே பிரித்தொதுக் கப்படுதல் வேண்டும்.

*(3)* சொத்தொன்றைச் சொந்தமாக வைத்திருக்கும் ஆளொருவர், அதன் பாகத்தைத் தேறிப்பெறுமிடத்து தேறிப்பெறுகைக்கு நேர்முன்னராக அச்சொத்தின் தேறிய ஆகுசெலவு, தேறிப்பெறப் பட்ட சொத்தின் பாகத்துக்கும் வைத்திருக்கப்பட்ட பாகத்துக்கு மிடையே, தேறிப்பெறுகையை உடனடுத்து அவற்றின் சந்தைப் பெறுமதிகளுக்கிணங்கப் பிரித்தொதுக்கப்படுதல் வேண்டும்.

## அத்தியாயம் V

### ஆட்களின் வகைகள்

### பகுதி I : தனியாட்களும் உருவகங்களும்

தகைமையளிக்கின்ற கொடுப்பனவுகளும் நிவாரணங்களும்.

**52.** *(1)* மூன்றாம் பிரிவின்கீழ் ஒரு வரிமதிப்பீட்டாண்டிற்காகத் தனியாளொருவரின் அல்லது உருவகமொன்றின் வரிவிதிக்கப் படற்பாலதான வருமானத்தைக் கணிப்பதில், இச்சட்டத்துக்கான ஐந்தாம் அட்டவணையில் குறிப்பீடுசெய்யப்பட்ட கூட்டுமொத்தத் தகைமையளிக்கின்ற கொடுப்பனவுகள் கழிக்கப்படுதல் வேண்டும்.

(2) மூன்றாம் பிரிவின்கீழ் ஒரு வரிமதிப்பீட்டாண்டுக்காக இலங்கையில் வதிவுள்ள தனியாள் ஒருவரின் அல்லது உருவகமொன்றின் வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்தைக் கணிப்பதில், இச்சட்டத்துக்கான ஐந்தாம் அட்டவணையில் குறிப்பீடுசெய்யப்பட்ட கூட்டுமொத்த நிவாரணங்கள் கழிக்கப் படுதல் வேண்டும்.

(3) மூன்றாம் பிரிவின்கீழ் ஒரு வரிமதிப்பீட்டாண்டொன் றுக்காக இலங்கையில் வதிவற்றவராகவுள்ள ஆனால் இலங்கை யின் பிரசையாகவுள்ள தனியாள் ஒருவரின் வரிவிதிக்கப்படற் பாலதான வருமானத்தைக் கணிப்பதில், இச்சட்டத்துக்கான ஐந்தாம் அட்டவணையின் 2(அ) என்னும் பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்ட நிவாரணம் கழிக்கப்படுதல் வேண்டும்.

## பகுதி II : பங்குடைமைகள்

**53.** (1) இரண்டாம் உட்பிரிவுக்கமைய, பங்குடைமை ஒன்று அதன் வரிவிதிக்கப்படற்பாலதான வருமானம் தொடர்பில் வருமானவரி செலுத்துவதற்கு உட்பட்டதாதலாகாது என்பதுடன், அவ்வருமானம் தொடர்பில் ஏதேனும் வரிவரவுக்கு உரித்து டையதாதலும் ஆகாது; ஆனால் பிடித்துவைத்தல் கொடுப்பனவு கள் தொடர்பில் வருமானவரி செலுத்துவதற்கு உட்பட்டதாதல் வேண்டும். பங்குடைமைகள்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள், பங்குடைமையின் வரிவிதிக்கப்படற்பாலதான வருமானம் ஒரு முதலீட்டுச் சொத்தின் தேறிப்பெறுகையிலிருந்தான ஈட்டுகையை உள்ளடக்கு மளவுக்குப் பங்குடைமையொன்றுக்கு ஏற்புடையனவாதலாகாது.

(3) ஒரு பங்குடைமையின் பங்குடைமை வருமானம் அல்லது பங்குடைமை நட்டம் இப்பகுதிக்கிணங்கப்பங்காளர்களுக்குக் குறித்தொதுக்கப்படுதல் வேண்டும்.

(4) பங்காளர்களினால் பொதுவாகப் பெறப்பட்ட தொகை களும் உறப்பட்ட செலவினமும் பங்காளர்களினால் அல்லாது பங்குடைமையினால் பெற்றுக்கொள்ளப்பட்ட தொகைகளாக அல்லது உறப்பட்ட செலவினமாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(5) பங்காளர்களினால் பொதுவாகச் சொந்தமாக வைத்திருக்கப்பட்ட சொத்துக்களும் செலுத்தப்படவேண்டிய பொறுப்புக்களும் பங்காளர்களினால் அல்லாது பங்குடைமையினால் சொந்தமாக வைத்திருக்கப்பட்ட சொத்துக்களாக அல்லது செலுத்தப்படவேண்டிய பொறுப்புக்களாகக் கொள்ளப்படுதல் வேண்டுமென்பதுடன், பின்வருமாறு கொள்ளப்படுதலும் வேண்டும்:-

(அ) சொத்துக்களின் விடயத்தில், அத்தகைய சொத்துக்களை அவர்கள் அவ்வகையில் சொந்தமாக வைத்திருக்கத் தொடங்கும்போது கொள்ளப்பட்டவை;

(ஆ) பொறுப்புக்களின் விடயத்தில், அத்தகைய சொத்துக்களை அவர்கள் அவ்வகையில் சொந்தமாக வைத்திருக்கத் தொடங்கும்போது உறப்பட்டவை; அத்துடன்

(இ) அத்தகைய சொத்துக்களை அவர்கள் அவ்வகையில் அவ்வாறு சொந்தமாக வைத்திருக்காதொழியும்போது அல்லது செலுத்தாதொழியும்போது தேறிப்பெறப்பட்டவை.

(6) இச்சட்டத்துக்கமைய, ஒரு பங்குடைமையின் எல்லா வியாபாரச்செயற்பாடுகளும் ஒரு தனிப்பங்குடைமை வியாபாரத்தின்போது நடாத்தப்பட்டவையாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(7) இச்சட்டத்துக்கமைய, ஒரு பங்குடைமைக்கும் அதன் பங்காளர்களுக்கும் இடையேயான ஒழுங்கேற்பாடுகள் பின்வருவன தவிர்ந்த சந்தர்ப்பங்களில் ஏற்றங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், 55 ஆம் பிரிவின் (5) ஆம் உட்பிரிவின்கீழ் ஒரு பங்காளரின் பங்கைத் தீர்மானிப்பதில் கணக்குக்கெடுக்கப்படுதலும் வேண்டும்:-

(அ) பங்காளர் ஒருவரினால் ஒரு பங்குடைமைக்குக் கொடுக்கப்பட்ட கடன்களும் அது தொடர்பில் செலுத்தப்பட்ட ஏதேனும் வட்டியும்; அத்துடன்

(ஆ) ஒரு பங்காளரினால் ஒரு பங்குடைமைக்கு வழங்கப்பட்ட சேவைகளும் (ஊழியம் என்றவகையாக உட்பட) மற்றும் அது தொடர்பில் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் சேவைக் கட்டணமும் அல்லது ஊழியத்திலிருந்தான வருமானமும்.

(8) அறுபத்திமூன்றாம் பிரிவின் கீழான எவையேனும் விளைவுகளுக்கமைய, பங்குடைமை ஒன்றில் பங்காளர்களின் மாற்றம் ஒன்று இருக்குமிடத்து, ஆகக்குறைந்தது இரண்டு உளதாம் பங்காளர்கள் பங்குடைமையில் தொடர்ச்சியாக இருக்குமிடத்து அப்பங்குடைமை மாற்றத்துக்கு முன்னரும் பின்னரும் அதே உருவகமாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(9) முந்தைய பங்காளர் அல்லது இலங்கையில் அத்தகைய பங்காளர் இல்லாதவிடத்து, இலங்கையிலுள்ள பங்குடைமையின் முகவரொருவர், 84 ஆம் பிரிவுக்கிணங்கவும் இச்சட்டத்துக்கான முதலாம் அட்டவணையின் 10 ஆம் பந்தியில் ஏற்பாடு செய்யப்பட்டவாறான வீதத்திலும், எந்த முதலீட்டுச் சொத்துத் தொடர்பில் பங்குடைமையினாலான வரிமதிப்பீட்டின் மேல் வரிசெலுத்தப்படற்பாலதாக உள்ளதோ, அந்த முதலீட்டுச் சொத்தின் தேறிப்பெறுகையிலிருந்தான ஈட்டுகையொன்றை உள்ளடக்குகின்ற ஏதேனும் பங்குடைமை வருமானத்தின் பங்குநீங்கலாக, இயைபான பங்குடைமையாண்டின் ஏதேனும் பங்குடைமை வருமானத்தின் ஒவ்வொரு பங்காளரினதும் பங்கின்மீது இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க வரியைப் பிடித்துவைத்தல் வேண்டும்.

பங்குடைமை வருமானம் அல்லது நட்டம்.

**54.** (1) வரிமதிப்பீட்டாண்டொன்றுக்காகப் பங்குடைமை யொன்றின் பங்குடைமை வருமானம், அவ்வரிமதிப்பீட்டாண்டுக்காகப் பங்குடைமையின் வியாபாரத்திலிருந்தான அல்லது முதலீட்டிலிருந்தான அதன் வருமானமாகவிருத்தல் வேண்டும் (பிரிவுகள் 6 மற்றும் 7).

(2) வரிமதிப்பீட்டாண்டொன்றுக்காகப் பங்குடைமை ஒன்றினால் உறப்பட்ட நட்டமொன்று, அவ்வாண்டுக்காகப் பங்குடைமையின் வியாபாரத்திலிருந்தான அல்லது முதலீட்டிலிருந்தான அதன் நட்டமாகவிருத்தல் வேண்டும் (19 ஆம் பிரிவின் (5) ஆம் உட்பிரிவு).

பங்காளர்களுக்கான வரிவிதிப்பு.

**55.** (1) பங்காளரின் வரிமதிப்பீட்டாண்டொன்றுக்காகப் பங்குடைமை ஒன்றிலிருந்தான பங்காளரின் வருமானத்தைக் கணக்கிடும் நோக்கங்களுக்காக, ஏதேனும் பங்குடைமை வருமானத்தின் பங்காளரினது பங்கு உள்ளடக்கப்படுதல் வேண்டும் அல்லது இயைபான பங்குடைமையாண்டின் ஏதேனும் பங்குடைமை நட்டத்தின் பங்காளரினது பங்கு கழிக்கப்படுதல் வேண்டும். இயைபான பங்குடைமை ஆண்டு, பங்காளரின் வரிமதிப்பீட்டாண்டின் கடைசி நாளன்று முடிவடைகின்ற அல்லது அவ்வரிமதிப்பீட்டாண்டின்போது பங்குடைமையின் வரிமதிப்பீட்டாண்டாகும்.

(2) பங்குடைமையொன்றில் பங்காளர் ஒருவரின் அக்கறையொன்றினது கையுதிர்ப்பின்மீதான ஈட்டுகைகள் ஒரு வியாபாரத்திலிருந்தான வருமானமாகக் கொள்ளப்படுதல் வேண்டுமென்பதுடன், அப்பங்குடைமையிலிருந்து அப்பங்காளரின் வருமானத்தைக் கணக்கிடுவதில் உள்ளடக்கப்படுதலும் வேண்டும்; அத்துடன் 56 ஆம் பிரிவிலுள்ள சீர்ப்படுத்தல்களுக்கமைய, அத்தியாயம் IV இன்கீழ் கணக்கிடப்படுதலும் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் பங்காளர்களுக்குக் குறித்தொதுக்கப்பட்ட பங்குடைமை வருமானம் அல்லது பங்குடைமை நட்டம்-

(அ) வகையும் மூலமும் பற்றிய அதன் இயல்பை வைத்திருத்தல் வேண்டும்;

(ஆ) பங்குடைமையின் வரிமதிப்பீட்டாண்டினது முடிவில் பங்காளரொருவரினால் முறையே பெறப்பட்ட ஒரு தொகையாக அல்லது உறப்பட்ட செலவினமாகக் கொள்ளப்படுதல் வேண்டும்; அத்துடன்

(இ) ஆணையாளர் தலைமையதிபதி எழுத்திலான அறிவித்தல் மூலமும் நற்காரணத்துக்காகவும் வேறுவகையாகப் பணித்தாலொழிய, ஒவ்வொரு பங்காளரினதும் பங்குக்கு விகிதாசாரப்படி பங்காளர்களுக்குக் குறித்தொதுக்கப்படுதல் வேண்டும்.

(4) பங்குடைமை வருமானம் தொடர்பில் இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் செலுத்தப்பட்ட வரியும் பங்குடைமையினால் செலுத்தப்பட்ட அல்லது செலுத்தப்பட்டதாகக் கொள்ளப்பட்ட வெளிநாட்டு வருமானவரியும் விகிதாசாரப்படி ஒவ்வொரு பங்காளரினதும் பங்குக்குப் பங்காளர்களுக்குக் குறித்தொதுக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அவர்களினால் செலுத்தப்பட்டதாகக் கொள்ளப்படுதலும் வேண்டும். 3 ஆம் பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் பங்காண்மை வருமானம் பங்காளர்களினால் பெற்றுக்கொள்ளப்பட்டதாகக் கொள்ளப்படும் நேரத்தில் குறித்தொதுக்கலானது இடம்பெறுகின்றது.

(5) இப்பிரிவின் நோக்கங்களுக்காகவும் 53 ஆம் பிரிவின் (7) ஆம் உட்பிரிவுக்கமையவும் "பங்காளரின் பங்கு" என்பது, பங்குடைமை ஒழுங்கேற்பாட்டில் தரப்பட்டுள்ளவாறு பங்குடைமையின் ஏதேனும் வருமானத்தில் பங்காளரின் நூற்றுவீத அக்கறைக்குச் சமமாகவிருத்தல் வேண்டும்.

*பங்குடைமை அக்கறைக்கான செலவு தொகையும் பெறப்பட்ட பிரதிபயனும்.*

**56.** (1) பின்வருவன, ஒரு பங்குடைமையில் பங்காளர் ஒருவரின் உறுப்பாண்மை அக்கறையின் செலவில் உள்ளடக்கப்படுதல் வேண்டும்:-

(அ) உள்ளடக்கப்பட்ட நேரத்தில், 55 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் பங்காளரின் வருமானத்தைக் கணக்கிடுவதில் உள்ளடக்கப்பட்ட தொகைகள்; அத்துடன்

(ஆ) அத்தொகை அல்லது கொடுப்பனவு பெற்றுக்கொள்ளப்பட்ட நேரத்தில், பங்குடைமையினால் பெற்றுக் கொள்ளப்பட்ட விலக்களிக்கப்பட்ட தொகைகளினதும் இறுதிப் பிடித்துவைத்தல் கொடுப்பனவுகளினதும் பங்காளரினது பங்கு (55 ஆம் பிரிவின் (5) ஆம் உட்பிரிவு).

(2) பின்வருவன, ஒரு பங்குடைமையில் பங்காளர் ஒருவரின் உறுப்பாண்மை அக்கறைக்காகப் பெறப்பட்ட பிரதிபயனில் சேர்க்கப்படுதல் வேண்டும்:-

(அ) கழிப்பனவு செய்யப்படும் நேரத்தில், 55 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் பங்காளரின் வருமானத்தைக் கணக்கிடுவதில் கழிக்கப்பட்ட தொகைகள்;

(ஆ) பகிர்ந்தளிக்கப்பட்ட நேரத்தில், பங்காளருக்குப் பங்குடைமையினால் செய்யப்பட்ட பகிர்ந்தளிப்புக்கள்; அத்துடன்

(இ) செலவினம் உறப்படும் நேரத்தில், பங்குடைமையினால் உறப்பட்ட வீட்டை அல்லது விலக்கப்பட்ட செலவினத்தின் பங்காளரினது பங்கு (55 ஆம் பிரிவின் (5) ஆம் உட்பிரிவு).

## பகுதி III : நம்பிக்கைப்பொறுப்புக்கள்

நம்பிக்கைப் பொறுப்புக் களுக்கான வரிவிதிப்பு.

**57.** (1) இரண்டாம் உட்பிரிவுக்கமைய, நம்பிக்கைப் பொறுப் பொன்று அதன் பயனுகரிகளிலிருந்து தனிவேறாக வரிக்கு உட்பட்டதாதல் வேண்டும் என்பதுடன்,-

(அ) நம்பிக்கைப்பொறுப்பொன்றுக்கு (பராயமடையாத வராகவிராத) இயலாமைக்குட்பட்ட தனியாள் ஒருவரின் நம்பிக்கைப் பொறுப்புத்தவிர, உருவகமொன்று என்றாற்போன்று வரிவிதிக்கப்படுதலும் வேண்டும்; அது தனியாள் என்றாற்போன்று அதற்கு வரிவிதிக்கப் படுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) ஒரு நம்பிக்கைப்பொறுப்பினால் அல்லது நம்பிக்கைப் பொறுப்பாளரினால் பெற்றுக்கொள்ளப்பட்ட தொகைகளும் உறப்பட்ட செலவினமும் (வெறுமனே ஒரு முகவராகவல்லாது அல்லது முழுமையாக உரித்துடைய பயனுகரிக்காகவல்லாது), அத்தகைய தொகை வேறோராளின்

சார்பில் பெற்றுக்கொள்ளப்படுவதனை அல்லது உறப்படுவதனை மற்றும் வேறேவரேனுமாள் அத்தகைய தொகைக்கு அல்லது அத்தகைய தொகையினால் அமைக்கப்பட்ட வருமானத்துக்கு உரித்துடையவராக அல்லது அல்லராக இருப்பதனைப் பொருட்படுத்தாது, வேறெவரேனுமாளினாலல்லாது நம்பிக்கைப் பொறுப்பினால் பெற்றுக்கொள்ளப்பட்டதாக அல்லது உறப்பட்டதாகக் கொள்ளப்படுதலும் வேண்டும்.

(2) நம்பிக்கைப்பொறுப்பொன்றின் பயனுகரியின் வரிமதிப்பீட்டாண்டினது கடைசி நாளன்று முடிவடைகின்ற அல்லது அதன்போது நம்பிக்கைப்பொறுப்பின் இயைபான வரிமதிப்பீட்டாண்டொன்றிற்காக அப்பயனுகரி தற்போது நம்பிக்கைப்பொறுப்பின் எவ்வருமானத்துக்கு உரித்துடையவராகவுள்ளாரோ அவ்வருமானத்தின்மீதான வரிக்கு அப்பயனுகரி (நம்பிக்கைப் பொறுப்பல்லாது) ஆளாதல் வேண்டும் என்பதுடன்,-

(அ) ஒரு நம்பிக்கைப்பொறுப்பினால் அல்லது நம்பிக்கைப் பொறுப்பாளரினால் பெற்றுக்கொள்ளப்பட்ட தொகைகளும் உறப்பட்ட செலவினமும் நம்பிக்கைப்பொறுப்பினால் அல்லது நம்பிக்கைப்பொறுப்பாளரினால் அல்லது வேறேவரேனுமாளினாலல்லாது பயனுகரியினால் பெறப்பட்டதாக அல்லது உறப்பட்டதாகக் கொள்ளப்படுதலும் வேண்டும்;

(ஆ) ஒவ்வொரு தொகையும் வகையும் மூலமும் பற்றிய அதன் இயல்பை வைத்திருத்தலும் வேண்டும்;

(இ) ஒவ்வொரு தொகையும் நம்பிக்கைப்பொறுப்பின் வரிமதிப்பீட்டாண்டின் முடிவில் பயனுகரியினால் முறையே பெற்றுக்கொள்ளப்பட்ட தொகையொன்றாக அல்லது உறப்பட்ட செலவினமாகக் கொள்ளப்படுதலும் வேண்டும்;

(ஈ) ஆணையாளர் தலைமையதிபதி எழுத்திலான அறிவித்தல் மூலமும் நற்காரணத்துக்காகவும் வேறுவகையாகக் கட்டளையிட்டாலொழிய, ஒவ்வொரு தொகையும், ஒவ்வொரு பயனுகரியினதும் பங்குக்கு விகிதாசாரப்படி பயனுகரிகளுக்குக் குறித்தொதுக்கப்படுதலும் வேண்டும்; அத்துடன்

(உ) நம்பிக்கைப்பொறுப்பு வருமானம் தொடர்பில் இச்சட்டத்தின்கீழ் செலுத்தப்பட்ட வரியும் நம்பிக்கைப் பொறுப்பினால் செலுத்தப்பட்ட அல்லது செலுத்தப் பட்டதாகக் கொள்ளப்பட்ட வெளிநாட்டு வருமான வரியும், (இ) என்னும் பந்தியின்கீழ் பயனுகரிகளினால் நம்பிக்கைப்பொறுப்பு வருமானம் பெற்றுக்கொள்ளப் பட்டதாகக் கொள்ளப்படும் நேரத்தில், ஒவ்வொரு பயனுகரியினதும் பங்குக்கு விகிதாசாரப்படி பயனுகரிகளுக்குக் குறித்தொதுக்கப்படுதலும் அவர்களினால் செலுத்தப்பட்டதாகக் கொள்ளப்படுதலும் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக-

(அ) நம்பிக்கைப்பொறுப்பின் வருமானத்தில் பயனுகரிக்கு உரித்தாக்கப்பட்டதும் இல்லாததாக்கவியலாததுமான அக்கறையொன்றையும் நம்பிக்கைப்பொறுப்பின் நம்பிக்கைப்பொறுப்பாளரிடமிருந்து வருமானத்தின் கொடுப்பனவைக் கோருவதற்கான உடனடி உரிமையையும் பயனுகரி கொண்டிருப்பின், பயனுகரி ஒருவர் நம்பிக்கைப்பொறுப்பின் வருமானத்துக்கு தற்போது உரித்துடையவராதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) இரண்டாம் உட்பிரிவின் ஏற்பாடுகள், நம்பிக்கைப் பொறுப்பின் வரிவிதிக்கப்படற்பாலதான வருமானம் முதலீட்டுச் சொத்தொன்றின் தேறிப்பெறுகையிலிருந்தான ஈட்டுகையொன்றை உள்ளடக்குகின்ற அளவுக்கு நம்பிக்கைப்பொறுப்பொன்றுக்கு ஏற்புடையனவாதலாகாது.

(4) ஒரு நம்பிக்கைப்பொறுப்பினால் அல்லது நம்பிக்கைப் பொறுப்பாளரினால் சொந்தமாக வைத்திருக்கப்பட்ட சொத்துக் களும் செலுத்தப்படவேண்டிய பொறுப்புக்களும் (வெறுமனே ஒரு முகவராகவல்லாது அல்லது முழுமையாக உரித்துடைய பயனுகரிக்காகவல்லாது), வேறெவரேனுமாளினாலல்லாது நம்பிக்கைப்பொறுப்பினால் சொந்தமாக வைத்திருக்கப்பட்டதாக அல்லது செலுத்தப்படவேண்டியதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(5) நம்பிக்கைப்பொறுப்புகள் ஒரே நம்பிக்கைப் பொறுப்பாளர் களைக் கொண்டுள்ளதனைப் பொருட்படுத்தாது, தனிவேறான நம்பிக்கைப்பொறுப்புக்களுக்காகத் தனிவேறான வருமானக் கணக்கிடுகைகள் செய்யப்படுதல் வேண்டும்.

(6) இச்சட்டத்துக்கமைய, ஒரு நம்பிக்கைப்பொறுப்புக்கும் அதன் நம்பிக்கைப்பொறுப்பாளர்களுக்கும் அல்லது பயனுகரி களுக்கும் இடையேயான ஒழுங்கேற்பாடுகள் ஏற்றங்கீகரிக்கப் படுதல் வேண்டும்.

பயனுகரி களுக்கான வரிவிதிப்பு.

**58.** (1) (அ) வதிவுள்ள நம்பிக்கைப்பொறுப்பொன்றின் பகிர்ந்தளிப்புகள் நம்பிக்கைப்பொறுப்பின் பயனுகரிகளினது வசம் விலக்களிக்கப்பட்டன வாதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) வதிவற்ற நம்பிக்கைப்பொறுப்பொன்றின் பகிர்ந்தளிப்புகள், பகிர்ந்தளிப்பானது 57 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் நம்பிக்கைப் பொறுப்புக்கான அல்லது நம்பிக்கைப்பொறுப் பாளருக்கான அல்லது 57 ஆம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவின்கீழ் பயனுகரிக்கான வரிக்கு அமைந்தாகவுள்ள தொகையொன்றைக் குறிக் கின்ற அளவுக்குத் தவிர, நம்பிக்கைப்பொறுப் பின் பயனுகரிகளினது வருமானத்தைக் கணக் கிடுவதில் உள்ளடக்கப்படுதல் வேண்டும்.

(2) நம்பிக்கைப்பொறுப்பொன்றில் பயனுகரியின் அக்கறையினது கையுதிர்ப்பின் மீதான ஈட்டுகைகள், பயனுகரியின் வருமானத்தைக் கணக்கிடுவதில் உள்ளடக்கப்படுதல் வேண்டும்.

**59.** (1)இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, தகவுடைய முதலீட்டு வியாபாரத்தை நடாத்தாத ஒவ்வொரு கூறு நம்பிக்கைப் பொறுப்பும் ஒவ்வொரு பரஸ்பர நிதியமும் இலங்கையில் வதிவுள்ள கம்பெனியொன்றாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், இலங்கையில் வதிவுள்ள கம்பெனிகள் தொடர்பான இச்சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதலும் வேண்டும். கூறு நம்பிக்கைப் பொறுப்புக் களுக்கான வரிவிதிப்பு.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளின் பொதுமைக்குப் பங்கமின்றி-

(அ) ஏதேனும் கூறு நம்பிக்கைப்பொறுப்பில் அல்லது பரஸ்பர நிதியத்தில் "கூறு" என்பது, அக்கம்பெனியிலான பங்கொன்றெனக் கருதப்படுதல் வேண்டும்;

(ஆ) ஏதேனும் கூறு நம்பிக்கைப்பொறுப்பிலான அல்லது பரஸ்பர நிதியத்திலான கூறு வைத்திருப்பவரொருவர் அக்கம்பெனியில் பங்குதாரரொருவராகக் கருதப்படுதல் வேண்டும்;

(இ) ஏதேனும் கூறு நம்பிக்கைப்பொறுப்புக்கு அல்லது பரஸ்பர நிதியத்துக்கு அமைந்த ஏதேனும் ஆதனத்திலிருந்து அல்லது அக்கூறு நம்பிக்கைப் பொறுப்புக்காக அல்லது பரஸ்பர நிதியத்துக்காக அல்லது அதன் சார்பில் அத்தகைய நம்பிக்கைப்பொறுப்பாளரினால் அல்லது காப்பாளரினால் கொண்டுநடாத்தப்பட்ட ஏதேனும் வியாபாரத்திலிருந்து ஏதேனும் கூறு நம்பிக்கைப்பொறுப்பின் நம்பிக்கைப்பொறுப்பாளரினால் அல்லது ஏதேனும் பரஸ்பர நிதியத்தின் அத்தகைய காப்பாளரினால் பெற்றுக்கொள்ளப்பட்ட அல்லது அதிலிருந்து எழுந்த அல்லது அவரது நன்மைக்கு ஒன்றுதிரண்ட வருமானம், அக்கம்பெனியின் வருமானமாகக் கருதப்படுதல் வேண்டும்;

(ஈ) ஏதேனும் கூறு நம்பிக்கைப்பொறுப்பின் அல்லது பரஸ்பர நிதியத்தின் கூறு வைத்திருப்போருக்கு வருமானம் எத்தகையதுமான எம்முறையிலேனும் பகிர்ந்தளிக்கப்படுதல் எதுவும், அக்கம்பெனியின் பங்குதாரர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்ட பங்கிலாபமொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்; அத்துடன்

(உ) ஏதேனும் கூறு நம்பிக்கைப்பொறுப்பிலான அல்லது பரஸ்பர நிதியத்திலான ஏதேனும் கூறின் செலுத்தப்பட்ட பெறுமதி, அக்கம்பெனியிலுள்ள ஏதேனும் பங்கின் செலுத்தப்பட்ட பெறுமதியாகக் கருதப்படுதல் வேண்டும்.

(3) ஏதேனும் கூறு நம்பிக்கைப்பொறுப்பின் முகாமையாளருக்கு அல்லது நம்பிக்கைப்பொறுப்பாளருக்கு அல்லது ஏதேனும் பரஸ்பர நிதியத்தின் முகாமையாளருக்கு அல்லது காப்பாளருக்கு அக்கூறு நம்பிக்கைப்பொறுப்பின் அல்லது பரஸ்பர நிதியத்தின் நிதிகளிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்ட அல்லது ஊதியம் என்றவகையாகச் செலுத்தப்பட்ட ஏதேனும் பணத்தொகை, 11ஆம் பிரிவின் நோக்கங்களுக்காக, அதன் வருமானத்தைத் தோற்றுவிப்பதில் அக்கம்பெனியினால் உறப்பட்ட செலவொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) இப்பிரிவு ஏற்புடையதாகுமிடத்து, 57 ஆம் பிரிவு ஏற்புடையதாதலாகாது.

## பகுதி IV : கம்பெனிகள்

**60.** (1) கம்பெனியொன்று அதன் பங்குதாரர்களிலிருந்து தனி வேறாக வரிக்கு உட்பட்டதாதல் வேண்டும். கம்பெனிகளுக்கான வரிவிதிப்பு.

(2) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, ஒரு கம்பெனியின் எல்லா வியாபாரச் செயற்பாடுகளும் ஒரு தனிக் கம்பெனி வியாபாரத்தின்போது நடாத்தப்பட்டதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, ஒரு கம்பெனிக்கும் அதன் முகாமையாளர்களுக்கும் அல்லது பங்குதாரர்களுக்கும் இடையேயான ஒழுங்கேற்பாடுகள் ஏற்றங்கீகரிக்கப்படுதல் வேண்டும்.

பங்குதாரர் களுக்கான வரிவிதிப்பு.

**61.** (1) (அ) வதிவுள்ள கம்னெியொன்றினால் பகிர்ந்தளிக் கப்பட்ட பங்கிலாபங்கள்மீது கம்பெனியின் பங்குதாரர்களுக்கு வரிவிதிக்கப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) வதிவற்ற கம்பெனியொன்றினால் பகிர்ந்தளிக் கப்பட்ட பங்கிலாபங்கள், பங்குதாரர்களின் வருமானத்தைக் கணக்கிடுவதில் உள்ளடக்கப் படுதல் வேண்டும்.

(2) ஒரு கம்பெனியிலான பங்குகளின் கையுதிர்ப்பின்மீதான ஈட்டுகைகள், பங்குதாரரின் வருமானத்தைக் கணக்கிடுவதில் உள்ளடக்கப்படுதல் வேண்டும்.

வரியனுப்புகை.

**62.** (1) நிரந்தரமான தாபனத்தினூடாக இலங்கையில் வியாபாரம் கொண்டுநடாத்துகின்ற வதிவற்ற ஆளொருவர், வரிமதிப்பீட்டாண்டின்போது ஈட்டப்படும் அனுப்பப்பட்ட இலாபங்கள்மீது வரிசெலுத்துதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் அனுப்பப்பட்ட இலாபங்களை ஈட்டியுள்ள வதிவற்ற ஆளொருவர், வரிமதிப்பீட்டாண்டு முடிவடைந்தபின்னர் முப்பது நாட்களினுள் இச்சட்டத்துக்கான முதலாம் அட்டவணையில் தரப்பட்டுள்ள வீதத்துக்கிணங்க ஆணையாளர் தலைமையதிபதிக்கு அனுப்பப்பட்ட இலாபங்களின் முழுமொத்தத் தொகையின்மீது இறுதிவரியொன்றைச் செலுத்துதல் வேண்டும்.

(3) இப்பிரிவில்,"அனுப்பப்பட்ட இலாபங்கள்" என்பது, வதிவுள்ள கம்பெனியினால் வதிவற்ற ஆளுக்குச் செலுத்தப்பட்ட பங்கிலாபங்கள் நீங்கலாக, இலங்கையில் வருமானவரிக்கமைந்

தனவும், வதிவற்ற ஆளின் இலாபங்களிலிருந்தும் வருமானத் திலிருந்தும் வெளிநாட்டுக்கு அனுப்பப்பட்டனவும் அல்லது வெளிநாட்டில் வைத்திருக்கப்பட்டனவுமான தொகைகள் என்றும், இலங்கையில் வருமானவரிக்கமைந்ததும், இலங்கையில் வியாபாரம் நடாத்துவதிலிருந்து வதிவற்ற ஆளினால் அல்லது அவர் சார்பில் இலங்கைக்கு வெளியே பெறப்பட்டதுமான ஏதேனும் தொகை என்றும் பொருளாகும்.

## பகுதி V : உருவகங்கள்

உருவகங்களுக்கும் உறுப்பினர்களுக்கும் இடையேயான சொத்துக் கையாளுகைகள்.

**63.** நாற்பத்தாறாம் பிரிவுக்கமைய, உருவகமொன்றினால் அதன் உறுப்பினர்களுள் ஒருவருக்குச் சொத்தின் சொத்தாண்மைக் கைமாற்றம் என்ற வகையாக அல்லது மறுதலையாகச் சொத்தொன்று தேறிப்பெறப்படுமிடத்து-

(அ) கைமாற்றுநர், தேறிப்பெறுகைக்கு நேர்முன்னர் சொத்தின் சந்தைப் பெறுமதிக்குச் சமமானதும் தேறிப் பெறுகை தொடபுர்பிலானதுமான தொகையைப் பெற்றுக்கொள்பவராகக் கொள்ளப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) கைமாற்றம்பெறுநர், கொள்ளுதலில் பந்தி (அ) வில் குறிப்பீடுசெய்யப்பட்ட தொகையிலான செலவினத்தை உறுபவராகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

கட்டுப் பாட்டிலான மாற்றம்.

**64.** (1) உருவகமொன்றின் அடிப்படைச் சொத்தாண்மையானது, அச்சொத்தாண்மையுடன் ஒப்பிட்டுப்பார்க்கையில் முன்னைய மூன்றாண்டு காலப்பகுதியில் ஏதேனுமொரு நேரத்தில் ஐம்பது சதவீதத்தைவிட அதிகமாக மாறுகின்றபோது, மாற்றத்தின் பின்னர், அவ்வுருவகமொன்று —

(அ) மாற்றத்திற்கு முன்னர் உருவகத்தினால் உறப்பட்டதான, 18 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்கீழ் முன்கொணரப்பட்ட நிதிசார் செலவுகளைக் கழிக்க;

(ஆ) மாற்றத்திற்கு முன்னர் உருவகத்தினால் உறப்பட்ட தான, 19 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழான நட்டமொன்றைக் கழிக்க;

(இ) மாற்றத்திற்கு முன்னர், உருவகமானது 24 ஆம் பிரிவின் (2), (4) அல்லது (5) ஆம் உட்பிரிவுகளின் நியதிகளின்படி, வருமானத்தைக் கணக்கிடுவதில் ஒரு தொகையை உள்ளடக்கியிருக்கின்ற விடயமொன்றில், மாற்றத்திற்குப் பின்னர் அவ்வேறுபாடுகளின் கீழ் கழிப்பனவொன்றைக் கோருவதற்கு; அல்லது

(ஈ) மாற்றத்துக்குப் பின்னர் உறப்பட்டிருந்த 25 ஆம் பிரிவின் (5) ஆம் உட்பிரிவின் கீழான நட்டமொன்றை, மாற்றத்துக்கு முன்னரான வரிமதிப்பீட்டாண்டொன்றுக்கு பின்கொண்டு செல்ல,

அனுமதிக்கப்படுதலாகாது.

(2) உருவகமொன்றின் வரிமதிப்பீட்டாண்டொன்றின் போது (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட வகையின் சொத்தாண்மையில் மாற்றமொன்று ஏற்படுகின்றவிடத்து, மாற்றத்துக்கு முன்னரும் பின்னருமான வரிமதிப்பீட்டாண்டின் பாகங்கள் தனியான வரிமதிப்பீட்டாண்டுகளாகக் கருதப்படுதல் வேண்டும்.

(3) இப்பிரிவானது, ஒரு மாற்றத்துக்குப் பின்னர் இரண்டு ஆண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதிக்கு, மாற்றத்துக்கு முன்னர் அது நடாத்தியவாறு, மாற்றமொன்றின் பின்னர் அதே தொழிலை நடாத்துகின்ற பங்குடைமையொன்றுக்கு அல்லது கம்பெனியொன்றுக்கு ஏற்புடையதாதல் ஆகாது.

# அத்தியாயம் VI

## விசேட கைத்தொழில்கள்

### பகுதி I : பெற்றோலியத் தொழிற்பாடுகள்

**65.** (1) இரண்டாயிரத்து மூன்றாம் ஆண்டின் 26 ஆம் இலக்க, பெற்றோலிய வளங்கள் சட்டத்தின்கீழ் ஒப்பந்தக்காரர் அல்லது உப ஒப்பந்தக்காரர் ஒருவராக உடன்படிக்கையொன்றைச் செய்திருக்கின்ற எவரேனும் தனியாள் அல்லது ஏதேனும் உருவகம், இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, விடயத்துக்கேற்ப, அத்தகைய ஒப்பந்தத்தின் அல்லது உப ஒப்பந்தத்தின் நியதியின் மேல் இலங்கையில் வதிபவராகக் கருதப்படுதல் வேண்டும்.

பெற்றோலியத் தொழிற் பாடுகள்.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் பெற்றோலிய வளங்கள் உடின்படிக்கையின்கீழ் தேடிப்பெறப் படும் பெற்றோலியத்தின் ஏற்றுமதிகள் மற்றும் உள்நாட்டு விற்பனைகள் என்பவற்றிலிருந்தான மொத்தவிற்பனை வரவானது, ஏற்றுக்கொள்ளப்பட்ட வர்த்தக செயல்முறைகளின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், 2003 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, பெற்றோலிய வளங்கள் சட்டத்தின்கீழ் செய்துகொள்ளப்பட்ட பெற்றோலிய வளங்கள் உடன்படிக்கைகளில் காணப்படும் எவையேனும் குறிப்பான ஏற்பாடுகளுக்கமையவும் இருத்தல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் பெற்றோலிய வளங்கள் உடன்படிக்கையின்கீழ் தேடிப்பெறப் படும் பெற்றோலிய வியாபாரத்திலிருந்தான வருமானம், ஈட்டுகைகள் மற்றும் இலாபங்களானவை, இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழான வேறு அனுமதிக்கத்தக்க கழிப்பனவுக ளுக்கு மேலதிகமாக, பின்வரும் கழிப்பனவுகளை அனுமதித்த பின்னர் நிச்சயிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், இச்சட்டத் தின் வேறு ஏதேனும் ஏற்பாட்டில் முரணாக எது எவ்வாறிருப்

பினும், இச்சட்டத்தின் முதலாம் அட்டவணையில் தரப்பட்ட தோதான வீதத்தில் வருமானவரி விதிக்கப்படற்பாலதாதல் வேண்டும், ஆயின், செலவினத்தின் அதே விடயம் ஒரு தடவைக்கு மேல் கழிக்கப்படுதலாகாது.

(அ) பெற்றோலியத் தொழிற்பாடுகளை நடாத்துவதற்காக சேவை உப ஒப்பந்தக்காரர்களுக்குச் செய்யப்பட்ட கொடுப்பனவுகள்;

(ஆ) பிரிவு 16 இன் கீழான தேய்மானப் படிகளுக்குப் பதிலாக, பெற்றோலிய வளங்களை மீட்டுப்பெறுவதற்காகப் பயன்படுத்தப்படும் ஏதேனும் பொறித்தொகுதி, இயந்திரத்தொகுதி அல்லது சாதனக் கொள்ளலின் ஆகுசெலவின் நூறு சதவீதம். அத்தகைய சொத்துக்களின் விற்பனைமீது தேறிப்பெறப்பட்ட எவையேனும் வரும்படிகள் அத்தகைய வியாபாரத்திலிருந்தான பெறுகையொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்;

(இ) வட்டிச் செலவுகள்;

(ஈ) ஏதேனும் பெற்றோலிய வளங்கள் உடன்படிக்கையின் கீழ் மீட்டுப்பெறப்பட்ட பெற்றோலிய வளங்கள்மீது செலுத்தப்பட்ட அரசுரிமைப் பணம்;

(உ) மேலே (ஆ) என்னும் பந்தியின் கீழான கழிப்பனவொன்று வழங்கப்பட்டிராதவிடத்து, மூலதனச் செலவுகள் உட்பட, பெற்றோலிய உற்பத்தி மற்றும் அபிவிருத்தி மீதான எல்லாச் செலவுகளும்;

(ஊ) முதலாவது வர்த்தக ரீதியிலான உற்பத்தி ஆண்டில், ஏதேனும் பெற்றோலிய வளங்கள் உடன்படிக்கையின் கீழ் அகழ்ந்துதேடும் காணித்துண்டுகளிலுள்ள வெற்றிகரமற்ற கிணறுகளின் அகழ்ந்துதேடுதலில் எவரேனும் ஒப்பந்தக்காரரால் உறப்பட்ட எல்லாச் செலவுகளும், முதலாவது வர்த்தக ரீதியிலான உற்பத்தியின் அத்தகைய ஆண்டு வரைக்கும் மற்றும் அது உட்படவும்;

(எ) முதலாவது வர்த்தக ரீதியிலான உற்பத்தியின் பின்னர், ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டில் ஏதேனும் பெற்றோலிய வளங்கள் உடன்படிக்கையின்கீழ் அகழ்ந்துதேடும் காணித்துண்டுகளிலுள்ள வெற்றிகரமற்ற கிணறுகளின் அகழ்ந்துதேடுதலில் எவரேனும் ஒப்பந்தக்காரரால் உறப்பட்ட ஏதேனும் செலவுகள்.

## பகுதி II : நிதி நிறுவனங்களும் காப்புறுதி உருவகங்களும்

**66.** (1) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, வங்கித்தொழில் வியாபாரமொன்றை நடாத்துவதில் ஆளொருவரின் செயற்பாடுகள், அவ்வாளின் வேறேதேனும் செயற்பாட்டிலிருந்து தனியான வியாபாரமொன்றாகக் கொள்ளப்படுதல் வேண்டும் என்பதுடன், வியாபாரத்திலிருந்து கிடைக்கின்ற வரிமதிப்பீட்டாண்டொன்றுக்கான அவ்வாளின் வருமானம் அல்லது நட்டம் தனியாகக் கணக்கிடப்படுதலும் வேண்டும். வங்கித் தொழில் வியாபாரம்.

(2) வங்கித்தொழில் வியாபாரமொன்றை நடாத்துகின்ற ஆளொருவர், இலங்கை மத்திய வங்கியினால் ஆக்கப்பட்ட இயைபான பணிப்புரைகளுக்கிணங்க கடன் கோரிக்கையொன்றுக்காக குறிப்பான நிதி ஏற்பாட்டை ஆக்குகின்றவிடத்து, ஆணையாளர் தலைமையதிபதியானவர், அந்நிதி ஏற்பாடு எந்தளவுக்கு கழிக்கத்தக்கதாக இருக்குமோ அந்தளவை குறித்துரைக்கலாம்; ஆனால், அத்தகைய பணிப்புரைகள் இணங்கியொழுகப்பட்டாலொழிய, ஆளொருவர் அத்தகைய நிதி ஏற்பாட்டை கழித்தலாகாது.

(3) இப்பிரிவில்,"வங்கித்தொழில் வியாபாரம்" என்பது, நிதி நிறுவனமொன்றின் வங்கித்தொழில் வியாபாரம் எனப் பொருள்படும்.

**67.** (1) பரஸ்பரமானதாயிருப்பின் அல்லது தனிஉரிமை முறையிலானதாயிருப்பின், ஆயுள் காப்புறுதித் தொழில் வியாபாரத்திலிருந்து பெறப்படுகின்ற கம்பெனியொன்றின் வருமானமானது, முகாமைத்துவச் செலவுகளைக் கழித்து, ஆயுள் காப்புறுதி நிதியத்தின் முதலீட்டு வருமானமாக இருத்தல் வேண்டும். காப்புறுதித் தொழில் வியாபாரம்.

(2) இப்பிரிவில்,"முகாமைத்துவச் செலவுகள்" என்னும் பதம், ஆயுள் காப்புறுதி நிதியத்தின் நிருவாகத்திற்கெனப் புறநிங்கலாக உறப்பட்ட பின்வரும் செலவுகள் எனப் பொருள்படும்:-

(அ) முதலீட்டுப் பதவிப்பணியை முகாமை செய்வதற்காக தாபிக்கப்பட்ட அலகுக்கு குறித்தளிக்கப்பட்ட ஊழியர்களுக்கான சம்பளங்களும் உறப்பட்ட வேறு தொடர்புடைய செலவினங்களும்;

(ஆ) ஆயுள் காப்புறுதி நிதியத்திற்கு புறநீங்கலாகச் சொந்தமானதும் அதனால் பயன்படுத்தப்படுவதுமான தேய்மானத்திற்கமைந்த சொத்துக்கள் தொடர்பிலான மூலதனப் படிகள்;

(இ) தரகு மற்றும் காப்புறுதி முகவர்களுக்குச் செலுத்தப்பட்ட அதனையொத்த செலவுகள் மற்றும் விளப்பரச் செலவுகள் போன்றவை நீங்கலாக, பணிப்பாளர்களின் சம்பளங்கள், வாடகை மற்றும் வேறு பொதுவான செலவுகள் போன்ற ஆயுள் காப்புறுதி நிதியத்தின் நிருவாகத்திற்கு நியாயமாக ஏற்றிக்கூறப்படற்பாலதான வேறு செலவுகள்.

(3) இலங்கையில் வதிவற்ற கம்பெனியொன்று நேரடியாகவோ அல்லது முகவரொருவர் ஊடாகவோ இலங்கையில் ஆயுள் காப்புறுதித் தொழில் வியாபாரத்தைக் கொண்டுநடாத்துகின்றவிடத்து, அதிலிருந்தான இலாபங்களானவை, கம்பெனியால் பெறப்படும் மொத்த ஆயுள் காப்புறுதிக் கட்டுப்பணங்களுக்கு இலங்கையிலான ஆயுள் காப்புறுதிக் கட்டுப்பணங்கள் எந்த விகிதாசாரத்தில் உள்ளனவோ அந்த விகிதாசாரத்துக்குச் சமமாக அமைவதான அத்தகைய விகிதாசாரத்தைக் கம்பெனியின் ஆயுள் காப்புறுதி நிதியத்தின் மொத்த முதலீட்டு வருமானத்துக்குத் தொடர்புறுத்தி, அத்துடன்

(அ) இலங்கையிலான முகவராண்மைச் செலவுகள்; மற்றும்

(ஆ) கம்பெனியின் தலைமையலுவலகச் செலவுகளின் நியாயமானதொரு விகிதாசாரம்,

என்பவற்றை, அந்த ஒவ்வொரு விடயத்திலும், ஆயுள் காப்புறுதிக்கட்டுப்பணங்கள் அல்லது முதலீட்டு வருமானம் அல்லாதனவான எவையேனும் வருமானம் அல்லது இலாபங் களை அத்தகைய செலவுகளுக்கு எதிராக எதிரீடு செய்வதன் மூலம் உரியவாறு கணக்கிலெடுப்பதாக ஆன கழிப்பன வொன்றுக்கமைவாக, நிச்சயிக்கப்படுதல் வேண்டும்.

(4) வதிவற்ற கம்பெனியொன்றின், அது பரஸ்பரமுறையிலான தான அல்லது உரிமைமுறையிலானதான, (ஆயுள் காப்புறுதி தவிர்ந்த) காப்புறுதித் தொழிலிலிருந்து எழும் இலாபங்கள், இலங்கையில் காப்புறுதித் தொழில் வியாபாரத்திலிருந்து எழும் மொத்தக் கட்டுப்பணங்களின் தொகையை (காப்புறுதி செய்தோருக்குத் திருப்பியனுப்பப்பட்ட எவையேனும் கட்டுப் பணங்களையும், மீள்காப்புறுதி செய்யப்படுவதன்மீது செலுத்தப் பட்ட கட்டுப்பணங்களையும் கழித்து) எடுத்து, அதிலிருந்து எந்தக்காலப்பகுதிக்கான இலாபங்கள் நிச்சியிக்கப்படுதல் வேண்டுமோ அந்தக் காலப்பகுதியின் இறுதியில் அதன் மொத்தத் தொழிற்பாடுகள் தொடர்பான அபாயங்களுக்காக கம்பெனியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட சதவீதத்தில் தீர்ந்துபோகாத அபாயங் களுக்கான ஒதுக்கத்தைக் கழிப்பனவு செய்து, மேலும் அதனுடன், அத்தகைய காலப்பகுதியின் தொடக்கத்தில் தீர்ந்துபோகாதிருந்த அபாயங்களுக்காக அதையொத்த வகையில் கணக்கிடப்பட்ட ஒதுக்கமொன்றைக் கூட்டுதல் செய்து, அவ்வாறு பெறப்படும் நிகரத் தொகையிலிருந்து (அது தொடர்பில் மீள்காப்புறுதியின் கீழ் அறவிடப்பட்ட தொகையைக்கழித்து), கட்டுப்பணங்கள் அல்லாதவையான ஏதேனும் வருமானம் அல்லது இலாபங்களி லிருந்து எவையேனும் உள்ளபடியான நட்டங்களையும், இலங்கை யிலான முகவராண்மைச் செலவுகளையும், கம்பெனியின் தலைமை அலுவலகச் செலவுகளின் நியாயமானதொரு விகிதா சாரத்தையும், அந்த ஒவ்வொரு விடயத்திலும் அந்தச் செலவுகளுக்கெதிரான எதிரீடுகளைக் கணக்கிலெடுப்பதாக, கழித்து நிச்சயிக்கப்படுதல் வேண்டும்.

(5) வதிவற்ற காப்புறுதிக் கம்பெனியொன்றினால் இலங்கையில் கொண்டு நடாத்தப்படும் வியாபாரத்தின் மட்டுப்பட்ட அளவு காரணமாக, (1)ஆம் (2)ஆம் உட்பிரிவுகளை ஏற்புடையன வாக்குவதற்கு அவசியமான விபரங்களைக் கொடுத்துதவும்படி கம்பெனியைத் தேவைப்படுத்துதல் நியாயமற்றதென ஆணையாளர் தலைமையதிபதி திருப்தியடையுமிடத்து, ஆணையாளர் தலைமையதிபதி, அவ்வுட்பிரிவுகளின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், கம்பெனியின் இலாபங்கள், அதன் மொத்தக்கட்டுப் பணங்களுக்கு இலங்கையிலான காப்புறுதித்தொழில் வியாபாரத்திருந்து எழும் கட்டுப்பணங்கள் எந்த விகிதாசாரத்தில் உள்ளனவோ அந்த விகிதாசாரத்துக்குச் சமமாக அமைவதான அத்தகைய விகிதாசாரத்தை கம்பெனியின் மொத்த இலாபங்களுக்கும் வருமானத்துக்கும் தொடர்புறுத்தி அல்லது விடயத்தின் எல்லாச் சூழ்நிலைகளிலும் அவர் ஒப்புரவானதெனக் கருதும் வேறேதேனும் அடிப்படையில், நிச்சயிக்கப்படுதலை அவர் அனுமதிக்கலாம்.

(6) இப்பிரிவில், "ஆயுள் காப்புறுதி நிதியத்தின் முதலீட்டு வருமானம்" என்னும் சொல்லமைப்பானது, (7)ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் பங்கிலாபத்தொகை அல்லாததும் —

(அ) ஆயுள் காப்புறுதித் தொழிலை மாத்திரம் வியாபாரமாகக் கொண்ட கம்பெனியொன்றின் விடயத்தில், முதலீட்டிலிருந்து வரும் அதன் முழு வருமானமும்; அத்துடன்

(ஆ) வேறேதேனும் கம்பெனியின் விடயத்தில் முதலீட்டிலிருந்து வரும் அதன் வருமானத்தில், அதன் ஆயுள் காப்புறுதித் தொழில் வியாபாரத்துக்கு நியாயமாக ஏற்றிக் கூறப்படற்பாலதான அத்தகைய பாகமும்,

எனப் பொருள்படும்.

(7) ஆயுள் காப்புறுதி தொழில் வியாபாரத்தைக் கொண்டு நடாத்தும் ஏதேனும் கம்பெனிக்கு வதிவுள்ள ஏதேனும் கம்பெனியினால் பங்கிலாபம் கொடுக்கப்படுமிடத்தும், அத்துடன் அப்பங்கிலாபத்தில் வதிவுள்ள அத்தகைய கம்பெனியினால் வதிவுள்ள வேறொரு கம்பெனியிடமிருந்து பெறப்பட்ட பங்கிலாபத்தொகையின் ஏதேனும் பாகம் அடங்கியுள்ள விடத்தும், அப்பங்கிலாபம் ஆயுள் காப்புறுதித் தொழில் வியாபாரத்தைக் கொண்டுநடாத்தும் கம்பெனியின் ஆயுள் காப்புறுதி நிதியத்தின் முதலீட்டு வருமானத்தின் பாகமாக அமைதலாகாது.

## பகுதி III : அரசசார்பற்ற ஒழுங்கமைப்புகளும் தரும நிறுவனங்களும்

*அரசசார்பற்ற ஒழுங்கமைப்புகளும் தரும நிறுவனங்களும்.*

**68.** (1) அரசசார்பற்ற ஒழுங்கமைப்பொன்று, முதலாம் அட்டவணையில் தரப்பட்ட வீதத்தில், ஒவ்வொரு வரிமதிப் பீட்டாண்டிலும் மானியம், கொடை அல்லது உதவுதொகை என்றவகையில் அல்லது வேறேதேனும் வழிகளில் பெற்றுக் கொள்ளும் தொகைகளின் மூன்று சதவீதத்தின் மீதான மேலதிக வரியைச் செலுத்துதல் வேண்டும்.

(2) ஆணையாளர் தலைமையதிபதி, ஏதேனும் வரிமதிப் பீட்டாண்டில், ஏதேனும் அரசசார்பற்ற ஒழுங்கமைப்பு —

(அ) புனர்வாழ்வு மற்றும் வசதிகள் வழங்கும் நோக்கங்களுக்கென அரசாங்கத்தினால் இனம்காணப்பட்ட ஏதேனும் இடப்பரப்பில், இடம்பெயர்ந்த ஆட்களுக்கு அத்தகைய புனர்வாழ்வு அத்துடன் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சீவனோபாய ஆதரவு என்பவற்றை வழங்குவதில்;

(ஆ) ஏதேனும் அனர்த்தத்தின் இயல்பையும் கோரத்தன்மையையும் அதன் விளைவாக வழங்கப்பட வேண்டுமென தேவைப்படுத்தப்பட்ட நிவாரணத்தின் பரிமாணத்தையும் கருத்திற்கொண்டு, மனிதாபிமான தன்மையிலானதாக அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட வேறு ஏதேனும் செயற்பாட்டில்,

ஈடுபட்டுள்ளதாக திருப்தியடையுமிடத்து, குறைப்பானது விடயத்தின் எல்லா சூழ்நிலைகளிலும் நீதியானதும் ஒப்புரவான துமானதாக ஆணையாளர் தலைமையதிபதிக்குத் தோன்றினால், அவர் அத்தகைய அரசசார்பற்ற ஒழுங்கமைப்பினால் அவ்வரிமதிப்பீட்டாண்டுக்குச் செலுத்தப்படற்பாலதான வரியைக் குறைக்கலாம் அல்லது நீக்கலாம்.

*(3)* ஏதேனும் தரும நிறுவனம், ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டில் பிணியாளர்களுக்கு அல்லது உதவி தேவைப்படுபவருக்கு அமைப்புமுறைக்குட்பட்ட பராமரிப்பை வழங்குமிடத்தும், அத்துடன் அத்தகைய பராமரிப்பை வழங்குவதற்கான ஆகு செலவு அத்தகைய தரும நிறுவனத்தினாலேயே ஏற்கப்படு கின்றது என ஆணையாளர் தலைமையதிபதி திருப்திப்படு மிடத்தும், ஆணையாளர் தலைமையதிபதி, அத்தகைய குறைத்தல் அல்லது தணித்தலானது விடயத்தின் எல்லா சூழ்நிலைகளிலும் நீதியானதும் ஒப்புரவானதுமாகுமென ஆணையாளர் தலைமை யதிபதிக்குத் தோன்றினால், குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைக ளுக்கமைய, வரிமதிப்பீட்டாண்டிற்கான தரும நிறுவனத்தின் வரிசெலுத்தப்படற்பாலதான வருமானத்தின்மீது செலுத்தப்படத் தக்க வரிக்கு எதிராக வரி வரவொன்றை வழங்கலாம்.

## அத்தியாயம் VII

### சர்வதேசம்

### பகுதி I : வதிவும் மூலங்களும்

**69.** *(1)* தனியாளொருவர் - *வதிவுள்ள ஆட்கள்.*

(அ) இலங்கையில் வதிபவராக;

(ஆ) ஆண்டு முழுவதும் இலங்கைக்கு வெளியே நிரந்தர வீடொன்றைக் கொண்டிருந்தும், இலங்கை யில் நிரந்தர வீடொன்றைக் கொண்டிராமலும் இருந்தாலொழிய, இலங்கையில் வாழ்பவராக;

(இ) ஆண்டின்போது இலங்கையில் சமுகமளித்தும், அச்சமுகமளிப்பானது, ஆண்டின்போது தொடங்குகின்ற அல்லது முடிவடைகின்ற ஏதேனும் பன்னிரண்டு மாத காலப்பகுதியில் கூட்டுமொத்தத்தில் நூற்றி எண்பத்து மூன்று நாட்கள் அல்லது அதற்குக் கூடுதலாக அமையும் காலப் பகுதியொன்றினுள் அல்லது காலப்பகுதிகளினுள் அடங்குவதாக;

(ஈ) இலங்கை அரசாங்கத்தின் ஊழியரொருவராக அல்லது அலுவலரொருவராக இருந்து ஆண்டின் போது அவரின் வாழ்க்கைத்துணை வெளிநாட்டுக்கு அனுப்பப்பட்டவராக; அல்லது

(உ) வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் கருத்துக்குட்பட, இலங்கைக் கப்பலொன்றில் அக்காலப்பகுதியின் போது, அவ்வாறு தொழிலுக்கமர்த்தப்பட்டு,

இருப்பின், அத்தனியாள் வரிமதிப்பீட்டாண்டொன்றுக்காக இலங்கையில் வதிவுள்ளவராதல் வேண்டும்.

(2) பங்குடைமையொன்று —

(அ) இலங்கையில் அமைக்கப்பட்டு; அல்லது

(ஆ) ஆண்டின்போதான ஏதேனும் காலத்தில், பங்குடைமையின் முகாமைத்துவம் மற்றும் அலுவல்களின் கட்டுப்பாடு இலங்கையில் பிரயோகிக்கப்பட்டு,

இருப்பின், அப்பங்குடைமை வரிமதிப்பீட்டாண்டொன்றுக்காக இலங்கையில் வதிவுள்ளதாதல் வேண்டும்.

(3) நம்பிக்கைப்பொறுப்பொன்று -

(அ) இலங்கையில் நிறுவப்பட்டதாக அல்லது தாபிக்கப் பட்டதாக;

(ஆ) ஆண்டின்போதான ஏதேனும் காலத்தில், நம்பிக்கைப் பொறுப்பின் நம்பிக்கைப்பொறுப்பாளர் ஒருவர் இலங்கையில் வதிவுள்ளவராக; அல்லது

(இ) ஆண்டின்போதான ஏதேனும் காலத்தில், இலங்கையில் வதிவுள்ள ஆளொருவர், பணிப்பானது தனியானதாக அல்லது ஏனைய ஆட்களுடன் சேர்ந்ததாக அல்லது நேரடியானதாக அல்லது ஒன்று அல்லது அதற்குக் கூடுதலான இடையிட்ட உருவகங்களைக்கொண்டு செய்யப்பட்டதாக இருப்பினும் அல்லது செய்யப்படக் கூடியதாக இருப்பினும், நம்பிக்கைப்பொறுப்பின் சிரேட்ட முகாமைத்துவ ரீதியிலான முடிவுகளை பணிக்கின்றவராக அல்லது பணிக்கக் கூடியவராக இருப்பின்,

அந்நம்பிக்கைப்பொறுப்பு வரிமதிப்பீட்டாண்டொன்றுக்காக இலங்கையில் வதிவுள்ளதாதல் வேண்டும்.

(4) கம்பெனியொன்று -

(அ) இலங்கைச் சட்டங்களின்கீழ் கூட்டிணைப்புச் செய்யப்பட்டதாக அல்லது அமைக்கப்பட்டதாக;

(ஆ) இலங்கையில் பதிவுசெய்யப்பட்டதாக அல்லது அதன் பிரதான அலுவலகம் இலங்கையில் உள்ளதாக; அல்லது

(இ) ஆண்டின்போதான ஏதேனும் காலத்தில், கம்பெனியின் முகாமைத்துவம் மற்றும் அலுவல்களின் கட்டுப்பாடு இலங்கையில் பிரயோகிக்கப்பட்டதாக,

இருப்பின், அக்கம்பெனி வரிமதிப்பீட்டாண்டொன்றுக்காக இலங்கையில் வதிவுள்ளதாதல் வேண்டும்.

**70.** (1) பிரிவு 69 இன் (1)ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியின் காரணத்திற்காக மாத்திரம் இலங்கையில் வதிவுள்ள தனியாளொருவர், நூற்றி எண்பத்து மூன்று நாள் காலப்பகுதியின் தொடக்கத்திலிருந்து அவ்வாறான வதிவுள்ளவராக இருத்தல் வேண்டும். இல்லாவிடில், வரிமதிப்பீட்டாண்டொன்றின்போது இலங்கையில் வதிவுள்ளவரான ஆளொருவர், ஆண்டு முழுவதுக்கும் வதிவுள்ள ஒருவராகக் கருதப்படுதல் வேண்டும். வதிவிட மாற்றம்.

(2) உட்பிரிவு (4) இற்கமைய, வதிவற்ற ஆளொருவர் இலங்கையில் வதிவுள்ள ஆளொருவராக வருகின்றவிடத்து, வதிவுள்ளவராக வருவதற்கு உடன்முன்னர் அவ்வாளினால் வைத்திருக்கப்பட்ட சொத்தொன்றின் தேறிய ஆகுசெலவு, அந்நேரத்திலுள்ள சொத்தின் சந்தைப்பெறுமதிக்குச் சமமான தாக இருத்தல் வேண்டும்.

(3) உட்பிரிவு (4) இற்கமைய, இலங்கையில் வதிவுள்ள ஆளொருவர் இலங்கையில் வதிவுள்ளவராக இல்லாதொழிகின்ற போது, அவ்வாள் வதிவுள்ளவராக இல்லாதொழிவதற்கு நேர்முன்னர் அவருக்குச் சொந்தமான எல்லாச் சொத்துக்களும் தேறிப்பெறப்பட்டவாறாகவும், தேறிப்பெறப்பட்ட நேரத்தில் சொத்தின் சந்தைப் பெறுமதிக்கு சமமான தொகை ஒவ்வொன்று தொடர்பிலும் பெறப்பட்டவாறாகவும் கருதப்படுதல் வேண்டும்.

(4) உட்பிரிவுகள் (2) மற்றும் (3) இன் ஏற்பாடுகள், முறையே வதிவுள்ளவராக ஆகுவதற்கு உடன்முன்னராக அல்லது வதிவுள்ளவராக இல்லாதொழிந்த உடன்பின்னர், வீட்டுடைச் சொத்தொன்றாகவுள்ள சொத்தொன்றுக்கு ஏற்புடையதாதலாகாது.

**71.** (1) இலங்கையில் மூலமொன்றைக் கொண்டுள்ள ஊழிய மொன்றிலிருந்தான ஆளொருவரின் வருமானம், வெளிநாட்டு மூலமொன்றைக் கொண்டுள்ள ஊழியமொன்றிலிருந்தான வருமானத்திலிருந்து தனியாகக் கணக்கிடப்படுதல் வேண்டும். வருமான மூலமும் வெளிநாட்டு நட்டங்களை விலக்கி வைத்தலும்.

(2) இலங்கையில் மூலமொன்றைக் கொண்டுள்ள வியாபாரமொன்றிலிருந்தான அல்லது முதலீடொன்றிலிருந்தான ஆளொருவரின் வருமானம் அல்லது நட்டமானது, வெளிநாட்டு மூலமொன்றைக் கொண்ட வியாபாரம் அல்லது முதலீட்டிலிருந்தான வருமானம் அல்லது நட்டத்திலிருந்து தனியாகக் கணக்கிடப்படுதல் வேண்டும்.

(3) ஊழியம், வியாபாரம், முதலீடு அல்லது வேறு மூலம் ஒன்றிலிருந்தான ஆளொருவரின் வருமானம், பின்வரும் அளவுக்கு இலங்கையிலுள்ள மூலமொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்:-

(அ) இலங்கையில் மூலமொன்றைக் கொண்டுள்ளதான அவ்வருமானத்தைக் கணக்கிடுவதில் நேரடியாக உள்ளடக்கப்பட்ட தொகைகளை விஞ்சுகின்றளவுக்கு

(ஆ) இலங்கையில் மூலமொன்றைக் கொண்டுள்ள அவ்வருமானத்தைக் கணக்கிடுவதில் நேரடியாகக் கழிக்கப்பட்ட தொகைகள்.

(4) வியாபாரமொன்றில் அல்லது முதலீடொன்றில் இருந்தான ஆளொருவரின் நட்டமானது, எந்தளவுக்கு (3)ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட தொகைகள் (3)ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டவற்றை விஞ்சுகின்றதோ, அந்தளவுக்கு இலங்கையில் மூலமொன்றாக இருத்தல் வேண்டும்.

(5) வெளிநாட்டு மூலமொன்றிலிருந்தான ஊழியமொன்றிலிருந்து பெறப்படும் ஆளொருவரின் வருமானம், (உட்பிரிவு (1)இல் கணக்கிடப்பட்டது எது எவ்வாறிருப்பினும்), அவ்வூழியத்திலிருந்து இலங்கையிலுள்ள மூலமொன்றிலிருந்தான ஏதேனும் வருமானத்தைக் கழித்து, அத்தொழிலிலிருந்தான அவ்வாளின் உலகளாவிய வருமானம் என்றவாறாகக் கணக்கிடப்படுதல் வேண்டும்.

(6) வியாபாரம் அல்லது முதலீடு ஒன்றிலிருந்தான ஆளொருவரின் வெளிநாட்டு மூலத்தின், வருமானம் அல்லது நட்டம் (உட்பிரிவு (2)இல் கணக்கிடப்பட்டது எது எவ்வாறாயினும்), அந்த வியாபாரம் அல்லது முதலீட்டில் இருந்தான அவ்வாளின் உலகளாவிய வருமானம் அல்லது நட்டமானது —

(அ) அந்த வியாபாரத்தின் அல்லது முதலீட்டில் இருந்தான, இலங்கையிலுள்ள மூலமொன்றின் ஏதேனும் வருமானத்தைக் கழித்து; அல்லது

(ஆ) அந்த வியாபாரத்தின் அல்லது முதலீட்டில் இருந்தான, இலங்கையிலுள்ள மூலமொன்றின் ஏதேனும் நட்டத்தைக் கூட்டி, கணக்கிடப்படுதல் வேண்டும்.

(7) பிரிவு 19 இன் நோக்கங்களுக்காக, ஆளொருவர், -

(அ) முதலீடொன்றிலிருந்தான ஒரு வெளிநாட்டு மூல நட்டமொன்றின் விடயத்தில், முதலீடொன்றிலிருந்தான அவ்வாளின் வெளிநாட்டு மூல வருமானத்தைக் கணக்கிடுவதில் மட்டும்; அத்துடன்

(ஆ) வியாபாரமொன்றிலிருந்தான வெளிநாட்டு மூல நட்டமொன்றின் விடயத்தில், வியாபாரமொன்றில் அல்லது முதலீடொன்றில் இருந்தான அவ்வாளின் வெளிநாட்டு மூல வருமானத்தைக் கணக்கிடுவதில் மட்டும்,

கழிக்கப்படாத நட்டமொன்றைக் கழிக்கலாம்.

நேரடியாக உள்ளடக்கப்பட வேண்டிய மூலமும் கழிக்கப்பட வேண்டிய தொகைகளும்.

**72.** (1) வருமானத்தைக் கணக்கிடுவதில் நேரடியாக உள்ளடக்கப்பட்ட தொகையொன்று, பின்வருவனவற்றைக் கொண்டுள்ள விடத்து, இலங்கையில் மூலமொன்றாக இருத்தல் வேண்டும் -

(அ) எந்தளவுக்கு வீட்டுடைச் சொத்தொன்று அல்லது வீட்டுடைப் பொறுப்பொன்று சம்பந்தப்படுகின்றதோ அந்தளவுக்கு, 6ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஆ),

(இ) அல்லது (ஈ) பந்திகளில் அல்லது 7 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட, ஈட்டுகையொன்றாக அல்லது தொகையொன்றாக, பிரதிபலன் பெற்றுக் கொள்ளப் பட்டிருத்தல்.

(ஆ) பந்தி (அ)வுக்கமைய, இலங்கையில் மூலமொன்றைக் கொண்டுள்ள கொடுப்பனவொன்று.

(2) வருமானத்தைக் கணக்கிடுவதில் நேரடியாகக் கழிக்கப்பட்ட தொகையொன்று பின்வருவனவற்றைக் கொண்டுள்ளவிடத்து, அது இலங்கையில் மூலமொன்றாக இருத்தல் வேண்டும் -

(அ) பிரிவு 13இன் (1)ஆம் உட்பிரிவில் அல்லது 16ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட படியொன்று அல்லது 14ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப் பட்ட செலவினங்கள் எந்தளவுக்கு வீட்டுடைச் சொத் துக்களுடன் தொடர்புபடுகின்றதோ அந்தளவுக்கு;

(ஆ) சொத்து அல்லது பொறுப்பு சம்பந்தப்பட்டுள்ள விடத்து, மூலதனச் சொத்தொன்றின் தேறிப்பெறப் படுதலில் இருந்தான அல்லது வியாபாரமொன்றின் அல்லது முதலீட்டுச் சொத்தொன்றின் நட்டமொன்றா னது, வீட்டுடைச் சொத்தொன்றாக அல்லது வீட்டுடைப் பொறுப்பொன்றாக இருத்தல் வேண்டும்; அத்துடன்

(இ) பந்திகள் (அ) மற்றும் (ஆ) என்பவற்றுக்கமைய, இலங்கையில் மூலமொன்றைக் கொண்டுள்ள கொடுப்பனவொன்று.

கொடுப்பனவுகளின் மூலம்.

**73.** (1) பின்வரும் கொடுப்பனவுகள் இலங்கையில் மூலமொன் றைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) ஊழியம் தொடர்பில் பெறப்பட்ட பின்வரும் கொடுப்பனவுகள் -

(i) எங்கு செலுத்தப்படினும், இலங்கையில் புரியப்படும் ஊழியம் தொடர்பில் பெறப்பட்ட அளவுக்கு; அல்லது

(ii) ஊழியம் எங்கிருப்பினும் இலங்கை அரசாங் கத்தினால் அல்லது அதன் சார்பில் செலுத் தப்பட்டிருப்பின்,

(ஆ) வதிவுள்ள கம்பெனியொன்றினால் செலுத்தப்பட்ட பங்கிலாபங்கள்;

(இ) வட்டி, விதிப்பனவுகள், ஆண்டுத்தொகைகள், அரசுரிமைப் பணம், தொழில்நுட்ப சேவைக் கட்டணம் அல்லது அதனையொத்த கொடுப்பனவானது பின்வரும் ஆளினால் செலுத்தப்பட்டிருப்பின்:-

(i) இலங்கைக்கு வெளியேயுள்ள நிரந்தரமான தொரு தாபனத்தினூடாக வதிவுள்ள ஆளி னால் நடாத்திச் செல்லப்படுகின்ற வியாபார மொன்றின் செலவினம் போன்றவாறான செலவினம் தவிர, வதிவுள்ள ஆளொரு வரினால்; அல்லது

(ii) இலங்கையைச் சேர்ந்த நிரந்தரமானதொரு தாபனத்தினூடாக வதிவற்ற ஆளினால் நடாத்திச் செல்லப்படுகின்ற வியாபாரமொன் றின் செலவினமொன்று போன்றவாறாக, வதிவற்ற ஆளொருவரினால்.

(ஈ) இலங்கையில் நடைபெறும் வெற்றிவாய்ப்பு விளையாட் டொன்றுடன் தொடர்புடைய லொத்தர், பந்தயம், சூதாட்டம் போன்றவற்றிலிருந்தான வெற்றிப்பேறுகள்;

(உ) இலங்கையினுள் அல்லது அதன் ஆள்புல் நீர்ப்பரப்பில் அமைந்துள்ள நிலத்திலிருந்து அல்லது கடலிலிருந்து

எடுக்கப்படும் இயற்கை வளங்கள் தொடர்பில் செய்யப் பட்ட அல்லது அவற்றைத் தொடர்புறுத்தி கணக்கிடப் பட்ட இயற்கைவளக் கொடுப்பனவுகள்;

(ஊ) இலங்கையில் அமைந்துள்ள சொத்தொன்றைப் பயன்படுத்துவதற்காக, பயன்படுத்தும் உரிமைக்காக அல்லது பயன்படுத்துவதிலிருந்து தவிர்த்திருத்தலுக் காக செலுத்தப்பட்ட வாடகை;

(எ) இலங்கையில் ஏதேனும் அபாயத்தின் காப்புறுதி தொடர்பில் ஆளொருவருக்குச் செலுத்தப்பட்ட பொதுக்காப்புறுதிக்கான கட்டுப்பணங்கள், அத்துடன் ஆளொருவரால் செலுத்தப்பட்ட பொதுக்காப்புறுதி யிலிருந்தான வரும்படிகள்;

(ஏ) இயைபான போக்குவரத்து வியாபாரமொன்றை நடாத்துகின்ற ஆளொருவரால் பின்வருவன தொடர் பில் பெறப்பட்ட கொடுப்பனவுகள் :-

(i) கப்பற்சரக்கு மாற்றியேற்றும் பெறுபேறொன் றாகத் தவிர, இலங்கையில் ஏற்றப்படும், பிரயாணிகளை, சரக்குகளை, அஞ்சல்களை அல்லது வேறு அசையும் உருவச் சொத்துக் களை ஏற்றிச் செல்லுதல்; அல்லது

(ii) உட்பந்தி (i) இல் குறிப்பீடு செய்யப்பட்ட குறைநிரப்பியான அல்லது ஏற்றிச் செல்வதற்கு இடைநேர்விளைவான, கொள்கலன்களினதும் தொடர்புடைய சாதனங்களினதும் வாடகை;

(ஐ) இலங்கையில் தாபிக்கப்பட்ட செய்கருவிமூலம் தகவல் களை, அத்தகைய தகவல்கள் இலங்கையில் பிறப்பிக்கப் பட்டிருப்பினும் அல்லது அங்ஙனம் இல்லாவிடினும், அனுப்பி வைத்தல் தொடர்பில் கம்பிவடம், வானொலி, ஒளியிழை அல்லது செயற்கைக்கோள் அல்லது

இலத்திரனியல் தொடர்பாடல்மூலம் தகவல்களை அனுப்பிவைக்கும் வியாபாரமொன்றை நடாத்துகின்ற ஆளொருவரால் பெறப்படும் கொடுப்பனவுகள்;

(ஒ) அளிக்கப்பட்ட சேவைக்காக அல்லது சேவை அளிப்பதிலிருந்து தவிர்த்திருத்தல் ஒன்றுக்காக அல்லது அவற்றுக்கு ஏற்றிக்கூறப்படற்பாலதான

(i) இலங்கையில் கொடுப்பனவின் இடத்தைப் பொருட்படுத்தாது; அல்லது

(ii) கொடுப்பவர் இலங்கை அரசாங்கமாக இருக்கின்றவிடத்து, பிரயோகிக்கும், அளிக்கும் அல்லது தவிர்த்திருக்கும் இடத்தைப் பொருட்படுத்தாது;

சேவைக்கட்டணங்கள் உள்ளடங்கலாக, பந்திகள் (இ), (ஏ) அல்லது (ஐ) இல் குறிப்பிடப்படாத வகையொன்றின் கொடுப்பனவுகள்;

(ஓ) பந்தி (அ) இனுள் அடங்காத ஆயுள்காப்புறுதி மற்றும் இளைப்பாறல் வரும்படிகள், சேவைமுடிவுறுத்தல் மற்றும் ஓய்வூதியக்கொடுப்பனவுகள் பின்வரும் ஆளினால் செலுத்தப்பட்டிருப்பின் -

(i) இலங்கைக்கு வெளியேயுள்ள நிரந்தரமானதொரு தாபனத்தினூடாக வதிவுள்ள ஆளினால் நடாத்திச் செல்லப்படுகின்ற வியாபாரமொன்றின் செலவினம் போன்றவாறான செலவினம் தவிர, வதிவுள்ள ஆளொருவரினால்;

(ii) இலங்கையைச் சேர்ந்த நிரந்தரமானதொரு தாபனத்தினூடாக வதிவற்ற ஆளினால் நடாத்திச் செல்லப்படுகின்ற வியாபாரமொன்றின் செலவினமொன்று போன்றவாறாக வதிவற்ற ஆளொருவரினால்; அல்லது

(iii) இலங்கை அரசாங்கத்தினால் அல்லது அதன் சார்பில்;

(ஔ) வீட்டுடைச் சொத்துக்களுடன் நடாத்தப்படுகின்ற வியாபாரம் அல்லது முதலீடு தொடர்பில் பெற்றுக் கொள்ளப்பட்டளவுக்கு நன்கொடைகள் மற்றும் ஏனைய தண்ணளிக் கொடுப்பனவுகள்;

(க) மேற்போந்த பந்திகளில் குறிப்பிடப்பட்டிராத பின்வரும் கொடுப்பனவுகள் -

(i) வீட்டுடைச் சொத்தொன்றைக் கொள்ளல், வீட்டுடைப் பொறுப்பொன்றை உறுதல் அல்லது அத்தகைய சொத்தொன்றை அல்லது பொறுப்பொன்றை தேறிப்பெறுதல் தொடர்பில் செய்யப்பட்டவை.

(ii) இலங்கையில் நடாத்தப்படுகின்ற செயற்பாடு அல்லது நடாத்திச் செல்லப்படுகின்ற செயற்பாட்டிலிருந்து தவிர்த்திருப்பொன்று தொடர்பில் பெறப்பட்டவை: பின்வருபவை, அதாவது,

(iiஅ) வெளிநாட்டு நிரந்தர தாபனமொன்றுக்கு ஏற்றிக் கூறப்படற்பாலதான அளவுக்கு வதிவுள்ள ஆளொருவர் தொடர்பிலானவை தவிர; அத்துடன்

(iiஆ) வதிவற்ற ஆளொருவர் தொடர்பில், இலங்கையின் நிரந்தரதாபனமொன்றுக்கு அதேமாதிரியான அல்லது அதனையொத்த (இலங்கையில் இடம் பெறும் பொருட்கள் மற்றும் வணிகச் சரக்குகளின் விற்பனைகள் உள்ளடங்கலாக) அல்லது இலங்கையின் நிரந்தர

தாபனமொன்றினூடாக வதிவற்ற ஆளினால் நடாத்தப்படுகின்றவாறான வேறேதேனும் செயற்பாடுக்கு ஏற்றிக் கூறப்படற்பாலதான அளவுக்கு;

(iii) இலங்கையுடன் தொடர்புடைய செயற்பாட்டுக் கென எவரேனும் வெளிநாட்டு களியாட்டக்காரர் அல்லது கலைஞருக்கு செய்யப்பட்டவை.

*(2)* இப்பிரிவில் -

'இயைபான போக்குவரத்து தொழில்' என்பது, நிலம், கடல் அல்லது வான் போக்குவரத்துத் தொழிற்படுத்துநர் அல்லது பிரயாணிகள், சரக்குகள், அஞ்சல் அல்லது வேறு அசையும் உருவச் சொத்துக்களை ஏற்றிச் செல்லுகின்ற தனியமர்த்துநர் எனப்பொருள்படும்; அத்துடன்

'தொழில்நுட்ப சேவைக்கட்டணம்' என்பது, தொழில்நுட்ப அல்லது வேறு ஆளணியினரின் சேவைகளின் வழங்குகைக்கான கட்டணமொன்று உள்ளடங்கலாக, முகாமைத்துவ, தொழில்நுட்ப அல் லது ஆலோசனைச் சேவைகளுக்கான சேவைக்கட்டணமொன்று எனப் பொருள்படும்.

**74.** தொகையொன்று எந்தளவுக்கு இலங்கையில் மூலமொன் றைக் கொண்டிருக்கவில்லையோ அந்தளவுக்கு அத்தொகையா னது வெளிநாட்டு மூலமாகக் கொள்ளப்படுதல் வேண்டும். வெளிநாட்டு மூலம்.

### பகுதி II : இரட்டை வரிவிதிப்பு உடன்படிக்கைகள்

**75.** *(1)* அமைச்சரானவர், பாராளுமன்றத்தினால் அங்கீகரிக் கப்பட்டு வர்த்தமானியில் வெளியிடப்பட்ட, வெளிநாட்டு அரசாங்கமொன்றுடன் அல்லது அரசாங்கங்களுடனான ஏதேனும் இரட்டை வரிவிதிப்பு உடன்படிக்கை அல்லது பரஸ்பர நிருவாக உதவி உடன்படிக்கைக்கு பயன்கொடுக்கலாம். இரட்டை வரிவிதிப்பு உடன் படிக்கைகளும் பரஸ்பர நிருவாக உதவி உடன் படிக்கைகளும்.

(2) உட்பிரிவு (3)இன் ஏற்பாட்டுக்கமைய, இலங்கையில் சட்டப்பயனைக் கொண்டுள்ள இரட்டை வரிவிதிப்பு உடன் படிக்கையொன்றின் நிபந்தனைகளுக்கும் இச்சட்டத்தின் ஏற்பாடு களுக்குமிடையே ஏதேனும் முரண்பாடு காணப்படுகின்றவிடத்து, இரட்டை வரிவிதிப்பு உடன்படிக்கை மேலோங்குதல் வேண்டும்.

(3) உட்பிரிவு (4)இன் ஏற்பாடுகளுக்கமைய, இரட்டை வரிவிதிப்பு உடன்படிக்கையொன்று, இலங்கையின் மூலமொன்றி லிருந்தான ஏதேனும் வருமானமானது வரியிலிருந்து விலக்களிக் கப்பட்டு அல்லது விலக்கப்பட்டு இருக்கின்றவிடத்து அல்லது உடன்படிக்கையின் பிரயோகமானது இலங்கையின் வரி வீதத்தில் குறைப்பொன்றை விளைவிக்கின்றவிடத்து, அந்த விலக்களிப்பு, விலக்கல் அல்லது குறைப்பு என்பவற்றின் நன்மையானது, உடன்படிக்கையின் நோக்கங்களுக்காக, வேறு ஒப்பந்த அரசின் வதிவுள்ளவொரு அமைப்புக்கு, அதன் அடிப்படைச் சொத்து வத்தின் அல்லது கட்டுப்பாட்டின் ஐம்பது சதவீதத்தை அல்லது அதற்குமேலானதை அந்த வேறு ஒப்பந்த அரசில் வதிவற்ற தனியாளொருவரால் அல்லது தனியாட்களினால் உடன்படிக்கை யின் நோக்கங்களுக்காக, வைத்திருக்கப்படும் போது கிடைக்கப் பெறுவதால் ஆகாது.

(4) உட்பிரிவு (3) இன் ஏற்பாடு, வேறு ஒப்பந்த அரசின் வதிவுள்ளவரானவர், அந்த வேறு ஒப்பந்த அரசின் பிணையங் கள் பரிவர்த்தனையொன்றில் நிரல்படுத்தப்பட்ட கம்பெனி யொன்றாகவிருப்பின், ஏற்புடையதாதலாகாது.

(5) இப்பிரிவில் -

'இரட்டை வரிவிதிப்பு உடன்படிக்கை' என்பது, இரட்டை வரிவிதிப்பைத் தவிர்த்தல் மற்றும் அரசிறை ஏய்ப் பினைத் தடுத்தல் தொடர்பிலான சர்வதேச உடன்படிக்கையொன்று எனப்பொருள்படும்.

'பரஸ்பர நிருவாக உதவி உடன்படிக்கை' என்பது, வரிசார் தகவல் பரிமாற்ற உடன்படிக்கை ஒன்று, அல்லது வரிவிதிப்பு விடயங்கள் தொடர்பில் பரஸ்பர நிருவாக உதவிக்கான வேறு சர்வதேச உடன்படிக்கை எனப்பொருள்படும்.

## பகுதி III : கைமாற்றல் விலையிடுதல்

இணையாளர்களுக்கு இடையேயான சர்வதேசக் கொடுக்கல் வாங்கல்களில் இருந்தான இலாபங்களும் வருமானமும் அல்லது நட்டமும்.

**76.** (1) இணைப்பொறுப்பு தொழில் முயற்சியாண்மையுடன் மேற்கொள்ளப்படும் ஏதேனும் சர்வதேச கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடும் இலங்கையிலுள்ள எவரேனும் நபரினால் அல்லது ஏதேனும் பங்குடைமையிலிருந்து எழுகின்ற, பெற்றுக்கொள்ளப்படுகின்ற அல்லது எழுகின்ற எவையேனும் ஈட்டுகைகளும் இலாபங்களுமான வருமானம் அல்லது அதில் உறப்படுகின்ற ஏதேனும் நட்டம், கட்டுப்பாடற்ற நிபந்தனைக்குரிய விலையைக் கருத்திற்கொண்டு நிச்சயிக்கப்படுதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் நோக்கத்துக்காக —

(அ) இலங்கையில் நிரந்தர தாபனத்தைக் கொண்டுள்ள ஏதேனும் வியாபார ஒழுங்கமைப்பு, அத்தகைய நிரந்தர தாபனத்திற்கு இலங்கையிலிருந்து எழுகின்ற அல்லது பெற்றுக்கொள்ளப்படுகின்ற வருமானத்தை நிச்சயிப்பதற்காக ஆளொருவர் எனக் கருதப்படுதல் வேண்டும்.

(ஆ) 'நிரந்தர தாபனம்' —

(i) இரட்டை வரிவிதிப்பு வழிவகைகளைத் தவிர்த்தல் மீது உடன்படிக்கையொன்றைச் செய்திருக்கின்ற நாடொன்று தொடர்பில், இலங்கை அரசாங்கத்திற்கும், இலங்கையில் எவரேனுமாள் அத்துடன் அவரது முகவர்கள், கிளைகள் அல்லது தாபனங்கள் வதிவிலுள்ள ஏதேனும் ஆள்புலத்தின் அரசாங்கத்திற்கும் இடையே உடன்படிக்கையொன்று வலுவிலுள்ளவிடத்து, இரட்டை வரி விதிப்பு நிவாரணத்திற்கான உடன்படிக்கையொன்றில் வரைவிலக்கணம் கூறப்பட்ட நிரந்தர தாபனம் ஒன்றாகும் அல்லது

(ii) இரட்டை வரிவிதிப்பைத் தவிர்த்தல் மீது உடன்படிக்கையொன்றைச் செய்திராத நாடொன்று தொடர்பில், ஏதேனும் வியாபாரத் தொடர்பை அல்லது இலங்கையில் அத்தகைய வியாபாரம் நடாத்திச் செல்லப்படும் நாட்களின் எண்ணிக்கையைப் பொருட்படுத்தாது அத் தொழில் முயற்சியின் வியாபாரத்தை முழுமையாக அல்லது பகுதியளவில் நடாத்திச் செல்லும் வியாபாரத்தின் நிலையான இடமொன்றை உள்ளடக்குகின்றது.

(இ) நிரந்தர தாபனமொன்றுக்கும் இலங்கையிலுள்ள அதன் தலைமை அலுவலகம் அல்லது வேறு தோதான கிளைகளுக்குமிடையேயான ஏதேனும் கொடுக்கல் வாங்கலில் எழுகின்ற, பெற்றுக் கொள்ளப்படுகின்ற அல்லது திரளுகின்ற ஈட்டுகைகளும் இலாபங்களுமான ஏதேனும் வருமானம் அல்லது அதில் உறப்படுகின்ற ஏதேனும் நட்டம் குறித்த சந்தர்ப்பத்தில் நிரந்தர தாபனமொன்றானது, அதன் தலைமை அலுவலகம் மற்றும் தோதான கிளைகளிலிருந்து தனியானதும் வேறானதுமான உருவகமொன்றாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், கட்டுப்பாடற்ற நிபந்தனைக்குரிய விலையைக்கொண்டு நிச்சயிக்கப்படுதலும் வேண்டும்; அத்துடன்

(ஈ) ''சர்வதேச கொடுக்கல்வாங்கல்'' என்பது, ஒன்றில் ஒருவர் அல்லது இருவருமே வதிவற்ற ஆட்களாயுள்ள, இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட இணைப் பொறுப்பு தொழில் முயற்சிகளுக்கிடையே, உருவ அல்லது அருவ ஆதனத்தின் கொள்வனவு, விற்பனை அல்லது குத்தகை அல்லது சேவைகளின் வழங்குகை, கடன்கொடுத்தல் அல்லது கடன் எடுத்தல் அல்லது அத்தகைய இணைப்பொறுப்பு தொழில் முயற்சிகளின் வருமானம், ஈட்டுகை அல்லது இலாபங்கள், நட்டங்கள் அல்லது சொத்துக்கள் மீது தாங்குதலொன்றைக்

கொண்டுள்ள ஏதேனும் வேறு கொடுக்கல்வாங்கல் என்னும் தன்மையில் இருப்பதும் அத்துடன் ஒன்று அல்லது ஒன்றுக்குமேற்பட்ட அத்தகைய இணைப் பொறுப்பு தொழில் முயற்சிகளுக்கிடையேயான ஏதேனும் பரஸ்பர உடன்பாட்டின் அல்லது ஏற்பாட்டின் கீழ், ஒன்று அல்லது ஒன்றுக்குமேற்பட்ட ஏதேனும் அத்தகைய தொழில்முயற்சிகளுக்கு வழங்கப்படும் அல்லது வழங்கப்பட வேண்டியுள்ள நன்மை, சேவை அல்லது வசதியொன்று தொடர்பில் உறப்பட்ட அல்லது உறப்பட வேண்டியுள்ள எவையேனும் செலவு அல்லது செலவினங்களுக்குரிய ஏதேனும் ஒதுக்கீடு அல்லது பங்கீடு அல்லது ஏதேனும் உதவுதொகையை உள்ளடக்குகின்ற கொடுக்கல் வாங்கல் எனப்பொருள்படும்.

ஓராம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக, இணைப் பொறுப்பு தொழில் முயற்சியொன்று தவிர, ஒன்றில் வதிவற்ற ஆளாகவுள்ள ஒருவர், ஆளொருவருடன் அல்லது பங்குடைமையொன்றுடன் தொழில் முயற்சியொன்றினால் செய்துகொள்ளப்பட்ட ஏதேனும் கொடுக்கல் வாங்கலானது, செலுத்தப்படற்பாலதான வரித்தொகையைக் குறைக்கின்றமையை விளைவிக்கின்றதாக அல்லது குறைக்கின்ற பயனைக்கொண்டிருக்கக்கூடியதாக அத்தகைய தொழில்முயற்சிகளுக்கும் வேறு ஆளுக்கும் அல்லது பங்குடைமைக்குமிடையே அத்தகைய கொடுக்கல்வாங்கலின் நியதிகள் பொருளளவில் தீர்மானிக்கப்படுகின்ற அத்தகைய தொழில்முயற்சிகளுக்கும் வேறு ஆளுக்கும் அல்லது பங்குடைமைக்கும் இடையே முன்னுடன்படிக்கையொன்று இருப்பின், இரு இணைப்பொறுப்பு தொழில்முயற்சிகளுக்கிடையே செய்துகொள்ளப்பட்ட சர்வதேச கொடுக்கல்வாங்கலொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.

இவ்வுட்பிரிவின் ஏற்பாட்டின் பொதுமைக்குப் பங்கமின்றி, சர்வதேச கொடுக்ல்வாங்கலொன்றிலிருந்து எழுகின்ற ஏதேனும் செலவுக்கான அனுமதிப்பு அல்லது வட்டி கட்டுப்பாடற்ற நிபந்தனைக்குரிய விலையை கருத்திற்கொண்டு தீர்மானிக்கப்படுதலும் வேண்டும்.

(3) (அ) உட்பிரிவு (1) இல் குறிப்பீடு செய்யப்பட்ட வருமானம், ஈட்டுகை அல்லது இலாபங்கள் அல்லது நட்டமானது கட்டுப்பாடற்ற நிபந்தனைக்குரிய விலையைக் கருத்திற்கொண்டு நிச்சயிக்கப்பட்டிருக்க வில்லை என கைமாற்றல் விலையிடுதல் அலுவல ருக்குத் தோன்றுகின்றவிடத்து, அவர் கைமாற்றல் கணக்காய்வொன்றைத் தொடக்கி வைக்கலாம்.

(ஆ) உதவி ஆணையாளரொருவருக்கு, அவரது கணக்காய்வின் போது, உட்பிரிவு (1) இல் குறிப்பீடு செய்யப்பட்ட வருமானம், ஈட்டுகை அல்லது இலாபங்கள் அல்லது நட்டமானது கட்டுப்பாடற்ற நிபந்தனைக்குரிய விலையைக் கருத்திற்கொண்டு நிச்சயிக்கப்பட்டிருக்கவில்லை எனத் தோன்றுகின்ற விடத்து, கட்டுப்பாடற்ற நிபந்தனைக்குரிய விலையை தீர்மானிப்பதற்கென அவர் கைமாற்றல் விலையிடு தல் அலுவலருக்கு ஆற்றுப்படுத்தலாம் என்பதுடன், கைமாற்றல் விலையிடுதல் அலுவலர் கணக்காய் வொன்றை முன்னெடுப்பதற்கு முடிவுசெய்தால், அவர் அத்தகைய கைமாற்றல் விலையிடுதல் கணக்காய்வை தொடக்கி வைத்தல் வேண்டும்.

(இ) கட்டுப்பாடற்ற நிபந்தனைக்குரிய விலையைத் தீர்மானிக்கின்றபோது, கைமாற்றல் விலையிடுதல் அலுவலரானவர், விடயத்துக்கேற்ப, அத்தகைய வருமானம், ஈட்டுகை அல்லது இலாபங்கள் அல்லது நட்டமானது கட்டுப்பாடற்ற நிபந்தனைக்குரிய விலையைக் கருத்திற்கொண்டு உண்மையில் நிச்சயிக்கப்பட்டுள்ளதென்று கைமாற்றல் விலையிடு தல் அலுவலர் திருப்திப்படுமளவுக்கு எண்பிப்பதைத் தேவைப்படுத்தி (1)ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய் யப்பட்ட ஆளுக்கு அல்லது பங்குடைமைக்கு எழுத்தில் முகவரியிட்டு அனுப்பலாம். அத்தகைய ஆள் அவ்வாறு எண்பிப்பதற்குத் தவறுகின்ற விடத்து கைமாற்றல் விலையிடுதல் அலுவலர் கட்டுப்பாடற்ற நிபந்தனைக்குரிய விலையைத் தீர்மானிக்கலாம்.

(ஈ) ஓராம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக, கைமாற்றல் விலையிடுதல் அலுவலரொருவர், ஆளொருவருக்கும் வேறு ஆட்களுக்குமிடையிலான எவையேனும் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பிலான தகவல்களை, அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் கொடுத்துதவுமாறு தேவைப்படுத்துகின்ற எழுத்திலான அறிவித்தலொன்றை எவரேனும் அத்தகைய ஆளுக்குக் கொடுக்கலாம்.

(உ) கட்டுப்பாடற்ற நிபந்தனைக்குரிய விலையானது, கட்டுப்பாடற்ற நிபந்தனைக் கோட்பாட்டுக்கு இணங்கியொழுகியும், அத்துடன் அந்நோக்கத்துக்கென குறித்துரைக்கப்பட்டவாறான மிகவும் தோதான முறையினுடைய பிரயோகத்தின் அடிப்படையிலும் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(ஊ) உட்பிரிவு 2 இன் (அ) மற்றும் (ஆ) பந்திகளின் கீழ் தொடக்கிவைக்கப்பட்ட விடயங்களின் கட்டுப்பாடற்ற நிபந்தனைக்குரிய விலையை தீர்மானித்த பின்னர், கைமாற்றல் விலையிடுதல் அலுவலர் கட்டுப்பாடற்ற நிபந்தனைக்குரிய விலையைத் தீர்மானிக்கின்ற பூர்வாங்கக் கட்டளையொன்றைத் தயாரித்து கைமாற்றல் விலையிடுதல் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள பிரதி ஆணையாளரினால் நியமிக்கப்பட்ட தொழில்நுட்ப மீளாய்வுக் குழுவுக்கு மீளாய்வுக்கென ஆற்றுப்படுத்துதல் வேண்டும்.

(எ) தொழிநுட்ப மீளாய்வுக் குழுவானது பூர்வாங்கக் கட்டளையிலுள்ள தீர்மானிக்கப்பட்ட கட்டுப்பாடற்ற நிபந்தனைக்குரிய விலையை மீளாய்வு செய்தல் வேண்டும் என்பதுடன், கட்டுப்பாடற்ற நிபந்தனைக் குரிய விலையை உறுதிப்படுத்தி குறைத்து அல்லது அதிகரித்து, பின்வருவனவற்றுக்காக கைமாற்றல் விலையிடுதல் அலுவலருக்கு ஆற்றுப்படுத்துதல் வேண்டும்.

(i) குழுவின் எல்லா உறுப்பினர்களும் உடன்பட்டால், இறுதிக் கட்டளை யொன்று; அல்லது

(ii) குழுவின் எல்லா உறுப்பினர்களும் உடன்பட்டிராதவிடத்து, இடைக்காலக் கட்டளையொன்று.

(ஏ) கைமாற்றல் விலையிடுதல் அலுவலரானவர், அத்தகைய ஆள் அல்லது பங்காளர் அல்லது பங்குடைமைக்கு, விடயத்துக்கேற்ப, இறுதிக் கட்டளையை அல்லது இடைக்காலக் கட்டளையை அறிவித்தல் வேண்டும்.

(ஐ) இடைக்காலக் கட்டளையுடன் அதிருப்தியடையும் ஆளொருவர் அல்லது பங்குடைமையொன்றின் பங்காளர் அவரது அதிருப்தியை இச்சட்டத்தின் 78ஆம் பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட பிணக்குத் தீர்த்துவைத்தற் குழாத்திற்கு அறிவிக்கலாம் என்பதுடன், பிணக்குத் தீர்த்துவைத்தற் குழாமானது 78ஆம் பிரிவின் (4)ஆம் உட்பிரிவின் கீழான இறுதிக் கட்டளையொன்றை வழங்குதல் வேண்டும்.

(ஒ) ஆளொருவர் அல்லது பங்குடைமையொன்றின் பங்காளர், பெற்றுக்கொண்ட இடைக்காலக் கட்டளை யொன்றின் மீதான அவருடைய அல்லது அதனது அதிருப்தியை பிணக்குத்தீர்க்கும் குழாத்திற்கு அறிவித்திராவிடத்து, இடைக்காலக் கட்டளை யானது இறுதிக் கட்டளையொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்;

(ஓ) பிரிவு 135 இன் ஏற்பாடுகளுக்கமைய கைமாற்றல் விலையிடுதல் அலுவலர், இலாபங்களினதும் வருமானத்தினதும் தொகையை மதிப்பிடுதல் வேண்டுமென்பதுடன், விடயத்துக்கேற்ப, தொழிநுட்ப மீளாய்வுக்குழுவின் அல்லது பிணக்குத்தீர்க்கும் குழாமின் இறுதிக்கட்டளைக்கு இணங்கி வரிமதிப்பீட்டை வழங்குதல் வேண்டும்.

(4) இப்பிரிவின் ஏற்பாடுகள், (2)ஆம் உட்பிரிவின் கீழ் வருமானத்தைக் கணிப்பீடு செய்தலானது, விடயத்துக்கேற்ப, சர்வதேச கொடுக்கல் வாங்கல் செய்யப்பட்ட ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பில் கணக்குப் புத்தகங்களில் செய்யப்பட்ட பதிவுகளை அடிப்படையாகக் கொண்டு கணிக்கப்படுகின்ற வரிவிதிக்கப்படுதற்குரிய வருமானம், ஈட்டுகை அல்லது இலாபங்களைக் குறைக்கும், அல்லது நட்டத்தை அதிகரிக்கும் பயனைக்கொண்டுள்ள விடயத்தில் ஏற்புடையதாதலாகாது.

(5) இச்சட்டத்தின் வேறு ஏதெனும் பிரிவில் அல்லது ஏதேனும் வேறு சட்டத்தில் முரணானது எது எப்படியிருப்பினும், இச்சட்டத்தின் ஏதேனும் பிரிவின் கீழ் அல்லது ஏதேனும் வேறு சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட விலக்களிப்பு அல்லது வரி நன்மை, இப்பிரிவின் கீழும் கட்டுப்பாடற்ற நிபந்தனைக்குரிய விலைக்கு இணங்கவும் வருமானம் கணிப்பீடு செய்யப்பட்டதன் பின்னர், இலாபங்கள் அல்லது இணைப்பொறுப்பு தொழில்முயற்சிகளின் வருமானம் அதிகரிக்கப்படுவதன் மூலம் வருமானத்தொகை, ஈட்டுகை அல்லது இலாபங்கள் தொடர்பில் வழங்கப்படுதலாகாது.

(6) இப்பிரிவின் நோக்கங்களுக்காக கட்டுப்பாடற்ற நிபந்தனைக்குரிய விலை தொடர்பில் எவரேனும் ஆளுக்கும் அல்லது பங்குடைமையொன்றின் முந்திய பங்காளருக்கு ஆணையாளர் தலைமையதிபதிக்குமிடையே. குறித்துரைக்கப்படக்கூடியவாறான விதத்தில், முற்கூட்டிய விலையிடுதல் உடன்படிக்கையொன்று செய்து கொள்ளப்படலாம்.

(7) உட்பிரிவு (1) இல் குறிப்பீடு செய்யப்பட்ட கட்டுப்பாடற்ற நிபந்தனைக்குரிய விலையைத் தீர்மானித்தலானது ஆணையாளர் தலைமையதிபதியினால் குறித்துரைக்கப்படும் பாதுகாப்பான துறைமுக விதிகளுக்கமைய இருக்கலாம்.

**77.** (1) பிரிவு 76 இன் ஓராம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் தவிர, இணைந்த தொழில்முயற்சியுடன் மேற்கொள்ளப்படும் ஏதேனும் கொடுக்கல்வாங்கலில் ஈடுபடும் இலங்கையிலுள்ள எவரேனும் ஆளினால் அல்லது ஏதேனும் பங்குடைமையிலிருந்து எழுகின்ற, பெற்றுக்கொள்ளப்படுகின்ற அல்லது திரளுகின்ற எவையேனும், ஈட்டுகை அல்லது இலாபங்கள் வருமானம் அல்லது அதில் உறப்படுகின்ற ஏதேனும் நட்டம் கட்டுப்பாடற்ற நிபந்தனைக்குரிய விலையைக் கருத்திற் கொண்டு நிச்சயிக்கப்படுதல் வேண்டும்.

*இணையாளர்களுக் கிடையேயான கொடுக்கல் வாங்கல் களிலிருந்தான இலாபங்கள் மற்றும் வருமானங்கள் அல்லது நட்டம்.*

(2) (அ) உட்பிரிவு (1)இல் குறிப்பீடு செய்யப்பட்ட இலாபங்களும் வருமானமும் அல்லது நட்டமும் கட்டுப்பாடற்ற நிபந்தனைக்குரிய விலையை கருத்திற் கொண்டு நிச்சயிக்கப்பட்டிருக்கவில்லை என்று உதவிப்பணிப்பாளருக்கு, அவருடைய கணக்காய்வின் காரணமாகத்தோன்றுகின்றவிடத்து, அவர் கைமாற்றல் விலையிடுதல் கணக்காய்வொன்றை தொடக்கிவைக்கலாம்.

(ஆ) கட்டுப்பாடற்ற நிபந்தனைக்குரிய விலையைத் தீர்மானிக்கின்ற போது உதவிப் பணிப்பாளரானவர், விடயத்திற்கேற்ப, அத்தகைய இலாபங்களும் வருமானமும் அல்லது அத்தகைய நட்டமும் கட்டுப்பாடற்ற நிபந்தனைக்குரிய விலையைக் கருத்திற்கொண்டு உண்மையில் நிச்சயிக்கப்பட்டுள்ளதென்று உதவிப் பணிப்பளர் திருப்திப்படுமளவுக்கு எண்பிப்பதைத் தேவைப்படுத்தி (1)ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆளுக்கு அல்லது பங்குடைமைக்கு எழுத்தில் முகவரியிட்டு அனுப்பலாம். அத்தகைய ஆள் அவ்வாறு எண்பிப்பதற்குத் தவறுகின்றவிடத்து, உதவிப்பணிப்பாளர் கட்டுப்பாடற்ற நிபந்தனைக்குரிய விலையைத் தீர்மானிக்கலாம்.

(இ) ஓராம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக, ஆணையாளர், எவரேனும் ஆளுக்கு, அவருக்கும் வேறு எவரேனும் ஆளுக்கும் இடையிலான ஏதேனும் கொடுக்கல் வாங்கல் தொடர்பிலான தகவல்களை, அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் கொடுத்துதவுமாறு தேவைப்படுத்துகின்ற எழுத்திலான அறிவித்தலொன்றைக் கொடுக்கலாம்.

(ஈ) கட்டுப்பாடற்ற நிபந்தனைக்குரிய விலையானது, கட்டுப்பாடற்ற நிபந்தனைக் கோட்பாட்டுக்கிணங்கவும் அத்துடன் அங்நோக்கத்துக்கென குறித்துரைக்கப்பட்டவாறான மிகவும் தோதான முறைமையுடைய பிரயோகத்தின் அடிப்படையிலும் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(உ) கட்டுப்பாடற்ற நிபந்தனைக்குரிய விலையைத் தீர்மானித்த பின்னர், உதவிப் பணிப்பாளர் பூர்வாங்கக் கட்டளையொன்றைத் தயாரித்து தொழில்நுட்ப மீளாய்வுக் குழுவுக்கு மீளாய்வுக்கென ஆற்றுப்படுத்துதல் வேண்டும்.

(ஊ) தொழில்நுட்ப மீளாய்வுக் குழுவானது பூர்வாங்கக் கட்டளையிலுள்ள தீர்மானிக்கப்பட்ட கட்டுப்பாடற்ற நிபந்தனைக்குரிய விலையை மீளாய்வு செய்தல் வேண்டும் என்பதுடன், கட்டுப்பாடற்ற நிபந்தனைக்குரிய விலையை உறுதிப்படுத்தி, குறைத்து அல்லது அதிகரித்து பின்வருவனவற்றுக்காக உதவிப் பணிப்பாளருக்கு ஆற்றுப்படுத்துதல் வேண்டும்.

(i) குழுவின் எல்லா உறுப்பினர்களும் உடன்பட்டால், இறுதிக் கட்டளையொன்று; அல்லது

(ii) வேறு ஏதேனும் சூழ்நிலைகளில் குழுவின் எல்லா உறுப்பினர்களும் உடன்பட்டிராத விடத்து, இடைக்காலக் கட்டளையொன்று.

(எ) உதவிப் பணிப்பாளர், அத்தகைய ஆளுக்கு அல்லது அத்தகைய பங்குடைமையின் பங்காளருக்கு, விடயத்துக்கேற்ப இறுதிக் கட்டளையை அல்லது இடைக்காலக் கட்டளையை அறிவித்தலுக்கு வேண்டும்.

(ஏ) இடைக்காலக்கட்டளையுடன் அதிருப்தி அடையும் ஆளொருவர் அல்லது பங்குடைமையொன்றின் பங்காளர் அவரது அதிருப்தியை பிணக்குத்தீர்த்து வைத்தற் குழாமுக்கு அறிவிக்கலாம் என்பதுடன், பிணக்குத் தீர்த்துவைத்தற் குழாமானது 78 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் கீழ் இறுதிக் கட்டளையொன்றை வழங்குதல் வேண்டும்.

(ஐ) ஆளொருவர் அல்லது பங்குடைமையொன்றின் பங்காளர் இடைக்காலக்கட்டளையொன்றின் மீதான அவருடைய அதிருப்தியை அறிவித்திராதவிடத்து, இடைக்காலக் கட்டளையானது இறுதிக் கட்டளையொன்றாகக் கருதப்படும்.

(ஒ) உதவிப் பணிப்பாளர் 135 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, வருமானம், ஈட்டுகை அல்லது இலாபங்களின் தொகையை மதிப்பிட்டு, விடயத்திற்கேற்ப, தொழில்நுட்பமீளாய்வுக் குழுவின் அல்லது பிணக்குத் தீர்த்துவைத்தற் குழாமின் இறுதிக்கட்டளைக்கு இணங்கி மதிப்பீட்டை வழங்குதலும் வேண்டும்.

(ஓ) இறுதிக்கட்டளையின் அடிப்படையில் செய்யப்பட்ட அத்தகைய வரிமதிப்பீட்டினால் அத்தகைய ஆள் அல்லது பங்குடைமையொன்றின் பங்காளர் இன்னலுற்றிருப்பின், அவர் மதிப்பீட்டு அறிவித்தலின் முப்பது நாட்களுக்குள் ஆணையாளர் தலைமையதிபதிக்கு மேன் முறையீடொன்றைச் செய்யலாம்.

(3) இப்பிரிவின் ஏற்பாடுகள், (2) ஆம் உட்பிரிவின் கீழ் வருமானத்தைக் கணிப்பீடு செய்தலானது, விடயத்துக்கேற்ப, கொடுக்கல் வாங்கல் செய்யப்பட்ட ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டு தொடர்பில் கணக்குப்புத்தகங்களில் செய்யப்பட்ட பதிவுகளின் அடிப்படையின் மீது கணிக்கப்படுகின்ற வரிவிதிக்கப்படுதற்குரிய வருமானம், ஈட்டுகை அல்லது இலாபங்களைக் குறைக்கும் அல்லது நட்டத்தை அதிகரிக்கும் பயனைக்கொண்டுள்ள விடயத்தில் ஏற்புடையதாதலாகாது.

(4) இச்சட்டத்தின் ஏதேனும் பிரிவில் அல்லது வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் எது எவ்வாறிருப்பினும், இச்சட்டத்தின் அல்லது வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் எவையேனும் ஏற்பாடுகளின் கீழ் வழங்கப்பட்ட விலக்களிப்பு அல்லது வரி நன்மை செலவும் இப்பிரிவின் கீழும் கட்டுப்பாடற்ற நிபந்தனைக்குரிய விலைக்கு இணங்கவும் வருமானம் கணிப்பீடு செய்யப்பட்டதன் பின்னர் மொத்த இலாபங்கள் அல்லது இணைப்பொறுப்பு தொழில் முயற்சிகளின் வருமானம் அதிகரிக்கப்படுவதன் மூலம் வருமானத்தின், ஈட்டுகையின் அல்லது இலாபங்களின் தொகை தொடர்பில் வழங்கப்படுதலாகாது.

(5) உட்பிரிவில் (1) இல் குறிப்பீடு செய்யப்பட்ட கட்டுப்பாடற்ற நிபந்தனைக்குரிய விலையைத் தீர்மானித்தலானது பாதுகாப்பான துறைமுக விதிகளுக்கமைய இருக்கலாம்.

பிரிவுகள் 76 மற்றும் 77 இன் நோக்கங்களுக்காக —

(அ) 'ஆளொருவர் அல்லது பங்குடைமை' என்பது –

(i) ஆளொருவர் அல்லது பங்குடைமை, வேறோராளொருவரின் அல்லது பங்குடைமையின் முகாமைத்துவத்தில், கட்டுப்பாட்டில் அல்லது மூலதனத்தில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அல்லது ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட இடையீட்டாளர்கள் ஊடாக பங்குபற்றியிருப்பார்களாயின், மற்றைய தொழில்முயற்சியின் இணைந்த தொழில்முயற்சியாக இருத்தல் வேண்டும், அல்லது

(ii) ஆளொருவர் அல்லது பங்குடைமை, குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் அல்லது அத்தகைய அளவுக்கு, முகாமைத்துவத்தில், கட்டுப்பாட்டில் அல்லது மூலதனத்தில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அல்லது ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட இடையீட்டாளர்கள் ஊடாகப் பங்குபற்றியிருப்பார்களாயின், மற்றைய ஆளின் அல்லது பங்குடைமையின் இணைந்த தொழில் முயற்சியொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.

(ஆ) மேலேயுள்ள (i) மற்றும் (ii) ஆம் பந்திகளில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆளொருவர் அல்லது பங்குடைமையானது நிரந்தர தாபனமொன்றை உள்ளடக்குதல் வேண்டும்.

(இ) ''கைமாற்றல் விலையிடுதல் அலுவலர்'' என்பது, ஆணையாளர் தலைமையதிபதியினால் கைமாற்றல் விலையிடுதல் அலுவலர் ஒருவராக குறித்தளிக்கப்பட்ட உண்ணாட்டரசிறைத் திணைக்களத்தின் எவரேனும் அலுவலர் எனப் பொருள்படும்.

(ஈ) ''பாதுகாப்பான துறைமுகம்'' என்பது குறித்த சில நிபந்தனைகளின் கீழ் ஆளொருவரினால் அல்லது பங்குடைமையினால் வெளிப்படுத்துகின்ற கைமாற்றல் விலை ஏற்றுக்கொள்ளவேண்டிய தெளிவுபடுத்தல் நடவடிக்கையொன்றை ஆணையாளர் தலைமையதிபதி முன்மொழியக்கூடிய சூழ்நிலைகள் எனப்பொருள் படும்.

(உ) ''கட்டுப்பாடற்ற நிபந்தனைக்குரிய விலை'' என்பது, ஒப்பிடப்படற்பாலதான சுயேச்சை கொடுக்கல் வாங்கல் களில் பயன்படுத்தக்கூடியதான நியதிகளையும் நிபந்தனைகளையும் கவனத்திலெடுத்து தொடர்பு படுத்தப்பட்ட கொடுக்கல் வாங்கலொன்று நடாத்திச் செல்லப்படுகின்றவிடத்து, இரு இணைந்த தொழில் முயற்சிகளுக்கிடையே செய்து கொள்ளப்பட்ட ஏதேனும் கொடுக்கல் வாங்கலில், தொழிற்பாட்டில் அல்லது திட்டத்திலிருந்து எழுகின்ற, பெற்றுக்கொள்ளப்படு கின்ற அல்லது திரளுகின்ற வருமானத்தை, ஈட்டுகையை அல்லது இலாபங்களை அல்லது உறப்பட்ட நட்டங் களை நிச்சயிக்கின்ற நோக்கத்துக்கென கட்டுப்பாடற்ற நிபந்தனைக்குரிய கோட்பாட்டுக்கு இணங்கி கணிப்பீடு செய்யப்பட்டது எனப் பொருள்படும்.

பிணக்குத் தீர்த்துவைத்தற் குழாம்.

**78.** (1) இடைக்காலக்கட்டளை மீதான பிணக்குகளைத் தீர்க்கும் நோக்கத்துக்கென, (இதனகத்துப்பின்னர் ''குழாம்'' எனக் குறிப்பீடு செய்யப்படுகின்ற) பிணக்குத்தீர்க்கும் குழாமொன்று இருத்தல் வேண்டும். குழாமானது ஆணையாளர் தலைமையதிபதியினால் நியமிக்கப்படுகின்ற தவிசாளரொருவரையும் நான்கு உறுப்பினர்களையும் செயலாளர் ஒருவரையும் கொண்டிருத்தல் வேண்டும். அவ்வாறு நியமிக்கப்படும் குழாத்தின் உறுப்பின ரொவ்வொருவரும் இராண்டாண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்குப் பதவிவகித்தல் வேண்டும் என்பதுடன், மீள நியமிக்கப்படுவதற்குத் தகுதியுடையவராதலும் வேண்டும்.

(2) தவிசாளரின் வேண்டுகோளின் பேரில், குழாத்தின் செயலாளர், குழாத்தின் கூட்டமொன்றினைக் கூட்டுதல் வேண்டும். கூட்டமொன்றின் கூட்டநடப்பெண் மூன்று உறுப்பினர்களைக் கொண்டதாக இருத்தல் வேண்டும்.

(3) கைமாற்றல் விலையிடுதல் அலுவலரினால் அல்லது உதவி ஆணையாளரினால் ஆக்கப்பட்ட இடைக்காலக் கட்டளையினால் அதிருப்தியுறும் எவரேனும் ஆள், அவராக அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிமூலம் அத்தகைய இடைக்காலக் கட்டளை பற்றி அவரது அதிருப்திபற்றி ஆணையாளர் தலைமையதிபதிக்கு எழுத்துமூலம் அல்லது இலத்திரனியல் முறைமூலம் தெரிவிக்கலாம். அத்தகைய ஒவ்வொரு தொடர்பாடலும் அத்தகைய இடைக்காலக் கட்டளை பெறப்பட்ட தேதியிலிருந்து பதினான்கு நாட்களுக்குள் குழாத்தின் செயலாளருக்கு செய்யப்படுதல் வேண்டும்.

(4) ஆளொருவர், விடயத்துக்கேற்ப, 76 ஆம் அல்லது 77 ஆம் பிரிவுகளின் நியதிகளின் பிரகாரம் பூர்வாங்கக் கட்டளைபற்றிய அவரது அதிருப்தியை ஆணையாளர் தலைமையதிபதிக்குத் தெரிவிக்கின்றவிடத்து, பிணக்குத்தீர்க்கும் குழாமானது, அத்தகைய பூர்வாங்கக் கட்டளை மீதான அதிருப்திபற்றிய அத்தகைய தொடர்பாடல் தேதியின் ஆறு மாதங்களினுள் இறுதிக்கட்டளையொன்றை ஆக்குதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய கட்டளையை எழுத்து மூலம் அல்லது இலத்திரனியல் முறைமூலம் அத்தகைய ஆளுக்கு அனுப்பிவைத்தலும் வேண்டும். அத்தகைய இறுதிக் கட்டளையின் பிரதியொன்று, விடயத்திற்கேற்ப, கைமாற்றல் விலையிடுதல் அலுவலருக்கு அல்லது உதவி ஆணையாளருக்கு வரிமதிப்பீட்டை வழங்குவதற்கு அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும்.

(5) பிரிவு 135 இன் கீழ் செய்யப்பட்ட வரிமதீப்பீடொன்றின் தொகையினால் அத்தகைய ஆளொருவர் இன்னலுறுகின்றவராகவுள்ளவிடத்து, அவர் வரிமதீப்பீட்டு அறிவித்தலிலிருந்து முப்பது நாட்களுக்குள் ஆணையாளர் தலைமையதிபதிக்கு மேன்முறையீடொன்றைச் செய்யலாம் என்பதுடன் அதன் பின்னர் இச்சட்டத்தின் அத்தியாயம் XIII ஏற்புடையதாதலும் வேண்டும்.

*தலைமை யலுவலகச் செலவினம்.*

**79**. ஆளொருவரின் மதிப்பிடப்படற்பாலதான வருமானத்தின் பத்து சதவீதத்தை விஞ்சக்கூடியதான தொகையொன்று உள்ளவிடத்து, தலைமையலுவலகச் செலவினத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற இலங்கையின் நிரந்தரத் தாபனமொன்றினூடாக வதிவற்ற ஆளொருவரினால் நடாத்திச்செல்லப்படுகின்ற வியாபாரமொன்றின் செலவினமொன்றாக, வதிவற்ற ஆளொருவரினால் உறப்பட்ட தொகையொன்றுக்காக கழிப்பனவு எதுவும் அனுமதிக்கப்படுதலாகாது.

## பகுதி VI : இரட்டை வரிவிதிப்பிலிருந்தான நிவாரணம்

*வெளிநாட்டு வரிவரவு.*

**80**. (1) (பங்குடைமை தவிர்ந்த) எந்த வதிவுள்ள ஆளுக்கு 53ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவு ஏற்புடையதாகின்றதோ அந்த வதிவுள்ள ஆள் அல்லது 57 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவு எந்த நம்பிக்கைப்பொறுப்புக்கு ஏற்புடையதாகின்றதோ அந்த நம்பிக்கைப்பொறுப்பு, அவ்வாளினால் அல்லது அதனால் செலுத்தப்பட்ட ஏதேனும் வெளிநாட்டு வருமான வரிக்கான வரிமதிப்பீட்டாண்டொன்றுக்கான வெளிநாட்டு வரிவரவை, ஆண்டுக்கான அவ்வாளின் மதிப்பிடப்படற்பாலதான வெளிநாட்டு வருமானம் தொடர்பில் எந்தளவுக்கு வெளிநாட்டு வருமானவரி செலுத்தப்பட்டுள்ளதோ அந்தளவுக்குக் கோரலாம்.

*வெளிநாட்டு வரிவரவைக் கணக்கிடுதல்.*

**81**. (1) பிரிவு 80 இன் கீழ் கோரப்பட்ட வெளிநாட்டு வரி வரவுகள் —

(அ) வரிமதிப்பீட்டாண்டு ஒவ்வொன்றுக்கும் தனியாகவும், ஊழியம், வியாபாரம், முதலீடு அல்லது வேறு மூலம் ஒவ்வொன்றிலிருந்தான மதிப்பிடப்படற்பாலதான வெளிநாட்டு வருமானத்துக்குத் தனியாகவும் அத்துடன் முதலீட்டுச் சொத்தொன்றின் தேறிப்பெறுகையிலிருந்தான ஈட்டுகை ஒவ்வொன்றுக்கும் மேலும் தனியாகவும் கணிப்பீடு செய்யப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) கணிப்பீடு ஒவ்வொன்று தொடர்பிலும், அவ்வாளின் மதிப்பிடற்பாலதான வெளிநாட்டு வருமானத்துக்கு

ஏற்புடையதாகும் ஆண்டுக்கான அவ்வாளின் இலங்கையின் வருமான வரியின் சராசரி வீதத்தை விஞ்சுதலாகாது.

(2) வெளிநாட்டு வரி வரவொன்று, வரி தொடர்புறுகின்ற எந்த வெளிநாட்டு வருமானம் வதிவுள்ள ஆளினால் பெறப்பட்டதோ அந்த வெளிநாட்டு வருமானம் பற்றிய ஆண்டு முடிவடைந்த பின்னர் இரண்டு ஆண்டுகளினுள் அல்லது ஆணையாளர் தலைமையதிபதி அனுமதிக்கின்றவாறான அத்தகைய மேலதிக காலத்தினுள் வெளிநாட்டு வருமான வரி செலுத்தப்பட்டிருப்பின் மாத்திரம் இப்பிரிவின் கீழ் அனுமதிக்கப்படுதல் வேண்டும்.

(3) பிரிவு 2 இன் (3) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் கீழ் வரவுவைக்கப்படாத ஆண்டொன்றுக்காக இப்பிரிவின்கீழ் அனுமதிக்கப்பட்ட ஏதேனும் வெளிநாட்டு வரி வரவு அல்லது வெளிநாட்டு வரிவரவொன்றின் பாகம் மீளளிப்புச் செய்யப் படுதல், முற்போந்த ஆண்டுக்கு பின் கொண்டுசெல்லப்படுதல் அல்லது அடுத்துவரும் ஆண்டுக்கு முன்கொணரப்படுதலாகாது என்பதுடன், முதலீட்டுச் சொத்தொன்றின் தேறிப்பெறுகையின் விடயத்தில், வேறொரு முதலீட்டுச் சொத்தின் தேறிப்பெறுகை தொடர்பில் வரவு வைக்கப்படுதலுமாகாது.

(4) இப்பிரிவின் நோக்கத்துக்கென —

வரிமதிப்பீட்டாண்டொன்றுக்கான வதிவுள்ள ஆளொருவரின் "இலங்கை வருமானவரியின் சராசரி வீதம்" என்பது, (ஏதேனும் வெளிநாட்டு வரி வரவுக்கான ஏதேனும் கழிப்பனவின்றி 2 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் கீழ் கணிக்கப்பட்ட) 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் கீழ் ஆண்டுக்கான ஆளின் அவ் வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்தின் அவ்வாளி னால் வரிசெலுத்தப்படற்பாலதான நூற்றுவீதம் எனப் பொருள்படும்; அத்துடன்

“வரிமதிப்பிடப்படற்பாலதான வெளிநாட்டு வருமானம்” என்பது, விடயம் தேவைப்படுத்துகின்றவாறாக, ஊழியம், வியாபாரம், முதலீடு அல்லது வேறு மூலம் ஒன்றிலிருந்து வரி மதிப்பீட்டாண்டொன்றுக்கான வதிவுள்ள ஆளொருவரின் வரிமதிப்பிடற்பாலதான வருமானத்தில் உள்ளடக்கப்பட்ட வெளிநாட்டு மூல வருமானம் எனப் பொருள்படும்.

## அத்தியாயம் VIII

### வரிச்செலுத்துகை நடவடிக்கைமுறை

### பகுதி I : செலுத்துகைக்கான முறைகளும் காலமும்

*செலுத்துகைக் கான முறைகளும் காலமும்.*

**82.** (1) பிரிவு 2 இன் கீழ் விதிக்கப்பட்ட வரியானது, பகுதி II இன் கீழான பிடித்துவைத்தல் மூலம், பகுதி III இன் கீழான தவணைப்பணம் மூலம் அல்லது பகுதி IV இன் கீழான வரிமதிப்பீட்டின்மீது செலுத்தப்படற்பாலதானதாதல் வேண்டும்.

(2) வரியானது பின்வருமாறு செலுத்தப்படற்பாலதானதாக இருத்தல் வேண்டும்.

(அ) பிடித்துவைத்தல்மூலம் செலுத்தப்படற்பாலதான வரியின் விடயத்தில், 86 ஆம் பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்ட நேரத்தில்;

(ஆ) தவணைப்பணம் மூலம் செலுத்தப்படற்பாலதான வரி விடயத்தில், 90 ஆம் பிரிவின் கீழ் எந்தத் தேதியில் தவணைப்பணம் செலுத்தப்படவேண்டியுள்ளதோ அத் தேதியன்று;

(இ) வரிமதிப்பீட்டின் மீது செலுத்தப்படற்பாலதான வரி விடயத்தில்-

(i) முதலீட்டுச் சொத்தொன்றின் தேறிப்பெறுகையிலிருந்தான ஈட்டுகையொன்றைக் கொண்டுள்ள வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்தைக் கொண்ட ஆளொருவருக்காக, 93 ஆம் பிரிவின் கீழ் எந்தத்தேதியன்று மூலதன ஈட்டுகைகள் பற்றிய வரி விபரத்திரட்டு கோப்பிடப்படுதல் வேண்டுமோ, அந்தத் தேதியன்று; அல்லது

(ii) எந்த வரிமதிப்பீட்டாண்டுக்கு வருமான விபரத்திரட்டொன்று உட்பந்தி (i) இனால் மேவப்படாத வரிமதிப்பீட்டின்மேல் செலுத்தப்படற்பாலதான வரி தொடர்பில் 93ஆம் பிரிவின் கீழ் கோப்பிடப்பட வேண்டுமோ, அந்த வரிமதிப்பீட்டாண்டின் முடிவின் ஆறுமாதங்களின் பின்னரான தேதியன்று ; அத்துடன்

(ஈ) உட்பந்தி (i) இல் எடுத்துக்கூறப்படாத வேறு ஏதேனும் விடயத்தில், கொடுப்பனவுக்கான அறிவித்தலொன்றில் எடுத்துக்கூறப்பட்ட தேதியன்று.

## பகுதி II : பிடித்துவைத்தல்மூலம் செலுத்தப்படற்பாலதான வரி

தொழில் தருநர்களினாலான பிடித்து வைத்தல்.

**83.** (1) ஆணையாளர் தலைமையதிபதி, வதிவுள்ள தொழில் தருநரொருவர் ஊழியரொருவரின் வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்தை கணிப்பீடு செய்கையில் உள்ளடக்கப்படவேண்டிய கொடுப்பனவொன்றிலிருந்து வரியைப் பிடித்து வைக்கவேண்டிய சந்தர்ப்பங்களைக் குறித்துரைக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழ் வரியைப் பிடித்துவைப்பதற்கு தொழில்தருநரொருவருக்குள்ள கடப்பாடனது பின்வரும் சந்தர்ப்பங்களின் போது குறைக்கப்படுதல் அல்லது ஒழிக்கப்படுதலாகாது —

(அ) தொழில்தருநர் கொடுப்பனவிலிருந்து வேறு ஏதேனும் தொகையை கழிப்பதற்கும் பிடித்துவைப்பதற்குமான உரிமையொன்றைக் கொண்டிருத்தல் அல்லது அவற்றுக்கான கடப்பாடொன்றின் கீழ் இருத்தல்; அல்லது

(ஆ) ஊழியத்திலிருந்தான ஊழியரொருவரின் வருமானமானது குறைக்கப்படுதலாகாது அல்லது நடுக்கட்டலுக்கு அமைவானது என வேறு ஏதேனும் சட்டம் ஏற்பாடு செய்தல்.

முதலீட்டுத் திரும்பல்களிலிருந்தான பிடித்து வைத்தல்.

**84.** (1) உட்பிரிவு (2) இற்கமைய, பின்வரும் சந்தர்ப்பங்களில் வதிவுள்ள ஆளொருவர், இச்சட்டத்திற்கான முதலாம் அட்டவணையில் 10 ஆம் பந்தியில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள வீதத்தில் வரியைப் பிடித்துவைத்தல் வேண்டும்:-

(அ) அத்தகைய ஆள் -

(i) பங்கிலாபம், வட்டி, தள்ளுபடி, விதிப்பனவு, இயற்கை வள கொடுப்பனவு, வாடகை, அரசுரிமைப்பணம், கட்டுப்பணம் அல்லது இளைப்பாறுகைக் கொடுப்பனவொன்றைச் செலுத்துதல் அல்லது லொத்தர், வெகுமதி, பந்தயம் அல்லது சூதாட்டம் ஒன்றிலிருந்தான வெற்றிகளான தொகைகளைச் செலுத்துமிடத்து; அல்லது

(ii) முந்திய பங்காளர் அல்லது அத்தகை பங்காளர் இலங்கையில் இல்லாதவிடத்து, 53 ஆம் பிரிவின் (9) ஆம் உட்பந்தியின் கீழ் பங்குடைமை ஆண்டின் ஏதேனும் பங்குடைமை வருமானத்தின் ஒவ்வொரு பங்காளரினதும் இயைபான பங்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கும் காலத்தில், இலங்கையிலுள்ள பங்குடைமையின் முகவராக இருக்குமிடத்து;

(ஆ) கொடுப்பனவு அல்லது ஒதுக்கீடானது இலங்கையில் மூலமொன்றைக் கொண்டிருத்தல்.

(2) இப்பிரிவு பின்வருவனவற்றுக்கு ஏற்புடையதாதலாகாது –

(அ) பிரிவு 83 இன் கீழான பிடித்துவைத்தலுக்கு அமைவான கொடுப்பனவுகள்;

(ஆ) வியாபாரமொன்றைக் கொண்டுநடாத்துதலில் செய்யப் பட்டிருந்தாலன்றி, தனியாட்களினால் செய்யப்பட்ட கொடுப்பனவுகள்;

(இ) வதிவுள்ள நிதிசார் நிறுவனமொன்றுக்குச் செலுத்தப் பட்ட வட்டி; அல்லது

(ஈ) ஒன்பதாம் பிரிவின்கீழான விலக்களிப்புத்தொகை களாகவுள்ள கொடுப்பனவுகள் அல்லது ஒதுக்கீடுகள்.

சேவைக் கட்டணங்களில் இருந்தும் ஒப்பந்தக் கொடுப்பனவு களில் இருந்துமான பிடித்து வைத்தல்.

**85**. (1) உட்பிரிவு (3) இற்கமைய, பின்வரும் சந்தர்ப்பங்களில் வதிவுள்ள ஆளொருவர், இச்சட்டத்திற்கான முதலாம் அட்ட வணையின் 10 ஆம் பந்தியில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள வீதத் தில் வரியைப் பிடித்துவைத்தல் வேண்டும்; அத்தகைய ஆள் -

(அ) இலங்கையிலுள்ள மூலமொன்றுக்கான சேவைக் கட்டணமொன்றை, செலுத்துநரின் தொழில்தருநரல் லாதவரான வதிவுள்ள தனியாளொருவருக்கு பின்வரு வனவற்றுக்காகச் செலுத்துதல் -

(i) கற்பித்தல், விரிவுரையாற்றல், பரீட்சித்தல், பரீட்சையொன்றை கண்காணித்தல் அல்லது மேற்பார்வையிடுதலுக்காக;

(ii) வதிவுள்ள காப்புறுதி, விற்பனைகள் அல்லது பிரசார முகவருக்கான தரகு அல்லது தரகுக் கூலியொன்றாக;

(iii) புறக்குறிப்பிடல் கட்டணமொன்றாக;

(iv) கேள்விமனு அல்லது விலைகோரல் ஊடாக ஓர் ஒப்பந்த அடிப்படையில் ஏதேனும் பொருளின் வழங்குகை தொடர்பில்; அல்லது

(v) ஒழுங்குவிதியினால் விதித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய வேறு எவையேனும் விடயங்கள்; அல்லது

(ஆ) வதிவற்ற ஆளொருவருக்கு இலங்கையிலுள்ள மூல மொன்றுடன் சேவைக் கட்டணமொன்றை அல்லது காப்புறுதிக் கட்டுப்பணமொன்றைச் செலுத்துதல்.

(2) உட்பிரிவு (3) இற்கமைய, ஒழுங்குவிதிகள் பின்வருவன வற்றை விதித்துரைத்து ஆக்கப்படலாம் -

(அ) பிரிவு 73 இன் பந்தி (ஏ) அல்லது (ஐ) இல் குறிப்பீடு செய்யப்பட்ட (நிலம், கடல் அல்லது வான் போக்குவரத்து அல்லது தொலைத்தொடர்பாடல் சேவைகள்) சேவையின் வகையொன்றிற்கு வதிவற்ற ஆளொருவருக்கு ஆளொருவர் கொடுப்பனவொன் றைச் செய்கின்ற போது, வதிவுள்ள ஆளொருவர் வரியைப் பிடித்துவைத்தல் வேண்டும்; அத்துடன்

(ஆ) உட்பந்தி (அ) இல் குறிப்பீடு செய்யப்பட்ட வரி மீதான வீதம் பிடித்துவைக்கப்படுத்தப்படுதல் வேண்டும்.

(3) இப்பிரிவு, பின்வருவனவற்றுக்கு ஏற்புடையதாதலாகாது-

(அ) பிரிவு 83 இன் கீழான பிடித்துவைத்தலுக்கு அமைவான கொடுப்பனவுகள்;

(ஆ) வியாபாரமொன்றைக் கொண்டு நடாத்துதலில் செய்யப்பட்டிருந்தாலன்றி, தனியாட்களினால் செய் யப்பட்ட கொடுப்பனவுகள்;

(இ) விலக்களிப்புத் தொகைகளாகவுள்ள கொடுப்பனவுகள்; அல்லது

(ஈ) இரண்டாயிரத்து ஆறாம் ஆண்டின் 13 ஆம் இலக்க, பொருளாதாரச் சேவை விதிப்பனவுச் சட்டத்தின் கீழ் பொருளாதார சேவை விதிப்பனவுடன் விதிக்கப்படற்பாலதான கொடுப்பனவுகளை உறுதிப்படுத்தி பெறுகின்ற ஆளினால் முன்வைக்கப்பட்ட சான்றிதழொன்று தொடர்பில் குறித்துரைக்கப்பட்ட கட்டணங்களின் கொடுப்பனவுகள்.

பிடித்துவைக்கப்பட்ட அல்லது பிடித்துவைக்கப்பட்டதாகக் கொள்ளப்பட்ட வரிபற்றிய கூற்றுக்களும் அதன் செலுத்துகைகளும்.

**86.** (1) பிடித்துவைத்தல் முகவர் ஒவ்வொருவரும், மாதத்தின் போது இப் பகுதிக்கிணங்க பிடித்துவைக்கப்பட்டிருந்த ஏதேனும் வரியை பஞ்சாங்க மாதம் ஒவ்வொன்றும் முடிந்தபின்னரான பதினைந்து நாட்களுக்குள் ஆணையாளர் தலைமையதிபதிக்குச் செலுத்துதல் வேண்டும்.

(2) பிடித்துவைத்தல் முகவர் ஒவ்வொருவரும், மாச்சு மாதத்தின் முப்பத்தோரம் நாளன்று முடிவடையும் ஒவ்வோராண்டின் முடிவின் பின்னரான முப்பது நாட்களுக்குள், பின்வருவனவற்றை எடுத்துக்காட்டும் வருடாந்தக் கூற்றொன்றை ஆணையாளர் தலைமையதிபதியிடத்தில் கோப்பிடுதல் வேண்டும்-

(அ) காலப்பகுதியின் போது முகவரால் செய்யப்பட்ட இப்பகுதியின் கீழான பிடித்துவைத்தலுக்கமைவான கொடுப்பனவுகள்;

(ஆ) பிடித்துவைக்கப்பட்டிருப்பவரின் பெயர், முகவரி மற்றும் வரி அடையாள இலக்கம்;

(இ) ஒவ்வொரு கொடுப்பனவிலிருந்தும் பிடித்துவைக்கப்பட்ட வரி; அத்துடன்

(ஈ) ஆணையாளர் தலைமையதிபதி குறித்துரைக்கக்கூடிய வேறு எவையேனும் தகவல்கள்.

(3) இப்பிரிவுக்கிணங்க வரியைப் பிடித்துவைப்பதற்குத் தவறுகின்றவரான பிடித்து வைத்தல் முகவரொருவர், எவ்வாறாயினும், பிடித்துவைக்கப்பட்டவாறான அதே முறையிலும் அதே காலத்திலும், பிடித்துவைக்கப்பட்டிருக்க வேண்டிய வரியைச் செலுத்துதல் வேண்டும்.

(4) பிடித்துவைத்தல் முகவரொருவர் இப்பகுதியினால் தேவைப்படுத்தப்பட்டவாறான கொடுப்பனவொன்றிலிருந்தான வரியைப் பிடித்துவைப்பதற்குத் தவறுகின்றவிடத்து –

(அ) பிடித்துவைக்கப்பட்டவரானவர், ஆணையாளர் தலைமையதிபதிக்கு வரியைச் செலுத்துவதற்காக, பிடித்துவைத்தல் முகவருடன் சேர்த்து கூட்டாகவும் தனித்தனியாகவும் பொறுப்புடையவராதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) வரியானது, கொடுப்பனவு பெற்றுக்கொள்ளப்படுகின்ற பஞ்சாங்க மாதத்தின் முடிவின் பின்னர் பதினைந்து நாட்களுக்குள் பிடித்துவைக்கப்பட்டவரினால் செலுத்தப்படற்பாலதானதாக இருத்தல் வேண்டும்.

(5) இப்பிரிவின் கீழ் வரியைப் பிடித்துவைத்து அவ்வரியை ஆணையாளர் தலைமையதிபதிக்குச் செலுத்துகின்றவரான பிடித்துவைத்தல் முகவரொருவர், பிடித்துவைக்கப்பட்ட தொகையின் செலுத்துகைக்காக பிடித்துவைக்கப்பட்டவரினால் கோரப்படுகின்ற ஏதேனும் உரிமைக் கோரிக்கையின் நோக்கங்களுக்காக பிடித்து வைக்கப்பட்டவருக்கு பிடித்துவைத்த தொகையைச் செலுத்தியிருந்தவராகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(6) இப்பிரிவின் கீழ் வரியைப் பிடித்துவைப்பதற்குத் தவறுகின்ற, ஆனால் பிடித்துவைக்கப்பட்டிருக்க வேண்டிய வரியை (3) ஆம் உட்பிரிவுக்கிணங்க ஆணையாளர் தலைமையதிபதிக்குச் செலுத்துகின்ற, பிடித்துவைத்தல் முகவரொருவர், பிடித்துவைக்கப்பட்டவரிடமிருந்து சமமான தொகையொன்றை அறவிடுவதற்கு உரித்துடையவராக்கப்படுதல் வேண்டும்.

பிடித்து வைத்தற் சான்றிதழ்கள்.

**87.** (1) பிடித்துவைத்தல் முகவரொருவர், பிடித்துவைத்தற் சான்றிதழொன்றை பின்வரும் முறையில் தயாரித்து பிடித்து வைக்கப்பட்டவருக்கு சேர்ப்பித்தல் வேண்டும் -

(அ) உட்பந்திகள் (3) மற்றும் (4) இல் குறிப்பீடு செய்யப்பட்ட காலப்பகுதி ஒவ்வொன்றுக்கும் தனித்தனியாக;

(ஆ) அவ்வுட்பிரிவுகளில் குறிப்பீடு செய்யப்பட்ட நேரத்தில்; அத்துடன்

(இ) குறித்துரைக்கப்பட்ட படிவத்தில்.

(2) பிடித்துவைத்தற் சான்றிதழொன்று அக்காலப்பகுதியின் போது பிடித்து வைக்கப்பட்டவருக்குச் செய்யப்பட்ட கொடுப்பனவுகளின் தொகையையும், அத்துடன் இப்பிரிவின்கீழ் அக்கொடுப்பனவுகளிலிருந்து பிடித்துவைத்தல் முகவரினால் பிடித்துவைக்கப்பட்ட வரியையும் எடுத்துக்காட்டுதல் வேண்டும்.

(3) உட்பிரிவு (4) இற்கமைய, பிடித்துவைத்தற் சான்றித ழொன்று, பஞ்சாங்க மாதமொன்றை மேவுதல் வேண்டும் என்பதுடன் மாதம் முடிந்ததன் பின்னர் முப்பது நாட்களுக்குள் சேர்ப்பிக்கப்படுதலும் வேண்டும்.

(4) பிரிவு 83 இன் கீழ் பிடித்துவைக்கப்பட்ட வரியின் விடயத்தில், பிடித்துவைத்தற் சான்றிதழொன்றானது —

(அ) ஊழியரால் தொழில்புரியப்பட்ட போதான ஆண்டின் பாகத்தை மேவுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) அவ்வாண்டின் ஏப்பிறல் மாதத்தின் பதின்மூன்றாம் நாளுக்குப் பிந்தாமல் அல்லது ஊழியர், ஆண்டின் போது பிடித்துவைத்தல் முகவருடனான ஊழியத்தை இல்லாதொழித்துள்ளவிடத்து, ஊழியம் இல்லா தொழிக்கப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்களுக்கு மேற்படாமல் சேர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(5) உறுப்பினரொருவருக்கு பங்கிலாபத்தைச் செலுத்துகின்ற வதிவுள்ள கம்பெனியொன்று, இவ்வுட்பிரிவின் கீழ், ஒன்றில் பிடித்துவைத்தல் வரிக்கான 84 ஆம் பிரிவின் கீழான பிடித்து வைத்தலுக்கமைய அல்லது வதிவுள்ள கம்பெனியினால் பெறப்பட்ட வேறு சான்றிதழொன்று தொடர்பில் அந்த வதிவுள்ள கம்பெனியினால் பெறப்பட்ட வேறு பங்கிலாபத்திற்கு ஏற்றிக்கூறப் படற்பாலதான அல்லது அதிலிருந்து பெறப்பட்டதான பங்கி லாபத்தொகையை எடுத்துக்காட்டி, (பிடித்துவைத்தற் சான்றித ழொன்றுடன் இணைந்ததாக அல்லது அதன் பாகமொன்றாக அமைகின்றதாக இருப்பினும் அல்லது இல்லாவிடினும்) அந்த உறுப்பினருக்கு சான்றிதழொன்றைத் தயாரித்து சேர்ப்பித்தலும் வேண்டும்.

**88.** (1) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, பின்வருவன இறுதிப் பிடித்துவைத்தற் செலுத்துகைகளாக இருத்தல் வேண்டும்:- இறுதி பிடித்து வைத்தற் செலுத்துகைகள்.

(அ) வதிவுள்ள கம்பெனியொன்றினால் வதிவுள்ள ஆளொருவருக்குச் செலுத்தப்பட்ட பங்கிலாபங்கள்;

(ஆ) (i) (இச்சட்டத்திற்கான ஐந்தாம் அட்டவணையின் 2 (ஈ) என்னும் பந்தியின் நிவாரண எல்லையினுள் வருகின்ற சிரேட்ட பிரசையொருவருக்குச் செலுத்தப்பட்ட அத்தகைய வட்டித் தொகை தவிர) வதிவுள்ள தனியாளொருவருக்கு;

(ii) 1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, ஊழியர்கள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்துக்கு;

(iii) ஆணையாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக் கப்பட்ட சேமலாப நிதியச் அல்லது ஓய்வூதிய நிதியத்துக்கு; அத்துடன்

(iv) இச்சட்டத்தின் முதலாம் அட்டவணையின் 8 (2)ஆம் பந்தியில் வரைவிலக்கணப்படுத்தப்படும் அங்கீகரிக்கப்பட்ட இளைப்பாறல் நிதியத்துக்கு

செலுத்தப்பட்ட அல்லது அவரால் பெற்றுக் கொள்ளப்பட்டதாகக் கொள்ளப்படுகின்ற வட்டி.

(இ) பந்தயம் மற்றும் சூதாட்டம் என்பவற்றைக் கொண்டுள்ள வியாபாரமொன்றை நடாத்துவதில் பெறப்பட்ட தொகைகள் தவிர, லொத்தர், வெகுமதி, பந்தயம் அல்லது சூதாட்டம் ஒன்றிலிருந்தான வெற்றிகளாகச் செலுத்தப்பட்ட தொகை; அத்துடன்

(ஈ) இலங்கையின் நிரந்தர தாபனமொன்றினூடாகப் பெறப்பட்ட செலுத்துகைகள் தவிர, வதிவற்ற ஆட்களுக்குச் செலுத்தப்பட்ட இப்பகுதியின் கீழான பிடித்து வைத்தலுக்கமைவான அல்லது 84 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தி மற்றும் 85 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தி ஆகியன கருத்திற்கொள்ளப்படாதிருப்பின், அவ்வாறு அதற்கமைவானதாக இருக்கக் கூடிய செலுத்துகைகள்.

(2) பின்வருவன, 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் கீழான பிடித்துவைக்கப்பட்டவொருரின் வரிப்பொறுப்பை விடுவித்தல் வேண்டும் :-

(அ) இப்பகுதியின் கீழ் இறுதி பிடித்துவைத்தற் செலுத்துகையிலிருந்து பிடித்துவைக்கப்பட்ட வரி; அத்துடன்

(ஆ) பிரிவு 86 இன் (3) அல்லது (4) என்னும் உட்பிரிவுகளுக்கிணங்க இறுதி பிடித்துவைத்தற் செலுத்துகையொன்று தொடர்பாகச் செலுத்தப்பட்ட வரி.

(3) (பிரிவு 84 இன் (2) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் அல்லது 85 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் காரணத்தினால் அல்லது செலுத்துநர் வதிவற்ற ஆளொருவரென்னும் காரணத்தினால்) இறுதி பிடித்துவைத்தற்

செலுத்துகையொன்று பிடித்துவைத்தலுக்கு அமைவானதாக இல்லாதவிடத்து, செலுத்துகை தொடர்பில் 2 ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் கீழான பெறுநரின் வரிப் பொறுப்பானது, தவணைக் கொடுப்பனவு மற்றும் வரிமதிப்பீடு என்ற வகையில் செலுத்தப்படற்பாலதானதாக இருத்தல் வேண்டும். பகுதிகள் III மற்றும் IV என்பவற்றை ஏற்புடைய தாக்கும் நோக்கங்களுக்காக, பொறுப்பானது 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் கீழான பொறுப் பொன்றாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

இறுதியானதற்ற பிடித்து வைத்தல் வரிக்கான வரவு.

**89**. (1) இறுதிப் பிடித்தவைத்தற் செலுத்துகையொன்றாயிராத செலுத்துகையொன்றின் பிடித்துவைக்கப்பட்டவர், பின்வரும் ஏதேனும் வரியைச் செலுத்தியுள்ளாரெனக் கொள்ளப்படுதல் வேண்டும் -

(அ) இப்பகுதியின் கீழான செலுத்துகையிலிருந்து பிடித்து வைக்கப்பட்டது; அல்லது

(ஆ) பிரிவு 86 இன் (3) அல்லது (4) என்னும் உட்பிரிவுக் கிணங்க, செலுத்துகை தொடர்பில் செலுத்தப்பட்டது.

(2) உட்பிரிவு (3) இற்கமைய, பிடித்துவைக்கப்பட்டவொருவர், எந்த வரிமதிப்பீட்டாண்டுக்காக செலுத்துகை பெறப்பட்டதோ அந்த வரிமதிப்பீட்டாண்டுக்காக, (1) ஆம் உட்பிரிவின் கீழ் செலுத்தப்பட்டதாகக் கொள்ளப்படும் வரிக்குச் சமமான தொகையொன்றில் வரிவரவொன்றுக்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(3) வட்டிச்செலுத்துகையொன்று தொடர்பில் வதிவுள்ள கம்பெனி யொன்றாகவுள்ள பிடித்துவைக்கப்பட்டவரொருவர் -

(அ) உட்பிரிவு (1) இன் கீழ் செலுத்தப்பட்டதாகக் கொள்ளப் படுகின்ற ஏதேனும் வரிக்கான வரிவரவொன்றுக்கு உரித்துடையவராதலாகாது; அத்துடன்

(ஆ) அவரின் வருமானத்தைக் கணிப்பீடு செய்கையில் ஏதேனும் வரி பிடித்துவைக்கப்பட்ட பின்னர் பெறப்பட்ட தேறிய செலுத்துகையை உள்ளடக்குதல் வேண்டும்.

## பகுதி III : தவணைப்பணத்தின் மூலம் செலுத்தப்படற்பாலதான வரி

காலாண்டுத் தவணைப் பணத்தின் மூலம் வரி செலுத்துதல்.

**90.** (1) 'தவணைப்பணம் செலுத்துநரான' ஆளொருவர், மதிப்பீட்டாண்டொன்றின் போது அவர் வரிமதிப்பிடற்பாலதான வருமானத்தை பின்வரும் முறையில் பெற்றிருப்பின் அல்லது பெறுவதற்கு எதிர்பார்ப்பின், காலாண்டு தவணைப் பணங்களின் மூலம் வரியைச் செலுத்துதல் வேண்டும்.

(அ) வியாபாரம் அல்லது முதலீடு ஒன்றிலிருந்து, அல்லது

(ஆ) பிரிவு 83 இன் கீழ் வரியைப் பிடித்துவைப்பதற்கு தொழில்தருநர் தேவைப்படுத்தப்படாதவிடத்து, ஊழியம் ஒன்றிலிருந்து.

(2) தவணைப்பணம் செலுத்துநரொருவர் பின்வரும் சந்தர்ப் பங்களில் தவணைப்பணங்களைச் செலுத்துதல் வேண்டும் -

(அ) மாச்சு மாதத்தின் முப்பத்தோராம் நாளன்று முடிவடைகின்ற, பன்னிரண்டு மாத காலப்பகுதியைக் கொண்ட வரிமதிப்பீட்டாண்டில் முறையே ஓகஸ்ட், நவம்பர் மற்றும் பெப்புருவரி மாதங்களின் பதினைந்தாவது நாளன்று அல்லது அதற்கு முன்னர், அத்துடன் அடுத்துப்பின்வரும் வரிமதிப்பீட்டாண்டின் மே மாதத்தின் பதினைந்தாம் நாளன்று.

(ஆ) வேறு ஏதேனும் சந்தர்ப்பத்தில், வரிமதிப்பீட்டாண்டு ஒவ்வொன்றினதும் தொடக்கத்தில் ஆரம்பிக்கின்ற ஒவ்வொரு மூன்றுமாத காலப்பகுதியின் பின்னரான பதினைந்தாவது நாளன்று அல்லது அதற்கு முன்னர் அத்துடன், அது மூன்று மாத காலப்பகுதிகள் ஒன்றின் முடிவில் உடனிகழ்ந்தாலொழிய, இறுதித் தவணைப் பணமொன்றானது வரிமதிப்பீட்டாண்டு ஒவ்வொன் றின் முடிவின் பின்னர் பதினைந்தாவது நாளன்று அல்லது அதற்கு முன்னர்.

(3) உட்பிரிவுகள் (4) மற்றும் (5) இற்கமைய, வரிமதிப்பீட்டாண்டொன்றுக்கு தவணைப்பணம் செலுத்துநரொருவரால் செலுத்தப்படற்பாலதான வரியின் தவணைப்பணம் ஒவ்வொன்றின் தொகையையும் பின்வரும் வாய்பாட்டிற்கிணங்க கணிக்கப்படுதல் வேண்டும்:

'A' என்பது, $\frac{A-C}{B}$

வரிமதிப்பீட்டாண்டொன்றுக்கென தவணைப்பணம் செலுத்துநரினால் 91 ஆம் அல்லது 92 ஆம் பிரிவின் கீழ் செலுத்தப்படற்பாலதான நடைமுறை மதிப்பிடப்பட்ட வரியாகவுள்ளவிடத்து;

'B' என்பது, நடைமுறை தவணைப்பணம் உள்ளடங்கலாக மதிப்பீட்டாண்டுக்கென எஞ்சியுள்ள தவணைப்பணங்களின் எண்ணிக்கையாக உள்ளவிடத்து; அத்துடன்

'C' என்பது, பின்வரும் ஏதாவது பணத்தொகையாகவுள்ளவிடத்து –

(அ) இப்பிரிவின் கீழ் முன்னைய தவணைப்பணத்தின் மூலம் ஆளொருவரினால் வரிமதிப்பீட்டாண்டின் போது, ஆனால் தவணைப்பணம் செலுத்துகைக்கான உரிய தேதிக்கு முன்னர், செலுத்தப்பட்ட வரி.

(ஆ) ஆண்டுக்கான ஆளொருவரின் வருமானத்தைக் கணக்கிடுவதில் உள்ளடக்கப்பட்ட, அவ்வாளினால் பெறப்பட்ட செலுத்துகைகளிலிருந்து ஆண்டின் போது, தவணைப்பணம் செலுத்துகைக்கான உரிய தேதிக்கு முன்னர், பகுதி II இன் கீழ் பிடித்துவைக்கப்பட்ட வரி.

(இ) ஆண்டின்போது, ஆனால் தவணைப்பணம் செலுத்துகைக்காக உரிய தேதிக்கு முன்னர், பிடித்துவைத்தல் முகவரொருவரால் அல்லது பிடித்துவைக்கப்பட்டவர்

போன்றவாறான ஆளினால் ஆணையாளர் தலைமையதிபதிக்கு 86 ஆம் பிரிவின் (3) அல்லது (4) என்னும் உட்பிரிவுக்கிணங்க செலுத்தப்பட்ட வரி.

(4) ஆணையாளர் தலைமையதிபதியானவர், வர்த்தமானி அறிவித்தலொன்றின் மூலம் பின்வருவனவற்றை குறித்துரைக்கலாம் -

(அ) குறித்தவொரு வகுப்பினரான ஆட்கள் இப்பிரிவின்கீழ் செலுத்தப்படற்பாலதான தவணைப்பணங்களல்லாத வேறுவகையிலான தவணைப்பணங்களின் மூலம் அல்லது அதற்குப் பதிலாக வரியைச் செலுத்துதல் வேண்டும். என்று;

(ஆ) குறித்தவொரு வகுப்பினரரான ஒழுங்குபடுத்தப்பட்ட கழகங்கள் அல்லது ஏற்றங்கீகரிக்கப்பட்ட தொழில்கள் தொகுதியினர், இப்பிரிவின்கீழ் தவணைப்பணம் மூலம் அவ்வுறுப்பினர்களினால் செலுத்தப்படற்பாலதான வரியை அதன் உறுப்பினர்களிடமிருந்து சேகரித்தல் வேண்டும்;

(இ) எந்த நியதிகள் நிபந்தனைகள் மீது வரி சேகரிக்கப்பட வேண்டுமோ அந்த நியதிகள் நிபந்தனைகள்; அத்துடன்

(ஈ) கழகம் அல்லது தொகுதியினர் எந்த நியதிகள் மற்றும் நிபந்தனைகள் மீது வரிக்காக ஆணையாளருக்குக் கணக்குக்காட்டுதல் வேண்டுமோ அந்த நியதிகள் நிபந்தனைகள்.

(5) தவணைப்பணம் செலுத்துநரொருவர், ஆண்டுக்கான தவணைப்பணம் என்ற வகையில் செலுத்திய வரிக்குச் சமமான தொகையொன்றில் வரிமதிப்பீட்டாண்டொன்றுக்கான வரிவரவொன்றுக்கு உரித்துடையவராக்கப்படுதல் வேண்டும்.

**91.** (1) பிரிவு 90 இன் கீழ் வரிமதிப்பீட்டாண்டொன்றுக் கானதவணைப்பணம் செலுத்துநராகவுள்ள ஒவ்வோராளும், முதலாவது தவணைப்பணத்தின் வரி செலுத்துகைக்கான தேதி யளவில் ஆண்டுக்கான செலுத்தப்படற்பாலதான வரியின் மதிப் பீடொன்றை ஆணையாளர் தலைமையதிபதியிடம் கோப்பிடுதல் வேண்டும்.

செலுத்தப்படற் பாலதான மதிப்பிடப்பட்ட வரி பற்றிய கூற்று.

(2) உட்பிரிவு (1) இன் கீழான மதிப்பீடு, ஆணையாளர் தலைமையதிபதியினால் முரணாக ஆக்கப்படுகின்ற எவையே னும் அறிவுறுத்தல்களுக்கமைய –

(அ) குறித்துரைக்கப்படுகின்ற முறையிலும் படிவத்திலும் இருத்தல் வேண்டுமென்பதுடன் பின்வருவனவற் றையும் எடுத்துக்காட்டுதல் வேண்டும்.

(i) ஒவ்வோர் ஊழியம், வியாபாரம் மற்றும் முதலீட்டிலிருந்து வரிமதிப்பீட்டாண்டுக்கான ஆளொருவரின் வரிமதிப்பிடப்படற்பாலதான வருமானமும் அந்த வருமானத்தின் மூலமும்;

(ii) ஆண்டுக்கான ஆளொருவரின் வரிசெலுத்தப் படற்பாலதான வருமானமும் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் கீழ் அந்த வருமானம் தொடர்பில் செலுத்தப்படற் பாலதான வரியும்; அத்துடன்

(iii) ஆணையாளர் தலைமையதிபதி குறித்து ரைக்கக்கூடிய எவையேனும் வேறு தகவல்கள்; அத்துடன்

(ஆ) ஆணையாளர் தலைமையதிபதி குறித்துரைக்கக்கூடிய அதனுடன் இணைக்கப்பட்டுள்ள வேறு எவையேனும் தகவல்கள்.

(3) இப்பிரிவின் (6) ஆம் உட்பிரிவிற்கும் அத்துடன் 92 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவிற்கும் அமைய, (2) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் உட்பந்தி (ii) இல் குறிப்பீடு செய்யப்பட்ட வரியானது, வரிமதிப்பீட்டாண்டுக்கென செலுத்தப்படற்பாலதான அவ்வாளின் மதிப்பிடப்பட்ட வரியாக இருத்தல் வேண்டும்.

(4) உட்பிரிவு (2) இன் (அ) என்னும் பந்தியின் (ii) ஆம் உட்பந்தியின் கீழ் வரிமதிப்பீட்டாண்டொன்றுக்கென செலுத்தப்படற்பாலதான வரியை மதிப்பிடுவதில், ஆளொருவர் 80 ஆம் பிரிவின் கீழ் கோரப்படவேண்டிய வெளிநாட்டு வரிவரவொன்றை கவனத்திலெடுக்கலாம். ஆயின், அவ்வாறு செய்வதில் ஆளொருவர், வரியைச் செலுத்தியிருந்தால் அல்லது ஆண்டின்போது வரியானது செலுத்தப்படுமென்று நியாயமானளவுக்கு மதிப்பிட்டிருந்தால் மாத்திரம் அவ்வாள் வெளிநாட்டு வருமான வரியை கணக்கிலெடுக்கலாம்.

(5) உட்பிரிவு (1) இன் கீழான தவணைப்பணம் செலுத்துநரொருவரின் மதிப்பீடானது, அவ்வாள் ஆணையாளர் தலைமையதிபதியிடத்தில் மீளாய்வு மதிப்பீடொன்றை கோப்பிட்டாலொழிய, வரிமதிப்பீட்டாண்டு முழுவதற்குமென வலுவிலிருத்தல் வேண்டும்.

(6) உட்பிரிவு (5) இன் கீழ் ஆளொருவரால் கோப்பிடப்பட்ட மீளாய்வுக்குட்பட்ட மதிப்பீடொன்று, ஆணையாளர் தலைமையதிபதியிடம் அம் மீளாய்வுக்குட்பட்ட மதிப்பீடு கோப்பிடப்பட்ட தேதியின் பின்னர், 90 ஆம் பிரிவின் கீழ் செலுத்தப்படற்பாலதான தவணைப்பணங்களைக் கணக்கிடும் நோக்கங்களுக்காக மாத்திரம் வரிமதிப்பீட்டாண்டுக்கென செலுத்தப்படற்பாலதான அவ்வாளின் மதிப்பிடப்பட்ட வரியாக இருத்தல் வேண்டும்.

செலுத்தப்படற்பாலதான மதிப்பிடப்பட்ட வரிபற்றிய கூற்று தேவைப்படாது.

**92.** (1) பிரிவு 91 இன் கீழான மதிப்பீடொன்றை தவணைப்பணம் செலுத்துநரொருவர் அல்லது ஒரு வகுப்பினரான தவணைப்பணம் செலுத்துநர்கள் சமர்ப்பிக்கத் தேவையில்லை என ஆணையாளர் தலைமையதிபதி எழுத்திலான அறிவித்தலொன்றின் மூலம் குறித்துரைக்கலாம்.

(2) தவணைப்பணம் செலுத்துநரொருவர் (1) ஆம் உட்பிரிவின் காரணமாக மதிப்பீடொன்றைச் சமர்ப்பிக்கத் தேவைப்படாத விடத்து, ஆணையாளர் தலைமையதிபதி பின்வருவனவற்றைச் செய்தல் வேண்டும் -

(அ) முன்னைய வரிமதிப்பீட்டாண்டொன்றுக்கென செலுத்தப்படற்பாலதான வரியை அடிப்படையாகக் கொண்டிருக்கக்கூடிய, வரிமதிப்பீட்டாண்டொன்றுக்கென செலுத்தப்படற்பாலதான ஆளொருவரின் மதிப்பிடப்பட்ட வரியின் மதிப்பிடலொன்றை உயர்வொன்றுடன் ஆக்குதல்.

(ஆ) ஆணையாளர் தலைமையதிபதியின் மதிப்பிடலையும் அத்துடன் எந்த முறையில் அது கணிப்பிடப்பட்டதோ அந்த முறையையும் குறிப்பிட்டு எழுத்திலான அறிவித்தலொன்றை தவணைப்பணம் செலுத்துநருக்குச் சேர்ப்பித்தல்.

(3) பிரிவு 90 இன் நோக்கத்திற்காக (2) ஆம் உட்பிரிவின் கீழ் அறிவித்தலொன்றை ஆணையாளர் தலைமையதிபதி அனுப்புகின்றவிடத்து, மதிப்பீட்டாண்டுக்காக ஆளினால் செலுத்தப்படற்பாலதான மதிப்பீட்டுவரியானது ஆணையாளர் தலைமையதிபதியினால் மதிப்பிடப்பட்ட தொகையாகவிருத்தல் வேண்டும்.

## பகுதி IV : வரிமதிப்பீட்டின் மீது செலுத்தப்படற்பாலதான வரி

வருமானம் மற்றும் மூலதன ஈட்டுகைகள் பற்றிய விபரத்திரட்டு.

**93.** (1) பிரிவு 94 மற்றும் உட்பந்தி (2) என்பவற்றுக்மைய, ஒவ்வோராளும் ஒவ்வொரு வரிமதிப்பீட்டாண்டும் முடிவடைந்த பின்னர் எட்டு மாதங்களுக்குப்பிந்தாமல் ஆணையாளர் தலைமையதிபதியிடத்தில் ஆண்டுக்கான வருமானம் பற்றிய விபரத்திரட்டை கோப்பிடுதல் வேண்டும்.

(2) வரிமதிப்பீட்டாண்டொன்றுக்கான ஆளொருவரின் வருமானம் பற்றிய விபரத்திரட்டொன்று ஆணையாளர் தலைமையதிபதியினால் ஆக்கப்படுகின்ற எவையேனும் அறிவுறுத்தல்களுக்கமைய —

(அ) அவரால் குறித்துரைக்கப்பட்ட முறையிலும் படிவத்திலும் இருத்தல் வேண்டும் என்பதுடன் பின்வரும் விபரங்களைக் கொடுத்துதவுதலும் வேண்டும்:-

(i) ஒவ்வோர் ஊழியம், வியாபாரம் மற்றும் முதலீட்டிலிருந்து வரிமதிப்பீட்டாண்டுக்கான ஆளொருவரின் வரிமதிப்பிடற்பாலதான வருமானமும் அவ் வருமானத்தின் மூலமும்;

(ii) ஆண்டுக்கான ஆளொருவரின் வரி செலுத்தப்படற்பாலதான வருமானமும் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் கீழ் அவ் வருமானம் தொடர்பில் செலுத்தப்படற்பாலதான வரியும்;

(iii) எந்த பிடித்துவைத்தல், தவணைப்பணம் அல்லது மதிப்பீட்டுக்காக 89 ஆம் அல்லது 90 ஆம் பிரிவின் கீழ் வரிவரவொன்று உள்ளதோ, அந்த பிடித்துவைத்தல், தவணைப்பணம் அல்லது மதிப்பீடு மூலம் ஆண்டுக்காக அவ்வாளினால் செலுத்தப்பட்ட ஏதேனும் வரி;

(iv) உட்பந்தி (iii) இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஏலவே செலுத்தப்பட்ட வரியைக் குறைத்து, (ii)ஆம் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட வரியின் பணத்தொகையாகக் கணக்கிடப்பட்டு, ஆண்டுக்காக செலுத்தப்படுவதற்கு எஞ்சியுள்ள வரியின் தொகை;

(v) ஆணையாளர் தலைமையதிபதி குறித்துரைக்கக்கூடிய எவையேனும் வேறு தகவல்கள்;

(ஆ) பின்வருவன அதனுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்:-

(i) ஆண்டின்போது ஆளொருவரினால் பெற்றுக் கொள்ளப்பட்ட செலுத்துகைகள் தொடர்பில் 87ஆம் பிரிவின் கீழ் அவ்வாளுக்கு வழங்கப் பட்ட எவையேனும் பிடித்துவைத்தற் சான்றி தழ்கள்; அத்துடன்

(ii) ஆணையாளர் தலைமையதிபதி குறித்துரைக் கக்கூடிய எவையேனும் வேறு தகவல்கள்.

(3) முதலீட்டுச் சொத்தொன்றின் தேறிப்பெறப்படுவதிலி ருந்தான ஈட்டுகையொன்றை உள்ளடக்கியுள்ள வரிமதிப் பிடப்படற்பாலதான வருமானத்தைக் கொண்டுள்ள ஒவ்வோ ராளும், அந்த தேறிப்பெறப்படுதலின் பின்னர் ஒரு மாதத்துக்குப் பிந்தாமல் ஆணையாளர் தலைமையதிபதியிடத்தில் மூலதன ஈட்டுகைகள் பற்றிய வரி விபரத்திரட்டொன்றைக் கோப்பிடுதல் வேண்டும்.

(4) ஆளொருவரின் மூலதன ஈட்டுகைகள் பற்றிய வரிவிபரத் திரட்டொன்று, ஆணையாளர் தலைமையதிபதியினால் முரணாக ஆக்கப்படுகின்ற எவையேனும் அறிவுறுத்தல்களுக்கமைய —

(அ) பின்வருவனவற்றை எடுத்துக்காட்டி ஆணையாளர் தலைமையதிபதியினால் குறித்துரைக்கப்படுகின்ற முறையிலும் படிவத்திலும் இருத்தல் வேண்டும்:-

(i) அந்த ஈட்டுகையின் கணக்கிடுதல் உள்ளடங் கலாக, முதலீட்டுச் சொத்தொன்றின் தேறிப் பெறப்படுவதிலிருந்தான ஈட்டுகையொன்றை உள்ளடக்கியுள்ள ஆளொருவரின் வரிமதிப் பிடற்பாலதான வருமானம்;

(ii) அந்த ஈட்டுகை தொடர்பில் ஆளொருவரின் வரிசெலுத்தப்படற்பாலதான வருமானமும் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் கீழ் அதன் மீது செலுத்தப் படற்பாலதான வரியும்;

(iii) எந்த ஈட்டுகைக்கு 90 ஆம் பிரிவின் கீழான வரி வரவொன்று உள்ளதோ அந்த ஈட்டுகைக்கு ஏற்றிக்கூறப்படற்பாலதான தவணைப்பணம் மூலம் ஆண்டுக்கென அவ்வாளினால் செலுத் தப்பட்ட ஏதேனும் வரி; அத்துடன்

(iv) ஆணையாளர் தலைமையதிபதி குறித்துரைக் கக்கூடிய வேறு எவையேனும் தகவல்கள்.

வருமானம் பற்றிய விபரத்திரட்டு தேவைப் படாதவை.

**94.** (1) உட்பிரிவு (2) இற்கமைய, வரிமதிப்பீட்டாண்டொன் றுக்கான 93 ஆம் பிரிவின் கீழான வருமானம் பற்றிய விபரத் திரட்டொன்று பின்வருவோரிடமிருந்து தேவைப்படுத்தலாகாது—

(அ) எந்த –

(i) வதிவுள்ள தனியாளொருவர், 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பந்தியின் (அ) என்னும் பந்தியின் கீழ் ஆண்டுக்கென செலுத்தப்படற்பாலதான வரியைக் கொண்டிருக்கவில்லையோ, அந்த வதிவுள்ள தனியாளொருவர்; அல்லது

(ii) வதிவுள்ள தனியாளொருவரின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பந்தியின் (அ) என்னும் பந்தியின் கீழ் ஆண்டுக்கென செலுத்தப்படற்பாலதான வரி, 83 ஆம் பிரிவின் கீழான பிடித்துவைத்தலுக்கமைய ஊழியமொன்றிலிருந்தான வருமானத்துடன் பிரத்தியேகமாகத் தொடர்புபடுகின்றதோ, அந்த வதிவுள்ள தனியாளொருவர்; அல்லது

(ஆ) பிரிவு 2 இன் (1) ஆம் உட்பந்தியின் (அ) என்னும் பந்தியின் கீழ் ஆண்டுக்கென செலுத்தப்படற்பாலதான வரியைக் கொண்டிராதவரான வதிவற்ற ஆளொருவர்.

(2) உட்பிரிவு (1) எது எவ்வாறிருப்பினும், ஆணையாளர் தலைமையதிபதி, விபரத்திரட்டொன்றைக் கோப்பிடுமாறு ஆளொருவரைத் தேவைப்படுத்தி எழுத்துமூலமான அறிவித்தலொன்றை ஆளொருவருக்குச் சேர்ப்பிக்கலாம்.

(3) உட்பிரிவு (1) எது எவ்வாறிருப்பினும், ஆளொருவர் தேவைப்படுத்தப்பட்டிராத போதிலுங்கூட, அவர் ஆண்டின் போது ஊழியமொன்றை இல்லாதொழித்துள்ளவிடத்து, விபரத்திரட்டொன்றைக் கோப்பிடுவதை அவ்வாள் தேர்ந்தெடுக்கலாம்.

**95**. பிரிவு 93 இன் கீழ் கோப்பிடப்பட்ட வருமானம் பற்றிய விபரத்திரட்டொன்று அல்லது மூலதன ஈட்டுகைகள் வரி பற்றிய விபரத்திரட்டொன்று சுயவரிமதிப்பீடொன்றாயமைதல் வேண்டும். வரிமதிப்பீடு.

**96**. (1) நம்பிக்கைப் பொறுப்பொன்றின் நம்பிக்கைப் பொறுப்பாளரொருவரும், அந்த ஈட்டுகை மீதான வரிசெலுத்துகை உள்ளடங்கலாக முதலீட்டுச்சொத்தொன்றின் தேறிப்பெறப்படுதலிலிருந்தான ஈட்டுகையொன்றை உள்ளடக்கியுள்ள அதனுடைய வரிமதிப்பிடற்பாலதான வருமானம் தொடர்பில், நம்பிக்கை பொறுப்பு மீது இச்சட்டத்தினால் விதிக்கப்பட்ட எவையேனும் கடமைகள் அல்லது கடப்பாடுகளைப் புரிவதற்குப் பொறுப்புடையவராதல் வேண்டும். முதலீட்டுச் சொத்துக்கள் தேறிப்பெறப் படுவதன் மீது பங்குடைமை களினாலும் நம்பிக்கைப் பொறுப்புக் களினாலும் வரி செலுத்தப் படுதல்.

(2) பங்குடைமை ஒன்றின் பங்காளரொவ்வொருவரும், அந்த ஈட்டுகை மீதான வரிச்செலுத்துகை உள்ளடங்கலாக முதலீட்டுச் சொத்தொன்றின் தேறிப்பெறப்படுவதிலிலிருந்தான ஈட்டுகையொன்றை உள்ளடக்கியுள்ள அதனுடைய வரிமதிப்பிடற்பாலதான வருமானம் தொடர்பில், பங்குடைமை மீது இச்சட்டத்தினால் விதிக்கப்பட்ட எவைனேும் கடமைகள் அல்லது கடப்பாடுகளைப் புரிவதற்கு பொறுப்புடையவராதல் வேண்டும்.

(3) நம்பிக்கைப்பொறுப்பொன்று ஒன்றுக்குமேற்பட்ட நம்பிக்கைப் பொறுப்பாளரைக் கொண்டுள்ளபோது, அந்நம்பிக்கைப் பொறுப்பின் நம்பிக்கைப்பொறுப்பாளர் மீது இப்பிரிவின்கீழ் விதிக்கப்பட்ட கடமைகளும் கடப்பாடுகளும் அந்நம்பிக்கைப் பொறுப்பாளர்களுக்குக் கூட்டாகவும் தனித்தனியாகவும் ஏற்புடையதாதல் வேண்டும். ஆனால், அவை அவர்களுள் எவரினாலும் நிறைவேற்றப்படலாம்.

(4) பங்குடைமையொன்றின் பங்காளர்கள் மீது இப்பிரிவின் கீழ் விதிக்கப்பட்ட கடமைகளும் கடப்பாடுகளும் அப்பங்காளர் களுக்குக் கூட்டாகவும் தனித்தனியாகவும் ஏற்புடையதாதல் வேண்டும். ஆனால், அவை அவர்களுள் எவரினாலும் நிறைவேற்றப்படலாம்.

(5) மரணசாதனத்தத்துவக்காரரொருவர், மரணித்த ஆளொரு வர் தொடர்பில் அந்த ஈட்டுகை மீதான வரிசெலுத்துகை உள்ளடங்கலாக முதலீட்டுச் சொத்தொன்றின் தேறிப்பெறப்படு வதிலிலிருந்தான ஈட்டுகையொன்றை உள்ளடக்கியுள்ள அவரது வரிமதிப்பிடப்படற்பாலதான வருமானம் தொடர்பாக இச்சட்டத் தினால் விதிக்கப்பட்ட எவையேனும் கடமைகளையும் கடப்பாடு களையும் புரிவதற்கு பொறுப்புடையவராதல் வேண்டும்.

## பாகம் II

## அத்தியாயம் IX

### நிருவாக ஏற்பாடுகள்

### பகுதி I : இச்சட்டத்தின் நிருவாகம்

**97**. (1) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, ஆணையாளர் தலைமையதிபதியொருவர், அவசியப்படக்கூடியவாறான அத்தகைய எண்ணிக்கையிலான பிரதி ஆணையாளர் தலைமை யதிபதிகள், சிரேட்ட ஆணையாளர்கள், ஆணையாளர்கள், அலுவலர்கள்.

சிரேட்ட பிரதி ஆணையாளர்கள், பிரதி ஆணையாளர்கள், உதவி ஆணையாளர்கள் அத்துடன் வேறு வரி அலுவலர்கள் ஆகியோர் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டினால் ஆணையாளர் தலைமையதிபதிக்கு அளிக்கப்பட்டுள்ள அல்லது அவர்மீது சுமத்தப்பட்டுள்ள அல்லது அவருக்குக் குறித்தொதுக்கப் பட்டுள்ள ஏதேனும் தத்துவத்தை, கடமையை அல்லது பணியைப் பிரயோகிக்கின்ற அல்லது புரிகின்ற அல்லது நிறைவேற்றுகின்ற வரி அலுவலரொருவர் எல்லா நோக்கங்களுக்காகவும் அத்தத்துவத்தை, கடமையை அல்லது பணியைப் பிரயோகிப் பதற்கு அல்லது புரிவதற்கு அல்லது நிறைவேற்றுவதற்கு முரணானது என எண்பிக்கப்படும் வரை ஆணையாளர் தலைமையதிபதியினால் அதிகாரமளிக்கப்பட்டவராகக் கருதப் படுதல் வேண்டும்.

(3) ஆணையாளர் தலைமையதிபதி, திணைக்களத்தின் அலுவலரொருவர் அல்லது இச்சட்டத்தின் கீழான எவையேனும் பணிகளைப் புரிவதற்கு ஆணையாளர் தலைமையதிபதியினால் அதிகாரமளிக்கப்பட்ட வேறு எவரேனுமாள், அப்பணிகளை நிறைவேற்றுவதில் ஆளொருவரினால் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட ஏதேனும் செயலுடன் தொடர்பிலான குடியியல் வழக்கு நடவடிக்கையில் தனிப்பட்ட ரீதியில் பொறுப்பாக்கப் படுதலாகாது.

(4) ஆணையாளர் தலைமையதிபதி, இச்சட்டத்தின் நோக்கங் களுக்காக தோதானதென அவர் கருதுகின்றவாறான அத்தகைய படிவங்களை குறித்துரைக்கலாம்.

தத்துவங்களைக் கையளித்தல்.

**98.** (1) ஆணையாளர் தலைமையதிபதி, இந்த கையளித்தற் தத்துவத்தைத் தவிர, இச்சட்டத்தினால் அவருக்கு அளிக்கப் பட்டுள்ள அல்லது அவர் மீது சுமத்தப்பட்டுள்ள தத்துவ மொன்றை அல்லது கடமையை திணைக்களத்தின் அலுவல ரொருவருக்குக் கையளிக்கலாம்.

(2) ஆணையாளர் தலைமையதிபதி, ஒன்றில் குறித்தவொரு தனியாளான வரி அலுவலருக்கு அல்லது திணைக்களத்தினுள் குறித்தவொரு பதவியில் இருக்கின்றவருக்கு தத்துவமொன்றை அல்லது கடமையைக் கையளிக்கலாம்.

(3) ஆணையாளர் தலமையதிபதி குறித்துரைக்கக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கமைய, அவர் பெயர்குறித்து நியமிக்கக்கூடியவாறான அத்தகைய வேறு ஆளுக்கு, ஆணையாளர் தலைமையதிபதிக்குக் கொடுத்துதவப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்படும் ஏதேனும் தகவல், வெளிப்படுத்துகை அல்லது ஆவணம் வழங்கப்படுவதற்கு வேண்டும் என ஏற்பாடு செய்யலாம்.

(4) இப்பிரிவின் கீழான கையளிப்பொன்று, ஆணையாளர் தலைமையதிபதி கையளிக்கப்பட்ட தத்துவம், கடமை அல்லது பணியொன்றைப் புரிவதிலிருந்து அவரைத் தடுத்தலாகாது.

(5) வரி அலுவலரொருவர், இச்சட்டத்தின் கீழ் பின்வரும் தத்துவமொன்றைப் பிரயோகித்தல் அல்லது கடமையை அல்லது பணியைப் புரிதலாகாது –

(அ) எவ்வாள் தொடர்பில் வரி அலுவலர் தனிப்பட்ட, குடும்ப, தொழில்சார், உயர்தொழில், ஊழியம் அல்லது நிதிசார் உறவொன்றைக் கொண்டுள்ளாரோ அல்லது கொண்டிருந்தாரோ அவ்வாளுடன் தொடர்புடையவை; அல்லது

(ஆ) வேறுவகையில் அக்கறை முரண்பாடொன்றைக் தோற்றுவிக்கின்றவை.

(6) ஆணையாளர் தலைமையதிபதி, இப்பிரிவின் கீழான கையளித்தலொன்றை, எந்த நேரத்திலும், எழுத்துமூலம் திருத்தலாம் அல்லது இல்லாதொழிக்கலாம்.

**99.** (1) நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சர் (இதனகத்துப் பின்னர் 'நிதியம்' எனக் குறிப்பீடு செய்யப்படும்) உண்ணாட்டரசிறை ஊக்குவிப்பு நிதியத்தைத் தாபித்தல் வேண்டும். *உண்ணாட்டர சிறை ஊக்குவிப்பு நிதியம்.*

(2) ஒவ்வோர் ஆண்டு தொடர்பிலும் நிதியத்தின் நோக்கத்துக்காக ஆண்டுதோறும் பாராளுமன்றத்தினால் ஒதுக்கீடு செய்யப்படக் கூடியவாறான அத்தகைய பணத்தொகைகள் நிதியத்திற்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

(3) பின்வருவன நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்:-

(அ) அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் திட்டத்திற்கிணங்க திணைக்களத்தின் அலுவலர்களின் நலனுக்குத் தேவைப்படும் எல்லாப் பணத்தொகைகளும்; அத்துடன்

(ஆ) ஆணையாளர் தலைமையதிபதியால் நிருவகிக்கப்படும் சட்டம் எதனதும் நிருவகித்தல் திறமையை உறுதிப்படுத்துவதற்காக, அமைச்சரால் அங்கீகரிக்கப்படக் கூடியவாறான அத்தகைய திட்டத்திற்கிணங்க திணைக்களத்தின் அலுவலர்களின் எவரேனும் வகுப்பினருக்கான அல்லது வகுதியினருக்கான தொகுதி ஊக்குவிப்புப் படிகள்.

(4) ஆணையாளர் தலைமையதிபதி, ஒழுங்குவிதிகளினால் விதித்துரைக்கப்பட்ட நடவடிக்கைமுறைக்கிணங்க நிதியத்தை நிருவகித்தல் வேண்டும்.

**100.** (1) உட்பிரிவு (3), (4), (5) அல்லது (7) இல் ஏற்பாடு செய்யப்பட்டவை தவிர, இச்சட்டத்தின் கீழ் கடமையொன்றைக் கொண்டுள்ள அல்லது இச்சட்டத்தின் நிருவாகத்தில் தொழிலுக்கு அமர்த்தப்பட்டுள்ள ஒவ்வோராளும், குறிப்பாக வரிசெலுத்துநரொருவர் தொடர்பில் அலுவலகமுறையான தகைமையொன்றில் ஆளொருவர் பெற்றிருக்கின்ற எல்லா *அந்தரங்கத் தன்மை.*

தகவல்களும் ஆவணங்களும் இரகசியமானதும் அந்தரங்கத் தன்மையுடையதுமெனக் கருதுதல் வேண்டும் என்பதுடன், அத் தகவல்களை பின்வரும் ஆட்களுக்கு மாத்திரம் வெளிப் படுத்தலாம்:-

(அ) திணைக்களத்தின் ஏனைய முகவர்களுக்கும் ஊழியர்களுக்கும் அத்துடன், அவற்றின் கடமைகளை நிறைவேற்றும்போதும் அதன் நோக்கத்திற்கெனவும் சுங்கத் திணைக்களத்திற்கு;

(ஆ) திணைக்களத்தின் மேற்பார்வையை நிறைவேற்றும் போது அதன் நோக்கத்துக்கெனவும், நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சருக்கு;

(இ) அலுவலக ரீதியான கடமைகளின் நோக்கங்களுக்கென அத்தகைய வெளிப்படுத்துகை அவசியமாகவுள்ள போது மாத்திரம், கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு அல்லது கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆளுக்கு;

(ஈ) குறித்தவோர் அதிகாரியுடன் செய்துகொள்ளப்பட்ட சர்வதேச உடன்படிக்கையொன்றுக்கிணங்க, வெளி நாடொன்றின் வரி அதிகாரிகளுக்கு;

(உ) எவையேனும் குடியியல் அல்லது குற்றவியல் நடவடிக்கைகளின் அல்லது சட்டத்துறைத் தலைமை யதிபதியின் அபிப்பிராயத்தை அல்லது மதியுரையைப் பெற்றுக்கொள்ளும் நோக்கத்துக்கென சட்டத்துறைத் தலைமையதிபதிக்கு;

(<u>ஊ</u>) வழக்கு நடவடிக்கையொன்றில் தவறொன்றுக்கான வரிசெலுத்துநரொருவரின் வரிப்பொறுப்பை அல்லது பொறுப்புடைமையை நிறுவுவதற்கு, நீதிமன்ற மொன்றுக்கு;

(எ) அலுவலகரீதியான கடமைகளின் நோக்கங்களுக்கென அத்தகைய வெளிப்படுத்துகை அவசியமாகவுள்ள போது மாத்திரம், காணிச்சீர்திருத்த ஆணைக்குழுவுக்கு;

(ஏ) செலவாணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் மீறுகைகளுக்கு குற்றவழக்குத்தொடுக்கும் நோக்கத்திற்கென செலவாணிக் கட்டுப்பாட்டாளருக்கு;

(ஐ) எவரேனுமாள் அல்லது எவரேனுமாளின் வாழ்க்கைத் துணை அல்லது பிள்ளையின் அலுவல்கள் பற்றிய புலனாய்வொன்றில், விசாரணை ஆணைக்குழச் சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவொன்றுக்கு;

(ஒ) இலஞ்சம் அல்லது ஊழல் சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கென 1994 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக் குழுச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட ஆணைக்குழுவுக்கு;

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் தகவல்களை வெளிப்படுத்துவதற்கு அனுமதிக்கப்பட்டவரான ஆளொருவர், எந்தக்குறிக்கோளை எய்துவதற்கு வெளிப்படுத்துகை அனுமதிக்கப்பட்டுள்ளதோ அந்தக்குறிக்கோளை எய்துவதற்கு அவசியமான குறைந்தபட்ச அளவுவரை தவிர இரகசியத்தைப் பேணிக்காத்தல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின் கீழ் தகவல்களைப் பெறுகின்றவரான ஆளொருவர், எந்தக்குறிக்கோளை எய்துவதற்கு அவசியமான ஆகக்குறைந்த குறைந்த அளவுவரை தவிர இரகசியத்தைப் பேணுதல் வேண்டும்.

(4) ஆணையாளர் தலைமையதிபதி, வரிசெலுத்துநராக அல்லது வரிச்செலுத்துநரின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியாக இருப்பதற்கு கோரும் ஆளொருவருக்கு, அக்கோரிக்கையின்

உண்மைத்தன்மை பற்றி நியாயமானளவு உறுதியைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் மாத்திரம், வரிசெலுத்துநரொருவரின் அலுவல்கள் பற்றிய தகவல்களை வெளிப்படுத்தலாம்.

(5) வரிச்செலுத்துநரொருவர் பற்றிய தகவல்கள், அவ்வரி செலுத்துநரின் எழுத்துமூல சம்மதத்துடன் வேறோராளுக்கு வெளிப்படுத்தப்படலாம்.

(6) இப்பிரிவினால் விதிக்கப்பட்ட இரகசியம் தொடர்பான கடப்பாடு, எவரேனும் ஆளொருவர் இச்சட்டத்தின் ஏற்பாடு களின் கீழ் நியமிக்கப்படவுள்ளமை அல்லது அவ்வேற்பாடுகளை நிறைவேற்றுவதில் தொழிலுக்கமர்த்தப்படவுள்ளமை இல்லா தொழிதல் எது எவ்வாறிருப்பினும், அவ்வாள் தொடர்பில் ஏற்புடையதாதல் தொடர்ந்திருத்தல் வேண்டும்.

(7) ஆணையாளர் தலைமையதிபதி, பின்வரும் வரி செலுத்து நர்களின் பெயர்ப்பட்டியலொன்றை வெளியிடலாம் -

(அ) பிரிவு 152 இன் கீழ் வரிசெலுத்தத் தவறுகின்றவர்கள்;

(ஆ) தேவைப்படுத்தப்பட்டவாறாக விபரத்திரட்டொன்றைக் கோப்பிடுவதற்குத் தவறியவர்; அல்லது

(இ) XVII ஆம் அத்தியாயத்தின்கீழ் எவர் மீது குறை கூற்றுக்கான தண்டனையொன்று விதிக்கப்பட்டதோ, அவர்.

**101.** ஆணையாளர் தலைமையதிபதி எந்த எவரேனும் தனியாள் வேறோராளினால் வெளியிடப்படாததான வருமானத்தை வரிமதிப்பீடு செய்து வரியைச் சேகரிப்பதற்கு வழிவகுக்கின்ற தகவலை அளிக்கின்றாரோ, அந்த எவரேனும் தனியாளுக்கு அந்த நோக்கத்திற்கென பாராளுமன்றத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்ட பணத்தொகையிலிருந்து அவர் நியாய மானதெனக் கருதும் சூழ்நிலைகளில் ஒரு தொகையைக் கொடுக் கலாம். தகவலளிப் போர்கள்.

## பகுதி II : வரிசெலுத்துநர் பதிவும் வரிசெலுத்துநர் இனங்காணல் இலக்கங்களும்

***102***. (1) வரிமதிப்பீட்டாண்டொன்றுக்கான வருமான விபரத் திரட்டொன்றை கொடுத்துதவுவதற்குப் பொறுப்புள்ளவரும், அத்துடன் ஏலவே பதிவு செய்திராதவருமான, ஒவ்வோராளும் அவ்வாண்டுக்கான அடிப்படைக் காலப்பகுதி முடிவடைந்த பின்னர் முப்பது நாட்களைவிட பிந்தாமல் ஆணையாளர் தலைமையதிபதியிடம் பதிவுசெய்துகொள்ளுதல் வேண்டும். பதிவு.

(2) இப்பிரிவின்கீழ் பதிவுசெய்து கொள்ளும் ஆளொருவர், ஆணையாளர் தலைமையதிபதியினால் குறித்துரைக்கப்பட்ட படிவத்திலும் முறையிலும் பதிவுசெய்வதற்கான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன், ஆணையாளர் தலைமையதிபதியினால் தேவைப்படக்கூடியவாறான அத்தகைய தகவல்களையும் வழங்குதல் வேண்டும்.

(3) அமைச்சர், இப்பிரிவின் கீழ் பதிவுசெய்து கொள்வதற்குத் தேவைப்படுத்தப்படுகின்ற மேலதிக ஆட்களின் வகுப்புக்களை ஆணையாளர் தலைமையதிபதியின் சம்மதத்துடன் குறித்துரைக்கலாம்.

(4) ஆணையாளர் தலைமையதிபதி, பதிவு செய்து கொள்வதற்கான தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்திருக்கின்றாரென அவர் கருதுகின்ற எவரேனும் ஆளை பதிவுசெய்து, ('இதனகத்துப்பின்னர் 'வ.இ.இ.' எனக்குறிப்பீடு செய்யப்படும்) வரிசெலுத்துநர் இனங்காணல் இலக்கமொன்றை அவ்வாளுக்கு குறித்தொதுக்குதல் வேண்டும்.

(5) பதிவுசெய்வதற்காக விண்ணப்பித்திருந்த ஆளொருவரைப் பதிவுசெய்வதற்கு ஆணையாளர் தலைமையதிபதி மறுக்கின்றவிடத்து, அம்முடிவு எடுக்கப்பட்டதன் பதினான்கு நாட்களுக்குள், காரணங்களுடனான எழுத்துமூல மறுப்பறிவித்தலை அவர் அவ்வாளுக்குச் சேர்ப்பித்தல் வேண்டும்.

வரிசெலுத்துநர் இனங்காணல் இலக்கங்கள்.

**103.** (1) ஆணையாளர் தலைமையதிபதி வரிசெலுத்துநர் ஒவ்வொருவருக்கும் தனித்துவமான வ.இ.இ ஒன்றை குறித்தொதுக்குதல் வேண்டும் என்பதுடன், அவ்விலக்கம் இச்சட்டத்தின் நிருவாகத்துடன் தொடர்புடைய எல்லாக் கடிதத் தொடர்புகளிலும் பயன்படுத்தப்படுதல் வேண்டும்.

(2) வரிசெலுத்துநரொருவராகயிராத ஆனால் பின்வருவோருள் ஒருவராகவுள்ள ஆளொருவருக்கு ஆணையாளர் தலைமையதிபதி வ.இ.இ ஒன்றைக் குறித்தொதுக்கலாம் -

(அ) வரிக்கு அமைவாகவுள்ள செலுத்துகைகளைச் செய்யும் பெறுகை;

(ஆ) வரி விபரத்திரட்டொன்றைக் கோப்பிடுவதற்கு தேவைப் படுத்தப்படுகின்ற அல்லது தேவைப்படுத்தப்படக் கூடிய ஆள்;

(இ) இச்சட்டத்தின் கீழ் அல்லது இச்சட்டத்தின் கீழ் ஆக்கப் பட்ட ஒழுங்குவிதியின் கீழ் வேறோராளுக்கு வ.இ.இ ஒன்றைக் கொடுத்துதவ தேவைப்படுத்தப்படுகின்ற ஆள்; அல்லது

(ஈ) பிரிவு 102 இன் (3) ஆம் உட்பிரிவின் கீழ் பதிவு செய்வதற்குத் தேவைப்படுத்தப்படும் ஆள்.

(3) குறித்துரைக்கப்பட்ட அளவுக்கு, ஆளொருவர்-

(அ) இச்சட்டம் எவ் வரி தொடர்பில் ஏற்புடையதாகின்றதோ அவ்வரி தொடர்பான ஆவணங்கள் மீது ஆளொருவரின் வ.இ.இ இனை உட்படுத்தப்படுவதற்கு தேவைப் படுத்தப்படுகிறார்; அத்துடன்

(ஆ) இலக்கத்தைக் கொடுத்துதவும் ஆளொருவர் தொடர்பாக, வரித் தகவல்களைக் கொடுத்துதவுவதற்குத் தேவைப்படுத்தப்படுகின்ற ஆளொருவராக ஒழுங்கு

விதிகளில் பெயர்குறிக்கப்பட்ட வேறோராளுக்கு வ.இ.இ இனைக் கொடுத்துதவுவதற்குத் தேவைப்படுத் தப்படுகிறார்;

(4) ஆணையாளர் தலைமையதிபதி, வரிசெலுத்துநரின் வரிப்பொறுப்பு பற்றி வரிசெலுத்துநரொருவருக்கு அனுப்புகின்ற எல்லாக் கடிதத்தொடர்புகளிலும் வ.இ.இ இனை உள்ளடக்குதல் வேண்டும் என்பதுடன், வரிசெலுத்துநர், விபரத்திரட்டுக்கள் மற்றும் ஆணையாளருடனான கடிதத்தொடர்புகள் மீது அவ் விலக்கத்தை உள்ளடக்குதல் வேண்டும்.

(5) வரிசெலுத்துநரொருவர், (வியாபாரப்பெயர் அல்லது வேறு வர்த்தகப்பெயர் உட்பட) பெயர், முகவரி, வியாபார இடம் அல்லது கொண்டுநடாத்தப்படுகின்ற வரிசெலுத்தப்படற்பாலதான செயற்பாட்டின் தன்மை என்பவற்றிலான மாற்றமொன்றை, அம்மாற்றத்தின் தேதியை அடுத்துவருகின்ற முப்பது நாட்களுக்குப் பிந்தாமல், எழுத்துமூலம் ஆணையாளர் தலைமை யதிபதிக்கு அறிவித்தல் வேண்டும்.

## பகுதி III : பகிரங்க விதிப்புக்கள்

பிணிக்கின்ற பகிரங்க விதிப்புக்கள்.

**104.** (1) இச்சட்டத்தின் நிருவாகத்தில் ஒருசீர்த்தன்மையை எய்துவதற்கும், பொதுமக்கள் மற்றும் திணைக்கள அலுவலர் களுக்கு வழிகாட்டலை வழங்குவதற்குமென ஆணையாளர் தலைமையதிபதி, இச்சட்டத்தின் ஏற்புடைமை பற்றிய அவரது பொருள்கோடலை எடுத்துக்காட்டுகின்ற பகிரங்க விதிப்புக்களை வழங்கலாம்.

(2) பகிரங்க விதிப்பொன்று, மீளப்பெறப்படும் வரை ஆணை யாளர் தலைமையதிபதியைப் பிணித்தல் வேண்டும்.

(3) பகிரங்க விதிப்பொன்று, வரிசெலுத்துநர்களைப் பிணித்த லாகாது.

ஒரு பகிரங்க விதிப்பை ஆக்குதல்.

**105.** (1) ஆணையாளர் தலைமையதிபதி, வர்த்தமானியிலும் திணைக்களத்தின் இணையத்தளத்திலும் பகிரங்க விதிப்பு பற்றிய அறிவித்தலொன்றை வெளியிடுவதன் மூலம் பகிரங்க விதிப்பொன்றை ஆக்கலாம்.

(2) பகிரங்க விதிப்பொன்று, அதுவொரு பகிரங்க விதிப்பாகுமெனக் கூறுதல் வேண்டுமென்பதுடன், விதிப்பின் விடயப்பொருளைக் குறித்துரைக்கின்ற எந்த தலையங்கத்தின் மூலம் அது இனங்காணப்பட முடியுமோ அந்த தலையங்கத்தையும் இனங்காணல் இலக்கமொன்றையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) பகிரங்க விதிப்பொன்று, அப்பகிரங்க விதிப்பில் குறித்துரைக்கப்பட்ட தேதியிலிருந்து அல்லது, தேதி குறித்துரைக்கப்பட்டிராதபோது, வர்த்தமானியிலும் திணைக்களத்தின் இணையத்தளத்திலும் விதிப்பனவானது வெளியிடப்பட்ட தேதியிலிருந்து பயனுடையதாதல் வேண்டும்.

(4) பகிரங்க விதிப்பொன்று, விதிப்பில் குறித்துரைக்கப்பட்ட சூழ்நிலைகளில் இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் ஏற்புடைமை மீது ஆணையாளர் தலைமையதிபதியின் அபிப்பிராயத்தை எடுத்துக்காட்டுதல் வேண்டும் என்பதுடன், இச்சட்டத்தின் அல்லது வேறேதேனும் சட்டத்தின் நோக்கங்களுக்காக ஆணையாளர் தலைமையதிபதியின் முடிபொன்றாக இருத்தலுமாகாது.

ஒரு பகிரங்க விதிப்பை மீளப்பெறுதல்.

**106.** (1) ஆணையாளர் தலைமையதிபதி, திணைக்களத்தின் வர்த்தமானியிலும் இணையத்தளத்திலும் மீளப்பெறுதல் பற்றிய அறிவித்தலொன்றை வெளியிடுவதன் மூலம் பகிரங்க விதிப்பொன்றை முழுமையாக அல்லது பகுதியளவில் மீளப்பெறலாம்.

(2) பகிரங்க விதிப்பொன்று ஏதேனும் சட்டத்தின் முழுமையுடன் அல்லது பகுதியளவில் ஒவ்வாததாக உள்ளதென்று பின்னர் காணப்படும் பட்சத்தில் அத்தகைய பகிரங்க விதிப்பு, அத்தகைய ஒவ்வாமையை நீக்குவதற்கு அவசியப்படும் அளவுக்கு ஆணையாளர் தலைமையதிபதியினால் முழுமையாக அல்லது பகுதியளவில் மீளப்பெறப்படலாம்.

(3) பகிரங்க விதிப்பொன்றின் முழுமையான அல்லது பகுதியளவிலான மீளப்பெறுதலானது, பின்வரும் சந்தர்ப்பத்தில் பயனுடையதாதல் வேண்டும்-

உட்பிரிவு (1) ஏற்புடையதாகும் போது —

(i) மீளப்பெறுதல் பற்றிய அறிவித்தலில் குறித்துரைக்கப் பட்ட தேதிக்கு; அல்லது

(ii) விதிப்பின் மீளப்பெறுதல் பற்றிய அறிவித்தல் வர்த்தமானியில் அல்லது திணைக்களத்தின் இணையத் தளத்தில் வெளியிடப்பட்ட தேதிக்கு; அல்லது

இவற்றுள் எது பிந்தியதோ அந்தத்தேதியன்று உட்பிரிவு (2) ஏற்புடையதாகும் போது, ஒவ்வாமையுள்ள ஏற்புடையதாதற் தேதியின் பின்னர்.

## பகுதி IV : தனிப்பட்ட விதிப்புக்கள்

*தனிப்பட்ட விதிப்புக்கள்.*

**107.** (1) வரிசெலுத்துநரொருவர், அவரால் செய்துகொள்ளப் பட்ட அல்லது செய்துகொள்ளப்படுவதற்கு முன்மொழியப் பட்டுள்ள கொடுக்கல் வாங்கலொன்றுக்கான இச்சட்டத்தின் ஏற்புடைமை தொடர்பில் ஆணையாளர் தலைமையதிபதியின் நிலைப்பாட்டை எடுத்துக்காட்டுகின்ற தனிப்பட்ட விதிப்பொன் றுக்காக ஆணையாளர் தலைமையதிபதிக்கு விண்ணப்பிக்கலாம்.

(2) ஆணையாளர் தலைமையதிபதி, தனிப்பட்ட விதிப்புக்களுக் கான வேண்டுகோள்களைப் பரிசீலனை செய்வதற்கும் தோதான தாகவுள்ள தனிப்பட்ட விதிப்புக்களை அவர்சார்பில் வழங்குவ தற்குமென, பொருள்கோடல் குழுவென அறியப்படுகின்றதான திணைக்களத்தின் சிரேட்ட அலுவலர்களைக் கொண்ட குழு வொன்றை நியமித்தல் வேண்டும்.

(3) இப்பிரிவின்கீழான விண்ணப்பமொன்று எழுத்திலும், பின்வருமாறும் இருத்தல் வேண்டும் -

(அ) விண்ணப்பம் எக்கொடுக்கல்வாங்கலுடன் தொடர்பானதோ அக்கொடுக்கல்வாங்கலின் முழுமையான விபரங்களை, கொடுக்கல்வாங்கலுடன் தொடர்புடைய எல்லா ஆவணங்களுடனும் சேர்த்து, உள்ளடக்கியிருத்தல்;

(ஆ) எந்தக் கேள்வியின் மீது விதிப்பு தேவைப்படுகின்றதோ அந்தக் கேள்வியை திட்டவட்டமாகக் குறித்துரைத்தல்; அத்துடன்.

(இ) கொடுக்கல்வாங்கலுக்குரிய இச்சட்டம் பற்றிய விண்ணப்பம் தொடர்பாக விண்ணப்பகாரரின் அபிப்பிராயத்தை எடுத்துக்காட்டுகின்ற முழுமையான கூற்றொன்றை வழங்குதல்.

(4) பிரிவு 108 இற்கமைய ஆணையாளர் தலைமையதிபதி, இப்பிரிவின்கீழான விண்ணப்பம் பெறப்பட்டு தொண்ணூறு நாட்களுக்குள் கேள்வி மீதான தனிப்பட்ட விதிப்பொன்றை விண்ணப்பகாரருக்கு வழங்குதல் வேண்டும்.

(5) வரிச்செலுத்துநர், தனிப்பட்ட விதிப்பொன்றை ஆக்குதல் தொடர்பிலான கொடுக்கல்வாங்கலின் எல்லா அம்சங்களின் முழுமையானதும் உண்மையானதுமான வெளிப்படுத்துகையொன்றை செய்தும், அத்துடன் தனிப்பட்ட விதிப்புக்கான வரிசெலுத்துநரின் விண்ணப்பத்தில் விபரிக்கப்பட்டவாறாகவும் எல்லா விடயங்கள் தொடர்பாகவும் கொடுக்கல்வாங்கல் மேற்கொண்டு செல்லப்பட்டும் இருப்பின், அத்தனிப்பட்ட விதிப்பானது இனங்காணப்பட்ட வரிசெலுத்துநருக்கு எதிராக ஆணையாளர் தலைமையதிபதியைப் பிணித்தல் வேண்டும்; ஆனால், வேறு எவரேனும் வரிசெலுத்துநருக்கு எதிராக ஆணையாளர் தலைமையதிபதியைப் பிணித்தலுமாகாது.

(6) தனிப்பட்ட விதிப்பொன்று வரிசெலுத்துநரொருவரைப் பிணித்தலாகாது.

(7) ஆணையாளர் தலைமையதிபதி, ஒரு தனிப்பட்ட விதிப்புக்கான விண்ணப்பமொன்று தொடர்பில் அறவிடப்பட வேண்டிய நியாயமான கட்டணத்தைக் குறித்துரைக்கலாம்.

*ஒரு தனிப்பட்ட விதிப்புக்கான விண்ணப் பத்தை மறுத்தல்.*

***108.*** *(1)* பின்வரும் சந்தர்ப்பங்களில் ஆணையாளர் தலைமையதிபதி ஒரு தனிப்பட்ட விதிப்புக்கான விண்ணப்பமொன்றை மறுக்கலாம் -

*(அ)* பின்வருவனவற்றுள் எவற்றிலுமாகவுள்ள விண்ணப் பத்தின் விடயப்பொருளான விடயத்தை ஆணையாளர் தலைமையதிபதியானவர் ஏலவே முடிவு செய்திருக் கின்றவிடத்து:-

(i) விண்ணப்பகாரருக்குச் சேர்ப்பிக்கப்பட்ட வரி மதிப்பீட்டு அறிவித்தலொன்று;

(ii) ஆணையாளர் தலைமையதிபதியினால் வழங் கப்பட்ட வலுவிலுள்ளதான அறிவித்தல் அல்லது வேறு வழிகாட்டல்; அல்லது

(iii) பிரிவு 111 இன் கீழ் வெளியிடப்பட்ட வலு விலுள்ளதான விதிப்பொன்று;

*(ஆ)* விண்ணப்பகாரருடன் தொடர்புடைய வரிக்கணக்காய் வொன்றின் விடயப்பொருளான கேள்வியொன்றுடன் விண்ணப்பம் தொடர்புறுகின்றவிடத்து அல்லது விண்ணப்பகாரரால் ஆட்சேபனையொன்று முன் வைக்கப்பட்டவிடத்து;

*(இ)* விண்ணப்பமானது பொறுப்பற்றதன்மையினதானதாக அல்லது அலைக்கழிக்குந்தன்மையினதானதாக உள்ளவிடத்து;

*(ஈ)* விண்ணப்பமானது எந்தக் கொடுக்கல்வாங்கலுடன் தொடர்பானதோ அந்தக் கொடுக்கல்வாங்கல் கொண்டுநடாத்தப்பட்டிராதவிடத்தும், அக்கொடுக்கல் வாங்கலானது கொண்டுநடாத்தப்படாது என நம்புவ தற்கு நியாயமான ஏதுக்கள் காணப்படுகின்றவிடத் தும்;

*(உ)* தனிப்பட்ட விதிப்பொன்றை ஆக்குவதற்குப் போது மானளவு தகவல்களை விண்ணப்பகாரர் வரி அலுவல ருக்கு வழங்கியிராதவிடத்து;

(ஊ) விண்ணப்பத்துடன் இணங்கியொழுகுவதற்குத் தேவையான வளங்களையும் இயைபானதென வரி அதிகாரி கருதுகின்ற வேறு எவையேனும் கருமங்களையும் கருத்திற்கொண்டு, ஆணையாளர் தலைமையதிபதியின் அபிப்பிராயத்தில் விண்ணப்பத்துடன் இணங்கியொழுகுவது நியாயமற்றதாக இருக்கக்கூடிய விடத்து; அல்லது

(எ) விதிப்பொன்றை ஆக்குதலானது வரி தவிர்ப்பு ஏற்பாடொன்றின் ஏற்புடைமையை உட்படுத்துகின்றவிடத்து;

(2) இப்பிரிவின் கீழ் தனிப்பட்ட விதிப்பொன்றை ஆக்க மறுக்கின்ற முடிபொன்று பற்றிய எழுத்திலான அறிவித்தலொன்றை ஆணையாளர் தலைமையதிபதி விண்ணப்பகாரருக்கு சேர்ப்பித்தல் வேண்டும்.

ஒரு தனிப்பட்ட விதிப்பை ஆக்குதல்.

**109.** (1) ஆணையாளர் தலைமையதிபதி, தனிப்பட்ட விதிப்புப் பற்றிய எழுத்திலான அறிவித்தலை அவ்விதிப்பின் பெறுநருக்கு சேர்ப்பிப்பதன்மூலம் தனிப்பட்ட விதிப்பொன்றை ஆக்கலாம்.

(2) ஆணையாளர் தலைமையதிபதி, எதிர்கால நிகழ்வொன்று பற்றிய கருதுகோள்களின் அல்லது தோதானதெனக் கருதக்கூடியவாறான ஏனைய கருமங்களின் அடிப்படையில் தனிப்பட்ட விதிப்பொன்றை ஆக்கலாம்.

(3) தனிப்பட்ட விதிப்பொன்று, அது தனிப்பட்ட விதிப்பொன்றாகுமெனக் கூறுதலும், எந்தக்கேள்வியின் மீது விதிப்பானது செய்யப்பட்டதோ அந்தக் கேள்வியை எடுத்துக் காட்டுதலும் அத்துடன் பின்வருவனவற்றை இனங்காணுதலும் வேண்டும்:-

(அ) வரிசெலுத்துநர்;

(ஆ) எந்த வரிசெலுத்தும் காலப்பகுதிக்கு விதிப்பு ஏற்புடையதாகிறதோ அந்த வரி விதிப்புக் காலப்பகுதி;

(இ) எக்கொடுக்கல்வாங்கல் விதிப்புடன் தொடர்புபடுகின்றதோ அக்கொடுக்கல்வாங்கல்; மற்றும்

(ஈ) விதிப்பானது எதனை அடிப்படையாகக் கொண்டுள்ளதோ அதன் மீதான ஏதேனும் கருதுகோள்கள்.

(4) தனிப்பட்ட விதிப்பொன்று, அவ்விதிப்புப் பற்றிய எழுத்திலான அறிவித்தல் விண்ணப்பகாரருக்குச் சேர்ப்பிக்கப்படும் போது ஆக்கப்படுகின்றது என்பதுடன், அவ்விதிப்பானது 110ஆம் பிரிவின் கீழ் மீளப்பெறப்படும்வரை வலுவிலிருத்தல் வேண்டும்.

(5) தனிப்பட்ட விதிப்பொன்று, விதிப்புக்கான விண்ணப்பத்தில் எழுப்பப்பட்ட கேள்விமீதான ஆணையாளர் தலைமையதிபதியின் அபிப்பிராயத்தை எடுத்துக்காட்டுவதாக இருத்தல் வேண்டும் என்பதுடன், இச்சட்டத்தின் அல்லது வேறு ஏதேனும் சட்டத்தின் நோக்கங்களுக்காக விதிமுறையாக பரிசீலனை செய்யப்பட, மேன்முறையீடு செய்யப்பட்ட அல்லது வேறுவகையில் ஆட்சேபனை தெரிவிக்கப்பட முடியுமான, ஆணையாளர் தலைமையதிபதியின் முடிபொன்றாக இருத்தலாகாது. ஐயத்தைத் தவிர்ப்பதற்காக, விதிப்பானது எந்த வரி செலுத்துநர் தொடர்பாகவுள்ளதோ அந்த வரிசெலுத்துநருக்கு சேர்ப்பிக்கப்பட்ட ஏதேனும் வரிமதிப்பீட்டுடன் தொடர்புடைய வரிசெலுத்துநரொருவரின் உரிமைகளை எந்த வகையிலும் வரையறுப்பதாக இவ்வுட்பிரிவு இருத்தலாகாது.

ஒரு தனிப்பட்ட விதிப்பை மீளப்பெறுதல்.

**110.** (1) ஆணையாளர் தலைமையதிபதி, விண்ணப்பகாரருக்குச் சேர்ப்பிக்கும் எழுத்திலான அறிவித்தலொன்றின் மூலம் நியாயமான காரணத்துக்காக தனிப்பட்ட விதிப்பனவொன்றை முழுமையாக அல்லது பகுதியளவில் மீளப்பெறலாம்.

(2) பகிரங்க விதிப்பொன்று ஏதேனும் சட்டத்தின் முழுமையுடன் அல்லது பகுதியளவில் ஒவ்வாததாக உள்ளதென்று பின்னர் காணப்படும் பட்சத்தில் அத்தகைய பகிரங்க விதிப்பு, அத்தகைய ஒவ்வாமையை நீக்குவதற்கு அவசியப்படும் அளவுக்கு ஆணையாளர் தலைமையதிபதியினால் முழுமையாக அல்லது பகுதியளவில் மீளப்பெறப்படலாம்.

(3) தனிப்பட்ட விதிப்பொன்றின் முழுமையான அல்லது பகுதியளவிலான மீளப்பெறுதல் அறிவித்தலில் குறித்துரைக்கப்படும் தேதியிலிருந்து பயனுடையதாதல் வேண்டும்.

*தனிப்பட்ட விதிப்புக்களை வெளியிடுதல்.*

**111.** (1) ஆணையாளர் தலைமையதிபதி, எவருக்கு விதிப்புகள் தொடர்புபட்டவையோ அவ்விண்ணப்பகாரர் பற்றி வெளியீட்டில் சுட்டிக்காட்டப்படாது என்பது தவிர்த்து, திணைக்களத்தின் இணையத்தளத்தில் பிரிவு 109 இன் கீழ் ஆக்கப்பட்ட விதிப் பொன்றை வெளியிடுதல் வேண்டும்.

(2) பிரிவு 110 இற்கிணங்க விதிப்பானது மீளப்பெறப்படும்போது, ஆணையாளர் தலைமையதிபதி விதிப்பினது 110 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் கீழ் தீர்மானிக்கப்பட்ட தேதியிலிருந்து பயனுறும் வகையில் பிணிக்கப்படாது இல்லாதொழிக்கின்றது எனக்கூறுகின்ற திணைக்களத்தின் இணையத்தளத்தில் மீளப்பெறப்படும் அறிவித்தலொன்றை உடனடியாக வெளியிடுதல் வேண்டும்.

## பகுதி V : தொடர்பாடல்கள், படிவங்கள் மற்றும் அறிவித்தல்கள்

*வரிசெலுத்து நருடனும் ஏனைய ஆட் களுடனுமான தொடர்பாடல்கள்.*

**112.** (1) வரி செலுத்துநரொருவருக்கு அல்லது வேறோராளுக்கு ஆணையாளர் தலைமையதிபதியினால் அல்லது எவரேனும் வரி அலுவலரால் வழங்கப்பட்ட அறிவித்தலொன்று அல்லது கூற்றொன்று, அல்லது செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கை யொன்று அது சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்டதாகவும் எழுத்திலானதாகவும் அத்துடன் வரி அலுவலரொருவரினால் ஒப்பமிடப்பட்டதாகவும் இருப்பின் பயனுடையதாதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தினால் அல்லது வேறு ஏதேனும் சட்டத்தினால் வேறு வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தால் தவிர, ஆணையாளர் தலைமையதிபதியினால் ஆளொருவருக்குச் சேர்ப்பிக்கப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்படும் அறிவித்தலொன்று அல்லது வேறு ஏதேனும் ஆவணம் பின்வரும் ஏதேனும் முறையில் சேர்ப்பிக்கப்படலாம்:-

(அ) அவ்வாளுக்கு அல்லது அவ்வாளின் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட அலுவலருக்கு தனிப்பட்ட ரீதியில் அதனை ஒப்படைத்தல்;

(ஆ) அவ்வாளின் இலங்கையிலுள்ள வழமையான அல்லது கடைசியாக அறியப்பட்ட வியாபார இடத்தில் அல்லது வசிப்பிடத்தில் அதனை விட்டுவிடுதல்;

(இ) அவ்வாளின் இலங்கையிலுள்ள வழமையான அல்லது கடைசியாக அறியப்பட்ட வியாபார இடத்துக்கு அல்லது வசிப்பிடத்திற்கு பதிவுத்தபால் மூலம் அதனை அனுப்பிவைத்தல்; அல்லது

(ஈ) பிரிவு 113 இற்கிணங்க இலத்திரனியல் முறையில் அதனை அனுப்பிவைத்தல்

(3) ஆளொருவர் -

(அ) அவ்வாளுக்கு முகவரியிட்டு அனுப்பிவைக்கப்பட்ட கடிதமொன்றின் ஒப்படைப்பை ஏற்றுக்கொள்ள மறுக்கின்றவிடத்து; அல்லது

(ஆ) கடிதமொன்று தபால் அலுவலகமொன்றில் சேகரிக்கப் படுவதற்காகவுள்ளதென்று தகவலளிக்கப்பட்டதன் பின்னர் அக்கடிதத்தைச் சேகரிக்கத் தவறுகின்றவிடத்து,

அவ்வாள், எந்தத்தேதியன்று அக்கடிதத்தின் ஒப்படைப்பை ஏற்றுக்கொள்ள மறுத்தாரோ அல்லது அக்கடிதமானது தபால் அலுவலகத்தில் இருந்ததென தகவலளிக்கப்பட்டாரோ, அந்தத் தேதியில் அக்கடிதம் அவ்வாளுக்கு சேர்ப்பிக்கப்பட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(4) பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைக்கப்பட்ட அறிவித்த லொன்று அல்லது வேறு ஆவணம், முகவரியை இலங்கையில்

கொண்டுள்ளவிடத்து தபாலில் சேர்க்கப்பட்ட நாளை அடுத்துவரும் நான்கு நாட்களில், முகவரியை இலங்கையில் கொண்டிராதவிடத்து தபாலில் சேர்க்கப்பட்ட நாளை அடுத்துவரும் இருபது நாட்களில், சேர்க்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) அறிவித்தல், உடன்படிக்கை, விபரத்திரட்டு, படிவம், வெளிப்படுத்துகை, பட்டியல், சான்றிதழ் அல்லது வேறு ஆவணமொன்றில் எழுதப்பட்ட கையொப்பமொன்று, மற்றும் வரி அலுவலரொருவரின் கையொப்பமாக இருக்கவேண்டுமென நோக்கப்படுகின்ற கையொப்பமொன்று, முரணானது என எண்பிக்கப்பட்டாலன்றி அவ்வாளின் கையொப்பமாக இருக்கவேண்டுமெனக் கருதப்படுதல் வேண்டும்.

**113.** (1) இச்சட்டத்தின் எவையேனும் வேறு ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், ஆணையாளர் தலைமையதிபதி பின்வருவன ஒன்றில் எழுத்திலோ இலத்திரனியல் முறையிலோ, கணனி முறைமையொன்றினூடாக அல்லது செல்லிட இலத்திரனியற் சாதனமொன்றினூடாக செய்யப்படுதல் வேண்டுமென, அதிகாரமளிக்கலாம்:-

*இலத்திரனியல் வரி முறைமையைப் பயன்படுத்துதல்.*

(அ) இச்சட்டத்தின் கீழ் பதிவுசெய்வதற்கான விண்ணப்பமொன்றை முன்வைத்தல்;

(ஆ) இச்சட்டத்தின் கீழ் வரி விபரத்திரட்டொன்றை அல்லது வேறு ஆவணத்தைக் கோப்பிடுதல்;

(இ) இச்சட்டத்தின் கீழான வரிச் செலுத்துகை;

(ஈ) இச்சட்டத்தின் கீழ் மீள்கொடுப்பனவொன்றைச் செலுத்துதல்;

(உ) ஆணையாளர் தலைமையதிபதியினால் செய்யப்படும் ஏதேனும் ஆவணத்தின் சேர்ப்பித்தல் அல்லது அத்தகைய ஆவணங்கள் இலத்திரனியல் முறையில் அனுப்பிவைக்கப்பட்ட தேதியில் சேர்ப்பிக்கப்பட்டிருக்கின்றவாறாகக் கொள்ளப்படும்;

(ஊ) இச்சட்டத்தின் கீழ் செய்யப்படுவதற்குத் தேவைப்படுத்தப்பட்டிருக்கின்ற அல்லது அனுமதியளிக்கப்பட்டிருக்கின்ற வேறு ஏதேனும் செயலை அல்லது விடயத்தைச் செய்தல்.

(2) ஆணையாளர் தலைமையதிபதி, (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட எதனையும் கணினி முறைமையொன்றின் அல்லது செல்லிட இலத்திரனியற் சாதனமொன்றின் பயன்பாட்டினூடாக இலத்திரனியல் முறையில் செய்வதற்கு ஆளொருவரைப் பணிக்கலாம்.

(3) அரசிறை நிருவகித்தல் முகாமைத்துவத் தகவல் முறைமையின் வினைத்திறனான பயன்பாட்டுக்காக ஆணையாளர் தலைமையதிபதி, மேலதிக நிபந்தனைகள் உட்பட, நிபந்தனைகளைக் குறித்துரைக்கலாம்.

(4) இப்பிரிவின் கீழ் வரி விபரத்திரட்டொன்றைக் கோப்பிடுகின்ற மற்றும் இலத்திரனியல் முறையில் வரி செலுத்துகின்ற ஆளொருவர், சட்டத்தினால் வேறுவகையில் தேவைப்படுத்தப்பட்டால் அல்லது அனுமதியளிக்கப்பட்டாலன்றி அல்லது ஆணையாளர் தலைமையதிபதியினால் அதிகாரமளிக்கப்பட்டாலன்றி, தொடர்ந்தும் அந்த முறையில் வரி விபரத்திரட்டுக்களைக் கோப்பிட்டு வரி செலுத்துதல் வேண்டும்.

**114.** (1) ஆணையாளர் தலைமையதிபதி இச்சட்டத்தின் வினைத்திறனான நிருவாகத்திற்காக படிவங்கள், அறிவித்தல்கள், வெளிப்படுத்துகைகள், விபரத்திரட்டுகள், கூற்றுக்கள், பட்டியல்கள் மற்றும் வேறு ஆவணங்களைக் குறித்துரைத்தல் வேண்டும் என்பதுடன் அவற்றை வெளியிடுதலும் வேண்டும். படிவங்களும் அறிவித்தல்களும்.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆவணங்கள் ஆணையாளர் தலைமையதிபதி தீர்மானிக்கக்கூடியவாறு திணைக்களத்தின் இணையத்தளத்தில் அல்லது அதனது பிரதான அலுவலகத்தில் அத்துடன் வேறு அமைவிடங்களில் அல்லது அஞ்சல் மூலம் அல்லது இலத்திரனியல் முறையில் பொதுமக்களிற்கு கிடைக்கக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

*அதிகாரமளிக்கப் பட்ட பிரதிநிதிகள்.*

**115.** வரிசெலுத்துநர் ஒருவர் எந்த சூழ்நிலைகளின்கீழ் அவர் சார்பில் திணைக்களத்துடன் தொடர்புகொள்வதற்கு அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி ஒருவரை பெயர்குறிக்கலாமோ அந்த சூழ்நிலையை ஆணையாளர் தலைமையதிபதி குறித்துரைக்கலாமென்பதுடன் அத்தகைய சூழ்நிலைகளுக்கிணங்க செய்யப்பட்ட பெயர்குறித்தலை ஏற்றுக்கொள்ளலும் வேண்டும். குறைபாடு செல்லுபடியாந் தன்மையைப் பாதிக்காது.

*குறைபாடு செல்லுபடியாந் தன்மையைப் பாதிக்காது.*

**116.** (1) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணங்கவிருப்பதாகக் கொள்ளப்படும் அறிவித்தல், வரிமதிப்பீடு, படிவம், சான்றிதழ் அல்லது வேறு நடவடிக்கை எதுவும், இச்சட்டத்தின் உட்கருத்து மற்றும் கருத்திற்கு பொருளிலும் பயனிலும் ஒத்திசைவாகவும் இணங்கவும் இருப்பினும், அத்துடன் வரிமதிப்பீடுசெய்யப்பட்ட அல்லது வரிமதிப்பிடுவதற்கு உட்கருதப்பட்ட அல்லது அதனால் பாதிக்கப்பட்ட ஆள், நியாயமாக விபரிக்கப்பட்டு அல்லது அடையாளம் காணப்பட்டிருக்குமிடத்தும் தள்ளுபடி செய்யப்படலாகாது அல்லது படிவத்தின் குறைபாடு காரணமாக வறிதாக்கப்படுவதாக அல்லது வறிதாக்கப்படற்பாலதான அல்லது தவறு, குறைபாடு அல்லது விட்டுவிடுகை காரணமாக பாதிக்கப்பட்டிருப்பதாகக் கருதப்படலாகாது.

(2) ஓராம் உட்பிரிவின் பொதுமைக்குப் பங்கமின்றி, வரிமதிப்பீட்டு அறிவித்தலானது வரிவிதிக்கப்படுவதற்கு உட்கருதப்பட்ட ஆளுக்கு முறையாக சேர்ப்பிக்கப்பட்டிருப்பின் அத்துடன் இயைபான எல்லா விபரங்களின் பொருளையும் பயனையும் கொண்டிருப்பின், அத்தகைய வரிமதிப்பீடானது பின்வரும் காரணத்தினால் பாதிக்கப்படுதலாகாது அல்லது தடங்கல் எதிர்க்கப்படுதலாகாது.

(அ) வரிவிதிக்கப்படற்பாலதான ஆளின் பெயர் அல்லது தகப்பனின் பெயர் வரிமதிப்பிடப்பட்ட வருமானத்தின் தொகை அல்லது விதிக்கப்பட்ட வரியின் தொகை பற்றிய தவறு; அல்லது

(ஆ) அதன் வரிமதிப்பீட்டிற்கும் அறிவித்தலுக்கும் இடையிலுள்ள ஏதேனும் மாறுபாடு.

(3) ஓராம் மற்றும் இரண்டாம் உட்பிரிவுகளின் பொதுமைக்குப் பங்கமின்றி, இச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணங்கவிருப்பதாக கொள்ளப்படும், அறிவித்தல், வரிமதிப்பீடு, படிவம், சான்றிதழ் அல்லது வேறு நடவடிக்கை எதுவும், அவை பொருளிலும் பயனிலும் இச்சட்டத்தின் உட்கருத்துக்கும், கருத்துக்கும் இணங்கியொழுகுவதாக அல்லது இணங்குவதாக இருப்பின், விடயத்திற்கேற்றவாறு அத்தகைய அறிவித்தலை, வரிமதிப்பீட்டை, படிவத்தை, சான்றிதழை அல்லது வேறு நடவடிக்கைகளை ஒப்பமிட்டு அல்லது நிறைவேற்றிய வரி அலுவலரின் பதவிப்பெயரின் ஏதேனும் மாறுபாடு காரணமாக தள்ளுபடி செய்யப்படக் கூடியதாக அல்லது வறிதாக இருப்பதாக அல்லது வறிதாக்கப்படற்பாலதாக அல்லது பாதிக்கப்படுவதாக கருதப்படுதல் ஆகாது.

*பிழைகளை நிவர்த்தி செய்தல்.*

**117**. இச்சட்டத்தின்கீழ் ஆணையாளர் தலைமையதிபதியினால் சேர்ப்பிக்கப்பட்ட வரிமதிப்பீட்டு அறிவித்தல் அல்லது வேறு ஆவணம் பதிவேட்டில் இருந்து வெளிப்படையாகவுள்ள பிழையைக் கொண்டுள்ள விடத்தும் அத்தவறு சட்டத்தின் பொருள்கோடலில் அல்லது அந்நிகழ்வு பற்றி பிணக்கொன்றை உட்படுத்தாதபோதும் பிழையை நிவர்த்தி செய்யும் நோக்கங்களுக்காக, வரிமதிப்பீட்டு அறிவித்தலை அல்லது வேறு ஆவணத்தைச் சேர்ப்பித்தல் தேதியிலிருந்து நான்கு ஆண்டுகள் காலாவதிக்கு முன்னர் ஏதேனும் காலத்தில் வரிமதிப்பீட்டை அல்லது வேறு ஆவணத்தை திருத்தலாம்.

*வரி செலுத்துநரின் தகவலுக்கான உரிமை.*

**118**. வரிசெலுத்துநரிலான வேண்டுகோளின்மீது, திணைக்களத்தின் வரி அலுவலர் ஒருவர் -

(அ) வரி தொடர்பில் வரிசெலுத்துநருடைய கணக்கின் நிலைமையை வரிசெலுத்துநருக்கு அறிவித்தல் வேண்டும்;

(ஆ) வரி செலுத்துநரால் கோப்பிடப்பட்ட விபரத்திரட்டு ஒன்றின் பிரதியொன்றை வழங்குதல் வேண்டும்; அல்லது

(இ) ஆணையாளர் தலைமையதிபதியால் செய்து கொள்ளப்பட்ட ஏதேனும் எழுத்தினாலான உடன்படிக்கையின் பிரதி ஒன்றை வழங்குதல் வேண்டும்.

**119.** (1) இச்சட்டத்தினால் குறித்துரைக்கப்பட்ட செயலொன்றைப் புரிவதற்கான கடைசி நாள், எந்த நாளன்று திணைக்களம் வியாபாரத்திற்காக பொதுமக்களிற்கு திறந்திருக்காதோ அந்த நாளாக வரும்போது, அது திணைக்களம் வியாபாரத்திற்காக திறந்திருக்கும் அடுத்து தொடர்ந்துவரும் நாளன்று புரியப்படின் அச்செயல் அக்காலத்திற்குரியதாக கருதப்படுதல் வேண்டும்.

வருமதியான தேதிகள்.

(2) கொடுப்பனவு தவிர்ந்த வெளிப்படுத்துகை, மேன்முறையீடு அல்லது வேறு ஆவணம், திணைக்களத்தினால் பெறப்பட்டவாறு முத்திரையிடப்பட்ட திகதியன்று அல்லது தபால் மூலம் கோப்பிடும் பட்சத்தில் அஞ்சல் அடையாளத் தேதியின் நான்கு நாட்களினுள் கோப்பிடப்பட்டதாக கருதப்படுதல் வேண்டும்.

## அத்தியாயம் X

### பதிவேடு வைத்திருத்தலும் தகவல் சேகரித்தலும்.

**120.** (1) விபரத்திரட்டொன்றை ஆக்குவதற்கு இச்சட்டத்தின்கீழ் தேவைப்படுத்தப்பட்ட அல்லது வியாபாரத்தில் அல்லது முதலீட்டு செயற்பாட்டில் ஈடுபட்டுள்ள வரிசெலுத்துநர் ஒருவர், இலங்கையில் எல்லாக் கொடுக்கல்வாங்கல்களைப் பதிவு செய்வதற்கும் அத்துடன் அக்கொடுக்கல் வாங்கல் தொடர்பில் பெறப்பட்ட ஈட்டுகைகள் மற்றும் இலாபங்கள் அல்லது உறப்பட்ட நட்டங்களை நிச்சயிப்பதற்குமான போதுமான பதிவேடுகளையும் கணக்குகளையும் திருத்தலும் பேணுதலும் வேண்டும்.

கணக்குகளும் பதிவேடுகளும்.

(2) வியாபாரத்தில் அல்லது முதலீட்டுச் செயற்பாட்டில் ஈடுபட்ட ஆளொருவர் அங்கீகரிக்கப்பட்ட கணக்காளரொருவரினால் தயாரிக்கப்பட்ட கணக்குகளைக் கொண்டிருக்கவேண்டிய சூழ்நிலைகளையும் அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட கணக்காளர் தயாரிக்கப்பட்ட கணக்குகளின் செம்மையையும் பூரணத்துவத்தையும் எந்த படிவம் மூலம் அத்தாட்சிப்படுத்த முடியுமோ அந்தப் படிவம் ஒழுங்குவிதிகள் மூலம் விதித்துரைக்கப்படுதல் வேண்டும்.

(3) முறையான பதிவேடுகள் அல்லது கணக்குப் புத்தகங்கள் (1) ஆம் அல்லது (2) ஆம் உட்பிரிவுகளிற்கு இணங்க வைத்திருக் கப்படவில்லை என ஆணையாளர் தலைமையதிபதி அபிப்பிராயப்படுமிடத்து அல்லது எந்தப் பதிவேடுகள் அல்லது கணக்குப் புத்தகங்கள் வியாபாரத்தை கொண்டுநடாத்தும் எவரேனும் ஆளினால் வைத்திருக்கப்படாதவிடத்து, அப்போது தவறொன்றுக்கான வழக்குத் தொடருதலுக்கு மேலதிகமாக, ஆணையாளர் தலைமையதிபதி குறித்துரைக்கக்கூடியவாறாக அத்தகைய பதிவேடுகளையும் கணக்குப் புத்தகங்களையும் வைத்திருப்பதற்கு அத்தகைய ஆளைப் பணிக்கலாம்.

(4) இப்பிரிவினால் தேவைப்படுத்தப்பட்ட பதிவுகள் அல்லது கணக்குப்புத்தகங்கள், ஆணையாளர் தலைமையதிபதி அவற்றை வேறு சில இடத்தில் வைத்திருப்பதற்கு அங்கீகரித்தாலொழிய, அவ்வாளின் வியாபார இடத்தில் அல்லது முதலீட்டு செயற்பாட்டில் வைத்திருக்கப்படுதல் வேண்டும்.

(5) முதலாம், இரண்டாம் உட்பிரிவுகளில் குறிப்பீடுசெய்யப்பட்ட பதிவேடுகள் கணக்குகளுக்கு மேலதிகமாக வரிசெலுத்துநர் ஒருவர், பதிவேடுகளினதும் கணக்குகளின் உருவாக்கத்துக்கு பயன் படுத்தப்பட்ட மூலஆவணங்கள் மற்றும் அடிப்படை ஆவணப் படுத்துகையை வைத்திருத்தல் வேண்டும்.

(6) இச்சட்டத்தின்கீழ் கொடுக்கல் வாங்கல் ஒன்றின் பதிவேடு களைத் தயாரித்து வைத்திருப்பதற்கு தேவைப்படுத்தப்படும் ஆள் ஒருவர் –

(அ) எந்தத் தேதியன்று கொடுக்கல் வாங்கல் இடம்பெற்றதோ அந்தத் தேதியிலிருந்து ஐந்து ஆண்டு காலப்பகுதி ஒன்றுக்கு; அல்லது

(ஆ) ஐந்து ஆண்டுகளை விஞ்சும் காலப்பகுதி ஒன்றுக்கு அப்பதிவேடுகள் எந்த வரிசெலுத்தும் காலப்பகுதிக்கு இயைபானதாக இருக்கின்றதோ அந்த ஏதேனும் வரிசெலுத்தும் காலப்பகுதிக்கு வரிமதிப்பீட்டுக்கான கால எல்லை முடிவுறாதிருக்கும் வரை அத்துடன் ஏதேனும் தொடர்புபட்ட வழக்கு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு இருக்கும்வரை,

அத்தகைய பதிவேடுகளை வைத்திருத்தல் வேண்டும்.

(7) ஏதேனும் வேறு சட்டத்தில் எதுவும் எவ்வாறிருப்பினும், ஆணையாளர் தலைமையதிபதி சிறிய வியாபாரத்திற்கு இலகுபடுத்தப்பட்ட பதிவேடு வைத்திருக்கும் முறைமை ஒன்றைக் குறித்துரைக்கலாம்.

(8) சிங்களம், தமிழ் அல்லது ஆங்கிலம் தவிர்ந்த வேறு மொழி ஒன்றில் இப்பிரிவின்கீழ் தேவைப்படுத்தப்பட்ட பதிவேடுகளை ஆளொருவர் தயாரித்துள்ளவிடத்து, அவ்வாளுடைய செலவில், வேண்டுகோளின் பேரில், ஆணையாளர் தலைமையதிபதிக்கு ஏற்புடையதற்பாலதான மொழிபெயர்ப்பொன்றை அவ்வாள் வழங்குதல் வேண்டும்.

(9) திணைக்களத்திற்கும் வரிசெலுத்துநருக்கும் இடையிலான நிதிக்கூற்றுக்கள், விலைப்பட்டியல்கள் மூலப்பதிவேட்டுப் புத்தகங்கள் மற்றும் எல்லா எழுத்திலான தொடர்பாடல்களும் இலங்கை நாணயத்திலும் வழங்கப்படவேண்டிய தொகைகள் மற்றும் பெறுமதியுடன் சிங்களம், தமிழ் அல்லது ஆங்கிலத்தில் இருத்தல் வேண்டும்.

(10) இப்பிரிவின் நோக்கங்களுக்காக, மூலஆவணங்கள் ஆனவை கொடுக்கல் வாங்கல் ஒன்றின் அம்சம் தொடர்பான விற்பனைகள் மற்றும் கொள்வனவு விலைப்பட்டியல்கள், செலவின ஆவணங்கள், புத்தகங்கள், நாட்குறிப்புகள், கொள்வனவுக் கட்டளைகள், விநியோகக் குறிப்புகள், வங்கிக் கூற்றுக்கள், ஒப்பந்தங்கள் மற்றும் வேறு ஆவணங்களையும் உள்ளடக்கும்.

**121.** வங்கி அல்லது நிதிநிறுவனம் ஒன்று வாடிக்கையாளரது ஆள் அடையாளம் உட்பட வாடிக்கையாளர் ஒருவருடனான எல்லாக் கொடுக்கல் வாங்கல்களின் பதிவேடுகளையும் வைத்திருத்தல் வேண்டும். *நிதி நிறுவனங்களின் கட்டுப்பாடுகள்.*

**122.** (1) அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் - *தகவல், சொத்துக்கள் மற்றும் காணிக்கான அணுக்கம்.*

(அ) வழமையான வியாபார நேரங்களின் போது; அல்லது

(ஆ) ஆணையாளர் தலைமையதிபதியினால் செய்யப்பட்ட விண்ணப்பத்தின்மீது நீதிவானொருவரால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்டதும் அந்நேரத்தில் பிரவேசிப் பதற்கான அவசியத்தைக் காட்டுகின்றதுமான ஏதேனும் நேரத்தில்,

அதிகாரமளிக்கப்பட்ட நோக்கத்திற்காக முன் அறிவித்தல் இன்றி, வியாபார வளவொன்றினுள் அல்லது பொதுமக்கள் செல்வதற்கான வேறு வளவொன்றினுள் பிரவேசிக்கலாம்.

(2) அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவர் அதிகார மளிக்கப்பட்ட நோக்கம் ஒன்றிற்காக, வரிசெலுத்துநருடைய குடியிருப்பு ஒன்றில் அல்லது (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்படாத வேறு வளவுகளில்

(அ) வரி செலுத்துநரின் சம்மதத்துடன்; அல்லது

(ஆ) ஆணையாளர் தலைமையதிபதியினால் செய்யப்பட்ட விண்ணப்பத்தின் மீதும் அந்நேரத்தில் பிரவேசிப் பதற்கான அவசியத்தைக் காட்டுவதன்மீதும் நீதிவான் ஒருவரினால் எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட முறையில் குறிப்பிடப்பட்ட நேரத்தில்,

பிரவேசிக்கலாம்.

(3) அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் நிலஅளவையிடும் மற்றும் பெறுமதி மதிப்பிடும் நோக்கத்திற்காக ஏதேனும் ஆதனத்தினுள் -

(அ) வரிசெலுத்துநரின் சம்மதத்துடன்; அல்லது

(ஆ) இருபத்து நான்கு மணித்தியாலத்திற்கு குறையாது எழுத்திலான அறிவித்தலைக் கொடுத்தபின்னர்,

பிரவேசிக்கலாம்.

(4) ஓராம், (2) ஆம் அல்லது (3) ஆம் உட்பிரிவுகளின்கீழ் வள வொன்றினுள் அல்லது குடியிருப்பொன்றினுள் சட்டமுறையாகப் பிரவேசிக்கின்ற அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் -

(அ) பதிவேடு ஒன்றின் பிரதியை ஆக்கலாம்;

(ஆ) அதிகாரமளிக்கப்பட்ட நோக்கத்திற்கு இயைபாக இருக்கக்கூடியதாக காணப்படுகின்றதான பதிவேடு அல்லது வேறு விடயம் ஒன்றைக் கைப்பற்றலாம்;

(இ) பதிவேடுகள் அல்லது வேறு விடயங்களுக்கு இலச்சினை இடலாம்;

(ஈ) இச்சட்டத்தின்கீழ் எழுகின்ற ஏதேனும் விடயம் தொடர்பில் வளவுகளில் அல்லது குடியிருப்புகளில் எவரேனும் ஆளை வினவலாம்;

(உ) ஏதேனும் கணக்குப்புத்தகம், இடாப்பு, பதிவேடு அல்லது வேறு ஆவணத்தை கண்டுபிடிக்கக்கூடிய ஏதேனும் கொள்கலத்தை திறந்து பரிசோதிக்கலாம் என்பதுடன், அங்கு கண்டுபிடிக்கப்பட்ட எவையேனும் பொருட்களைப் பரிசோதித்து அதற்கான இருப்புப் பதிவேட்டைத் தயாரிக்கலாம்;

(ஊ) ஏதேனும் கணனியை செயற்படுத்தலாம் அத்துடன் அதனுள் களஞ்சியப்படுத்தப்பட ஏதேனும் தரவைப் பதிவேடு ஒன்றில் எடுக்கலாம்; அல்லது

(எ) கண்டுபிடிக்கப்பட்ட ஏதேனும் பணத்தை கணக்கிடலாம் அத்துடன் அதற்கான பதிவேட்டை ஆக்கலாம்.

(5) அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவர் இப்பிரிவின்கீழ் ஏற்பாடு செய்யப்பட்ட அதிகாரத்தைப் பின்பற்றி பதிவேடு ஒன்றை அல்லது வேறு பொருளொன்றை கைப்பற்றுகின்றவிடத்து, ஆணையாளர் தலைமையதிபதி, பதிவேடு அல்லது வேறு பொருளின் பிரதியொன்றை ஆக்கலாம் என்பதுடன் அது செயல்முறைக்கு உகந்தவரை குறுகியகாலத்தில் அம்மூலப்பிரதியை அவ்வாளிற்கு திருப்பிக்கொடுத்தலும் வேண்டும்.

(6) இப்பிரிவினால் அளிக்கப்பட்ட தத்துவத்தைப் பின்பற்றி செய்யப்பட்ட ஆவணமொன்றின் பிரதியொன்று நீதிமன்றத்தில் காண்பிக்கப்படலாம் என்பதுடன், அது மூலப்பிரதியாக இருந்தாற் போன்று அதே சான்றுமுறையிலான பெறுமதியைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(7) இப்பிரிவானது, சர்வதேச சட்டத்தின்கீழ் அத்தகைய புலனாய்வுகளிலிருந்து விடுபாட்டுரிமையைத் துய்க்கின்ற வெளிநாடுகளினதும், சர்வதேச ஒழுங்கமைப்புகளின் தூதரக, காவற்றூது அல்லது வேறு தூதுக்குழுக்களின் வளவுகளிற்கான அணுகுதலுக்கு அதிகாரமளித்தலாகாது.

(8) இப்பிரிவினைப் பின்பற்றி ஆணையாளர் தலைமையதிபதி கைப்பற்றுவதற்கு அல்லது பரிசோதனை செய்வதற்கு விரும்புகின்ற ஆவணங்கள் அல்லது வேறு சான்று தொடர்பான சட்டத்தின்கீழான சிறப்புரிமை ஒன்றை ஆளொருவர் நிலைநிறுத்துகின்றவிடத்து, எந்த பொருட்கள்மீது சிறப்புரிமை கோரப்படுகின்றதோ, அந்த பொருட்கள் உறையினுள் இடப்படுதல் வேண்டும். அவை பின்னர் முத்திரையிடப்பட்டு சம்பந்தப்பட்ட விடயங்கள் சிறப்புரிமைக்கு உட்படுத்தப்படுகின்றதா என தீர்மானிப்பதற்கு தகுதிவாய்ந்த நியாயாதிக்க நீதிமன்றம் ஒன்றிற்கு ஆணையாளர் தலைமையதிபதியினாலான விண்ணப்பம் முடிவுறாதிருக்கையில் திணைக்களத்தின் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரால் திறக்கப்படாது வைத்திருக்கப்படுதல் வேண்டும்.

(9) வரிசெலுத்துநர் அல்லது குறித்துரைக்கப்பட்ட ஆள், இப்பிரிவின்கீழ் அல்லது 123 ஆம் பிரிவின்கீழ் ஆணையாளர் தலைமையதிபதியினால் தேவைப்படுத்தப்படும் ஏதேனும் ஆவணத்தை வழங்குவதற்கு தவறுகின்றவிடத்து, அத்தகைய ஆவணம், ஆணையாளர் தலைமையதிபதியின் உடன்படிக்கையுடன் தவிர, வரிமதிப்பீட்டை சவாலுக்குட்படுத்துகின்ற நீதிமுறையான நடவடிக்கை ஒன்றில் வரிசெலுத்துநரால் அல்லது வேறு ஆளினால் பயன்படுத்தப்படுதலாகாது.

(10) இப்பிரிவின்கீழ் எந்த வளவுகள் அல்லது இடம் தொடர்பில் தத்துவம் பிரயோகிக்கப்படுகின்றதோ அவ்வளவுகளின் அல்லது இடத்தின் சொந்தக்காரர் அல்லது சட்டமுறையான இருப்பாட்சியாளர், ஆணையாளர் தலைமையதிபதிக்கு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு நியாயமான எல்லா வசதிகளையும் உதவிகளையும் வழங்குதல் வேண்டும்.

(11) எவ்வாளொருவருடைய புத்தகங்கள், பதிவேடுகள் அல்லது வேறு விடயங்கள் இப்பிரிவின்கீழ் கைப்பற்றப்பட்டிருந்ததோ அவ்வாள், அவற்றைப் பரிசோதிக்கலாம் என்பதுடன், அலுவலக நேரத்தின்போது அவ்வாளுடைய செலவில் பிரதிகளையும் எடுக்கலாம்.

(12) அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் இப்பிரிவின்கீழ் அகற்றப் படும் மற்றும் வைத்திருக்கப்படும் எல்லாப் பதிவேடுகளுக்காகவும், புத்தகங்களுக்காகவும் அல்லது வேறு விடயங்களுக்காகவும் கையொப்பமிடுதல் வேண்டும் என்பதுடன், புலனாய்வின் அல்லது தொடர்புபட்ட வழக்கு நடவடிக்கைகளின் முடிபிலிருந்து பதினான்கு நாட்களினுள் சொந்தக்காரருக்கு அவற்றைத் திருப்பிக் கொடுத்தலும் வேண்டும்.

(13) ஆணையாளர் தலைமையதிபதி ஏதேனும் காணியை பார்வையிடுவதற்கு, சோதனையிடுவதற்கு அத்துடன் அளவிடு வதற்கு செய்வித்தல் வேண்டும் என்பதுடன், காணியுடன் தொடர்புபடுகின்ற அவ்வாளின் கட்டுக்காப்பிலுள்ள அல்லது கட்டுப்பாட்டின் கீழுள்ள ஏதேனும் நிலப்படத்தை, வரைபடத்தை, உரித்து உறுதியை, உரித்து சாதனத்தை சோதனைக்கு காண் பிப்பதற்கு எவரேனும் ஆளை அழைக்கலாம்.

(14) சூழ்நிலைகளில் சமாதான அலுவலரின் சமூகமளித்தலானது அவசியமாக இருக்கமாட்டாதென ஆணையாளர் தலைமையதிபதி அபிப்பிராயப்பட்டாலொழிய, ஆணையாளர் தலைமையதிபதி இப்பிரிவின்கீழ் தத்துவங்களைப் பிரயோகிக்கும் நோக்கங்களுக்காக சமாதான அலுவலரொருவரை சமூகமாயிருப்பதற்கு தேவைப்படுத்துதல் வேண்டும்.

(15) இப்பிரிவில் -

"அதிகாரமளிக்கப்பட்ட நோக்கம்" என்பது

(i) வரிச்செலுத்துகைக்காக ஆளின் பொறுப்பைத் தீர் மானிக்கின்ற நோக்கத்திற்கு தகவலைச் சேகரித்தல்;

(ii) குறித்துரைத்த ஆளொருவரிடமிருந்து வரியைச் சேகரிக்கும் நோக்கத்துக்காக தகவலைச் சேகரித்தல்; அல்லது

(iii) இச்சட்டத்தின்கீழ் குறித்துரைக்கப்பட்ட தவறொன்றிற்கென குறித்துரைக்கப்பட்ட ஆளின் புலனாய்வு அல்லது குற்ற வழக்குத் தொடருதலுடன் தொடர்புபட்ட தகவலைச் சேகரித்தல்; அத்துடன்

''வியாபார வளவுகள்'' என்பது ஏதேனும் வியாபாரத்தை கொண்டுநடாத்துகின்ற இடமொன்றையும், வியாபாரமொன்றுடன் சம்பந்தப்படும் ஏதேனும் செயல் செய்யப்படும் இடமொன்றையும், இருப்புக்களைப் பேணுவதற்கும், பதிவேடுகளை வைத்திருப்பதற்கும், ஒப்பந்தங்களை அல்லது உடன்படிக்கைகளை ஒப்பமிடுவதற்கும் மற்றும் உறுதிகளை அத்தாட்சிப்படுத்துவதற்கும் பயன்படுத்தப்படும் வாழிடம் ஒன்றையும் அத்துடன் வாடிக்கையாளரைச் சந்திப்பதற்காகப் பயன்படும் ஏதேனும் இடத்தையும் உள்ளடக்கும்.

தகவலைப் பெறுவதற்கான அறிவித்தல்.

**123.** (1) இச்சட்டத்தை நிருவகிக்கும் நோக்கத்திற்காக ஆணையாளர் தலைமையதிபதி எழுத்திலான நியாயமான அறிவித்தலைக் கொடுப்பதன்மூலம் வரிசெலுத்துனர் ஒருவரை அல்லது அங்ஙனம் இல்லாத ஒருவரை -

(அ) வேறொரு ஆள் சம்பந்தப்படுகின்ற தகவல் உட்பட, அறிவித்தல் மூலம் தேவைப்படுத்துகின்றதான ஏதேனும் தகவலை கொடுத்துதவுவதற்கு;

(ஆ) அறிவித்தலில் குறிப்பிடப்பட்டிருக்கின்றதான அவ்வாளின் கட்டுப்பாட்டிலான ஆவணங்களை அல்லது வேறு சான்றை பரிசோதிக்கப்படும் நோக்கத்திற்காக அல்லது காண்பிக்கும் நோக்கத்திற்காக அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட நேரத்திலும் இடத்திலும் தோன்றுவதற்கு; அல்லது

(இ) அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்டவாறாக, ஆளினுடைய அல்லது வேறு எவரேனும் ஆளினுடைய வரி அலுவல்கள் தொடர்பாக ஆளினுடைய கட்டுக்காப்பிலுள்ள அல்லது ஆளினுடைய கட்டுப்பாட்டின் கீழுள்ள ஆவணங்கள் யாவும் அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட காலத்தினுள் காண்பிப்பதற்கு,

ஆளொருவரைத் தேவைப்படுத்தலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் பொதுமைக்குப் பங்கமின்றி, ஆணையாளர் தலைமையதிபதி –

(அ) எவரேனும் ஆளின் சார்பில் வைத்திருக்கப்படக் கூடியதான ஏதேனும் வங்கிக்கணக்கின் அல்லது வேறு சொத்துக்களின் விபரங்களை ஆணையாளர் தலைமை யதிபதிக்கு கொடுத்தவுவதற்கு அல்லது அத்தகைய ஏதேனும் வங்கிக்கணக்கின் வங்கிக்கூற்றுகளின் பிரதி ஒன்றினைக் கொடுத்துதவுமாறு;

(ஆ) எவரேனும் ஆளின் வங்கிக்கணக்கு தொடர்பில் வங்கியின் பதிவேடுகளைச் சோதிப்பதற்கு ஆணையாளர் தலைமையதிபதியை அல்லது வரி அலுவலரை அனுமதிக்குமாறு; அல்லது

(இ) எவ்வாட்களுக்கு வைப்புகள் மீது செலுத்தப்படும் வட்டித்தொகை திரளுகின்றதோ அவ்வாட்களின் பெயர்களையும் முகவரிகளையும் சேர்த்து அத்தகைய வட்டியைக் காட்டுகின்ற அட்டவணை ஒன்றை ஆண்டுதோறும் கொடுத்துதவுமாறு அல்லது எவரேனும் ஆள்சார்பில் வங்கியினால் வைத்திருக்கப்படக்கூடிய ஏதேனும் வங்கிக்கணக்கு அல்லது வேறு சொத்து தொடர்பில் ஆணையாளர் தலைமையதிபதிக்கு முன்னர் சான்றளிப்பதற்கு எவரேனும் வங்கியின் அலுவலரை வருகை தருமாறு,

ஏதேனும் வங்கியினைத் தேவைப்படுத்தலாம்.

(3) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் ஆணையாளர் தலைமையதிபதிக்கு பின்வருவன தொடர்பில் தகவலைக் கொடுத்துதவுவதற்கும், ஆவணங்களைக் காண்பிப்பதற்கும் அத்துடன் சான்றளிப்பதற்கும் நீடித்தல் வேண்டும் -

(அ) வதிவற்ற ஆளொருவருக்கு எவரேனும் ஆளினால் வருமானவரி செலுத்தப்படுதல்; அல்லது

(ஆ) ஊழியர் ஒருவருக்கு தொழில்தருநர் ஒருவரால் ஊதியம் செலுத்தப்படுதல், அதிலிருந்து வரி கழிக்கப்படுதல் அத்துடன் அவ்வாறு கழிக்கப்பட்ட ஏதேனும் வரிக்கான கணக்கிடுதல்.

(4) ஆணையாளர் தலைமையதிபதி அல்லது வரி அலுவலர் ஒருவர் இப்பிரிவின் நோக்கங்களுக்காக காண்பிக்கப்படுகின்றதான கணக்குப் புத்தகங்களின் அல்லது வேறு ஆவணங்களின் பிரதிகளை எடுக்கலாம் அல்லது அத்தகைய நடவடிக்கைமுறை ஏதேனும் குற்றவழக்கின் நோக்கங்களுக்காக அல்லது ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டின் உறுதிப்படுத்தல் நோக்கங்களுக்காக அவசியமாக இருக்கக்கூடிய ஆணையாளர் தலைமையதிபதிக்கு தோன்றுகின்றவிடத்து, அவற்றை வைத்திருக்கலாம்.

(5) நூற்றி இருபத்தி இரண்டாம் பிரிவின் (8) ஆம் உட்பிரிவுக் கமைய வங்கி இரகசியத்தன்மை மற்றும் அந்தரங்கத்தன்மையின் ஒப்பந்த முறையிலான கடமை தொடர்பான சட்டம் உட்பட, ஆவணங்களை அல்லது வேறு சான்றை காண்பிப்பது அல்லது அணுகுவது தொடர்பில் அந்தரங்கத்தன்மை, சிறப்புரிமை அல்லது பொதுமக்கள் அக்கறை தொடர்பான ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், இப்பிரிவு பயன் கொண்டதாதல் வேண்டும்.

ஆணைப்பத்திரத்துடன் தேடுகையிடுதலும் கைப்பற்றுதலும்.

**124.** (1) இச்சட்டத்தினை மீறியுள்ளாரா என தீர்மானிக்கும் நோக்கங்களுக்காக, ஆணையாளர் தலைமையதிபதி அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவர் தேடுகையிடுதல் மற்றும் கைப்பற்றுதல் ஆணையொன்றிற்கென நீதிபதியொருவருக்கு அல்லது நீதிவானொருவருக்கு மறுதிறத்தவரின்றி விளக்கம் ஒன்றிற்கு விண்ணப்பம் ஒன்றைச் செய்யலாம்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழான விண்ணப்பமொன்று பின்வருவனவற்றை எடுத்துக்காட்டுதல் வேண்டும் -

(அ) மீறுகை செய்யப்பட்டதாகச் சார்த்தப்படும் இச்சட்டத்தின் ஏற்பாடுகள்;

(ஆ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளை மீறியிருப்பதாக சார்த்தப்பட்ட ஆளின் பெயர்;

(இ) தேடப்படவேண்டிய வளவுகள்; அத்துடன்

(ஈ) நாடிய ஆவணங்கள்.

(3) ஓராம் உட்பிரிவின் கீழான விண்ணப்பமொன்று செய்யப்படுகின்றவிடத்து, நீதிவான் -

(அ) ஆளொருவர் இச்சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டை மீறியுள்ளாரா அல்லது இச்சட்டத்தின்கீழ் தவறொன்றைப் புரிந்துள்ளாரா எனத் தீர்மானிப்பதற்கு தேடுகையிடுதலும் கைப்பற்றுதலும் அவசியமாக இருக்கின்றதென; அத்துடன்

(ஆ) வளவுகளில் காணப்படக்கூடிய சாத்தியமுள்ள (இலத்திரனியல் படிவத்தில் உள்ளடங்கலாக) எவையேனும் ஆவணங்கள் (அ) என்னும் பந்தியில் குறித்துரைக்கப்பட்ட கருமங்கள் பற்றிய சான்றளிக்கலாமென,

நம்புவதற்கான நியாயமான ஏதுக்கள் உள்ளதென அவர் திருப்திப்படுகின்றவிடத்து, தேடுகையிடுதல் மற்றும் கைப்பற்றுதல் ஆணைப்பத்திரம் ஒன்றை வழங்கலாம்.

(4) மூன்றாம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட ஆணைப்பத்திரம் ஒன்று நியாயமான முறையில் செயற்பாட்டுக்கு உகந்தவரை பின்வரும் தகவலை கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) விண்ணப்பம் செய்வதற்கான அடிப்படையாகவுள்ள இச்சட்டத்தின்கீழ் சார்த்தப்பட்ட மீறுகை அல்லது தவறு;

(ஆ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளை மீறியுள்ளவராக அல்லது இச்சட்டத்தின்கீழ் தவறுகை புரிந்தவராகச் சார்த்தப்பட்ட ஆள்

(இ) தேடுகையிடப்படவேண்டிய வளவுகள்; அத்துடன்

(ஈ) தேடுகையின் விடயமாகவிருக்கின்ற ஆவணங்கள்;

ஆணைப்பத்திரத்துடனும் ஆணைப்பத்திரம் இன்றியும் தேடுகையிடுதலொன்றை நிறைவேற்றுதலும் கைப்பற்றுதலும்.

**125.** (1) ஆணையாளர் தலைமையதிபதி அல்லது அதிகார மளிக்கப்பட்ட அலுவலர் ஒருவர் ஆணைப்பத்திரத்தினை காண்பிக்கத் தவறுகின்றவிடத்து, எந்த வளவுகளிற்கு அணுக்க மானது தேடுகையிடுதல் மற்றும் கைப்பற்றுதல் ஆணைப்பத்திரம் ஒன்றின் கீழ் நாடப்பட்டிருக்கின்றதோ அந்த வளவுகளின் சொந்தக்காரர் அல்லது சட்டமுறையான இருப்பாட்சியாளர், வளவுகளிற்கான அணுக்கத்தை மறுக்கலாம்.

(2) எவையேனும் வளவுகளின் சொந்தக்காரரினால் அல்லது சட்டமுறையான இருப்பாட்சியாளரினாலான வேண்டுகோளின்மீது, ஆணைப் பத்திரத்தின்கீழ் தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கு அதிகார மளிக்கப்பட்ட அலுவலரை அனுமதிக்கின்ற ஆணையாளர் தலைமையதிபதியிடமிருந்து எழுத்திலான அதிகாரவளிப் பொன்றைக் காண்பிப்பதற்கு அவ்வலுவலர் இயலாதவராக விருப்பின், அவ் அலுவலர் தேடுகையிடுதல் மற்றும் கைப்பற்றுதல் ஆணைப்பத்திரத்திற்கு அமைய அவ்வளவுகளிற்குள் நுழைதலோ தங்கியிருத்தலோ ஆகாது.

(3) தேடுகையிடுதல் மற்றும் கைப்பற்றுதல் ஆணைப்பத்திரம் ஒன்றின்கீழான தத்துவங்களை நிறைவேற்று வதில், ஆணையாளர் தலைமையதிபதி அல்லது அதிகார மளிக்கப்பட்ட அலுவலர் -

(அ) எந்த நேரத்திலும் அறிவித்தல் இன்றியும் :-

(i) ஆணைப்பத்திரத்தில் குறித்துரைக்கப்பட்ட வளவுகளிற்கு;

(ii) இலத்திரனியல் படிவத்தில் உட்பட, வளவுகளில் அமைந்துள்ள எவையேனும் இயைபான பொருளிற்கு; அத்துடன்

(iii) இயைபான பொருளை கொண்டுள்ள வளவுகளில் அமைந்துள்ள ஏதேனும் தரவு சேமிப்பு சாதனத்திற்கு;

முழுமையானதும் சுதந்திரமானதுமான அணுக்கத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்;

(ஆ) ஆணைப்பத்திரத்தில் குறித்துரைக்கப்பட்ட வளவுகளில் தேடுகை ஒன்றை நடாத்தும்போது இயைபான பொருளைக் கொண்டுள்ளதென ஆணையாளர் தலைமையதிபதி அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் நியாயமாக சந்தேகிக்கின்ற எதனையும் திறக்கலாம் அல்லது திறக்கச்செய்விக்கலாம் அல்லது அகற்றச் செய்விக்கலாம்;

(இ) தரவு சேமிப்பு சாதனம் ஒன்று உட்பட ஏதேனும் இயைபான பொருளின் பிரித்தெடுப்புப் பகுதியொன்றை அல்லது பத்திரம் ஒன்றை அல்லது இலத்திரனியல் பிரதியொன்றை எடுக்கலாம்;

(ஈ) ஏதேனும் இயைபான பொருளைக் கைப்பற்றலாம்;

(உ) தரவு சேமிப்பு சாதனம் ஒன்றின் மீது இயைபான பொருளின் பத்திரம் ஒன்றை அல்லது இலத்திரனியல் பிரதியொன்றை வழங்காவிடின், தேவைப்படும் தகவலைப் பிரதியெடுக்க அவசியமாக இருக்கக்கூடிய வாறான காலப்பகுதிக்கு கைப்பற்றி வைத்திருக்கலாம்; அத்துடன்

(ஊ) ஆணைப்பத்திரத்தில் குறித்துரைக்கப்பட்ட வளவுகளில் எவரேனும் ஆளைத் தேடுகையிடலாம்.

(4) எந்த வளவுகளிற்கு தேடுகையிடல் மற்றும் கைப்பற்றுதல் ஆணைப்பத்திரத்தின் பிரயோகம் தொடர்புறுகின்றதோ அந்த வளவுகளின் சொந்தக்காரர் அல்லது சட்டமுறையான இருப்பாட்சியாளர், பின்வருவன உட்பட ஆணையாளர் தலைமையதிபதிக்கு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு நியாயமான வசதிகள் மற்றும் உதவி எல்லாவற்றையும் வழங்குதல் வேண்டும்:-

(அ) ஆளொருவர் இச்சட்டத்தின் ஏற்பாடுகளை மீறியுள்ளாரா என்பது சம்மந்தமாக வாய்மூலமாக அல்லது எழுத்தில் கேள்விகளுக்கு மறுமொழியளித்தல்;

(ஆ) தேடுகையிடல் மற்றும் கைப்பற்றுதல் ஆணைப் பத்திரம் ஒன்றைப் பிரயோகிக்கையில் எந்த தரவிற்கு அணுக்கம் நாடப்பட்டிருக்கின்றதோ அந்தத் தரவு மீட்பிற்கு அவசியமான தகவலிற்கான அணுக்கத்தை வழங்குதல்.

(5) ஆணையாளர் தலைமையதிபதி அல்லது அதிகாரமளிக்கப் பட்ட அலுவலர் -

(அ) கைப்பற்றப்பட்ட இயைபான பொருளின் எழுத்திலான பொருட்பதிவேடு ஒன்றைச் செய்தல் வேண்டும் என்பதுடன், பொருளின் சொந்தக்காரருக்கு அதன் பிரதி ஒன்றினை வழங்குதலும் வேண்டும்; அத்துடன்

(ஆ) இப்பிரிவின்கீழ் அகற்றப்பட்டு, வைத்திருக்கப்படும் ஏதேனும் இயைபான பொருள் அல்லது தரவு சேமிப்பு சாதனத்திற்கு கையொப்பமிடுதலும் வேண்டும்.

(6) அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவர் தேடுகையிடப்பட வுள்ள ஆளொருவரான அதே பாலைச் சேர்ந்தவராக இருந்தால் மட்டும் ஆளொருவரைத் தேடுகையிடலாம்.

(7) இப்பிரிவின்கீழ், தத்துவங்களைப் பிரயோகிக்கும் நோக் கங்களுக்காக, ஆணையாளர் தலைமையதிபதி அல்லது எவரேனும் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் இப்பிரிவின்கீழ் ஆணைப்பத்திரம் ஒன்றை நிறைவேற்றும் போது சமூகமாயிருப்பதற்கு பொலிசு அலுவலரொருவரைத் தேவைப்படுத்தலாம்.

(8) ஆணையாளர் தலைமையதிபதி அல்லது அதிகார மளிக்கப்பட்ட அலுவலர், இச்சட்டத்தின்கீழ் அல்லது வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் எவையேனும் வழக்கு நடவடிக்கை களின் நோக்கங்களுக்காக ஆவணத்தை தேவைப்படுத்தினா லொழிய, கைப்பற்றுதல் தேதியிலிருந்து ஆறு மாதங்களுக்கு மேற்பட்ட காலப்பகுதியொன்றுக்கு இப்பிரிவின்கீழ் கைப்பற்ற ஏதேனும் ஆவணத்தை வைத்திருத்தலாகாது.

# அத்தியாயம் XI

## வரி விபரத்திரட்டுகள்

வரி விபரத்திரட்டுகள்.

**126.** (1) இச்சட்டத்தின்கீழ் வருமானவரி விதிக்கப்படற்பாலதான ஆள் ஒவ்வொருவரும் குறித்துரைக்கப்பட்ட காலத்தினுள் ஒன்றில் எழுத்துமூலமோ அல்லது இலத்திரனியல் வழிகள் மூலமோ ஆணையாளர் தலைமையதிபதியினால் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய விபரங்களைக் கொண்டுள்ள குறித்துரைக்கப்பட்ட படிவத்தில் வரிவிபரத் திரட்டொன்றை (2) ஆம் உட்பிரிவுக்கிணங்க ஆணையாளர் தலைமையதிபதிக்கு கொடுத்துதவுதல் வேண்டும்.

(2) ஆணையாளர் தலைமையதிபதி பின்வருவனவற்றைக் குறித்துரைக்கலாம் -

(அ) விபரத் திரட்டுக்கான படிவத்தை;

(ஆ) விபரத்திரட்டுப் பற்றி கொடுத்துதவப்பட வேண்டிய தகவல் மற்றும் இணைப்புகள் ஏதேனுமிருப்பின் விபரத்திரட்டுடன் கோப்பிடப்பட வேண்டும் என தேவைப்படுத்தப்பட்ட இணைப்புகள்; அத்துடன்

(இ) கோப்பிடுகை முறை.

(3) ஆணையாளர் தலைமையதிபதி வரிசெலுத்துநர் ஒருவரினால் அல்லது அவர் சார்பில் வழங்கப்பட்ட வரிவிபரத்திரட்டொன்றினால் அல்லது தகவலினால் பிணிக்கப்படுதலாகாது என்பதுடன், ஆணையாளர் தலைமையதிபதி அவருக்கு கிடைக்கக்கூடியதான ஏதேனும் தகவலின் மூலங்களை அடிப்படையாகக் கொண்டு வரிசெலுத்துநரின் வரிப்பொறுப்பொன்றைத் தீர்மானிக்கலாம்.

(4) வரிசெலுத்துநர் ஒருவர் அல்லது வரிசெலுத்துநரின் முறையாக அதிகாரமளிக்கப்பட்ட முகவர் விபரத்திரட்டினது செம்மையையும் பூரணத்தன்மையினையும் அத்தாட்சிப்படுத்தி அதில் கையொப்பமிடுதல் வேண்டும்.

(5) விபரத்திரட்டொன்றினை அல்லது அவ்விபரத்திரட்டின் பாகமொன்று, வரிசெலுத்துனரின் முழுநேர ஊழியர் தவிர வேறு, அங்கீகரிக்கப்பட்ட கணக்காளர் உட்பட வேறு சில ஆளினால் வெகுமதியளிக்கப்படுவதற்காக தயாரிக்கப்பட்டிருந்தவிடத்து, அவ்வேறு ஆளும் விபரத்திரட்டைக் கையொப்பமிடுதல் வேண்டும்.

(6) ஆணையாளர் தலைமையதிபதி தேவைப்படுத்தக்கூடியவாறு வரிசெலுத்தும் காலப்பகுதியொன்றுக்கு முழுமையான அல்லது மேலதிக விபரத்திரட்டுக்கள், அவ்வாளின் சொந்த சார்பில் இருப்பினும், அல்லது வேறு ஆளுக்காக முகவராக அல்லது நம்பிக்கைப்பொறுப்பாளராக இருப்பினும் வரிசெலுத்துநர் அக்காலப்பகுதிக்கு விபரத்திரட்டுகளை சமர்ப்பிக்காதிருப்பினும் கூட, முழுமையான அல்லது மேலதிக விபரத்திரட்டுக்களைக் கோப்பிடுவதற்கு ஏழு நாட்களுக்கு குறையாத காலப்பகுதியொன்று வழங்கப்படவேண்டிய அவ்வாளால் எழுத்திலான அறிவித்தல் மூலம் ஆணையாளர் தலைமையதிபதியிடம் கோப்பிடுவதற்கு ஆளொருவரைத் தேவைப்படுத்தலாம்.

அறிவித்தலைக் கோப்பிடும்படி தேவைப் படுத்துதல்.

**127.** (1) விபரத்திரட்டொன்றை கொடுத்துதவுவதற்கு ஆளாகியுள்ள எவரேனும் ஆள் அவ்வாறு செய்யவில்லை என ஆணையாளர் தலைமையதிபதிக்கு தோன்றுகின்றவிடத்து, அவ் ஆணையாளர் தலைமையதிபதி அறிவித்தலின் சேர்ப்பித்தல் தேதியிலிருந்து பதினான்கு நாட்களுக்கு குறையாததாக இராத அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலத்தினுள் விபரத்திரட்டொன்றைக் கொடுத்துதவுவதற்கு எழுத்திலான அறிவித்தல் மூலம் அத்தகைய ஆளைத் தேவைப் படுத்தலாம்.

(2) இப்பிரிவிலுள்ளதெதுவும் விபரத்திரட்டொன்றைக் கொடுத் துதவுவதற்காக இச்சட்டத்தின்கீழ் ஏற்பாடு செய்யப்பட்ட காலவரை யறைகளை நீடிப்பதாகாது.

விபரத்திரட்டானது முறையான அதிகாரியினால் கொடுத்துதவப் பட்டதாகக் கருதப்படுதல்.

**128.** எவரேனும் ஆளினால் அல்லது அவர் சார்பில் இச் சட்டத்தின்கீழ் கொடுத்துதவப்படவேண்டுமென கொள்ளப்படு கின்ற விபரத்திரட்டு, கூற்று அல்லது படிவம் ஒவ்வொன்றும், விடயத்திற்கேற்றவாறு முரணாக எண்பிக்கப்பட்டாலொழிய, அவ்வாளினால் அல்லது அவ்வாளின் அதிகாரியினால் கொடுத்து

தவப்பட்டிருப்பதாக கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய விபரத்திரட்டை, கூற்றை அல்லது படிவத்தைக் கையொப்பமிடுகின்ற எவரேனுமாள் அதனில் அடங்கியுள்ள எல்லாக் கருமங்கள் பற்றியும் அறிந்திருப்பதாகக் கருதப்படுதலும் வேண்டும்.

**129.** விபரத்திரட்டுத் தொடர்பான இச்சட்டத்தின் ஏற்பாடுகள், அவ்வாளின் சொந்த வரிப் பொறுப்பு தவிர்ந்த கருமங்கள் தொடர்புபட்ட தகவலின் விபரத்திரட்டு ஒன்றை கோப்பிடுவதற்கு இச்சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்ட ஆளொருவருக்கு ஏற்புடையதாதல் வேண்டும். *தகவல் விபரத்திரட்டுகள்.*

**130.** (1) ஆணையாளர் தலைமையதிபதி, வரிசெலுத்துநர் அல்லது விபரத்திரட்டைக் கோப்பிடுவதற்காக தேவைப்படுத்தும் வேறு ஆள் உரிய தேதியில் கால நீடிப்புக்கு விண்ணப்பிக் கின்றவிடத்து, வரிவிபரத்திரட்டொன்றை கோப்பிடுவதற்காக குறித்துரைக்கப்பட்ட காலவரையறையை நீடிக்கலாம். *விபரத்திரட்டுக் களைக் கோப்பிடு வதற்கான காலநீடிப்பு.*

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் காலநீடிப்பு வழங்குகையானது, கொடுப்பனவுக்கான காலநீடிப்பு வெளிப்படையாக வழங்கப் பட்டிருந்தாலொழிய, வரிசெலுத்துகைக்கான உரிய தேதியை பாதித்தலாகாது.

**131.** வரிசெலுத்துநர் ஒருவரினால் அல்லது அவர் சார்பில் கோப்பிடுவதாகக் கொள்ளப்படுகின்றதான வரிவிபரத்திரட்டு ஒன்று முரணாக எண்பிக்கப்பட்டிருந்தாலொழிய, வரிசெலுத்து நரால் அல்லது வரிசெலுத்துநருடைய அதிகாரத்தில் கோப் பிடப்பட்டிருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும். *முறையாகக் கோப்பிடப்பட்ட வரிவிபரத்திரட்டு.*

## அத்தியாயம் XII

### வரிமதிப்பீடுகள்

**132.** (1) வரிசெலுத்தும் காலப்பகுதியொன்றுக்கு அங்கீகரிக்கப்பட்ட படிவத்தில் சுயவரிமதிப்பீட்டு விபரத்திரட்டொன்றைக் கோப் பிட்டுள்ள சுயவரிமதிப்பீட்டு வரிசெலுத்துநர் ஒருவர், இச்சட்டத்தின் எல்லா நோக்கங்களுக்காக, எந்தவரி செலுத்தும் காலப்பகுதிக்கு *சுயவரி மதிப்பீடுகள்.*

விபரத்திரட்டு, தொடர்புறுகின்றதோ அந்தக் காலப்பகுதிக்காக (இல்லாத தொகை ஒன்று உட்பட) விபரத்திரட்டில் தரப்பட்டவாறு செலுத்தப்படற்பாலதான வரித்தொகையின் வரிமதிப்பீடு செய்யப்பட்டிருப்பதாக கருதப்படுதல் வேண்டும்.

(2) வருமானவரிக்கு ஆளாகவுள்ள சுயவரிமதிப்பீட்டு வரி செலுத்துநர் ஒருவர் வரிமதிப்பீட்டாண்டொன்றுக்கு அங்கீகரிக்கப்பட்ட படிவத்தில் ஒருசுயவரிமதிப்பீட்டு விபரத்திரட்டை கோப்பிட்டுள்ளவிடத்தும், அவ்வரிசெலுத்துநருக்கு அவ்வாண்டுக்கு நட்டமொன்று ஏற்பட்டுள்ளவிடத்தும், வரிசெலுத்துநர் இச்சட்டத்தின் எல்லா நோக்கங்களுக்காக, விபரத்திரட்டில் தரப்பட்டுள்ளவாறாக தொகையை உடைய விபரத்திரட்டில் தரப்பட்ட நட்டத்தொகை பற்றிய வரிமதிப்பீட்டை செய்திருப்பதாக கருதப்படுதல் வேண்டும்.

(3) வரிசெலுத்துநர் ஒருவரினால் இலத்திரனியல்முறையில் பூர்த்திசெய்யப்பட்டு கோப்பிடப்படும் அங்கீகரிக்கப்பட்ட படிவத்திலான வரி விபரத்திரட்டொன்று பின்வருவனவற்றைப் பொருட்படுத்தாது சுயவரிமதிப்பீட்டு விபரத்திரட்டாக இருத்தல் வேண்டும் :-

(அ) ஆணையாளர் தலைமையதிபதியினால் வழங்கப்பட முன்னரே நிரப்பப்பட்ட தகவல் படிவத்தில் உள்ளடங்கியுள்ளமை; அல்லது

(ஆ) தகவலானது படிவத்தில் உட்புகுத்தப்பட்டவாறு செலுத்தப்படற்பாலதான வரி இலத்திரனியல் முறையில் கணிப்பிடப்பட்டுள்ளமை.

செலுத்தத்தவறிய வரிமதிப்பீடுகள்.

**133.** (1) வரிசெலுத்துநர் ஒருவர் இச்சட்டத்தின்கீழ் தேவைப்படுத்தப்படுகின்றவாறு வரிசெலுத்தும், காலப்பகுதிக்காக வரி விபரத்திரட்டொன்றை கோப்பிடுவதற்கு தவறியுள்ளவிடத்து, ஆணையாளர் தலைமையதிபதி, கிடைக்கக்கூடியவாறான அத்தகைய சான்றை அடிப்படையாகக் கொண்டும் அவரது சிறந்த தீர்ப்பின்படியும் காலப்பகுதிக்காக வரிசெலுத்தனரால் செலுத்தப்படற்பாலதான (இல்லாத தொகை உள்ளடங்கலாக) வரி மதிப்பீடொன்றைச் (இதனகத்துப் பின்னர் “செலுத்தத்தவறிய வரிமதிப்பீடுகள்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) செய்யலாம்.

(2) ஆணையாளர் தலைமையதிபதி பின்வருவனவற்றைக் குறித்துரைக்கின்ற செலுத்தத்தவறிய வரிமதிப்பீடொன்றுபற்றி எழுத்திலான அறிவித்தல் மூலம் (1) ஆம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட வரிமதிப்பீடொன்றை வரிசெலுத்துநர் ஒருவருக்கு சேர்ப்பித்தல் வேண்டும்:-

(அ) மதிப்பிடப்பட்ட வரித்தொகை;

(ஆ) மதிப்பிடப்பட்டவரி தொடர்பில் செலுத்தப்படற்பாலதான தண்டமாக மதிப்பிடப்பட்ட தொகை (ஏதேனுமிருப்பின்);

(இ) மதிப்பிடப்பட்ட வரி தொடர்பில் செலுத்தப்படற்பாலதான பிந்திய செலுத்துகை வட்டித் தொகை (ஏதேனு மிருப்பின்);

(ஈ) எந்த வரிசெலுத்தும் காலப்பகுதிக்கு வரிமதிப்பீடு தொடர்புறுகின்றதோ அந்தக் காலப்பகுதி;

(உ) அறிவித்தல் சேர்ப்பிக்கும் தேதியிலிருந்து முப்பது நாட்களுக்கு குறையாத தேதி ஒன்றான வரி, தண்டம், மற்றும் வட்டிக் கொடுப்பனவுக்கான உரிய தேதி; அத்துடன்

(ஊ) வரிமதிப்பீட்டை மறுக்கின்ற முறை.

(3) இப்பிரிவின்கீழ் செலுத்தத்தவறிய வரிமதிப்பீடொன்றின் அறிவித்தல் பற்றிய சேர்ப்பித்தலானது, வரிமதிப்பீட்டின்கீழ் செலுத்தப்படற்பாலதான வரிச் செலுத்துகைக்காக இதனகத்துப் பின்னர் ''மூல உரிய தேதி'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) உரிய தேதியை மாற்றாது என்பதுடன், பிந்திய கொடுப்பனவுக்கான தண்டம் மற்றும் பிந்திய கொடுப்பனவு வட்டி என்பன மூலஉரிய தேதியை அடிப்படையாகக் கொண்டு செலுத்தப்படற்பாலதாக இருத்தல் வேண்டும்.

(4) இப்பிரிவானது வரிமதிப்பீட்டின்மூலம் சேகரிக்கப்பட்டதான வரி ஒன்றின் நோக்கங்களுக்காக மட்டும் ஏற்புடையதாதல் வேண்டும்.

(5) செலுத்தத்தவறிய வரிமதிப்பீடானது ஏதேனும் காலத்தில் செய்யப்படலாம்.

(6) இப்பிரிவிலுள்ள எதுவும் எந்த வரிவிபரத்திரட்டு இப் பிரிவின்கீழ் சேர்ப்பிக்கப்பட்ட செலுத்தத்தவறிய வரிமதிப்பீடு தொடர்புறுத்துகின்றதோ அந்த வரிவிபரத்திரட்டை கோப்பிடு வதற்கு தேவைப்படுத்தப்படுவதிலிருந்து வரிசெலுத்துநர் ஒருவரை விடுவிக்காது.

(7) செலுத்தத்தவறிய வரிமதிப்பீடு ஒன்று எந்த வரிசெலுத்தும் காலப்பகுதிக்கு வரிசெலுத்துநர்மீது சேர்ப்பிக்கப்பட்டுள்ளதோ அந்த காலப்பகுதிக்கு பின்னர் வரிசெலுத்துநர் ஒருவரால் கோப்பிடப்பட்ட வரிவிபரத்திரட்டு (2) ஆம் உட்பிரிவிற்கு அமைய சுயவரிமதிப்பீட்டு விபரத்திரட்டு ஒன்றாதல் ஆகாது.

*முற்கூட்டிய வரிமதிப்பீடுகள்.*

**134.** (1) இரண்டாம் உட்பிரிவிற்கு அமைய ஆணையாளர் தலைமையதிபதி கிடைக்கக்கூடியவாறான அத்தகைய சான்றை அடிப்படையாகக் கொண்டும் அவரது சிறந்த தீர்ப்பின்படியும் வரிசெலுத்தும் காலப்பகுதி ஒன்றுக்கு வரிசெலுத்துநரினால் செலுத்தப்படற்பாலதான வரிமதிப்பீடொன்றை (இதனகத்துப் பின்னர் "முற்கூட்டிய வரிமதிப்பீடு" எனக் குறிப்பிடு செய்யப்படும்) செய்யலாம்.

(2) ஓராம் உட்பிரிவானது :-

(அ) வரிசெலுத்தும் காலப்பகுதிக்கு வரிவிபரத் திரட்டொன்றை வரிசெலுத்துநர் கோப்பிடாத போது; அத்துடன்

(ஆ) வரியானது வரிமதிப்பீட்டின் மூலம் சேகரிக்கப்படுகின்ற போது

மட்டும் ஏற்புடையதாதல் வேண்டும்.

(3) முற்கூட்டிய வரிமதிப்பீடானது :-

(அ) எந்த தேதியன்று வரிசெலுத்தும் காலப்பகுதிக்கு வரிசெலுத்துநரது வரிவிபரத்திரட்டு கொடுக்குமதி யாகவுள்ளதோ அத்தேதிக்கு முன்னர் செய்யப்படலாம்; அத்துடன்

(ஆ) எந்தத் தேதியில் முற்கூட்டிய வரிமதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதோ அத்தேதியில் வலுவிலுள்ள சட்டத்திற்கிணங்க செய்யப்படுதல் வேண்டும்.

(4) ஆணையாளர் தலைமையதிபதி பின்வருவனவற்றில் குறித்துரைக்கின்ற முற்கூட்டிய வரிமதிப்பீடுபற்றி எழுத்திலான அறிவித்தல் மூலம் (1) ஆம் உட்பிரிவின்கீழ் வரிமதிப்பிடப்பட்டு வரிசெலுத்துநர் ஒருவருக்கு சேர்ப்பித்தல் வேண்டும் :-

(அ) மதிப்பிடப்பட்ட வரித்தொகை;

(ஆ) மதிப்பிடப்பட்ட வரி தொடர்பில் செலுத்தப்படற்பாலதான தண்டமாக மதிப்பிடப்பட்ட தொகை (ஏதேனுமிருப்பின்).

(இ) எந்த வரிசெலுத்தும் காலப்பகுதிக்கு வரிமதிப்பீடு தொடர்புபடுகின்றதோ அந்தக் காலப்பகுதி;

(ஈ) வரி மற்றும் தண்டக் கொடுப்பனவுக்கான உரிய தேதி, இது வரிசெலுத்தும் காலப்பகுதிக்கு வேறு வகையில் செலுத்தவேண்டியதாக இருக்கக்கூடிய வரிக்கு முன்னரான தேதி ஒன்றாக இருக்கலாம்;

(உ) வரிமதிப்பீட்டை ஆட்சேபிக்கும் முறை.

(5) ஆணையாளர் தலைமையதிபதி வரி மற்றும் செலுத்த வேண்டிய தண்டப்பணத்தை உடனடியாக செலுத்தப்படற்பாலதாதல் வேண்டுமென முற்கூட்டிய வரிமதிப்பீட்டு அறிவித்தல் ஒன்றில் குறித்துரைக்கலாம்.

(6) முற்கூட்டிய வரிமதிப்பீடு ஒன்று எந்த வரிசெலுத்தும் காலப்பகுதிக்கு முற்கூட்டிய வரிமதிப்பீடு தொடர்புறுகின்றதோ அக்காலப்பகுதியின் முழுமை தொடர்பில் வரிசெலுத்துநர் மதிப்பீடு செய்திருக்கின்றாற் போன்று திருத்தப்பட்ட வரிமதிப்பீட்டுக்கு அமைந்ததாக இருக்கலாம்.

(7) இப்பிரிவில் உள்ள எதுவும் எந்த வரிவிபரத்திரட்டுக்கு இப்பிரிவின்கீழ் சேர்ப்பிக்கப்பட்ட முற்கூட்டிய வரிமதிப்பீடு தொடர்புறுகின்றதோ அந்த வரிவிபரத்திரட்டைக் கோப்பிடு வதற்கான தேவைப்பாடுகளிலிருந்து வரிசெலுத்துநர் ஒருவரை விடுவிக்காது.

(8) முற்கூட்டிய வரிமதிப்பீடொன்று எந்த வரிசெலுத்தும் காலப்பகுதிக்கு வரிசெலுத்துநர்மீது சேர்ப்பிக்கப்பட்டுள்ளதோ அந்தக் காலப்பகுதியின் பின்னர் வரிசெலுத்துநர் ஒருவரால் கோப்பிடப்பட்ட வரிவிபரத்திரட்டு சுயவரிமதிப்பீட்டு விபரத்திரட்டு ஒன்றாதல் ஆகாது.

திருத்தப்பட்ட அல்லது மேலதிக வரிமதிப்பீடுகள்.

**135.** (1) இப்பிரிவிற்கமைய ஆணையாளர் தலைமையதிபதி பின்வருவனவற்றை உறுதிப்படுத்துவதற்கு கிடைக்கக்கூடிய வாறான அத்தகைய சான்றை அடிப்படையாகக் கொண்டும், அவரது சிறந்த தீர்ப்பின்படியும் வரிசெலுத்துகைக் காலம் ஒன்றிற்கு வரிசெலுத்துநர் ஒருவரின் (இப்பிரிவில் "மூல வரிமதிப்பீடு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) மூலவரிமதிப்பீட்டின்படியும் மாற்றங்களை அல்லது சேர்ப்புகளை செய்வதன்மூலம் வரிமதிப்பீடொன்றைத் திருத்தலாம் -

(அ) இச்சட்டத்தின்கீழ் முன்கொணரப்பட்ட நட்டமொன்றின் விடயத்தில் வரிசெலுத்துநர் வரிசெலுத்துகைக் காலப்பகுதிக்கு முன்கொணரப்பட்ட சரியான நட்டத் தொகை தொடர்பில் மதிப்பீடு செய்துள்ளார் எனவும்; அல்லது

(ஆ) வேறு ஏதேனும் விடயத்தில் வரிசெலுத்துநர் எந்தவரி செலுத்துகைக் காலப்பகுதிக்கு மூலவரி மதிப்பீடு தொடர்புறுகின்றதோ அந்த காலப்பகுதி தொடர்பில் (இல்லாத தொகை உட்பட) செலுத்தப்படற்பாலதான சரியான வரித்தொகைக்கு ஆளாகியுள்ளாரெனவும்.

(2) மூன்றாம் உட்பிரிவிற்கு அமைய, ஆணையாளர் தலைமை யதிபதி:-

(அ) ஏதேனும் நேரத்தில் வரிசெலுத்துநரால் அல்லது வரிசெலுத்தநர் சார்பில் மோசடி அல்லது பாரிய அல்லது வேண்டுமென்ற புறக்கணிப்புபின் விடயத்தில்; அல்லது

(ஆ) நான்கு ஆண்டு காலத்தினுள் பின்வரும் வேறேதேனும் விடயத்தில்:-

(i) சுயவரிமதிப்பீடொன்றுக்கு, சுயவரிமதிப்பீட்டு வரிசெலுத்துநர் எந்த சுயவரிமதிப்பீட்டு விபரத் திரட்டிற்கு சுயவரிமதிப்பீடு தொடர்புறுகின்றதோ அந்த சுயவரிமதிப்பீட்டு விபரத்திரட்டு கோப் பிடப்படுகின்றதான தேதி; அல்லது

(ii) வேறேதேனும் வரிமதிப்பீட்டிற்காக ஆணையாளர் தலைமையதிபதி வரிசெலுத்துநர் மீதான வரிமதிப்பீட்டு அறிவித்தலை சேர்ப்பித்துள்ள தேதி.

(1) ஆம் உட்பிரிவின்கீழ் வரிமதிப்பீடொன்றைத் திருத்தலாம்

(3) நான்காம் உட்பிரிவிற்கமைய, ஆணையாளர் தலைமையதிபதி (1) ஆம் உட்பிரிவின்கீழ் வரிசெலுத்துநர் ஒருவர்மீது திருத்தப்பட்ட வரிமதிப்பீடொன்றின் அறிவித்தல் ஒன்றை சேர்ப்பித்துள்ளவிடத்து, ஆணையாளர் தலைமையதிபதி பின்வருவனவற்றுள் எது பிந்தியதோ அக்காலத்தினுள் எந்த மூலவரிமதிப்பீட்டிற்கு திருத்தப்பட்ட வரிமதிப்பீடு தொடர்புறுகின்றதோ அந்த மூலவரி மதிப்பீட்டை மேலும் திருத்தலாம் -

(அ) நான்கு ஆண்டுகளின் பின்னர்:-

(i) சுயவரிமதிப்பீடொன்றுக்கு, வரிசெலுத்துநர் எந்த சுயவரிமதிப்பீட்டு விபரத்திரட்டிற்கு சுயவரி மதிப்பீடு தொடர்புறுகின்றதோ அந்த சுயவரி மதிப்பீட்டு விபரத்திரட்டு கோப்பிடப்படுகின்ற தான தேதி; அல்லது

(ii) வேறேதேனும் வரிமதிப்பீட்டிற்காக ஆணையாளர் தலைமையதிபதி வரிசெலுத்துநர் மீதான மூலவரிமதிப்பீட்டு அறிவித்தலை சேர்ப்பித்துள்ள தேதி; அல்லது

(ஆ) ஆணையாளர் தலைமையதிபதி வரிசெலுத்துநருக்கு திருத்தப்பட்ட வரி மதிப்பீட்டு அறிவித்தலை சேர்ப்பித்து ஓராண்டின் பின்னர்.

(4) மூன்றாம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தி எந்தவிடத்திற்கு ஏற்புடையதாகின்றதோ அந்த ஏதேனும் விடயத்தில் ஆணையாளர் தலைமையதிபதி மூலவரிமதிப்பீட்டிற்கு திருத்தப்பட்ட வரிமதிப்பீட்டில் செய்யப்பட்ட மாற்றங்கள் அல்லது சேர்ப்புக்களின் திருத்தத்திற்கு மட்டுப்படுத்தப்படுகின்றது.

(5) மூன்றாம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தி ஏற்புடையதாகின்றவிடத்தும் ஆணையாளர் தலைமையதிபதி இப்பிரிவின்கீழ் திருத்தப்பட்ட அல்லது மேலதிக வரிமதிப்பீடொன்றை செய்துள்ளவிடத்தும், அவர் பின்வருவனவற்றைக் குறித்துரைக்கின்ற திருத்தப்பட்ட வரிமதிப்பீடு பற்றி எழுத்திலான அறிவித்தலை வரிசெலுத்துநருக்கு சேர்ப்பித்தல் வேண்டும்.

(அ) எந்த மூலவரிமதிப்பீட்டிற்கு திருத்தப்பட்ட வரிமதிப்பீடு தொடர்புறுகின்றதோ அந்த மூலவரிமதிப்பீடு;

(ஆ) மதிப்பிடப்பட்ட வரித்தொகை;

(இ) மதிப்பிடப்பட்டவரி தொடர்பில் செலுத்தப்படற்பாலதான தண்டமாக மதிப்பிடப்பட்ட தொகை (ஏதேனுமிருப்பின்);

(ஈ) மதிப்பிடப்பட்ட வரி தொடர்பில் செலுத்தப்படற்பாலதான பிந்திய கொடுப்பனவு வட்டித் தொகை (ஏதேனுமிருப்பின்);

(உ) எந்த வரிசெலுத்தும் காலப்பகுதிக்கு வரிமதிப்பீடு தொடர்புறுகின்றதோ அந்தக் காலப்பகுதி;

(ஊ) அறிவித்தல் சேர்ப்பிக்கும் தேதியிலிருந்து முப்பது நாட்களுக்கு குறையாத தேதி ஒன்றான வரி, தண்டம், மற்றும் வட்டிக் கொடுப்பனவுக்கான உரிய தேதி; அத்துடன்

(எ) வரிமதிப்பீட்டை ஆட்சேபிக்கின்ற முறை.

(6) இப்பிரிவின்கீழ் திருத்தப்பட்ட வரிமதிப்பீடொன்றின் அறிவித்தல் பற்றிய சேர்ப்பித்தலானது இச்சட்டத்தின் கீழ் தீர்மானிக்கின்றவாறு வரிமதிப்பீட்டின்கீழ் செலுத்தப்படற்பால தான வரிச் செலுத்துகைக்காக (''மூலஉரிய தேதி'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) மூலஉரிய தேதியை மாற்றாது என்பதுடன் பிந்திய கொடுப்பனவுக்கான தண்டம் மற்றும் பிந்திய கொடுப்பனவு வட்டி என்பன மூலம் உரிய தேதியை அடிப்படையாகக் கொண்டு செலுத்தப்படற்பாலதாக இருத்தல் வேண்டும்.

**136.** (1) சுயவரிமதிப்பீட்டு விபரத்திரட்டொன்றை கோப்பிட்டுள்ள வரிசெலுத்துநர் ஒருவர் ஆணையாளர் தலைமையதிபதியினால் சுயவரிமதிப்பீட்டிற்கான திருத்தம் ஒன்றைச் செய்வதற்காக ஆணையாளர் தலைமையதிபதிக்கு விண்ணப்பிக்கலாம். சுயவரிமதிப் பீடொன்றுக்கான திருத்தம் ஒன்றைச் செய்வதற்கான விண்ணப்பம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழான விண்ணப்பம் ஒன்று :

(அ) வரிசெலுத்துநர், சுயவரிமதிப்பீட்டை சரிசெய்வதற்கு செய்யப்பட வேண்டுமென தேவைப்படுகின்றதான என நம்புவதற்கான திருத்தங்களையும் அத்திருத்தங்களுக் கான காரணங்களையும் குறிப்பிடல் வேண்டும்; அத்துடன்

(ஆ) நூற்றி முப்பத்தைந்தாம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் (i) ஆம் உட்பந்தியில் குறித்துரைக் கப்பட்ட காலப்பகுதியினுள் ஆணையாளர் தலைமையதி பதியிடம் கோப்பிடப்படுதல் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் விண்ணப்பம் ஒன்று செய்யப்பட் டுள்ளவிடத்து ஆணையாளர் தலைமையதிபதி வரிசெலுத்து நருக்கான அறிவித்தல்மூலம் சுயவரிமதிப்பீட்டை திருத்துவதற்கு அல்லது விண்ணப்பத்தை மறுப்பதற்கான முடிபொன்றை ஆக்கலாம்.

(4) ஆணையாளர் தலைமையதிபதி பின்வரும் சுயவரிமதிப்பீட்டுத் திருத்தத்திற்கு முடிபு ஒன்றைச் செய்கின்ற போது;-

(அ) திருத்தப்பட்ட வரிமதிப்பீடானது 135 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவிற்கு இணங்க செய்யப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) திருத்தப்பட்ட வரிமதிப்பீடு பற்றிய அறிவித்தலானது 135 ஆம் பிரிவின் (5) ஆம் உட்பிரிவிற்கு இணங்க வரிசெலுத்துநருக்கு சேர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(5) ஆணையாளர் தலைமையதிபதி (1) ஆம் உட்பிரிவின்கீழ் விண்ணப்பம் ஒன்றை மறுப்பதற்கான முடிபொன்றைச் செய்கின்றவிடத்து அவர் முடிபுக்கான காரணங்களுடன் முடிபின் எழுத்திலான அறிவித்தலை வரிசெலுத்துநருக்கு சேர்ப்பித்தல் வேண்டும்.

(6) ஆணையாளர் தலைமயதிபதி (1) ஆம் உட்பிரிவின்கீழ் கோப்பிடப்பட்ட விண்ணப்பம் ஒன்றின் மீதான முடிபொன்றை தொண்ணூறு நாட்களினுள் மேற்கொள்ளாதவிடத்து ஆணையாளர் தலைமையதிபதி:-

(அ) விண்ணப்பமொன்றை அனுமதிக்காதிருப்பதற்கான முடிபொன்றைச் செய்திருப்பதாக; அத்துடன்

(ஆ) விண்ணப்பம் கோப்பிடப்பட்டபின்னர் பத்தொன்பதாவது நாளன்று முடிவுபற்றிய அறிவித்தலுடன் வரிசெலுத்து நருக்கு சேர்ப்பிக்கப்பட்டிருப்பதாகக்,

கருதப்படுதல் வேண்டும்.

## அத்தியாயம் XIII

### ஆட்சேபனைகளும் மேன்முறையீடுகளும்

**137**. இவ்வத்தியாயத்தின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டவாறு தவிர - ஆட்சேபனைகள்.

(அ) இச்சட்டத்தின்கீழ் வரிசெலுத்துகை தொடர்பில் ஆக்கப் பட்ட முடிபு எதுவும் வரிமேன்முறையீட்டு ஆணைக் குழுவில், ஏதேனும் நீதிமன்றமொன்றில் அல்லது நியாயசபையில் அல்லது வேறு ஏது மீதான வேறு வழக்கு நடவடிக்கையில் பிணக்கிலிடப்படுதல் ஆகாது; அத்துடன்

(ஆ) வரிசெலுத்துநர் ஒருவர் தொடர்பில் ஆணையாளர் தலைமையதிபதியினால் மேற்கொள்ளப்பட்ட வரிமதிப்பீடு ஒவ்வொன்றினதும் தொகையும் விபரங்களும் சரியானதாகக் கொள்ளப்படுதல் வேண்டுமென்பதுடன் வரிசெலுத்துநரின் பொறுப்பானது அதற்கிணங்க தீர்மானிக்கப்படுதலும் வேண்டும்.

**138.** இவ்வத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுக்குமிடையில் முரண்பாடு அல்லது ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் இச்சட்டத்தின் ஏற்பாடுகள் மேலோங்கி நிற்றல் வேண்டும். இச்சட்டம் மேலோங்கல்.

**139.** (1) வரிமதிப்பீட்டுடன் அல்லது வேறு முடிபுடன் அதிருப்தியுறுகின்ற வரிசெலுத்துநர் ஒருவர் முடிபை மீளாய்வு செய்வதற்கு ஆணையாளர் தலைமையதிபதியைக் கோரலாம். நிருவாக மீளாய்வு.

(2) வரிசெலுத்துநருக்கு முடிபொன்று அறிவிக்கப்பட்ட பின்னர் முப்பது நாட்களுக்குப் பிந்தாத காலத்தினுள் எழுத்தில் ஆணையாளர் தலைமையதிபதிக்கு மீளாய்வுக்கான வேண்டுதல் ஒன்று செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன் அது எந்த ஏதுக்களின் மீது செய்யப்படுகின்றதோ, அவ்வேதுக்களை விபரமாகக் குறித்துரைத்தலும் வேண்டும்.

(3) செய்யப்படவேண்டும் என தேவைப்படுத்தப்படும் விபரத்திரட்டொன்று இல்லாது, வரிமதிப்பீட்டிற்கு எதிரான வேண்டுகோள் ஆட்சேபனை ஒன்றாக இருக்குமிடத்து, ஆட்சேபனை தொடர்பான வேண்டுகோள்பற்றிய அறிவித்தல் முறையாகச் செய்யப்பட்ட விபரத்திரட்டு ஒன்றுடன் சேர்த்து அனுப்பப்படல் வேண்டும்.

(4) ஒவ்வொரு வேண்டுகோளும் அதனது முப்பது நாட்களினுள் கிடைக்கப்பெற்றதும் அது கிடைக்கப்பட்டதாக அறிவிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் அவ்வாறு அறிவிக்கப்படுமிடத்து, அறிவிப்புக் கடிதத் தேதி இப்பிரிவின் நோக்கத்திற்காக அத்தகைய வேண்டுகோள் கிடைக்கப்பட்ட தேதியாக இருப்பதாக கருதப்படல் வேண்டும்.

(5) ஆணையாளர் தலைமையதிபதி வரிசெலுத்துநரது வேண்டுகோளைக் கவனத்திற்கெடுத்தல் வேண்டும் என்பதுடன், ஆணையாளர் தலைமையதிபதினுடைய முடிபையும் அம்முடிபிற்கான காரணங்களையும் எழுத்தில் அறிவித்தல் வேண்டும். வரிசெலுத்துநரது வேண்டுகோள் வரிமதிப்பீடு அல்லது வேறு முடிபை மேற்கொண்ட அதிகாரமளிக்கப்பட்ட வரி அலுவலர் தவிர வேறு வரி அலுவலரினால் கவனத்திற் கொள்ளப்படுதல் வேண்டும்.

(6) ஆணையாளர் தலைமையதிபதி உளதாம் வரிமதிப்பீடொன்றை உறுதிப்படுத்துதல்மூலம் அல்லது இச்சட்டத்திற்கிணங்க திருத்தப்பட்ட வரிமதிப்பீடொன்றை (இல்லாத தொகை உட்பட) மேற்கொள்வதன்மூலம் அல்லது அவ்முடிபுக்கு பயன்கொடுப்பதற்கு அத்தகைய வேறு அவசியமான நடவடிக்கையை எடுப்பதன்மூலம் (5) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட முடிபிற்கு பயன்கொடுத்தல் வேண்டும்.

(7) ஆணையாளர் தலைமையதிபதி வேண்டுகோள் தொடர்பில் வரிசெலுத்துநரின் அல்லது வேறு எவரேனும் ஆளின் சான்றை விசாரிக்கின்றவிடத்து, அத்தகைய சான்றின் பதிவேடு ஒன்று பேணப்படுதல் வேண்டும் அல்லது பேணப்படச் செய்விக்கப்படல் வேண்டும்.

(8) இரண்டாம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவை எப்படியிருப்பினும் வரிசெலுத்துநர் இலங்கையில் இல்லாமை காரணமாக, சுகவீனம் காரணமாக அல்லது வேறு நியாயமான காரணம் காரணமாக (2) ஆம் உட்பிரிவில் விதித்துரைக்கப்பட்ட நிகழ்வின் முப்பது நாட்களினுள் வேண்டுகோளைச் செய்வதிலிருந்து தடுக்கப்பட்டுள்ளார் எனவும் வரிசெலுத்துநரது பக்கத்தில் நியாயமற்ற காலதாமதம் எதுவும் இருந்திருக்கவில்லை எனவும் ஆணையாளர் தலைமையதிபதியைத் திருப்தியுறச் செய்வதன்மீது நிருவாக மீளாய்வுக்கான வேண்டுகோள் ஒன்றைச் செய்யலாம்.

*நிருவாக மீள்பரிசீலனையிலிருந்தான மேன்முறையீடு.*

**140.** (1) நூற்றி முப்பத்தொன்பதாம் பிரிவின்கீழ் மீள்பரிசீலனையின் நிருவாக மீளாய்வின் முடிபொன்றினால் இன்னலுற்ற ஆளொருவர் வரிமேன்முறையீடுகள் ஆணைக்குழுவுக்கு வரிமதிப்பீட்டிற்கு எதிராக மேன்முறையீடு செய்யலாம்.

(2) வரி மேன்முறையீடுகள் ஆணைக்குழுவிற்கான மேன்முறையீடு ஒன்று நிருவாக மீளாய்வுக்கான வேண்டுகோள் ஒன்று முதலாவதாக மேற்கொள்ளப்பட்டிருந்தாலொழிய செய்யப்படலாகாது; அத்துடன்–

(அ) முடிபொன்று ஆணையாளர் தலைமையதிபதியிடமிருந்து பெறப்பட்டுள்ளது; அல்லது

(ஆ) நிருவாக மீளாய்வுக்கான வேண்டுகோள் மேற்கொள்ளப் பட்டதிலிருந்து தொண்ணூறு நாட்கள் கழிந்துள்ளது.

(3) மேன்முறையீட்டாளருக்கு மிகையான கட்டணம் விதிக்கப் பட்டுள்ளது என வரிமேன்முறையீடுகள் ஆணைக்குழு திருப்திப் படுகின்றவிடத்து, அது மிகைக்கட்டணத் தொகையினால் வரி மதிப்பீட்டுத் தொகையை குறைக்கலாம் என்பதுடன் மேன்முறை யீட்டாளர் குறைவான கட்டணத்தை விதித்திருக்கின்றார் என திருப்திப்படுமிடத்து குறைவாக விதிக்கப்பட்ட தொகையினால் வரிமதிப்பீட்டு தொகையை அதிகரிக்கலாம் அல்லது வரிமதிப்பீட்டை உறுதிப்படுத்தலாம் அல்லது வறிதாக்கலாம்.

(4) அத்தியாயம் XVI இல் உள்ளடங்கியது எதுவும் எவ்வா றிருப்பினும் மேன்முறையீடு மீதான அதன் முடிபிற்கிணங்க வரியானது அறவிடப்பட முடியாதாகலாம் என வரிமேன்முறையீட்டு ஆணைக்குழு திருப்திப்படுமிடத்து, வரிமேன்முறையீட்டு ஆணைக் குழு (ஏதேனுமிருப்பின்) வரிசெலுத்துகைக்காக பிணையத்தை கொடுத்துதவுவதற்கு மேன்முறையீட்டாளரை தேவைப்படுத்தலாம். இது முறையாக இருப்பதாக வரிமேன்முறையீட்டு ஆணைக்குழு கருதக்கூடியவாறு மேன்முறையீட்டாளரால் செலுத்தப்படற்பாலதாக வரலாம்.

(5) இப்பிரிவின் கீழான மேன்முறையீட்டு அறிவித்தல் 139 ஆம் பிரிவின் கீழ் ஆணையாளர் தலைமையதிபதியின் முடிவுத் தேதியிலிருந்து முப்பது நாட்களினுள் ஆணையாளர் தலைமை யதிபதிக்கான பிரதியொன்றுடன் வரிமேன்முறையீட்டு ஆணைக் குழுவிற்கு எழுத்தில் வழங்கப்படுதல் வேண்டும்.

(6) ஐந்தாம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவை எப்படியிருப்பினும் மேன்முறையீட்டாளர் இலங்கையில் இல்லாமை காரணமாக, சுகவீனம் காரணமாக அல்லது வேறு நியாயமான காரணம் காரணமாக (2) ஆம் உட்பிரிவில் தேவைப்படுத்தப்பட்டவாறு முப்பது நாட்களினுள் மேன்முறையீட்டு அறிவித்தலொன்றை வழங்குவதிலிருந்து தடுக்கப்பட்டுள்ளார் எனவும் மேன்முறை யீட்டாளரது பக்கத்தில் நியாயமற்ற காலதாமதம் எதுவும் இருந்திருக்க வில்லை எனவும் வரிமேன்முறையீட்டு ஆணைக்குழுவைத் திருப்திப்படுத்துவதன் மேல் ஒரு வரிமதிப்பீட்டுக்கெதிராக அல்லது வேறு முடிபுக்கெதிராக மேன்முறையீடு செய்யலாம்.

**எண்பிப்பதற்கான பொறுப்பு.**

**141.** எண்பிப்பதற்கான பொறுப்பானது வரிமதிப்பீடு பிழையானதென்பதைக் காட்டுவதற்கு வரிமதிப்பீட்டிற்கான ஆட்சேபிப்பொன்றைச் செய்கின்ற வரிசெலுத்துநரை அல்லது ஆளை சார்ந்ததாக இருத்தல் வேண்டும்.

**மேன்முறையீடுகள், தொகைகளின் சேகரிப்பை இடைநிறுத்துவதில்லை.**

**142.** வரிமதிப்பீட்டு நிருவாக மீள்பரிசீலனை வேண்டுகோள் ஒன்று கோப்பிடப்பட்டுள்ளமை அல்லது வரிமதிப்பீடொன்றுக்கு எதிராக வரிமேன்முறையீட்டு ஆணைக்குழுவிற்கு வரிசெலுத்துநர் ஒருவர் மேன்முறையீடு செய்துள்ளமை எவ்வாறிருப்பினும், வரி மதிப்பீட்டின்கீழ் செலுத்தப்படற்பாலதான வரி ஆணையாளர் தலைமையதிபதி 151 ஆம் பிரிவின்கீழ் காலநீடிப்பை வழங்கியிருந்தாலொழிய வருமதியாகவும் செலுத்தப்படற்பாலதாகவும் இருத்தல் வேண்டும் என்பதுடன் மீளாய்வுக்கு அல்லது மேன்முறையீட்டுக்கு வேண்டுகோளைப் பொருட்படுத்தாது அறவிடவும் படலாம்.

**வரிமதிப்பீட்டின் இறுதியாந்தன்மை.**

**143.** (1) நூற்றி முப்பத்தாறாம் பிரிவின் கீழும் (2) ஆம் உட்பிரிவிற்கு அமையவும் புதிய அல்லது மீளாய்வு செய்யப்பட்ட வரி மதிப்பீடொன்றை வழங்குவதற்கான ஆணையாளர் தலைமை யதிபதியின் உரிமைக்கு அமைய மீளாய்வுக்கான வேண்டுகோள் எதுவும் 139 ஆம் பிரிவினால் அனுமதிக்கப்பட்ட காலத்தினுள் செய்யப்படாதிருப்பின் அவ்வரிமதிப்பீடானது இறுதியானதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(2) வரிமதிப்பீடொன்று ஓராம் உட்பிரிவின்கீழ் இறுதியான தெனக் கொள்ளப்படுமாயின் வரிசெலுத்துநர் 136 ஆம் பிரிவின்கீழ் திருத்தப்பட்ட விபரத்திரட்டொன்றை நேரகாலத்துடன் கோப்பிட்டால், திருத்தப்பட்ட விபரத்திரட்டின் கோப்பிடுகையானது, ஆனால் திருத்தப்பட்ட விபரத்திரட்டில் காட்டப்பட்ட வரி மதிப்பிடப்பட்ட வரியை விஞ்சுமாயின் மட்டுமே வரிமதிப்பீட்டினை மீளாய்வு செய்கின்ற பயனைக் கொண்டிருக்கும்.

வரிமேன் முறையீட்டு ஆணைக்குழுவின் முடிபுக்கெதிரான மேன்முறையீடு.

**144.** (1) வரிமேன்முறையீட்டு ஆணைக்குழுவின் முடிபொன்றுடன் அதிருப்தியுறும் வரிமேன்முறையீட்டு ஆணைக்குழுவின் முன்னரான வழக்கு நடவடிக்கையின் எவரேனும் திறத்தவர், முடிபு அறிவிக்கப்பட்ட பின்னர் மூன்று மாதங்களினுள் மேன்முறையீட்டு நிதிமன்றத்தில் மேன்முறையீட்டு அறிவித்தலொன்றைக் கோப்பிடலாம்; அத்துடன் அவ்வாறு மேன்முறையீடு செய்கின்ற திறத்தவர் வரிமேன்முறையீட்டு ஆணைக்குழுவின் முன்னர் வழக்கு நடவடிக்கைக்கான வேறு திறத்தவர் மீது மேன்முறையீட்டு அறிவித்தலின் பிரதியொன்றைச் சேர்ப்பித்தல் வேண்டும்.

(2) வரிமேன்முறையீட்டு ஆணைக்குழுவிற்கு மேன்முறையீட்டு வேண்டுகோள் ஒன்று முதலாவதாக செய்யப்பட்டிருந்தாலொழிய மேன்முறையீட்டு நிதிமன்றத்துக்கான மேன்முறையீடொன்று மேற்கொள்ளப்படலாகாது, அத்துடன் -

(அ) வரிமேன்முறையீட்டு ஆணைக்குழுவிடமிருந்து முடிபொன்று பெறப்பட்டுள்ளது; அல்லது

(ஆ) வரிமேன்முறையீட்டு ஆணைக்குழுவுக்கான மேன்முறையீட்டிற்கு வேண்டுகோள் செய்யப்பட்டதில் இருந்து தொண்ணூறு நாட்கள் கழிந்துள்ளது, அத்துடன் மேன்முறையீட்டுக்கான வேண்டுகோளுக்கான பதில் எதுவும் வரிமேன்முறையீட்டு ஆணைக்குழுவிடமிருந்து பெறப்பட்டு இருக்கவில்லை.

(3) மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு வரிமேன்முறையீட்டு ஆணைக்குழுவின் முடிபுக்கெதிரான மேன்முறையீடொன்று சட்டப்பிரச்சினை ஒன்றின்மீது மட்டுமே மேற்கொள்ளப்படல் வேண்டும்.

(4) மேன்முறையீடொன்று வரிமேன்முறையீட்டு ஆணைக்குழு வின் முடிபிற்கெதிராக செய்யப்படுகின்றவிடத்து வரிமேன் முறையீட்டு ஆணைக்குழு சான்றின் சுருக்கம், நிகழ்வுகள் பற்றிய ஆணைக்குழுவின் கண்டுபிடிப்புக்கள் மற்றும் தொடர்புபட்ட சட்ட குறிப்புகள் பற்றிய முடிபுகள் என்பவை உள்ளடங்கலாக அதனது முடிபின் எழுத்திலான கூற்றொன்றை வழங்குதல் வேண்டும்.

## அத்தியாயம் XIV

### வரிக்கான பொறுப்பும் வரிச் செலுத்துகையும்

வரி செலுத்துநரின் பொறுப்பும் வருமதியான தேதியும்.

**145.** (1) வரி, இச்சட்டத்தினால் குறிப்பிடப்பட்ட ஏற்பாடு செய்யப் பட்ட காலத்தில் வருமதியானதாகவும் செலுத்தப்படற்பாலதாகவும் இருத்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவிற்கு அமைய –

(அ) வருமதியாகவுள்ளதென வரிமதிப்பீட்டு அறிவித்தல் ஒன்றில் குறிப்பிடப்பட்ட வரித்தொகை; அல்லது

(ஆ) அத்தியாயம் XIIஇன் கீழ் வரிமதிப்பிடப்பட்டதாக கருதப்படும் வரித்தொகை,

அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தேதியன்று அல்லது (ஆ) என்னும் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயத்தில், பிணக்கிலுள்ள விபரத்திரட்டுக்கான வருமதியான தேதியன்று வருமதியாகவும் செலுத் தப்படற்பாலதாக இருத்தல் வேண்டும்.

(3) வரியானது ஆணையாளர் தலைமையதிபதியினால் குறித் துரைக்கப்பட்ட முறையிலும் இடத்திலும் செலுத்தப்படுதல் வேண்டும்.

(4) இச்சட்டத்தின்கீழ் வருமதியாக இருக்கக்கூடியதான தொகை யொன்றின் செலுத்துகைக்கான உரிய தேதிக்கு முன்னர் வரி செலுத்துநர் இலங்கையைவிட்டு நீங்ககூடுமென நம்புவதற்கு ஆணையாளர் தலைமையதிபதி நியாயமான ஏதுக்களை கொண் டுள்ளவிடத்து, அவர் ஆணையாளர் தலைமையதிபதியினால் குறித்துரைக்கப்பட்ட தேதியன்று வரி வருமதியாகவுள்ளதென அவர் எழுத்திலான அறிவித்தல் மூலம் அவ்வாளுக்கு அறிவிக்கலாம்.

(5) செலுத்தப்படவேண்டிய தேதியன்று வரியை செலுத்துவதற்கு வரிசெலுத்துநர் தவறுகின்றவிடத்து, வரிசெலுத்துநர் செலுத்தப்படாத வரியை அறவிடுவதற்கான நடவடிக்கையை எடுப்பதில் ஆணையாளர் தலைமையதிபதியினால் உறப்பட்ட ஏதேனும் செலவினத்திற்கு பொறுப்பாதல் வேண்டும்.

*பிரதிநிதிகளின் பொறுப்பும் கட்டுப்பாடுகளும்.*

**146.** (1) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக (2) ஆம் உட்பிரிவிற்கு அமைய, ஆளொருவர் தொடர்பிலான "பிரதிநிதி" என்பது -

(அ) அவ் ஆள் சட்ட இயலாமை ஒன்றின்கீழ் தனியாள் ஒருவராக இருக்கின்றவிடத்து, அத்தனியாளின் சார்பில் அல்லது அவரின் நன்மைக்காக வருமானத்தைப் பெறுகின்ற அல்லது பெறுவதற்கு உரித்துடையவராக இருக்கின்ற பாதுகாவலர் அல்லது முகாமையாளர்;

(ஆ) நான்காம் உட்பிரிவிற்கு அமைய, அவ்வாள் கம்பெனியொன்றாக இருக்கின்றவிடத்து (4) ஆம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட, கம்பெனியின் பணிப்பாளரொருவர் அல்லது தலைமை அலுவலர் அல்லது முகவர்;

(இ) அவ்வாள் பங்குடமையொன்றாக இருக்கின்றவிடத்து பங்காளரொருவர்;

(ஈ) அவ்வாள் நம்பிக்கைப் பொறுப்பொன்றாக இருக்கின்றவிடத்து நம்பிக்கைப் பொறுப்பாளர்;

(உ) அவ்வாள் பங்குடமை அல்லது கம்பெனி ஒன்று தவிர வேறு ஆட்கள் குழுவொன்றாக இருக்கின்றவிடத்து அக்குழுவின் சார்பில் பணத்தொகையினை அல்லது நிதியத்தினை பெறுவதற்கும் கொடுப்பனவு செய்வதற்குமான கணக்கிடுதலுக்கு பொறுப்புடைய தனியாள் ஒருவர்;

(ஊ) அவ்வாள் இலங்கை அரசாங்கமாக இருக்கின்றவிடத்து அவ்வரசாங்கத்தின் சார்பில் பணத்தொகையினை அல்லது நிதியத்தினை பெறுவதற்கும் கொடுப்பனவு செய்வதற்குமான கணக்கிடுதலுக்கு பொறுப்புடைய தனியாள் ஒருவர்;

(எ) அவ்வாள் இலங்கையின் பகிரங்கக் கூட்டுத்தாபனம் ஒன்றாக அல்லது உள்ளூர் அதிகாரசபை ஒன்றாக இருக்கின்றவிடத்து அவ்வுள்ளூரதிகாரசபையின் சார்பில் பணத்தொகையினை அல்லது நிதியத்தினை பெறுவதற்கும் கொடுப்பனவு செய்வதற்குமான கணக்கிடுதலுக்கு பொறுப்புடைய தனியாள் ஒருவர்;

(ஏ) அவ்வாள் வெளிநாட்டு அரசாங்கமொன்றாக அல்லது வெளிநாட்டு அரசாங்கமொன்றின் அரசியல் உபபிரிவாக இருக்கின்றவிடத்து அவ்வரசாங்கத்தின் அல்லது அவ்வரசாங்கத்தின் அரசியல் உபபிரிவின் சார்பில் இலங்கையிலுள்ள பணத்தொகையினை அல்லது நிதியத்தினை பெறுவதற்கும் கொடுப்பனவு செய்வதற்குமான கணக்கிடுதலுக்கு பொறுப்புடைய தனியாள் ஒருவர்; அல்லது

(ஐ) அவ்வாள் வதிவற்ற ஒருவராக இருக்கின்றவிடத்து, இலங்கையில் அவ்வாளின் வியாபாரமொன்றின் முகாமையாளர் ஒருவர் உட்பட இலங்கையிலுள்ள அவரது அலுவலகளைக் கட்டுப்படுத்துகின்ற ஆளொருவர்.

(2) ஆளொருவர் தொடர்பில் (1) ஆம் உட்பிரிவில் விபரிக்கப்பட்ட ஒன்று அல்லது அதற்குமேற்பட்ட பிரதிநிதிகள் இருக்குமிடத்து, அப்போது அவ்வாள் பிரதிநிதியாக செயலாற்றுவதற்கு அவர்களில் ஒருவரைப் பெயர்குறித்தல் வேண்டும்; ஆனால் பெயர்குறிப்பிடுதல் இல்லாதபோது பெயர்குறிப்பிடுகை செய்யப்படும்வரை பிரதிநிதிகளாக எல்லோரும் சேவையாற்றுதல் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழ் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட ஆளொருவர் சார்பில் எவரும் இல்லாதிருந்தாலொழிய, இலங்கையில் வதிகின்ற ஆளொருவராதல் வேண்டும்.

(4) இலங்கையிலுள்ள வியாபாரத்தைக் கொண்டுநடாத்தும் கம்பெனி ஒன்று இலங்கையில் வதிகின்ற தலைமையலுவலரொருவராலும் அங்ஙனம் எவரும் இல்லாதவிடத்து, இலங்கையில் வதிகின்ற அதிகாரமளிக்கப்பட்ட முகவர் ஒருவரால் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக பிரதிநிதித்துவப்படுத்தப்படுதல் வேண்டும்

என்பதுடன், இலங்கையில் வியாபாரத்தை கொண்டுநடாத்துவதற்கு ஆரம்பித்த பின்னர் ஒருமாதகாலத்தினுள் அல்லது பிரதிநிதி அத்தகையதான தகைமையை இல்லாதொழித்த பின்னர் ஒருமாதகாலத்தினுள் அதனது நியமிக்கப்பட்ட பிரதிநிதியை ஆணையாளர் தலைமையதிபதிக்கு அறிவித்தல் வேண்டும்.

(5) ஓராம் உட்பிரிவின்கீழ் குறிப்பிடப்பட்ட ஆளொருவரின் பிரதிநிதி கடமைகளை நிறைவேற்றுவதற்கு இயலாதவராக இருக்கின்றவிடத்து, ஆணையாளர் தலைமையதிபதி இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக அவ்வாளின் பிரதிநிதி ஒருவராக இருப்பதற்கு வேறொரு தனியாளை எழுத்திலான அறிவித்தல்மூலம் வெளிப் படுத்தலாம்.

(6) ஆளொருவரின் பிரதிநிதி ஒவ்வொருவரும் பதிவேடுகளைப் பராமரித்தல், விபரத்திரட்டுகள் மற்றும் வேறு ஆவணங்களைக் கோப்பிடுதல் மற்றும் வரிக்கொடுப்பனவு என்பன உள்ளடங்கலாக அவ்வாளின் மீது இச்சட்டத்தினால் விதிக்கப்பட்ட கடமைகளை அல்லது கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்காக பொறுப்புடைய வராய் இருத்தல் வேண்டும்.

(7) ஒன்பதாம் உட்பிரிவிற்கு அமைய, (6) ஆம் உட்பிரிவின் பயனைக் கொண்டு ஆளொருவரின் பிரதிநிதி ஒருவரால் செலுத்தப்படற்பாலதாக இருக்கின்றதான வரி, பிரதிநிதியின் உடைமையில் இருக்கின்ற அல்லது கட்டுப்பாட்டின் கீழிருக்கின்ற தான அவ்வாளின் எவையேனும் சொத்துக்களை அளவுக்கு மட்டும் பிரதிநிதியிடமிருந்து அறவிடப்படற்பாலதாக இருத்தல் வேண்டும்.

(8) ஆளொருவரின் பிரதிநிதி ஒருவரால் செலுத்தப்படவேண்டிய வரியைச் செலுத்துகின்ற அவ்வாள் பிரதிநிதியினுடைய உடைமை யில் இருக்கின்றதான அல்லது பிரதிநியினுடைய கட்டுப்பாட்டின் கீழிருக்கின்றதான ஆளிடமிருந்து அவ்வாறு செலுத்தப்பட்ட தொகை அறவிடுவதற்கு அல்லது அவ்வாளின் ஏதேனும் பணத் தொகை யிலிருந்து அவ்வாறு செலுத்தப்பட்ட தொகையை வைத்திருப்பதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(9) தொகையானது செலுத்தப்படாதிருக்கையில் வரிசெலுத்துநரின் பிரதிநிதி பின்வருமாறு செய்தால் பிரதிநிதித்துவத் தன்மையில் வரிசெலுத்துநரிடமிருந்து வருமதியான வரிச்செலுத்துகைக்காக பிரதிநிதி ஒருவர் நேரடியாக ஆளாதல் வேண்டும்:-

(அ) எது தொடர்பில் வரி செலுத்தப்படற்பாலதாக இருக்கின்றதோ அது தொடர்பில் பெறப்பட்ட அல்லது உறப்பட்ட பணங்களை பராதீனப்படுத்துதல், அறவிடுதல் அல்லது கையுதிர்த்தல்; அல்லது

(ஆ) பணங்களிலிருந்து அல்லது நிதியங்களில் இருந்து சட்டப்படியாக வரிசெலுத்தப்படக்கூடியதாக இருந்திருப்பின் பிரதிநிதியின் உடைமையில் உள்ள அல்லது வரிசெலுத்தப்படற்பாலதாக வந்தபின்னர் பிரதிநிதியை வந்தடைகின்ற வரிசெலுத்துநருக்கு சொந்தமான பணங்களை அல்லது நிதிகளை கையுதிர்த்தல் கொடுத்துவிடுதல்.

(10) வரி செலுத்துநரின் பிரதிநிதியொருவர் -

(அ) வரிசெலுத்துநரின் சார்பில் பிரதிநிதியினால் பணங்கள் செலுத்தப்பட்டிருப்பின், வரிசெலுத்துநரால் செலுத்தப்படற்பாலதான வரிக்கு மேலதிகமாக செலுத்தப்பட்ட தொகையானது சட்டத்தில் அல்லது ஒப்புரவில் முன்னுரிமை கொண்டுள்ளதாயின்; அல்லது

(ஆ) பணம் செலுத்தப்பட்ட நேரத்தில் பெயர்குறித்த பிரதிநிதி வரிசெலுத்துநருடைய பொறுப்பினை அறிந்திருக்காவிடின், அறிவதற்கு நியாயமான முறையில் எதிர்பார்க்கப்பட முடியாதவராக இருந்திருப்பாராயின்

(9) ஆம் உட்பிரிவின்கீழ் வரியைச் செலுத்துவதற்கு தனிப்பட்ட ரீதியில் ஆளாகுதல் ஆகாது.

(11) இப்பிரிவில் உள்ளது எதுவும், ஆளொருவரின் பிரதிநிதி அவ்வாளின்மீது இச்சட்டத்தினால் விதிக்கப்பட்ட எந்தக் கடமைகளை புரிவதற்கு தவறியுள்ளாரோ அந்தக்கடமைகளிலிருந்து அவ்வாளை விடுவித்தல் ஆகாது.

(12) ஆளொருவருக்கு இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டவர்களாக பிரதிநிதிகள் இருக்குமிடத்து இப்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட கடமைகள் அல்லது கடப்பாடுகள் பிரதிநிதிகளிற்கு கூட்டாக மற்றும் தனித்தனியாக ஏற்புடையதாதல் வேண்டும். ஆனால் அவர்களில் எவரேனும் ஒருவரினால் நிறைவேற்றப்படலாம்

(13) (அ) பங்குடைமை அல்லது வேறு கூட்டிணைக்கப்படாத கழகம் அல்லது குழு ஒருவரின் அல்லது ஒன்றிற்கு மேற்பட்டவரின் இளைப்பாறுகை அல்லது விலகல் காரணமாக, ஆனால் அதனது பங்காளர்கள் அல்லது உறுப்பினர்கள் எவரும் இல்லாமல், அல்லது புதிய பங்காளர் ஒருவரை அல்லது உறுப்பினர் ஒருவரை சேர்த்தல் காரணமாக கலைக்கப்படுமிடத்து அல்லது வேறுவகையில் இல்லாதொழிக்குமிடத்து;

(ஆ) இச்சட்டத்தின் ஏற்பாடுகள் தவிர, எஞ்சியுள்ள உறுப்பினர்கள் அல்லது உளதாம் அல்லது எஞ்சியுள்ள உறுப்பினர்கள் மற்றும் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட புதிய உறுப்பினர்கள் ஆகியோரைக் கொண்டுள்ள ஒரு புதிய பங்குடைமை, கழகம் அல்லது குழு அதன்மூலம் உளதாம் வருமிடத்து; அத்துடன்

(இ) புதிய பங்குடமை கழகம் அல்லது குழு எந்த செயற்பாடு கலைக்கப்பட்ட பங்குடைமை, கழகம் அல்லது குழுவினால் கொண்டு நடாத்தப்பட்டதோ அந்த செயற்பாட்டை தொடர்ந்து கொண்டு நடாத்துகின்றவிடத்து,

கலைக்கப்பட்ட பங்குடைமை, கழகம் அல்லது குழு மற்றும் புதிய பங்குடைமை, கழகம் அல்லது குழு என்பன இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக ஒன்றானதாகவும் அதேபோன்ற தாகவும் இருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(14) வரிவிதிக்கப்படற்பாலதான ஆளொருவரின் இறப்பின் பின்னர் அல்லது வரிவிதிக்கப்படற்பாலதான ஆளொருவரினது மரணச் சொத்தின் நடுக்கட்டுகையின் பின்னர், வரிவிதிக் கப்படற்பாலதான ஆளினால் முன்னரே கொண்டுநடாத்தப்பட்ட வரிவிதிக்கப்படற்பாலதான செயற்பாடு ஒன்று மரணச் சொத்தின் நிறைவேற்றுநரினால் அல்லது நம்பிக்கைப் பொறுப்பாளரினால் அல்லது அவர்களின் சார்பில் கொண்டுநடாத்தப்படுகின்றவிடத்து, அல்லது வரிவிதிக்கப்படற்பாலதான செயற்பாட்டை முடிவுறுத்து வதுடன் தொடர்பில் எதுவும் செய்யப்பட்டிருக்குமிடத்து நிறை வேற்றுநரினால் அல்லது நம்பிக்கைப் பொறுப்பாளரினால் பிரதி நிதித்துவப்படுத்துகின்றவாறான வரிவிதிக்கப்படற்பாலதான ஆளின் மரணச் சொத்து இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக வரி விதிக்கப்படற்பாலதான செயற்பாடு தொடர்பில் வரிவிதிக்கப் படற்பாலதான ஆளொருவருக்கானதாக கருதப்படுதல் வேண்டும்.

(15) வரிவிதிக்கப்படற்பாலதான ஆளாகவுள்ள ஈடுவைப்ப வரினால் முன்னரே ஈடுவைக்கப்பட்ட காணியின் அல்லது வேறு ஆதனத்தின் ஈடுபெறுநர் ஒருவர் உடைமையில் கொண்டுள்ள விடத்தும், அவர் ஈடுபெறுநர் காணி அல்லது வேறு ஆதனம் தொடர்பில் வரிவிதிக்கப்படற்பாலதான செயற்பாடொன்றை கொண்டுநடாத்துகின்றவிடத்தும் ஈடுபெறுநர் அக்காணியின் அல்லது ஆதனத்தின் உடைமையில் எடுத்த தேதியிலிருந்து வரிவிதிக்கப்படற்பாலதான செயற்பாட்டை கொண்டுநடாத்தும் வரிவிதிக்கப்படற்பாலதான ஆளாகவிருப்பதாக கருதப்படுதல் வேண்டும்.

(16) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக ஆளொருவர் ஒன்றுக்கு மேற்பட்ட தன்மைகளில் நம்பிக்கைப் பொறுப்பாளரொருவராக விருப்பின் அவ்வாள் அத் தன்மைகள் ஒவ்வொன்று தொடர்பிலும் தனிவேறான ஆளொருவராக கருதப்படுதல் வேண்டும்.

**147.** (1) கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றின் மீது இச் சட்டத்தினால் விதிக்கப்பட்ட பொறுப்பு அல்லது கடப்பாடு குழுவின் மீது அத்துடன் அந்நேரத்தில் பொறுப்பு அல்லது கடப்பாடு விதிக்கப்படுகின்ற குழுவின் அலுவலராக இருக்கின்ற எவரேனும் ஆளின்மீது விதிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் குழு மற்றும் அத்தகைய ஒவ்வொரு அலுவலர் அப்பொறுப்பிற்கு அல்லது கடப்பாட்டிற்கு கூட்டாகவும் தனித்தனியாகவும் ஆளாகுதலும் வேண்டும். கூட்டிணைக் கப்படாத குழுக்களின் அலுவலர்கள்.

(2) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக கூட்டிணைக்கப்படாத குழுவின் உளதாம் தன்மையும் கூட்டிணைக்கப்படாத குழுவினால் கொண்டுநடாத்தப்படும் ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான செயற்பாடும் அதனது உறுப்பினர்களில் அல்லது அலுவலர்களில் ஏதேனும் மாற்றம் செய்வதன் மூலம் பாதிக்கப்படாதிருப்பதாக கருதப்படுதல் வேண்டும்.

(3) எந்தவொரு ஆவணம் இச்சட்டத்தின்கீழ் கூட்டிணைக்கப் படாத குழுவொன்றின் சார்பில் சேர்ப்பிக்கப்படுவதற்கு தேவைப் படுத்தப்படுகின்றதோ அந்த ஆவணம் குழுவின் அலுவலர் சார்பில் சேர்ப்பிக்கப்படலாம்.

(4) இச்சட்டத்தின் கீழான தவறொன்று கூட்டிணைக்கப்படாத குழுவொன்றினால் புரியப்பட்டுள்ளவிடத்து அத்தவறு கூட்டி ணைக்கப்படாத குழுவொன்றின் அலுவலரினால் புரியப் பட்டிருப்பதாக கருதப்படுதல் வேண்டும்.

ஒடுக்குதலை அடுத்துப் பின்னர் வரிக்கான பொறுப்பு.

**148.** (1) இப்பிரிவானது பிடித்துவைக்கும் மற்றும் வரியை அனுப்பும் ஏதேனும் பொறுப்பு உட்பட அதனது வரிப்பொறுப்புக்கள் திருப்திப்படாதிருக்கும் போது ஒடுக்கப்படுகின்ற ஒரு கம்பெனிக்கு ஏற்புடையதாதல் வேண்டும்.

(2) கம்பெனி ஒடுக்கப்படுகின்ற நேரத்தில் அல்லது அதன் முன்னைய ஆண்டின்போது பங்குதாரராக இருந்த ஒருவர், அக்கம்பெனியை ஒடுக்குவதற்கு முன்னர் ஒருவருடகாலத்தினுள் பங்குதாரர் ஒருவராக பெறப்பட்ட கம்பெனியிலிருந்து பணம் அல்லது சொத்துப் பகிர்வொன்றின் நீடிப்பிற்கான செலுத்தப்படாத வரியொன்றைச் செலுத்துவதற்கு தனியாகவும் கூட்டாகவும் ஆளாகுதல் வேண்டும்.

(3) இப்பிரிவின்கீழ் கம்பெனியொன்றின் வரியைச் செலுத்து வதற்கு ஆளாகும் ஆளொருவர் கம்பெனிக்கு கிடைக்கக்கூடியதாக இருக்கக்கூடியதான திணைக்களத்திற்கெதிராக ஏதேனும் உரிமைகளைக் கோரலாம்.

உருவகங்களின் முகாமை யாளர்கள்.

**149.** (1) உருவகமொன்று குறித்த நேரத்தில் வரியைச் செலுத்துவதற்கு தவறுகின்றவிடத்து, இயைபான நேரத்திலிருந்து ஏதேனும் நேரத்தில் உருவகத்தின் முகாமையாளரொருவராக இருக்கின்ற அல்லது இருந்துள்ளவரான ஒவ்வொரு ஆளும் உருவகம் இருப்பினும் அல்லது இல்லாதொழிக்கப்பட்டிருப்பினும் வரியைச் செலுத்துவதற்காக உருவகத்தினாலும் அத்தகைய வேறு ஆள் ஒவ்வொருவரினாலும் கூட்டாகவும் தனித்தனியாகவும் ஆளாகுதல் வேண்டும்.

(2) ஒராம் உட்பிரிவானது உருவகமானது இல்லாதொழிந்தாலும் அல்லது அல்லாவிடினும் அதனைப் பொருட்படுத்தாது (1) ஆம் உட்பிரிவானது ஏற்புடையதாதல் வேண்டும்.

(3) ஒராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் முகாமையாளரின் பதவியிலுள்ள நியாயமான முறையில் விவேகமான ஆள் ஒருவர் வரியைச் செலுத்துவதற்கு தவறியதை தொடக்கத்திலும் தொடர்ச்சியாகவும் தடுப்பதில் பிரயோகிக்கப்படக்கூடுமென்ற அளவினதான கவனத்தை, விழிப்புக் கவனத்தை மற்றும் திறனை பிரயோகித்துள்ள முகாமையாளரொருவருக்கு ஏற்புடையதாதலாகாது.

(4) இப்பிரிவின்கீழ் முகாமையாளர் ஒருவரினால் ஆணையாளர் தலைமையதிபதிக்கு செலுத்தப்படற்பாலதான தொகைகள் முகாமையாளரின் தனிப்பட்ட வரிப்பொறுப்பொன்றாதல் வேண்டும்.

(5) ஒராம் உட்பிரிவின்கீழ் வரிப்பொறுப்பொன்றின் காரணத்தினால் முகாமையாளர் ஒருவர் வரியைச் செலுத்துகின்றவிடத்து அம்முகாமையாளர் செலுத்தப்படவேண்டிய கடனொன்றாக உருவகத்திலிருந்து கொடுப்பனவை அறவிடலாம்.

(6) உருவகத்தின் முகாமையாளரொருவர் உருவகத்திடமிருந்து இயைபான வரியைச் சேகரிப்பதற்காக மட்டுப்படுத்தப்பட்ட காலப்பகுதி முடிவடைந்த பின்னர், இப்பிரிவின் கீழான தொகையொன்றுக்கு மதிப்பிடப்படாதிருக்கலாம்.

(7) இப்பிரிவில் -

“உருவகம்” என்பது பங்குடமை, கூட்டிணைக்கப்படாத நிலை தனியார் தவிர்ந்த வேறு வரிசெலுத்துநர் எனப் பொருள்படும்;

உருவகம் ஒன்றின் “முகாமையாளர்” ஒருவர் உருவகத்தின் முகாமையாளரொருவராக செயலாற்றுவதற்கு உத்தேசிக்கப்பட்ட ஆளொருவரை உள்ளடக்குகின்றது என்பதுடன் கம்பெனி ஒன்றின் விடயத்தில் கம்பெனியின் பணிப்பாளர், பிரதான நிறைவேற்று அலுவலர் மற்றும் பிரதான நிதிசார் அலுவலர் ஆகியோரையும் உள்ளடக்குகின்றது; அத்துடன்

“இயைபான நேரம்” என்பது உருவகத்தினுடைய வரிப் பொறுப்பை அதிகரிப்பதற்கு கொடுத்த நிகழ்வுகளின் முன்னரான ஆறுமாதங்கள் ஆகும்.

மீளளிக்கத்தக்க தொகைகள்.

**150.** (1) எந்த வரித்தொகையானது வரிசெலுத்தினர் ஒருவரால் செலுத்தப்பட்டுள்ளதோ அந்தத்தொகை மதிப்பிடப்பட்ட அல்லது வரிவிதிக்கப்படற்பாலதாக காணப்பட்ட வரித்தொகையினை விஞ்சுகின்றவிடத்து, ஆணையாளர் தலைமையதிபதியானவர் –

(அ) இச்சட்டத்தின்கீழ் வரியை, வட்டியை, பிந்திய கட்டணங்களை அல்லது தண்டங்களை செலுத்துவதற்கென வரிசெலுத்துநரின் மதிப்பிடப்பட்ட பொறுப்புக்கு எதிராக தொகையை மீளளித்தல் வேண்டும்; அத்துடன்

(ஆ) வரிசெலுத்துநர் ஆட்சேபனை தெரிவித்தாலொழிய, எஞ்சியுள்ள தொகையை அடுத்துறும் ஆறுமாத காலத்தினுள் வரிசெலுத்துநரது வரிசெலுத்துகைக்கான பொறுப்பிற்கு எதிராக முற்கூட்டிய கொடுப்பனவாகப் பயன்படுத்தலாம்.

(2) ஓராம் உட்பிரிவிற்கு அமைய, மீளளிக்கத்தக்க தொகைகள் வரிசெலுத்துநருக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

(3) மீளளிப்பு அல்லது வரவு செலுத்துகைத் தேதியின் நான்கு ஆண்டுகளினுள் வரிசெலுத்துநர் அதற்கு விண்ணப்பித்திருந்தால் அல்லது குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் ஆணையாளர் தலைமையதிபதியினுடைய உந்துதலின் பேரில் செய்யப்படின் மட்டுமே அளிக்கப்படலாம்.

**151.** (1) வரிசெலுத்துநர் ஆணையாளர் தலைமையதிபதியினால் குறித்துரைக்கப்பட்ட படிவத்தில் எந்தத் தேதியானது வரிச் செலுத்துகை, இச்சட்டத்தின் 145 ஆம் பிரிவின்கீழ் செலுத்தப் படவேண்டும் என தேவைப்படுத்துகின்றதோ அந்தத் தேதிக்கு அப்பால் அதற்கான காலநீடிப்பிற்கு விண்ணப்பிக்கலாம். செலுத்து கைக்கான காலநீடிப்பு.

(2) ஆணையாளர் தலைமையதிபதி ஓராம் உட்பிரிவின்கீழ் தேவைப்படுத்தப்பட்டவாறு செலுத்துகைக்கான காலத்தை நற்காரணத்துடன் நீடிக்கலாம் என்பதுடன் மேன்முறையீட்டுத் தீர்மானம் எடுக்கப்படும்வரை வரிசெலுத்துநரால் தேவைப் படுத்தப்பட்ட காலப்பகுதியல்லாத வேறுபட்ட நீடிப்புக் காலத்தை வழங்கலாம். அத்துடன் வருமதியான தொகையை தவணைப் பணங்களாக செலுத்துவதற்கு ஆளொருவரைத் தேவைப் படுத்துகின்ற, அல்லது பிணையத்தை தேவைப்படுத்துகின்ற ஒழுங்கேற்பாடுகள் உட்பட வரிக்கொடுப்பனவை உறுதிப்படுத்து தற்கான வேறு ஒழுங்கேற்பாடுகளைச் செய்யலாம்.

(3) ஆணையாளா தலைமையதிபதி (1) ஆம் உட்பிரிவின்கீழ் விண்ணப்பித்துள்ள ஆளுக்கு முப்பது நாட்களினுள் எழுத்தில் முடிபு பற்றி அறிவிக்காதவிடத்து, விணப்பமானது வழங்கப்பட்ட தாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) வரிசெலுத்துநர் ஒருவருக்கு (1) ஆம் உட்பிரிவின்கீழ் காலநீடிப்பு வழங்கப்பட்டிருக்குமிடத்து வட்டியானது அவ்நீடிப்பு எவ்வாறிருப்பினும் செலுத்தப்படற்பாலதாதல் வேண்டும்.

(5) தவணைப்பணங்கள் மூலம் வரியை செலுத்துவதற்கு அனுமதிப்பதன் மூலம் காலநீடிப்பு வழங்கியிருப்பின் அத்துடன் வரிசெலுத்துநர் தவணைப்பணங்களில் எதையும் செலுத்துவதில் தவறியிருப்பின் செலுத்தவேண்டிய தொகை உடனடியாக செலுத்தப்படற்பாலதாகவிருத்தல் வேண்டும்.

**152.** (1) ஆணையாளர் தலைமையதிபதி எந்தத் தேதியன்று வரியானது வருமதியாகவும் செலுத்தப்படற்பாலதாகவும் வந்ததோ அந்தத் தேதியன்று அது செலுத்தப்படாதபோது செலுத்துகையைக் கோரி வரிசெலுத்துநருக்கு அறிவித்தல் ஒன்றை அனுப்பலாம். செலுத்துகையிலான தவறுகை.

(2) அறிவித்தலானது -

(அ) வரிசெலுத்துநரின் பெயர்;

(ஆ) வரிசெலுத்துநர் - இனங்காணல் இலக்கம் வரிசெலுத்துநருக்கு வழங்கப்பட்டிருந்தால் அத்தகைய இனங்காணல் இலக்கம் (TIN);

(இ) அறிவித்தல் வழங்கல் திகதி;

(ஈ) செலுத்தப்படற்பாலதான வரி, வட்டி மற்றும் தண்டங்களின் தொகை அத்துடன் எந்தக் காலப்பகுதிக்கு அல்லது காலப்பகுதிகளுக்கு அவை தொடர்புபடுகின்றதோ அந்தக் காலப்பகுதி அல்லது காலப்பகுதிகள்;

(உ) இத்தொகைகளின் செலுத்துகைக்கான கோரிக்கை ஒன்று;

(ஊ) எந்த இடத்தில் செலுத்துகை மேற்கொள்ளப்படவிருக்கிறதோ அந்த இடம்; அத்துடன்

(எ) கொடுப்பனவானது அறிவித்தல் சேர்ப்பித்த பின்னர் இருபத்தியொரு நாட்களினுள் செய்யப்படாவிடின், ஆணையாளர் தலைமையதிபதி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தொகையை சேகரிப்பதற்கு வழக்குத் தொடர்வதற்கான உரிமையைக் கொண்டுள்ளார் எனவும்,

குறிப்பிடுதல் வேண்டும்.

(3) வரிசெலுத்துநருக்கு, முறையே அறிவித்தல் சேர்ப்பிக்கப்பட்ட பின்னர் இருபத்தியொரு நாட்களினுள் அத்தேதியில் செலுத்தப்படாத எஞ்சிய ஏதேனும் தொகைகள் தவறுகையில் இருப்பின் அவர் தவறுகையில் உள்ளவராதல் வேண்டும்.

(4) வரிசெலுத்துநர் -

(அ) ஏற்புடையற்பாலனவான வரிச்சட்டத்தைப் பின்பற்றி ஆணையாளர் தலைமையதிபதியுடனான கொடுப்பனவு உடன்படிக்கை ஒன்றை செய்து கொண்டுள்ளவிடத்து; அல்லது

(ஆ) நூற்றி ஐம்பத்தொராம் பிரிவினைப் பின்பற்றி காலநீடிப்பு ஒன்று பெறப்பட்டுள்ளவிடத்து; அத்துடன் ஒழுங்கேற்பாட்டு நியதிகளுடன் இணங்கியொழுகியுள்ள விடத்து,

மூன்றாம் உட்பிரிவானது ஏற்புடையதாகலாகாது.

**153.** (1) இப்பிரிவானது பின்வரும் தொகைகளுக்கு ஏற்புடைய தாதல் வேண்டும் :- வரிக்கான முன்னுரிமை.

(அ) பிடித்துவைத்தல் வரி;

(ஆ) செலுத்துநர் ஒருவர் 170 ஆம் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட அறிவித்தல் ஒன்றின்கீழ் தேவைப்படுத்துகின்ற தொகை.

(2) இப்பிரிவானது எந்தத் தொகைக்காக ஏற்புடையதாகின்றதோ அந்தத் தொகை ஒன்றை செலுத்த வேண்டிய, பெற்றுக்கொள்கின்ற அல்லது பிடித்துவைத்திருக்கின்ற ஆளொருவர் இலங்கைக் குடியரசுக்கான நம்பிக்கைப் பொறுப்பில் உள்ள தொகையை வைத்திருத்தல் வேண்டும் என்பதுடன் அவ்வாளின் ஒழித்துக்கட்டுதல் அல்லது வங்கி முறிதலின் விடயத்தில் அத் தொகை :-

(அ) ஒழித்துக்கட்டலில் அல்லது முறித்தலில் அவ்வாளினது மரணச்சொத்தின் பாகமாக அமைதலாகாது; அத்துடன்

(ஆ) ஆதனத்தின் ஏதேனும் பகிர்வு மேற்கொள்ளப்படுவதற்கு முன்னர் ஆணையாளர் தலைமையதிபதிக்கு செலுத்தப்படுதல் வேண்டும்;

(3) வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகள் எவை எவ்வாறிருப்பினும், ஆளொருவரினால் பிடித்துவைத்திருக்கப்பட்ட பிடித்துவைத்தல் வரியானது :-

(அ) அவ் ஆளின் ஏதேனும் தனிசு அல்லது பொறுப்பு தொடர்பில் பற்றுகைக்கு அமைய இருத்தலாகாது.

(ஆ) எந்த கொடுப்பனவு அல்லது தொகையிலிருந்து வரி வைத்திருக்கப்படவேண்டுமோ அந்தக் கொடுப்பனவு அல்லது தொகைமீது முதல் பொறுப்பொன்றாதல் வேண்டும்; அத்துடன்

(இ) ஆள் ஏதேனும் நீதிமன்றக் கட்டளையின்கீழ் அல்லது ஏதேனும் சட்டத்தின்கீழ் கொடுப்பனவிலிருந்து அல்லது தொகையிலிருந்து ஆக்குவதற்கு தேவைப்படக்கூடிய வேறு ஏதேனும் கழிப்பனவிற்கு முன்னர் பிடித்து வைத்திருக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

வரித்தனிசுகளின் செலுத்து கைக்கான ஒழுங்குமுறை.

**154.** (1) குறித்தவரி ஒன்றின் கொடுப்பனவுகள் பின்வரும் வரிசைப்படி வரிசெலுத்துநரது பொறுப்புக்கெதிராக பயன் படுத்தப்படல் வேண்டும்.

(அ) வரி தொடர்பான வட்டி;

(ஆ) வரி தொடர்பான தண்டங்கள்; அத்துடன்

(இ) வரியின் பிரதான தொகை.

(2) ஆணையாளர் தலைமையதிபதி மதிப்பிடப்பட்டுள்ளதும் பின்வருமாறு வருமதியாக இருக்கின்றதுமான ஏதேனும் வரிக்கான வரி செலுத்துகை ஒன்றை ஏற்புடையதாக்கலாம் -

(அ) வரிசெலுத்துநர் குறித்தவரியை அல்லது வரிவிதித்தல் காலப்பகுதியை குறித்துக்காட்ட தவறுகின்றவிடத்து, செலுத்துகையானது ஏற்புடையதாக்கப்படுதல் வேண்டும்; அல்லது

(ஆ) செலுத்துகையானது தவணைத்தவறுகையிலுள்ள வரியின் வருமதியான அறவீட்டினைப் பின்பற்றி சேகரிக்கப்பட்டுள்ளவிடத்து.

நாணயம்.

**155.** இச்சட்டத்தில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறு தவிர, வரியானது இலங்கை நாணயத்தில் செலுத்தப்படற்பாலதாதல் வேண்டும்.

## அத்தியாயம் VIII

### வட்டி

பொதுவானவை.

**156.** (1) வரிச் செலுத்துகை சேகரிப்பு மற்றும் பிணைக்குத் தொடர்பான நடவடிக்கைமுறைகள் வரி ஒன்று தொடர்பிலான வட்டிக்கு சமமாக ஏற்புடையதாதல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின்கீழ் வட்டிக்கான பொறுப்பு தனிவேறாகக் கணிப்பீடுசெய்யப்பட வேண்டும் என்பதுடன் சட்டத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட தண்டங்களுக்கு மேலதிகமாயிருத்தலும் வேண்டும்.

(3) ஆளொருவர் வட்டியை செலுத்தியுள்ளாராயின் அத்துடன் வட்டியானது எத்தொகை தொடர்பானதோ அத்தொகை செலுத்தப்படற்பாலதாக காணப்படாவிடின் அத்தொகைமீது செலுத்தப்பட்ட வட்டியானது அவ்வாளிற்கு மீளளிக்கப்படுதல் வேண்டும்.

குறைந்த செலுத்துகைகளின் மீதான வட்டி.

**157.** (1) வரித்தொகையானது உரிய தேதியில் செலுத்தப்படாதிருப்பின், வரிசெலுத்துநர் உரிய தேதியிலிருந்து வரிசெலுத்தப்படுகின்ற தேதிவரை (151 ஆம் பிரிவின்கீழ் (காலநீடிப்பு தொடர்பில்லாமல் தீர்மானிக்கப்பட்டது) காலப்பகுதிக்கான தொகை மீதான வட்டிப் பொறுப்பிற்கு ஆளாகுதல் வேண்டும்.

(2) மீளாயப்பட்ட வரிமதிப்பீடொன்றின் கீழ் வருமதியான வரியின் விடயத்தில் வட்டியினைக் கணக்கிடுவதற்கான உரிய தேதியானது வரியின் மூல உரியதேதி ஆதல் வேண்டும்.

மீளளிக்கத்தக்க தொகைகளின் மீதான வட்டி.

**158.** (1) ஆணையாளர் தலைமையதிபதி வட்டித் தொகையை மீளளிப்பதற்கு தேவைப்படுத்தப்படுகின்றவிடத்து, அது பின்வரும் பிந்திய தேதியிலிருந்து வரிசெலுத்துநருக்கு செலுத்தப்படுதல் வேண்டும் –

(அ) உரிய தேதியிலிருந்து; அல்லது

(ஆ) வரிசெலுத்தப்பட்ட தேதியிலிருந்து,

எந்த தேதியானது மீளளிக்கப்பட்ட தொகை செலுத்தப்பட்டிருக்கிறதோ அந்த தேதி வரை.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவை எவ்வாறிருப்பினும் வட்டி எதுவும் மீளளிப்புக்கான உரிமைக்கோரிக்கை ஒன்றின் அடிப்படையிலும் மீளளிப்புக்கான உரிமைக்கோரிக்கையின் கோப்பிடுகை அறுபது நாட்களினுள் வரிசெலுத்துநருக்கு செலுத்தப்பட்டும் இருக்கின்றதான மீளளிப்பு ஒன்று தொடர்பில் செலுத்தப்படற்பாலதாதலாகாது.

(3) நூற்றி ஐம்பதாம் பிரிவின்கீழ் வேறொரு வரிப் பொறுப்பிற்கெதிராக ஏற்புடையதாக்கப்பட்டிருக்கின்ற மீளளிக்கத்தக்க தொகை, எந்தப் பொறுப்பிற்கு எதிராக மீளளிக்கத்தக்க தொகை ஏற்புடையதானதோ அந்தப் பொறுப்பின் உரிய தேதியன்று வரிசெலுத்துநருக்கு செலுத்தப்பட்டிருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

**159.** (1) நூற்றி ஐம்பத்தேழாம் பிரிவினைப் பின்பற்றி செலுத்துகைக்கான வட்டிவீதம் மாதமொன்றுக்கு அல்லது மாதத்தின் பாகமொன்றுக்கு ஒன்றரை சதவீதம் ஆதல் வேண்டும் என்பதுடன் மாதாந்தம் கூட்டுவட்டியுடனும் இருத்தலும் வேண்டும். வட்டிவீதம்.

(2) நூற்றி ஐம்பத்தெட்டாம் பிரிவினைப் பின்பற்றி செலுத்துகைகளுக்கான வட்டிவீதமானது மாதமொன்றுக்கு அல்லது மாதத்தின் பாகமொன்றுக்கு ஒன்றரை சதவீதம் ஆதல் வேண்டும் என்பதுடன் மாதாந்தம் கூட்டு வட்டியுடன் இருத்தலும் வேண்டும்.

(3) முதலாம் மற்றும் (2) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகள் எவை எவ்வாறிருப்பினும் அமைச்சர் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளை மூலம் வட்டிவீதத்தை மாற்றலாம்.

# அத்தியாயம் IX

## வரியின் அறவீடு

**160.** ஆணையாளர் தலைமையதிபதி, வரிசெலுத்துநர் 152 ஆம் பிரிவினைப் பின்பற்றி தவணை தவறுகையில் இருப்பதாக தீர்மானிக்கப்பட்டவுடன் இவ்வத்தியாயத்தின் கீழ் ஏதேனும் பரிகாரத்திற்கு முற்படலாம். பொதுவானவை.

**161.** இவ்வத்தியாயத்தின்கீழ் வழக்குத் தொடுத்தலானது எந்தத் தேதியன்று வரிசெலுத்துநர் தவணை தவறுகையில் இருப்பதாக தீர்மானிக்கப்பட்டதோ அந்தத் தேதியின் ஐந்து ஆண்டுகளினுள் தொடங்கப்படுதல் வேண்டும். சேகரிப்புக்கான காலவரையறைகள்.

**162.** (1) ஆணையாளர் தலைமையதிபதி இச்சட்டத்தின்கீழ் ஆளொருவரிடமிருந்து வருமதியானதும் அவரினால் செலுத்தப் படற்பாலதுமான வரி, வட்டி அல்லது தண்டத் தொகையை அறவிடுவதற்கு இயலாதவராகவிருக்கின்றவிடத்து, அமைச்சர் ஆணையாளர் தலைமையதிபதியின் விதப்புரையின்மீதும் மற்றய அமைச்சரவையின் அங்கீகாரத்துடனும் அரசாங்கத்திற்கு வருமதியான தனிசு ஒன்றாக பொறுப்பை அழித்தொதுக்கக் கட்டளையிடலாம். சேகரிக்கத்தக்கன வல்லாத தொகைகளை அழித் தொதுக்குதல்.

(2) எவ்வாளின் தனிசு (1) ஆம் உட்பிரிவின்கீழ் அழித் தொதுக்கப்பட்டதோ அவ்வாள் ஒருவர் செலுத்தாத தொகைகள் எல்லாவற்றையும் அல்லது அவற்றுள் ஏதேனும் பாகத்தையும் அறவிடுவதற்கு பற்றுகைப்படக்கூடிய சொத்தைக் கொண்டுள்ளவர் என ஆணையாளர் தலைமையதிபதி தீர்மானிக்கின்றவிடத்து, தனிசுக்கான பொறுப்பு (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையை இல்லாதொழித்து அமைச்சரின் கட்டளை அமைச் சரவையின் அங்கீகாரத்துடனும் மீளநிலைப்படுத்தப்படலாம்.

**163.** (1) வருமதியாகயுள்ளதும் செலுத்தப்படற்பாலதுமான வரி அரசாங்கத்திற்கான தனிச்சொன்றாதல் வேண்டும் என்பதுடன் ஆணையாளர் தலைமையதிபதிக்கு செலுத்தப்படற்பாலதாதலும் வேண்டும். நீதிமன்ற வழக்கு நடவடிக்கைகள்.

(2) ஆளொருவர் வரி வருமதியாக இருக்கின்றபோது அதனைச் செலுத்துவதற்குத் தவறுகின்றவிடத்து, ஆணையாளர் தலைமையதிபதி செலுத்தவேண்டிய தொகை தொடர்பில் நிலுவையாகவுள்ள தனிசை அறவிடுவதற்கான தகுதிவாய்ந்த நியாயாதிக்கம்கொண்ட நீதிமன்றமொன்றில் வழக்கு நடவடிக்கைகளை ஆரம்பிக்கலாம்.

(3) இப்பிரிவின்கீழ் எவையேனும் வழக்கு நடவடிக்கைகளில் எதிர்வாதியின் பெயர் மற்றும் செலுத்தவேண்டிய தொகையைக் குறிப்பிட்டு ஆணையாளர் தலைமையதிபதியினால் கையொப்பமிடப்பட்ட சான்றிதழில் காண்பிப்பு என, அத்தொகை செலுத்தவேண்டியதாகவுள்ளதென்பதற்கும் அத்தொகையிலான தீர்ப்பை வழங்குவதற்கும் நீதிமன்றத்திற்கு போதுமானதானதாக இருக்கின்றது என்பதற்கும் போதுமான சான்றாதல் வேண்டும்.

(4) வரியை அறவிடுவதற்கான எவையேனும் வழக்கு நடவடிக்கைகளில் பின்வருவன எதிராளிக்கான எதிர்வாதம் ஒன்று இருத்தல் ஆகாது -

(அ) வரி, வரிவிதிக்கப்படற்பாலதான வருமானம் அல்லது வேறு வரி அடிப்படை பிழையானதாகும்;

(ஆ) விதிக்கப்பட்ட வரியானது மிதமிஞ்சியதாகும்; அல்லது

(இ) வரிமதிப்பீடு, ஆட்சேபனை அல்லது மேன்முறையீட்டின் விடயமாக அமைவானதாக இருக்கின்றது.

**164.** (1) வரிசெலுத்துநர் ஒருவர் உரிய தேதியில் வரியைச் செலுத்துவதற்கு தவறுகின்றவிடத்து, செலுத்தப்பட வேண்டிய தொகைக்காக வரிசெலுத்துநருக்குச் சொந்தமான எல்லா ஆதனங்கள் மீதும் ஆணையாளர் தலைமையதிபதியின் சார்பில் சோந்தையொன்றும் (எழக்கூடிய வட்டி, தண்டம் மற்றும் சேகரித்தல் செலவுடன் சேர்த்து) இப்பிரிவில் வேறுவகையில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு தவிர்ந்த, வேறு எல்லா உரிமைகளுக்கு எதிராகவும் முன்னுரிமையையும் உருவாக்கப்படுதல் வேண்டும். சோந்தை

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட சோந்தையானது தவறுகை தொடங்கிய தேதியின் நடு இரவில் எழுதல் வேண்டும் என்பதுடன் பொறுப்பு திருப்திப்படும்வரை அல்லது காலம் கழிவதனால் வலுவிற்கிடப்படமுடியாது வரும்வரை தொடர்ந்து இருத்தலும் வேண்டும்.

(3) இப்பிரிவின்கீழ் விதிக்கப்பட்ட சோந்தை, பின்வரும் சந்தர்ப்பங்களில் எது முதலில் நிகழ்கின்றதோ அதனால் வட்டி எழுந்திருப்பின், வரிச்செலுத்தினரிடமிருந்து கொள்வனவாள ரொருவராகவிருக்கின்ற ஆளொருவரின் வட்டிக்கு எதிராக, வரிசெலுத்திநரால் வழங்கப்பட்ட பிணைய வட்டி ஒன்றினை வைத்திருப்பவருக்கு எதிராக அல்லது ஒழுங்கு விதிகளில் குறித்துரைக்கப்பட்ட வேறு சோந்தை வைத்திருப்பவருக்கு எதிராக செல்லுபடியானதாதல் ஆகாது -

(அ) அவ்வாள் சோந்தைபற்றி உள்ளபடியாக அறிவதற்கு முன்னர்; அல்லது

(ஆ) சோந்தை பற்றிய அறிவித்தல் மேல்நீதிமன்றத்தின் பதிவாளரினால் அல்லது காணிகளின் பதிவாளரினால் முறையாகப் பதிவுசெய்யப்பட்டிருப்பதற்கு முன்னர்.

(4) நூற்றி ஐம்பத்திரெண்டாம் பிரிவைப் பின்பற்றி வரிசெலுத்துநர் ஒருவர் தவணை தவறுகையில் இருப்பதாக தீர்மானிக்கப்பட்ட பின்னர், ஏதேனும் நேரத்தில் ஆணையாளர் தலைமையதிபதி சோந்தை ஒன்றைப்பற்றிய அறிவித்தலை கோப்பிடலாம்.

(5) ஆணையாளர் தலைமையதிபதி சோந்தை ஒன்றைப்பற்றிய அறிவித்தலை கோப்பிடுவதற்கான நடவடிக்கைமுறைகளைக் குறித்தரைக்கலாமென்பதுடன், சோந்தைபற்றிய அறிவித்தல் கோப்பிடப்பட்டிருப்பினும் கூட எந்த வட்டிகளுக்கெதிராக சோந்தை செல்லுபடியாதல் ஆகாதோ அந்த வட்டியின் வகைகளைக் குறித்துரைக்கலாம்.

(6) மேல்நீதிமன்றப் பதிவாளரிடமும் காணிகள் பதிவாளரிடமும் சோந்தை ஒன்றைப் பதிவுசெய்வதற்கு குறைந்தபட்சம் பதினைந்து நாட்கள் முன்னரேனும் ஆணையாளர் தலைமையதிபதி சோந்தையைப் பதிவுசெய்வதற்கான உள்நோக்கம் பற்றி ஆணையாளர் தலைமையதிபதி வரிசெலுத்துநருக்கு அறிவித்தல் அனுப்புதல் வேண்டும்.

(7) ஆறாம் உட்பிரிவானது, ஆணையாளர் தலைமையதிபதி வரி சேகரிப்பதற்கான இயலுமாந்தன்மை இழப்பு அபாயத்தில் இருக்கின்றதென நம்புகின்றவிடத்து, ஏற்புடையதாதலாகாது.

(8) ஆணையாளர் தலைமையதிபதி இப்பிரிவினால் உருவாக்கப்பட்ட சோந்தையை வலுவிற்கிடுவதற்கு மேல்நீதிமன்றத்தில் வழக்கைக் கோப்பிடலாம்.

(9) பாதிக்கப்பட்ட ஆளொருவர் அவ்வாளினது சொத்தின்மீது சோந்தையை விடுவிப்பதற்காக ஆணையாளர் தலைமையதிபதிக்கு விண்ணப்பிக்கலாம் என்பதுடன் சோந்தையை விடுவிக்காத ஆணையாளர் தலைமையதிபதியின் தீர்மானம் மேல்நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு செய்யப்படலாம்.

வரிசெலுத்துநரின் ஆதனத்திற்கெதிரான நிறைவேற்றுகை.

**165**. (1) வரிசெலுத்துநர் தவணை தவறியிருக்கின்றவிடத்து, ஆணையாளர் தலைமையதிபதி வரிசெலுத்தினரது ஆதனத்தின் மீது நிறைவேற்றுகை அறவிடப்படுவதற்கு செய்விக்கலாம். ஆனால் தீர்மானம் ஒன்று 164 ஆம் பிரிவின் (7) ஆம் உட்பிரிவின்கீழ் மேற்கொள்ளப்படும்போது தவிர, வரிசெலுத்துநர் நிறைவேற்றுகையை அறவிடுவதற்கான உள்நோக்கத்தை அறிவித்தல் ஒன்றுடன் சேர்ப்பித்திருப்பின் மற்றும் வரிசெலுத்துநர் அறிவித்தலைச் சேர்ப்பித்தபின்னர் முப்பது நாட்களினுள் வரியை செலுத்துவதற்குத் தவறியிருப்பின் மட்டுமே ஆணையாளர் தலைமையதிபதி நிறைவேற்றுகையை மேற்கொண்டு நடத்தலாம்.

(2) ஆணையாளர் தலைமையதிபதி, வரிசேகரிப்பு இடையூற்றில் உள்ளதென நம்புவதற்கு நியாயமான ஏதுக்கள் உள்ள விடத்து, ஆணையாளர் தலைமையதிபதி உடனடியாக வரிசெலுத்தகையைக்

கோரலாம் அத்துடன் வரிசெலுத்துவதற்கு வரிசெலுத்துநர் தவறுவதன்மீது 152 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவு எது எவ்வாறிருப்பினும், உடனடியாக வரிசெலுத்துநரது ஆதனத்தின் மீது நிறைவேற்றுகையை அறவிடுவதற்கு மேற்கொண்டு செயற்படலாம்.

(3) அறவீடு ஒன்று எந்த ஆதனத்தின்மீது செய்யப்பட்டதோ அந்த ஆதனத்தை உடைமையில் மேற்கொள்ள அல்லது அதன்மீது பிணையத்தை வைத்திருக்கின்ற (வங்கி அல்லது வேறு நிதி நிறுவனம் உட்பட) ஆளொருவர் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட ஆளொருவரின் நீதி நடைமுறையின்கீழ் ஏலவேயுள்ள நீதிநடைமுறையின் கீழான பற்றுகைக்கு அல்லது நிறைவேற்றுகைக்கு அமைய உள்ள ஆதனத்தின் பாகம் தொடர்பில் தவிர ஆணையாளர் தலைமையதிபதிக்கு ஆதனத்தை ஒப்படைத்தல் வேண்டும் அல்லது பிணையத்தை நிறைவேற்றுதல் வேண்டும்.

(4) கோரிக்கையுடன் இணங்கியொழுகுவதற்கு தவறுகின்ற ஆளொருவர் ஆனால் எந்த சேகரிப்புக்காக அறவீடு செய்யப் பட்டதோ அந்த சேகரிப்பு தொகையை விஞ்சாமல் வைத்திருக் கப்பட்ட ஆதனத்தின் அல்லது பிணையத்தின் பெறுமதியின் தொகையில் ஆணையாளர் தலைமையதிபதிக்கு பொறுப்பாதல் வேண்டும்.

(5) இப்பிரிவின் அல்லது 170 ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகும் ஆளொருவர் இணங்குகைக் காலத்திலாவது ஒப்படைக்கப்பட்ட ஆதனத்தின் அல்லது விடுவிக்கப்பட்ட பிணை யத்தின் பெறுமதியை அதிகரிப்பதற்கு வரிசெலுத்துநருக்கான அல்லது வேறொரு ஆளுக்கான கடப்பாட்டிலிருந்து விடுவிக்கப் படுதல் வேண்டும் என்பதுடன் இணங்கியொழுகுகையின் விளைவாந்தன்மையானதாக உறப்பட்ட நட்டத்திற்கு அல்லது சேதத்திற்கு தனிப்பட்ட ரீதியில் பொறுப்பாகவிருத்தல் ஆகாது.

(6) இப்பிரிவின்கீழ் அறவீடு ஒன்று எந்தத் தேதியன்று வரி செலுத்துநர் தவணை தவறுகையில் இருப்பதாக தீர்மானிக் கப்பட்டதோ அந்தத் தேதியின் ஐந்து வருடங்களினுள் தொடங்குதல் வேண்டும்.

(7) கணிசமான பெறுமதியின்றி வரிசெலுத்துநரது தனிப்பட்ட பொருட்களும் வீட்டுத் தட்டுமுட்டுப் பொருட்களும் அறவீட்டிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

கைப்பற்றப்பட்ட ஆதனத்தின் விற்பனை.

**166.** (1) ஆணையாளர் தலைமையதிபதி கைப்பற்றப்பட்ட ஆதனத்தை விடுவிப்பதற்கான நல்ல காரணங்களைக் கொண்டிருந்தாலன்றி அவர் அறவீட்டினைப் பின்பற்றி கைப்பற்றப்பட்ட ஆதனத்தினை விற்றல் வேண்டும்.

(2) விற்பனைகளின் வரும்படிகள் முதலாவதாக அறவீடு மற்றும் விற்பனைக்கு எதிராகவும் பின்னர் தண்டங்கள், வட்டி மற்றும் வரி என்பவற்றுக்கான பொறுப்புக்கு எதிராகவும் பயன்படுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன் விஞ்சுகையானது வரிசெலுத்துநருக்கு திருப்பியனுப்பப்படுதல் வேண்டும்.

(3) ஆணையாளர் தலைமையதிபதி இச்சட்டத்தினால் ஆணையாளர் தலைமையதிபதிக்கு அளிக்கப்பட்ட விற்பனைத் தத்துவங்களின்கீழ் பகிரங்க ஏல விற்பனை மூலம் விற்பனை பற்றிய நடவடிக்கைமுறை தொடர்பில் நிபந்தனைகளை ஆக்கலாம் என்பதுடன் -

(அ) உயர்விலை கூறுபவரினால் ஆக்கப்படவேண்டிய வைப்புத்தொகையை நிர்ணயிக்கலாம்;

(ஆ) விலை ஒன்றை ஒதுக்கலாம்;

(இ) எந்தக் காலத்தினுள் வைப்பொன்று செய்யப்பட வேண்டுமோ அந்தக் காலத்தையும் அத்துடன் அது இழப்பிக்கப்படக் கூடியதான பின்வரும் நிகழ்வுகளையும் குறித்துரைக்கலாம்; அத்துடன்

(ஈ) உயர்விலை கூறுபவர் தேவைப்படும் வைப்பைச் செய்வதற்கு அல்லது தேவைப்படும் காலத்தினுள் கொள்வனவைப் பூர்த்திசெய்வதற்கு தவறும் பட்சத்தில் ஆதனத்தின் உயர்விலைகூறுபவராக இருப்பதற்கு அடுத்த உயர்விலை கூறுபவரையும் மற்றும் கொள்வன வாளராகவும் குறித்துரைக்கலாம்.

(4) கைப்பற்றப்பட்ட பொருட்கள் அல்லது ஆதனம் ஆணையாளர் தலைமையதிபதி பணிக்கக்கூடியவாறு குறித்த நேரத்தில் மற்றும் குறித்த இடத்தில் பகிரங்க ஏலவிற்பனையில் விற்கப்படுதல் வேண்டும். ஆனால் ஆணையாளர் தலைமையதிபதியின் அபிப்பிராயப்படி கைப்பற்றப்பட்ட பொருட்கள் அழுகிப் போகக் கூடிய தன்மையினவாக இருந்தாலொழிய அல்லது பண்டங்களின் சொந்தக்காரர் அவற்றின் முன்னைய விற்பனையை கோரி யிருந்தாலொழிய பொருட்களின் அல்லது ஆதனத்தின் கைப் பற்றுகையின் பின்னர் பதினான்கு நாட்களினுள் இடம்பெறுத லாகாது.

(5) இச்சட்டத்தின்கீழ் கைப்பற்றப்பட்ட பண்டங்கள் யாவும் ஆணையாளர் தலைமையதிபதி தீர்மானிக்கக்கூடியவாறு சில பொருத்தமான இடத்தில் அல்லது சில பொருத்தமான ஆளின் உடைமையை விட்டுவைப்புச் செய்யப்படல் வேண்டும்.

(6) இச்சட்டத்தின்கீழ் கைப்பற்றப்பட்ட பண்டங்கள் பொருட்கள் யாவற்றினதும் விற்பனைத் தேதி, நேரம் மற்றும் இடம் வர்த்தமானியில் வெளியிடப்படல் வேண்டும் என்பதுடன் அதன் அறிவித்தலானது அப்பண்டங்கள் (4) ஆம் உட்பிரிவின்கீழ் பதினான்கு நாள் காலப்பகுதி முடிவடைய முன்னர் விற்பனை செய்யப்பட்டிருந்தாலொழிய விற்பனைத் தேதிக்கு முன்னர் வரிசெலுத்துநருக்கு வழங்கப்படுதல் வேண்டும்.

(7) கைப்பற்றுகை மற்றும் விற்பனைப் பண்டங்களின் நோக்கத் திற்காக, ஆளொருவர் ஆணையாளர் தலைமையதிபதியினால் எழுத்தில் வெளிப்படையாக அதிகாரமளிக்கப்பட்டால் கைப் பற்றுகை ஆணைப்பத்திரம் ஒன்றை நிறைவேற்றலாம் என்பதுடன் அத்தகைய கைப்பற்றுகை ஆணைப்பத்திரத்தினை வழங்குவதற்கு பகல் நேரத்தில் கட்டிடமொன்றை அவசியமாக உடைத்து திறந்தால் அவ்வாறு தேவைப்படும் போது கைப்பற்றுகை ஆணைப்பத்திரம் ஒன்றின் நிறைவேற்றுதலின் அத்தகைய கைப்பற்றுகை ஆணைப்பத்திரத்தினை வழங்குவதிலும் உதவுவதற்கு பொலிசு அலுவலர் ஒருவரிடமிருந்து உதவியை நாடலாம்.

(8) பண்டங்களின் அல்லது வேறு ஆதனத்தின் விற்பனையில், அரசாங்கத்தின் முறையாகப் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட அலுவலர் இலங்கை குடியரசின் சார்பில் பண்டங்களுக்கு விலைகோரலாம் அத்துடன் வேறு ஆதனத்தைக் கொள்வனவு செய்யலாம்.

(9) விற்பனைக்காக விளம்பரப்படுத்தப்பட்ட பண்டங்கள் அல்லது ஆதனம் விற்பனைக்காக நியமிக்கப்பட்ட நாள் அன்று விற்பனை செய்யப்படாதவிடத்து, அவ்வாதனம் மீண்டும் விற்பனைக்கு முன்வைக்கப்படலாம்.

(10) விற்பனையை நடத்துகின்ற அலுவலர் அல்லது வேறு ஆள் விற்பனையின் பெறுபேற்றை ஆணையாளர் தலைமையதிபதிக்கு அறிக்கையிடலாம் என்பதுடன் ஆணையாளர் தலைமையதிபதி கொள்வனவு பணத்தை செலுத்துவதன்மேல் ஆதனமானது கொள்வனவாளருக்கு மாற்றளிக்கப்படுதல் வேண்டும் என பணிக்கலாம்.

(11) பத்தாம் உட்பிரிவினைப் பின்பற்றி ஏற்பாடு செய்யப்பட்ட அறிக்கையை பரிசீலனை செய்தபின்னர் ஆணையாளர் தலைமையதிபதி, அறிக்கையில் குறிப்பிட்ட ஆதனம் ஒன்றின் விற்பனை தொடர்பில் மோசடி அல்லது முறையற்ற நடத்தை இடம்பெற்றுள்ளது என அல்லது இயைபானவரி செலுத்தப் பட்டிருந்தது என திருப்திப்படுகின்றவிடத்து ஆணையாளர் தலைமையதிபதி விற்பனையானது வெற்றானதும் வறிதானதுமாக இருப்பதாக வெளிப்படுத்தலாம்.

(12) இப்பிரிவிற்கு இணங்க ஆணையாளர் தலைமையதி பதியினால் கொள்வனவாளருக்கு மாற்றளிப்பு உறுதியின் நிறைவேற்றல் அல்லது குறித்தளிப்புமேல், பண்டங்கள் அல்லது ஆதனம் இச்சட்டத்தின்கீழ் எழுகின்ற வில்லங்கங்கள் எல்லா வற்றிலுமிருந்து சுதந்திரமாக விடுவிக்கப்பட்டு கொள்வன வாளருக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும்.

(13) வரி அறவீட்டுக்காக ஆதனம் ஒன்றை விற்பதற்கு ஆணையாளர் தலைமையதிபதி அதிகாரமளிக்கின்ற இச்சட்டத்தில் அடங்கியுள்ளது எதுவும் எவ்வாறிருப்பினும் விற்பனைக்கு பயன் கொடுப்பதற்கு நிறைவேற்றப்பட்ட மாற்றளிப்பு அல்லது குறித்தளிப்பு ஆதனத்தில் இலங்கைக் குடியரசின் ஏதேனும் மரணச் சொத்து, வட்டி, இல்லது உரிமையைப் பாதித்தலாகாது.

**167.** (1) ஆளொருவர் பின்வருவனவற்றை செலுத்தாமல் இலங்கையை விட்டு வெளியேறலாம் என நம்புவதற்கான நியாயமான ஏதுக்களை ஆணையாளர் தலைமையதிபதி அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் கொண்டுள்ளவிடத்து, - விட்டுநீங்கல் தடைக் கட்டளை.

(அ) அவ்வாளினால் செலுத்தப்படற்பாலதாக இருக்கின்றதும் அல்லது செலுத்தப்படற்பாலதாக வரவுள்ளதுமான வரி; அல்லது

(ஆ) அவ்வாள் எந்தக் கம்பெனியில் கட்டுப்பாட்டு உறுப்பினர் ஒருவராக இருக்கின்றாரோ அந்த கம்பெனி ஒன்றினால் செலுத்தப்படற்பாலதாக இருக்கின்றதும் அல்லது செலுத்தப்படற்பாலதாக வரவுள்ளதுமான வரி,

பின்வருவனவற்றைக் குறிப்பிட்டு குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளருக்கு எழுத்தில் விட்டு நீங்கல் தடைக்கட்டளை ஒன்றை வழங்கலாம்:-

(i) ஆளின் பெயரும் முகவரியும்;

(ii) ஆளொருவரினால் அல்லது அவ்வாள் எந்தக் கம்பெனி ஒன்றில் கட்டுப்பாட்டு அலுவலர் ஒருவராக இருக்கின்றாரோ அந்தக் கம்பெனி ஒன்றினால் செலுத்தப்படற்பாலதாக இருக்கின்றதும் அல்லது செலுத்தப்படற் அல்லது செலுத்தப்படற்பாலதாக வரக்கூடிய வரித்தொகை.

(2) ஆணையாளர் தலைமையதிபதி அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் விட்டு நீங்கல் தடைக்கட்டளை ஒன்றை வழங்கிய பின்னர் செயல்முறைக்கு உகந்தவரை விரைவாக கட்டளையில் பெயரிடப்பட்ட ஆளொருவர்மீது கட்டளையின் பிரதியொன்றை சேர்ப்பித்தல் வேண்டும்.

(3) விட்டுநீங்கல் தடைக்கட்டளை ஒன்று வழங்கப்படுகின்றவிடத்து ஒன்று வழங்கப்படுகின்றவிடத்து, இலங்கையில் இருந்து விட்டுநீங்கும் கட்டளையில் பெயர்குறிப்பிடப்பட்ட ஆளைத் தடுப்பதற்கு அவசியமாக இருக்கும் அளவுவரை குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டாளர், சட்டமுறையாகக் கொண்டுள்ள தத்துவங்களைப் பிரயோகித்தல் வேண்டும் அல்லது அவரது பணிப்பின்கீழ் அலுவலர் ஒருவரை அத்தகைய தத்துவங்களைப் பிரயோகிப்பதற்குச் செய்வித்தலும் வேண்டும்.

(4) விட்டுநீங்கல் தடைக்கட்டளை ஒன்று ஆணையாளர் தலைமையதிபதியினால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் இல்லாதொழிக்கப்படும்வரை வலுவில் இருத்தல் வேண்டும்.

(5) ஆணையாளர் தலைமையதிபதி அல்லது அதிகாரமளிக்கப் பட்ட அலுவலர் -

(அ) ஆளினால் அல்லது அவ்வாள் எந்தக் கம்பெனியில் கட்டுப்பாட்டு உறுப்பினர் ஒருவராக உள்ளாரோ அந்தக் கம்பெனியினால் செலுத்தப்படற்பாலதான வரியின் அல்லது செலுத்தப்படற்பாலதாக வரும் வரியின் முழு அளவிலான செலுத்துகையை அவ்வாள் செய்கின்ற விடத்து; அல்லது

(ஆ) வரிச் செலுத்துகைக்காக ஆணையாளர் தலைமயதிபதிக்கு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு ஆளொருவர் திருப்திகரமான ஒழுங்கைச் செய்கின்ற விடத்து.

உடனடியாக விட்டு நீங்கல் தடைக்கட்டளையை இல்லாதாக்குதல் வேண்டும்.

(6) விட்டுநீங்கல் தடைக்கட்டளை ஒன்றை இல்லாதொழிப் பதற்கான முடிபு ஒன்றைச் செய்தபின்னர் செயல்முறைக்கு உகந்தவரை விரைவாக, ஆணையாளர் தலைமையதிபதி அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டினர்மீது மற்றும் விட்டுநீங்கல் தடைக்கட்டளையில் பெயரிடப்பட்ட ஆள்மீது இல்லாதொழிப்பு அறிவித்தலைச் சேர்ப்பித்தல் வேண்டும்.

(7) குற்றவியல் அல்லது குடியியல் வழக்கு நடவடிக்கைகள் எதுவும் அரசாங்கம், குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டாளர், ஆணையாளர் தலைமையதிபதி, அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் அல்லது சுங்கங்கள், குடிவரவு, பொலிசார் அல்லது இச்சட்டத்தின் கீழ் சட்டமுறையாகச்செய்யப்பட்ட எவற்றுக்குமானவேறு அலுவலர் களுக்கும் எதிராகத் தொடரப்படுதலாகாது அல்லது பேணப்படுதலாகாது.

(8) இப்பிரிவில் “குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளர்” என்பது குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளர் எனப் பொருள்படும்.

வங்கி முறிவில் முன்னுரிமை.

**168.** வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் அடங்கியுள்ளது எதுவும் எது எவ்வாறிருப்பினும் -

(அ) தனியாளொருவரின் வங்கி முறிவில் நம்பிக்கைப் பொறுப்பாளர்; அல்லது

(ஆ) எந்தக் கம்பெனி ஒழித்துக்கட்டப்படவுள்ளதோ அந்தக் கம்பெனியின் ஒழிப்போன்

விடயத்திற்கேற்ப வங்குரோத்து தனியாள் அல்லது கம்பெனியின் சொத்துக்கள் அத்தனியாள் அல்லது கம்பெனியின் எல்லாத் தனிசுகளுக்கும் முன்னுரிமையிலுள்ள சிறப்புத் தனியொன்றாக (வங்கி முறிந்த அல்லது ஒடுக்கல் தொடங்கும் தேதியன்றோ அல்லது அதன் முன்னரோ மதிப்பிடப்பட்ட) இச்சட்டத்தின்கீழ் வருமதியான வரிச்சொத்துகைக்கு ஏற்புடையதாதல் வேண்டும்.

செலுத்துகை களுக்கு எதிரான எதிரீடு.

**169.** ஒரு அரசாங்கத் திணைக்களம் நிறுவனம் அல்லது அமைச்சு என்பன கூலி அல்லது சம்பளம் தொடர்பிலான கொடுப்பனவு ஒன்று தவிர வேறு எவரேனும் ஆளுக்கான கொடுப்பனவொன்றை செய்கின்றவிடத்து, அத் திணைக்களம், நிறுவனம் அல்லது அமைச்சு 152 ஆம் பிரிவின்கீழ் எத்தொகை தொடர்பில் அவ்வாள் தவணைதவறுகையில் இருக்கின்றாரோ அந்த ஏதேனும் தொகைக்கு முழுமையாக அல்லது பகுதியளவில் திருப்திப்படுவதன் மேல் அக் கொடுப்பனவின் முழுமைக்கும் அல்லது பகுதிக்கு ஏற்புடைய தாக்கலாம் என்பதுடன் அதற்கிணங்க அவ்வாளுக்கு அறிவித்தலும் வேண்டும்.

**170.** (1) வரிசெலுத்துநர் ஒருவர் தவணைதவறுகையில் இருந்தால் ஆணையாளர் தலைமையதிபதி மூன்றாம் திறத்தவரான கடனாளி ஒருவருக்கு எழுத்தில் அறிவித்தல் ஒன்றை சேர்ப்பிக்கலாம். *மூன்றாம் திறத்தவரான கடனாளிகள்*

(2) அறிவித்தல் ஒன்றைப் பெற்றுக்கொண்டதன் மேல், மூன்றாம் திறத்தவரான கடனாளி -

(அ) வரிசெலுத்துநர் எந்தத் தொகை தொடர்பில் தவணை தவறுகையில் உள்ளாரோ அந்தத் தொகை;

(ஆ) வரிசெலுத்துநருக்கு மூன்றாம் திறத்தவரான கடனாளியினால் செலுத்தப்படவேண்டிய பணம்; அத்துடன்

(இ) அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட தொகை,குறைந்தது பின்வரும் மூன்று மாதங்களினுள் (அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட தேதியில் மற்றும் வரிசெலுத்துநரின் கணக்கில்) ஆணையாளர் தலைமையதிபதிக்கு செலுத்துதல் வேண்டும்.

(3) அறிவித்தல் ஒன்று -

(அ) இணைந்த கணக்கினை வைத்திருப்பவர்கள் எல்லோரும் செலுத்தப்படாத வரிப்பொறுப்புகளைக் கொண்டிருக்கும் போது; அல்லது

(ஆ) வரிசெலுத்துநர் வேறு கணக்குவைத்திருப்பவர்களின் கையொப்பம் அல்லது அதிகாரவளிப்பு இன்றி (பங்குடைமைக் கணக்கு ஒன்று தவிர வேறு) கணக்கிலிருந்து நிதியை மீளப்பெறும் போது,

மட்டுமே இணைந்த கணக்கொன்றில் உள்ள தொகை தொடர்பில் மூன்றாம் திறத்தவரான கடனாளிக்கு சேர்ப்பிக்கப்படலாம்.

(4) அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட கொடுப்பனவுக்கான தேதி, அறிவித்தலானது, எந்தத் தேதியன்று மூன்றாம் திறத்தவரான கடனாளிக்கு சேர்ப்பிக்கப்படுகின்றதோ அந்தத் தேதியை அடுத்து பின்வரும் தேதியின் பதினைந்து நாட்களின் முன்னர் சேர்ப்பிக்கப்படலாகாது.

(5) ஓராம் உட்பிரிவின்கீழ் அறிவித்தல் ஒன்றைப் பெற்றுக் கொண்டதன்மேல், மூன்றாம் திறத்தவரான கடனாளி ஆணையாளர் தலைமையதிபதி அறிவித்தலை மீளப்பெறும்வரை வரி செலுத்துநருக்கு ஏதேனும் தொகையை செலுத்துதல் ஆகாது.

(6) மூன்றாம் திறத்தவரான கடனாளி பற்றி அறிவித்தலை சேர்ப்பித்த பின்னர் செயல்முறைக்கு உகந்தவரை விரைவாக, ஆணையாளர் தலைமையதிபதி அறிவித்தலின் பிரதியொன்றை வரிசெலுத்துநருக்கு சேர்ப்பித்தல் வேண்டும்.

(7) இப்பிரிவின்கீழ் மூன்றாம் திறத்தவரான கடனாளி ஒருவரினால் ஆணையாளர் தலைமையதிபதிக்கு செலுத்தப்படற்பாலதான தொகைகள் மூன்றாம் திறத்தவரான கடனாளியின் தனிப்பட்ட பொறுப்பொன்றாதல் வேண்டும், அது அதேமுறை வரி ஒன்றாக சேகரிக்கப்படலாம்.

(8) வரிசெலுத்துநருக்கு செலுத்தப்பட வேண்டிய பணம் பின்வருவனவற்றை உள்ளடக்குதல் வேண்டும் :-

(அ) வரிசெலுத்துநருக்கு தற்போது செலுத்தப்படவேண்டிய அல்லது அடுத்துப்பின்னர் செலுத்தப்படக்கூடியதாக வரக்கூடியதான தொகைகள்;

(ஆ) வரிசெலுத்தினரின் கணக்கில் வைத்திருக்கப்பட்ட அல்லது அடுத்துப்பின்னர் வரிசெலுத்துநரின் கணக்கிற்கு அல்லது கணக்கில் வைத்திருக்கப்படக்கூடிய தொகைகள்;

(இ) வரிசெலுத்துநர் ஒருவருக்கான செலுத்தகைக்கு மூன்றாம் ஆள் ஒருவரின் கணக்கில் வைத்திருக்கப்பட்ட அல்லது அடுத்துப்பின்னர் வைத்திருக்கப்படக்கூடிய தொகைகள்;

(ஈ) வரிசெலுத்துநர் ஒருவருக்கு பணத்தினைச் செலுத்துவதற்கு மூன்றாம் ஆள் ஒருவரிடமிருந்தான அதிகாரத்தைக் கொண்டுள்ள ஆளொருவரினால் வைத்திருக்கப்பட்ட தொகைகள்; அத்துடன்

(உ) நிதி நிறுவனம் ஒன்றான மூன்றாம் திறத்தவரான கடனாளி தொடர்பில், வரிசெலுத்துநர் அந்நிறுவனத்துடனான கணக்கொன்றில் வைத்திருக்கின்றதான தொகைகள்.

(9) வரிசெலுத்துநருக்கு செலுத்தப்படற்பாலதாக வருகின்றதான எதிர்கால கூலிகள் அல்லது சம்பளங்களின் சில பாகத்தைக் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியொன்றுக்கு பிடித்து வைத் திருப்பதற்கும், திணைக்களத்திற்கு செலுத்தும்படியும் தொழில் தருநரைத் தேவைப்படுத்துகின்ற அறிவித்தல் ஒன்று வரி செலுத்து நருடைய தொழில்தருநருக்கு இப்பிரிவின்கீழ் சேர்ப்பிக்கப்படலாம்.

(10) மாதமொன்றுக்கான கூலி முதலாவது எழுபத்தையாயிரம் ரூபா ஆனது (9) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட அறிவித் தல் ஒன்றின்கீழ் பிடித்து வைத்திருப்பதற்கு அமைந்ததாகாது.

(11) இப்பிரிவின்கீழ் அறிவித்தல் ஒன்றில் குறித்துரைக்கப்பட்ட காலத்தினுள் குறித்துரைக்கப்பட்ட தொகையைச் செலுத்துவதற்கு மூன்றாம் திறத்தவரான கடனாளி தவறுகின்றபோது, இச்சட்டத்தின் எற்பாடுகள் எந்தத் தேதியன்று மூன்றாம் திறத்தவரான கடனாளி ஆணையாளர் தலைமையதிபதிக்கு கொடுப்பனவு செய்வதற்கு தேவைப்படுத்தி இருந்தாரோ அந்தத் தேதியன்று அத்தகைய தொகை மூன்றாம் திறத்தவரான கடனாளிக்கு வருமதியான மற்றும் அப்பிரிவின்ல் செலுத்தப்படற்பாலதான வரியாக இருந்தால் போன்று ஏற்புடையதாதல் வேண்டும்.

(12) இப்பிரிவில் :

"பணம்" என்பது பணத்தில் குறித்துக் காட்டப்பட்ட அல்லது செலுத்தப்படற்பாலதான கடன் கடப்பாடுகள் ஒன்றை உள்ளடக்குகின்றது; அத்துடன்

"மூன்றாம் திறத்தவரான கடனாளி" என்பது வரிசெலுத்து நருக்கு பணத்தைச் செலுத்துகின்ற ஆளொருவர் எனப் பொருள்படும்.

**171.** (1) நூற்றி எழுபதாம் பிரிவினைப் பின்பற்றி ஆணையாளர் தலைமையதிபதிக்கு வரியைச் செலுத்துகின்ற மூன்றாம் திறத்தவர் ஒருவர் வரிசெலுத்துநரின் மற்றும் சம்பந்தப்பட்ட வேறு எல்லா ஆட்களின் அதிகாரத்துடன் செயற்பட்டிருப்பதாக கருதப்படுதல் வேண்டும். அறிவித்தலுக்கு இணங்கியொழுகுதல்.

(2) ஓராம் உட்பிரிவானது வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தில், ஒப்பந்தத்தில் அல்லது உடன்படிக்கையில் முரணாண ஏற்பாடு ஒன்றைப் பொருட்படுத்தாது ஏற்புடையதாதல் வேண்டும்.

(3) அறிவித்தலில் விதித்துரைக்கப்பட்ட வரி அல்லது கடப் பாடுகள் செலுத்தப்பட்டிருந்து அல்லது வேறுவகையில் திருப்திப்படுத்தப்பட்டிருந்தால் 170 ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அறிவித்தல் ஒன்று பயன் இல்லாதொழிதல் வேண்டும்.

(4) மூன்றாம் திறத்தவர் 170 ஆம் பிரிவின்கீழ் அறிவித்தல் ஒன்றை சேர்ப்பித்திருப்பின் மற்றும் வரிசெலுத்துநருக்கு செலுத்த வேண்டிய அல்லது வரிசெலுத்திநருக்காக வைத்திருக்கப்படும் பணம் இல்லாமை காரணமாக அறிவித்தலுடன் இணங்கியொழுகுவதற்கு இயலாதவராகவிருப்பின், அவ்வாள், இதனகத்துப்பின்னர் “மூன்றாம் திறத்தவர் அறிவித்தல்” எனக் குறிப்பீடு செய்யப்படும். அறிவித்தல் மூலம் ஆணையாளர் தலைமையதிபதிக்கு அறிவித்தல் வேண்டும்.

(5) மூன்றாம் திறத்தவர் அறிவித்தல் ஒன்று -

(அ) எழுத்தில் இருத்தல் வேண்டும்;

(ஆ) இயலாமைக்கான காரணங்கள் தரப்படுதல் வேண்டும்; அத்துடன்

(இ) இயலாமை பற்றி மூன்றாம் திறத்தினர் அறிய வந்தபின்னர் அத்துடன் ஏதேனும் பட்சத்தில் 170 ஆம் பிரிவிலுள்ள அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட கொடுப்பனவுத் தேதிக்கு முன்னர் செயற்பாட்டிற்கு உகந்ததாக இயன்றவரை வினாவாக ஆணையாளர் தலைமையதிபதியிடம் கோப்பிடுதல் வேண்டும்.

(6) மூன்றாம் திறத்தவர் அறிவித்தல் ஒன்றைப் பெற்றுக் கொண்டதன்மேல், ஆணையாளர் தலைமையதிபதி மூன்றாம் திறத்தவர்மீது சேர்ப்பிக்கப்பட்ட எழுத்திலான அறிவித்தல் மூலம் -

(அ) மூன்றாம் திறத்தவர் அறிவித்தலை ஏற்றுக்கொள்ளலாம் மற்றும் அவ்வறிவித்தலை இல்லாதாக்கலாம் அல்லது திருத்தலாம்; அல்லது

(ஆ) மூன்றாம் திறத்தவரின் அறிவித்தலை நிராகரிக்கலாம்.

(7) மூன்றாம் திறத்தவரின் அறிவித்தல் ஒன்றின் கோப்பிடுகையானது, ஆணையாளர் தலைமையதிபதி 170 ஆம் பிரிவு அறிவித்தலில் இல்லாதாக்கியிருந்தாலொழிய அல்லது திருத்தியிருந்தாலொழிய மற்றும் இல்லாதாக்கும்வரை அல்லது திருத்தும்வரை அத்தொகைகளுக்கான மூன்றாம் திறத்தவரது தனிப்பட்ட பொறுப்பின்மீது பயன்கொண்டிருத்தலாகாது.

(8) இப்பிரிவில் : "மூன்றாம் திறத்தவர்" என்பது முற்போந்த பிரிவின்கீழ் அறிவித்தல் ஒன்றை சேர்ப்பித்த மூன்றாம் திறத்தவரான கடனாளி ஒருவர் எனப் பொருளாகும்.

**172.** (1) இப்பிரிவானது - சொத்துக்களைப் பேணிக்காத்தல்.

(அ) வரிசெலுத்துநர் வருமதியானபோது செலுத்த வேண்டிய வரியின் முழுத்தொகையை செலுத்தமாட்டார் என; அத்துடன்

(ஆ) வரிசெலுத்துநரின் சொத்துக்களை விரயம் செய்தல் உள்ளடங்கலாக வரிஅறவீட்டை தடங்கல் செய்யும் நடவடிக்கையை எடுப்பார் என,

நம்புவதற்கு நியாயமான காரணத்தை ஆணையாளர் தலைமையதிபதி கொண்டுள்ளவிடத்து ஏற்புடையதாதல் வேண்டும்.

(2) ஆணையாளர் தலைமையதிபதி (இதனகத்துப்பின்னர் "சொத்தைப் பேணிக்காத்தல் கட்டளை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) வரிசெலுத்துநரின் சொத்தைப் பேணிக்காப்பதற்கும் சொத்துக்களை கைமாற்றல், மீளப்பெறுதல், கையுதிர்த்தல் அல்லது

வேறுவகையில் கையாளுவதிலிருந்து வரிசெலுத்தினருக்குச் சொந்தமான சொத்துக்களை வைத்திருக்கின்ற, கட்டுப்படுத்து கின்ற அல்லது முகாமை செய்கின்ற எவரேனும் ஆளை தடுப் பதற்குமாக கட்டளைக்காக, நியாயாதிக்கமுள்ள மாவட்ட நீதிமன்றத்திற்கு மறுதிறத்தவர் இல்லா விண்ணப்பத்தை ஆக்கலாம்.

(3) ஆணையாளர் தலைமையதிபதி (2) ஆம் உட்பிரிவின்கீழ் கட்டளைக்கான விண்ணப்பம் ஒன்றைச் செய்யும்வரை, சொத்துக் களின் கைப்பற்றல் உட்பட வரிசெலுத்துநரின் சொத்துக்களை பாதுகாப்பதற்கு அவசியமான அத்தகைய நடவடிக்கைகளை எடுக்கலாம். அவ்விண்ணப்பம் வரிசெலுத்துநரது சொத்துக்களை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பதிலிருந்து இருபத்திநான்கு மணித்தியாலங்களினுள் ஆக்கப்படுதல் வேண்டும்.

(4) ஓராம் உட்பிரிவின் தேவைப்பாடுகள் திருப்திப்படுத்தப் படுகின்றதென மாவட்ட நீதிமன்றம் திருப்திப்படுகின்றபோது சொத்தைப் பேணிக்காத்தல் கட்டளை ஒன்றை வழங்குதல் வேண்டும் என்பதுடன், அக்கட்டளையானது வரிசெலுத்துநருக்கு மற்றும் வரிசெலுத்துநரது சொத்துக்களைக் கட்டுப்பாட்டில் அல்லது முகாமையில் வைத்திருக்கப்படும் எவரேனும் ஆளுக்கு சேர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(5) சொத்தைப் பேணிக்காத்தல் கட்டளை ஒன்று முப்பது நாட் களுக்கு செல்லுபடியானதாதல் வேண்டும் என்பதுடன் ஆணை யாளர் தலைமையதிபதியினால் விண்ணப்பம் செய்வதன்மேல் மாவட்ட நீதிமன்றத்தினால் நீடிக்கவும்படலாம்.

(6) எவ் வரிசெலுத்துநருடைய நிதியங்கள் சொத்தைப் பேணிக் காத்தல் கட்டளையின் விடயமாக உள்ளதோ அவ் வரிசெலுத்துநர் அக்கட்டளை சேர்ப்பிக்கப்பட்டு பதினைந்து நாட்களினுள் அக்கட்டளையை இல்லாதாக்குவதற்கு அல்லது வேறுபடுத்துவதற்கு மாவட்ட நீதிமன்றத்திற்கு விண்ணப்பிக்கலாம்.

*(7) மாவட்ட நீதிமன்றம் சொத்தைப் பேணிக்காத்தல் கட்டளை ஒன்றை வழங்கியுள்ளவிடத்து, ஆணையாளர் தலைமையதிபதி கட்டளையின் அறிவித்தலைச் சேர்ப்பித்து முப்பது நாட்களினுள், எவ்வரிசெலுத்துனருக்கு கட்டளை தொடர்புபடுகின்றதொ அவ்வரி செலுத்துநரிடமிருந்து வருமதியான வரியைத் தீர்மானித்தல் வேண்டும் என்பதுடன், வரிசெலுத்துநர் மீதான வரி மதிப்பீடு பற்றிய அறிவித்தல் ஒன்றை சேர்ப்பித்தலும் வேண்டும் அத்துடன் இப்பகுதியின் ஏற்பாடுகளுக்கு இணங்க மதிப்பிடப்பட்ட வரியை அறவிடத் தொடங்குதலும் வேண்டும்.*

*(8) சொத்தைப் பேணிக்காத்தல் கட்டளை ஒன்று மாவட்ட நீதிமன்றம் ஆணையாளர் தலைமையதிபதியினால் செய்யப்பட்ட விண்ணப்பத்தின் மீது கட்டளையை நீடித்திருந்தாலொழிய (7) ஆம் உட்பிரிவின்கீழ் வரிமதிப்பீடு பற்றி அறிவித்தலை சேர்ப்பிப்பதன் மேல் தன்னியக்கரீதியில் காலாவதியாதல் வேண்டும்.*

*(9) சொத்தைப் பேணிக்காத்தல் கட்டளையைப் பின்பற்றி நிதியங்களைப் பேணிக்காக்கின்ற ஆள் ஒருவர், எல்லா நோக்கங்களுக்காகவும் அதன் அதிகாரத்தினுள் செயற்பட்டிருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய மற்றும் சம்மந்தப்பட்ட வேறு எல்லா ஆட்களும் ஏதேனும் எழுத்திலான சட்டத்தில், ஒப்பந்தத்தில் அல்லது உடன்படிக்கையில் முரணாகவுள்ள ஏதேனும் ஏற்பாடுகள் எது எவ்வாறிருப்பினும் குடியியல் அல்லது குற்றவியல் வழக்கு நடவடிக்கைகள் எல்லாவற்றுக்கும் மற்றும் நீதிமுறை அல்லது நீதிமுறைக்குப் புறம்பான எல்லா மன்றாணைகளுக்கு எதிராகவும் கட்டளையுடனும் சம்மந்தப்பட்டு எடுக்கப்படும் நடவடிக்கை தொடர்பில் நட்டோத்திரவாதம் அளிக்கப்படுதல் வேண்டும்.*

*(10) நியாயமான காரணமின்றி, ஆளொருவருக்கு சேர்ப்பிக்கப்பட்ட சொத்தைப் பேணிக்காத்தல் கட்டளை ஒன்றுடன் இணங்கியொழுகுவதற்கு தவறுகின்ற ஆளொருவர் அக்கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட தொகைக்கு தனிப்பட்ட ரீதியில் ஆளாகுதல் வேண்டும்.*

**கட்டுப்பாடற்ற கைமாற்றம் பெறுநர்கள்.**

**173.** (1) ஆணையாளர் தலைமையதிபதிக்கு தெரிந்த ஆதனம் பற்றிய நிறைவேற்று அறவீட்டின்பின்னர் வரிசெலுத்துநரது பொறுப்பொன்று திருப்திப்படாதுள்ளவிடத்து, அறவீட்டுத் தேதியின் முற்போந்த ஓர் ஆண்டு காலத்தில் கட்டுப்பாடற்ற கொடுக்கல் வாங்கல் ஒன்றில் வரிசெலுத்துநரின் சொத்துக்களைப் பெற்றுள்ள ஆளொருவர் பெறப்பட்ட சொத்துக்களின் பெறுமதியின் அளவிற்கு வரிக்கு இரண்டாம் நிலையில் பொறுப்பாதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள், 148 ஆம் பிரிவின்கீழ் ஆளொருவர் எந்தத் தொகைக்கு பொறுப்பாக இருக்கின்றாரோ அந்தத் தொகைக்கு ஏற்புடையதாதல் ஆகாது.

**கைமாற்றப்பட்ட வரிப்பொறுப்புகள்.**

**174.** (1) (இதனகத்துப் பின்னர் "கைமாற்றுபவர்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) வரிசெலுத்துநர் ஒருவர், அவரால் கொண்டு நடாத்தப்படும் வியாபாரம் ஒன்று தொடர்பில் வரிப்பொறுப்பு ஒன்றைக் கொண்டுள்ளபோதும் அத்துடன் அவ்வரிசெலுத்துநர் (இதனகத்துப் பின்னர் "கைமாற்றுப் பெறுநர்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இணைந்த ஒருவருக்கு வியாபாரத்தின் எல்லா அல்லது சில சொத்துக்களை கைமாற்றியுள்ளபோதும் "கைமாற்றுப் பெறுநர்" (இதனகத்துப் பின்னர் "கைமாற்றப்பட்ட பொறுப்பு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) வியாபாரம் தொடர்பில் கைமாற்றுபவரின் செலுத்தப்படாத வரிப்பொறுப்பிற்கு தனிப்பட்ட ரீதியில் பொறுப்பாதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் கைமாற்றுபவரிடமிருந்து கைமாற்றப்பட்ட பொறுப்பின் முழுமையாக அல்லது பகுதியளவில் அறவிடுவதிலிருந்து ஆணையாளர் தலைமையதிபதியை நீக்குதல் ஆகாது.

**பெறுநர்கள்.**

**175.** (1) பெறுநர் ஒருவர் நியமிக்கப்பட்ட பின்னர் பதினான்கு நாட்களினுள் பெறுநருடைய நியமனத்தினை ஆணையாளர் தலைமையதிபதி அறிவித்தல் வேண்டும்.

(2) ஆணையாளர் தலைமையதிபதி, எவ்வாளின் சொத்துக்கள் பெறுநரின் உடைமையில் அல்லது கட்டுப்பாட்டில் உள்ளதோ அவ்வாளினால் செலுத்தவேண்டிய அல்லது செலுத்த வேண்டியதாகவரவுள்ள வரிசெலுத்துகைக்காக ஏற்பாடு செய்வதற்கு போதுமானதாக இருப்பதற்கு ஆணையாளர் தலைமையதிபதிக்கு தோன்றுகின்ற தொகையினை பெறுநருக்கு அறிவிக்கலாம்.

(3) ஆணையாளர் தலைமையதிபதியின் முன் அனுமதியின்றி பெறுநர் என்ற தகைமையில் பெறுநரினால் வைத்திருக்கப்படும் இலங்கையினுள் அமைந்துள்ள சொத்தினை பெறுநர் ஒருவர் கையுதிர்க்காதிருக்கலாம்.

(4) இரண்டாம் உட்பிரிவின்கீழ் ஆணையாளர் தலைமையதிபதியினால் அறிவிக்கப்பட்ட தொகை அல்லது சொத்தின் ஆணையாளர் தலைமையதிபதியுடன் உடன்படக்கூடியவாறு ஒரு குறைவான தொகைச் சொத்தின் விற்பனை வருவாயிலிருந்து தள்ளிவைக்கப்படுதல் வேண்டும்.

(5) பெறுநர் ஒருவர் இப்பிரிவின் தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகத் தவறியிருப்பின் (4) ஆம் உட்பிரிவின்கீழ் தள்ளிவைக்கப்பட வேண்டும் என தேவைப்படுத்தும் தொகையின் அளவிற்கு (2) ஆம் உட்பிரிவில் அறிவிக்கப்பட்ட வரித் தொகைக்கு தனிப்பட்ட ரீதியில் பொறுப்பாதல் வேண்டும்.

(6) இப்பிரிவின் “பெறுநர்” என்பது இலங்கையில் உள்ள சொத்து தொடர்பில் பின்வருவோராக இருக்கின்ற ஆளொருவர் எனப் பொருள்படும்-

(அ) கம்பெனியினை அல்லது வேறு உருவகத்தினை ஒழிப்போன்;

(ஆ) நீதிமன்றத்திற்கு வெளியே அல்லது நீதிமன்றத்தினால் நியமிக்கப்பட்ட பெறுநர் ஒருவர்;

(இ) வங்கிமுறிந்தவரான நம்பிக்கைப் பொறுப்பாளர்;

(ஈ) உடைமையில் உள்ள ஈடுபெறுநர்;

(உ) இறந்துள்ள தனியாளின் மரணச் சொத்தின் நிறை வேற்றுநர், நிருவாகி அல்லது மரபுரிமையாளர்;

(ஊ) ஊனமுற்ற தனியாள் ஒருவரின் அலுவலர்களை நடாத்துபவர்; அல்லது

(எ) கூட்டிணைக்கப்பட்ட மீள்ஒழுங்கமைப்பொன்றிலுள்ள வழியுரிமையாளர் ஒருவர்.

## அத்தியாயம் XVII

### தண்டங்கள்

**176.** (1) இப்பிரிவானது இச்சட்டத்தின்கீழுள்ள தண்டங்களிற்கு ஏற்புடையதாதல் வேண்டும். தண்டங்கள்.

(2) வரிமதிப்பீடு, செலுத்துகை, சேகரிப்பு மற்றும் பிணக்கு என்பவற்றுக்கான நடவடிக்கைமுறைகள் வரியொன்றுதொடர்பான தண்டங்களிற்கு சமமாக ஏற்புடையதாதல் வேண்டும்.

(3) இவ்வத்தியாயத்திலுள்ள பிரிவொன்றின்கீழ் தண்டம் ஒன்றிற்கான ஆளினது பொறுப்பு இச்சட்டத்தின் வேறொரு பிரிவின்கீழ் அல்லது வேறொரு வரிச்சட்டத்தின்கீழ் தண்டமொன்றுக்கான ஆளினுடைய பொறுப்பு ஏதேனுமிருப்பின் அதிலிருந்து தனிவேறானதாகவும் வேறுபட்டதாகவும் உள்ளது என்பதுடன் XV அத்தியாயத்தின்கீழ் அறவிடப்பட்ட வட்டி மற்றும் XVIII ஆம் அத்தியாயத்தின்கீழ் விதிக்கப்பட்ட குற்றவியியல் தடைக்கு மேலதிகமானதுமாகும்.

(4) எண்பிப்பதற்கான பொறுப்பானது தண்டம் விதிப்பது தொடர்பில் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகாமையைக் காட்டுவது ஆணையாளர் தலைமையதிபதியைச் சார்ந்ததாதல் வேண்டும்.

(5) ஆணையாளர் தலைமையதிபதி இச்சட்டத்தின்கீழ் தண்டம் செலுத்தப்படற்பாலதாக இருந்தாற் போன்று விதிக்கப்பட்ட தண்டமொன்றின் மதிப்பீடு ஒன்றை ஆக்கலாம் என்பதுடன் எந்தத் தேதியன்று தண்டம் செலுத்தப்படற்பாலதாக உள்ளதோ அந்த தேதியையும் குறித்துரைக்கலாம்.

(6) தண்டம் ஒன்றின் மதிப்பீட்டு அறிவித்தல் ஒன்று தண்டத்துக்கு ஆளாகிய ஆளொருவருக்கு சேர்ப்பிக்கப்படல் வேண்டும் என்பதுடன், செலுத்தப்படற்பாலதான தண்டத்தொகை, தண்டத் தொகையானது எந்த ஏற்பாட்டின்கீழ் செலுத்தப்படற்பால தாகவுள்ளதோ அந்த ஏற்பாடு மற்றும் கொடுப்பனவிற்கான உரியதேதி என்பவற்றை குறிப்பிடுதல் வேண்டும் என்பதுடன் பின்வருவனவற்றின் அறிவித்தல் பற்றிய சேர்ப்பிப்பையும் குறிப்பிடுதலும் வேண்டும்–

(அ) அறிவித்தலும் மதிப்பீடும் இச்சட்டத்தின் கீழான அறிவிப்பு, செலுத்தப்படற்பாலதான வரிமதிப்பீடு போன்றவையாகக் கொள்ளப்படுதல் வேண்டும்;

(ஆ) அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட தண்டத் தொகை இச்சட்டத்தின்கீழ் செலுத்தப்படற்பாலதான வரியாகக் கொள்ளப்படுதல் வேண்டும்; அத்துடன்

(இ) கொடுப்பனவிற்கான உரிய தேதி அறிவித்தலில் குறித்துரைக்கப்படும் தேதியாதல்.

(7) தண்டமொன்றைச் செலுத்துவதற்கான ஆளினது பொறுப்பானது (6) ஆம் உட்பிரிவின்கீழ் ஆணையாளர் தலைமையதிபதியினால் மதிப்பீட்டைச் செய்வதன்மேல் எழுதல் வேண்டும்.

(8) தண்டமொன்றை மதிப்பீடு செய்வதற்கான வரையறைகளின் காலப்பகுதி தண்டமானது எந்த மீறுகையை விளைவிக்கின்றதோ அந்த மீறுகையின் பின்னர் ஐந்து வருடங்கள் ஆதல் வேண்டும். 180 ஆம் பிரிவின் கீழான மீறுகை தவிர்ந்த விடயத்தில் தண்ட மொன்றை மதிப்பீடு செய்வதற்கான வரையறைத் தண்டமானது எந்த வரியுடன் தொடர்புபடுகின்றதோ அந்த வரிமதிப்பீட்டுக்கான அதே வரையறையாக இருத்தல் வேண்டும்.

(9) தண்டம் ஒன்றுக்கு ஆளாகும் ஆளொருவர் நியாயமான காரணங்களைக் காட்டியிருந்தால் ஆணையாளர் தலைமையதிபதி -

(அ) தண்ட மதிப்பீட்டிலிருந்து முழு அளவில் அல்லது பகுதியளவில் விலக்கலாம்; அல்லது

(ஆ) மதிப்பிடப்பட்டுள்ள தண்டமொன்றை முழுஅளவில் அல்லது பகுதியளவில் அனுமதிக்கலாம் அல்லது விட்டுவிடலாம்.

(10) அலுவல்களின் நிலைமையொன்று இருக்கும் போதான அல்லது தொடரும் போதான ஒவ்வொரு நாளுக்கும், மாதத்திற்கு அல்லது வேறு காலப்பகுதிக்கு செலுத்தப்படற்பாலதான தண்டமொன்று அந்த அலுவல்களின் நிலைமை தொடங்குகின்ற, தொடர்கின்ற அல்லது முடிவடைகின்ற அந்நாளின், மாதத்தின் அல்லது வேறு காலப்பகுதியின் பகுதிக்கு முழுமையாகச் செலுத்தப்படற்பாலதாதல் வேண்டும்.

*வரிசெலுத்துநர் தகவலிலான மாற்றங்களைப் பதிவுசெய்வதற்கு அல்லது அறிவிப்பதற்குத் தவறுதல்.*

**177**. நூற்றியிரண்டாம் பிரிவின்கீழ் தேவைப்படுத்தப்பட்டவாறு பதிவுசெய்வதற்கு தவறுகின்ற அல்லது 102 (5) ஆம் அல்லது 146 (4) ஆம் பிரிவினால் தேவைப்படுத்தப்பட்டவாறு ஆணையாளர் தலைமையதிபதிக்கு அறிவிக்கத்தவறுகின்ற ஆளொருவர் ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சாத தண்டமொன்றுக்கு ஆளாகுதல் வேண்டும்.

*வரிவிபரத் திரட்டைப் பிந்திக் கோப்பிடுதல்.*

**178**. (1) கோப்பிடுகையானது எந்தெந்தத் தேதியன்று தேவைப்படுத்தப்படுகின்றதோ அந்தந்தத் தேதியன்று அல்லது அதற்குமுன்னர் வரிவிபரத்திரட்டைக் கோப்பிடுவதற்கு தவறுகின்ற ஆளொருவர் பின்வருவனவற்றினை, விஞ்சும் தொகைக்கு சமமாகவுள்ள தண்டமொன்றைச் செலுத்துவதற்கு ஆளாதல் வேண்டும்:-

(அ) செலுத்தவேண்டிய வரித்தொகையின் ஐந்து சதவீதம் அத்துடன் கூட்டி ஒவ்வொரு மாதத்திற்கு அல்லது கோப்பிடுதல் தவறுகை எந்த மாதத்தில் தொடர்கின்றதோ அந்த மாதத்தின் ஒரு பகுதிக்கு செலுத்தவேண்டிய வரி வரித்தொகையில் மேலதிகமாக ஒரு சதவீதம்; அத்துடன்

(ஆ) ஐம்பதாயிரத்துடன் கூட்டி ஒவ்வொரு மாதத்திற்கும் அல்லது கோப்பிடுதல் தவறுகை எந்த மாதத்தில் தொடர்கின்றதோ அந்த மாதத்தின் ஒருபகுதிக்கு மேலதிகமாக பத்தாயிரம் ரூபா.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட வரிவிபரத்திரட்டு ஒன்று தொடர்பிலான தண்டத்தொகையானது நான்கு இலட்சம் ரூபாவுக்கு வரையறுக்கப்படுதல் வேண்டும்.

(3) இப்பிரிவின்கீழான தண்டமானது வரிவிபரத்திரட்டு எந்த வரிக் காலப்பகுதியுடன் தொடர்புறுகின்றதோ அந்த வரிக் காலப்பகுதியுடன் வரிப்பொறுப்பைச் சேர்ப்பதாக கொள்ளப்படுதல் வேண்டுமென்பதுடன், அக்காலப்பகுதிக்கு வரியாக அதேமுறையில் மதிப்பிடப்பட்டு சேர்க்கவும்படாமை.

பிந்திய செலுத்துகை.

**179.** (1) உரிய தேதியின் பதினான்கு நாட்களினுள் அல்லது வரிமதிப்பீட்டு அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட உரிய தேதியில் எது பிந்தியதோ அந்த தேதி, வரிசெலுத்தும் காலப்பகுதி யொன்றுக்கான எல்லா அல்லது பாகத்திற்குச் செலுத்துவதற்குத் தவறுகின்ற ஆளொருவர் வருமதியான ஆனால் செலுத்தப்படாத வரித்தொகையின் இருபது சதவீதத்திற்குச் சமமான தண்ட மொன்றிற்கு ஆளாகுதல் வேண்டும்.

(2) தவணைப்பணத்துக்கான உரிய தேதியின் பதினான்கு நாட்களினுள் இச்சட்டத்தின்கீழ் தேவைப்படுத்தப்பட்ட தவணைப் பணத்தின் எல்லா அல்லது பாகத்தினை செலுத்துவதற்குத் தவறுகின்ற ஆளொருவர் வருமதியான ஆளால் செலுத்தப்படாத வரித்தொகையின் பத்து சதவீதத்துக்குச் சமமான தண்டப்பண மொன்றுக்கு ஆளாகுதல் வேண்டும்.

(3) காலநீடிப்பு 151 ஆம் பிரிவின்கீழ் வழங்கப்பட்டிருக்குமிடத்து, காலநீடிப்புக் காலப்பகுதியானது கொடுப்பனவு மேற்கொள்ளப் படாமலேயே காலாவதியாகியிருந்தாலொழிய, (1) ஆம் உட்பிரிவின் கீழ் தண்டமொன்றிற்கு ஆளாகுதலாகார்.

அசட்டையாக அல்லது மோசடியாக குறைபடச் செலுத்துகை.

**180.** வரிசெலுத்துநரது வரிவிபரத்திரட்டு ஒன்றிலான பிழையான கூற்று அல்லது முக்கியமான விட்டுவிடுகையொன்றின் பெறுபேறாக அத்துடன் அக்கூற்று அல்லது விட்டுவிடுகையானது வரிசெலுத்து நரின்பாலான வேண்டுமென்றநடத்தை அல்லது அசட்டையின் பெறுபேறு ஒன்றாக இருக்கின்றதென்பதால் வரிகுறைவாக செலுத்தப்பட்டிருக்கின்றவிடத்து, வரிசெலுத்துநர் பின்வரும் தொகையில் தண்டமொன்றுக்கு ஆளாதல் வேண்டும்:-

(அ) பந்தி (ஆ) ஏற்புடையதாகவிருப்பின் குறைந்தபட்ச செலுத்துகையின் இருபத்தைந்து சதவீதம்; அல்லது

(ஆ) குறைந்தபட்ச செலுத்துகைத் தொகையானது பின்வருவன வாகவிருப்பின் அக்குறைந்தபட்ச செலுத்துகையின் எழுபத்தைந்து சதவீதம்-

(i) பத்து மில்லியன் ரூபாவிற்கும் மேற்பட்டது; அல்லது

(ii) வரிசெலுத்தும் காலப்பகுதிக்கான ஆளினது வரிப்பொறுப்பின் இருபத்தைந்து சதவீதத்திற்கு மேற்பட்டது.

போலியாக அல்லது பிழை வழியுய்க்கும் கூற்றுக்கள்.

**181.** (1) முக்கியமான விபரமொன்றின் போலியான அல்லது பிழைவழியுய்க்கின்றதான கூற்றொன்றை வரி அலுவலர் ஒருவருக்கு அளிக்கின்ற ஆளொருவர் தண்டமொன்றுக்கு ஆளாதல் வேண்டும் என்பதுடன் இச்சட்டத்தின்கீழ் ஆளொருவரினால் முறையாக செலுத்தப்படற்பாலதான அல்லது ஆளொருவருக்கு மீளளிக் கப்படற்பாலதான தொகை செலுத்தப்படற்பாலதாகவிருக்கக் கூடிய அல்லது மீளளிக்கப்படற்பாலதாகவிருக்கக்கூடியதான தொகையை விட விஞ்சியிருப்பின் அல்லது குறைவாகவிருப்பின், அவ்வாள் அக்கூற்று உண்மையானது என்ற அடிப்படையில் வரிமதிப் பிடப்படுதல் வேண்டும்.

(2) ஆளொருவர் எந்தத் தண்டத்தொகைக்கு பொறுப்பாக வுள்ளாரோ அந்த தண்டத்தொகை ஐம்பதாயிரம் ரூபாவிற்கு மேற்பட்டதாகவும் இருத்தல் வேண்டும்.

(அ) அவ்வாளினால் செலுத்தப்படற்பாலதான தொகை கூற்றில் வழங்கப்பட்ட தகவலின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட்டிருக்கும் குறைவாக இருந்திருக்கக் கூடுமெனில், அத்தொகை எந்தத் தொகையில் அவ்வாறு குறைக்கப்பட்டிருக்ககூடுமோ அந்தத் தொகையாதல் வேண்டும்; அல்லது

(ஆ) அவ்வாள் எந்த மீளளிப்புக்கு விண்ணப்பித்துள்ளாரோ அந்த மீளளிப்புத்தொகை அக்கூற்றில் வழங்கப்பட்ட தகவலின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட்டிருப்பின், அதிகரிக்கப்படக்கூடுமாயின், அத்தொகை எந்தத் தொகையினால் அவ்வாறு அதிகரிக்கப்பட்டிருக்கக் கூடுமோ அத்தொகையாதல் வேண்டும்.

(3) அக்கூற்றை அளித்த ஆள் முக்கியமான விபரமொன்றில் அக்கூற்று போலியாக அல்லது பிழைவழியுய்ப்பதாகவிருந்தால் அதை அறியாவிடின் அத்துடன் அறிவதற்கு நியாயமானமுறையில் எதிர்பார்க்கப்படமுடியாவிடின் தண்டமானது இப்பிரிவின்கீழ் விதிக்கப்படலாகாது.

(4) வரி அலுவலர் ஒருவருக்கு அளிக்கப்பட்ட கூற்றொன்றிற்கு இப்பிரிவிலான குறிப்பீடு ஒன்று இச்சட்டத்தின்கீழ் அலுவலரது கடமைகளை புரிகையில் செயலாற்றுகின்ற அவ்வலுவலருக்கு வாய்மொழிமூலமாக, எழுத்தில் அல்லது வேறொரு வடிவத்தில் அளிக்கப்பட்ட கூற்றொன்றிற்கான குறிப்பீடு ஒன்றை உள்ளடக்குதல் வேண்டும் என்பதுடன், பின்வருமாறு அளிக்கப்பட்ட கூற்றொன்றையும் உள்ளடக்குதலும் வேண்டும்.

(அ) இச்சட்டத்தின்கீழ் அளிக்கப்பட்ட, தயாரிக்கப்பட்ட, வழங்கப்பட்ட, கோப்பிடப்பட்ட, முன்வைக்கப்பட்ட அல்லது கொடுத்துதவப்பட்ட விண்ணப்பத்தில், சான்றிதழில், வெளிப்படுத்துகையில், அறிவித்தலில், விபரத்திரட்டில், ஆட்சேபனையில் அல்லது வேறு ஆவணத்தில்;

(ஆ) இச்சட்டத்தின்கீழ் கொடுத்துதவப்படவேண்டிய தேவைப் படுத்தப்படும் ஏதேனும் தகவலில்;

(இ) இச்சட்டத்தினைப் பின்பற்றுவதனைவிட வேறுவகையில் வரிஅலுவலருக்கு கொடுத்துதவப்பட்ட ஆவண மொன்றில்;

(ஈ) வரி அலுவலரினால் ஆளொருவரிடம் கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடையளிப்பதில்; அல்லது

(உ) அக்கூற்றானது வரி அலுவலருக்கு தெரிவிக்கப்பட் டிருக்கக்கூடுமென்ற அறிவு அல்லது நியாயமான எதிர்பார்ப்புடன் வேறோராளுக்கு.

(5) முக்கியமான விபரமொன்றில் பிழைவழியுய்க்கின்றதான கூற்றொன்றிற்கு இப்பிரிவிலுள்ள குறிப்பிடுகையானது அக்கூற்றிலிருந்து விடயம் அல்லது கருமம் ஒன்றின் விட்டுவிடுகையொன்றைக் கொண்டதான கூற்றொன்றிற்கான குறிப்பீடு ஒன்றை உள்ளடக்குதல் வேண்டும்.

(6) இப்பிரிவானது 180 ஆம் பிரிவின்கீழ் தண்டத்திற்கு அமைவான நட்டத்திற்கு ஏற்புடையதாதல் ஆகாது.

ஆவணங்களைப் பேணுவதற்கு அல்லது வசதிகளை வழங்குவதற்கு தவறுதல்.

**182.** (1) இச்சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்டவாறாக முறையான ஆவணங்களைப் பேணுவதற்கு தவறும் ஆளொருவர், தவறுகை தொடரும் ஒவ்வொரு மாதத்திற்கு அல்லது மாதமொன்றின் பாகத்துக்கு தண்டமொன்றிற்கு ஆளாதல் வேண்டும்.

(2) தவறுகை தொடரும் ஒவ்வொரு நாளுக்கும் தண்டமானது, நாளொன்றிற்கு ஆயிரம் ரூபாவாக இருத்தல் வேண்டும்.

(3) இப்பிரிவின்கீழ் தண்டமொன்றை மதிப்பிடுவதற்கு முன்னர், ஆணையாளர் தலைமையதிபதி எச்சரிக்கை அறிவித்தலொன்றை வழங்குதல் வேண்டும் என்பதுடன், வரிசெலுத்துநர் அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட நேரத்தினுள் எச்சரிக்கை அறிவித்தலுக்கு இணங்கியொழுகுவாரானால் தண்டம் ஏதும் இப்பிரிவின்கீழ் வருமதியாகவிருத்தல் ஆகாது.

(4) இச்சட்டத்தின்கீழ் அல்லது இச்சட்டத்தினால் தேவைப் படுத்தப்பட்டவாறு வரி அலுவலர் ஒருவருக்கு நியாயமான வசதிகளையும் உதவிகளையும் வழங்குவதற்கு தவறும் ஆளொருவர், பத்தாயிரம் ரூபாவை விஞ்சாத தொகையொன்றில் தண்டமொன் றிற்கு ஆளாதல் வேண்டும்.

முன்றாந் திறத்தவர் அறிவித்தலுக்கு இணங்கியொழுகத் தவறுதல்.

**183**. பிரிவு 170 இன் கீழ் வழங்கப்பட்ட அறிவித்தல் ஒன்றுக்கு இணங்கியொழுகத் தவறும் ஆளொருவர், மூன்றாந்திறத்தவரால் செலுத்தப்படற்பாலதான தொகைக்கும் மற்றும் பிரிவு 170 அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட உரிய தேதியில் ஆணையாளர் தலைமையதிபதிக்கு செலுத்தப்பட்ட தொகைக்குமிடையிலான வித்தியாசத்தின் இருபத்தைந்து சதவீத தண்டமொன்றிற்கு ஆளாதல் வேண்டும்.

கைமாற்றல் விலையிடுதல் தண்டங்கள்.

**184**. எவரேனும் ஆள் அல்லது பங்குடைமை, இணைந்த தொழில்முயற்சிகளுடனான கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பில், பிரிவு 168 அல்லது 169 இன் தேவைப்பாடுகளுக்கு இணங்கி யொழுகத் தவறுமிடத்து ஆணையாளர் தலைமையதிபதி அத்தகைய ஆளின் அல்லது பங்குடைமையின் மேல் பின்வருவனவற்றை விதிக்கலாம் -

(அ) தேவைப்படுத்தப்பட்ட ஆவணங்கள் பேணப்படாத விடத்து இணைந்த தொழில் முயற்சிகளுடனான கொடுக்கல்வாங்கல்களின் கூட்டுமொத்தப் பெறுமதியின் ஒரு சதவீதத்தை விஞ்சாதவொரு பணத்தொகையிலான ஒரு தண்டம்,

(ஆ) தேவைப்படுத்தப்பட்ட ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படாத விடத்து இருநூற்றி ஐம்பதாயிரம் ரூபாவை விஞ்சாத வொரு பணத்தொகையிலான ஒரு தண்டம்,

(இ) ஏதேனும் தேவைப்படுத்தப்பட்ட தகவலை வெளிப் படுத்தாமை விடயத்தில், அதனது இணைந்த தொழில் முயற்சிகளுடனான கொடுக்கல்வாங்கல்களின் கூட்டு மொத்தப் பெறுமதியின் இரண்டு சதவீதத்தை விஞ்சாத வொரு பணத்தொகையிலான ஒரு தண்டம்,

(ஈ) தேவைப்படுத்தப்பட்ட ஆவணங்கள் குறித்துரைக்கப்பட்ட தேதியன்று சமர்ப்பிக்கப்படாதவிடத்து ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத ஒரு தண்டம், அல்லது

(உ) அத்தகைய ஆள் -

(i) அவரது வருமான விபரங்களை மறைத்து வைத்திருந்தவிடத்து அல்லது அத்தகைய வருமானத்தின் செம்மையற்ற விபரங்களை கொடுத்துதவியவிடத்து; அத்துடன்

(ii) அவரது வருமான விபரங்களை மறைத்து வைத்தல் அல்லது அத்தகைய வருமானத்தின் செம்மையற்ற விபரங்களை கொடுத்துதவுதல் காரணமாக தட்டிக்கழிப்பதற்கு நாடியுள்ளவிடத்து,

மேலதிக வரியின் பெறுமதியின் இருநூறு சதவீதத்திலான ஒரு தண்டம் அத்துடன் எழுத்திலான அறிவித்தல் மூலம் அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய காலப்பகுதியுள் அத்தகைய தண்டத்தை செலுத்துவதற்கு அத்தகைய இணைந்த தொழில் முயற்சியை தேவைப்படுத்தலாம்.

தகவல் கொடுப்பதற்கான அறிவித்தலுக்கு இணங்கியொழுகத் தவறுதல்.

**185.** (1) இச்சட்டத்தின்கீழ் முறையாக ஆக்கப்பட்ட, தகவலுக்கான வேண்டுகோள் ஒன்றுக்கு குறித்துரைக்கப்பட்ட நேரத்தினுள், இணங்கியொழுகத்தவறும் ஆளொருவர், ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாத தொகையொன்றிலான தண்டமொன்றிற்கு ஆளாதல் வேண்டும்.

(2) தண்டமொன்றை மதிப்பிடுவதற்கு முன்னர், ஆணையாளர் தலைமயதிபதி எச்சரிக்கை அறிவித்தலொன்றை வழங்குதல் வேண்டும் என்பதுடன், வரிசெலுத்துநர் அறிவித்தலின் சேர்ப்பித்தலிலிருந்து முப்பது நாட்களினுள் எச்சரிக்கை அறிவித்தலுக்கு இணங்கியொழுகின்றவிடத்து தண்டம் ஏதும் இப்பிரிவின்கீழ் வருமதியாகவிருத்தல் ஆகாது.

## அத்தியாயம் XVIII

## குற்றவியல் வழக்கு நடவடிக்கைகள்

குற்றவியல் வழக்கு நடவடிக்கைகள்.

**186.** (1) ஆணையாளர் தலைமையதிபதி, இச்சட்டத்தில் அல்லது வரிச்சட்டமொன்றில் குறித்துரைக்கப்பட்ட தவறொன்றைப் புலனாய்வு செய்யலாம்.

(2) சட்டத்துறைத் தலைமையதிபதி அல்லது சட்டத்துறைத் தலைமையதிபதியினால் அதிகாரமளிக்கப்பட்ட கையளிப்பாளர் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றைப் புரியும் ஒருவருக்கெதிராக குற்றவழக்கைத் தொடுத்தல் வேண்டும். அத்தகைய குற்றவியல் வழக்கு நடவடிக்கைகள் ஆணையாளர் தலைமையதிபதியின் பெயரிலும் கொண்டுவரப்படுதல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின்கீழான வழக்கு நடவடிக்கைகள், வேறு ஏதேனும் சட்டத்தின்கீழ் கொண்டுவரப்படக்கூடியவாறான குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளைப் பாதித்தலாகாது.

(4) ஆளொருவர், ஒற்றைச் செயல் ஒன்று, விட்டு விடுகை அல்லது செயற்பாட்டுமுறை தொடர்பில், இவ்வத்தியாயத்தின் கீழ் ஒரு தவறுக்கு மேற்பட்ட தவறுகளுக்கு குற்றத்தீர்ப்பளிக்கப்படு கின்றவிடத்து -

(அ) தவறுகளுக்காக விதிக்கப்பட்ட ஆகக்கூடிய மறியற்றண் டனைக் காலம், ஐந்தாண்டு காலம் ஒன்றை விஞ்சுத லாகாது; அத்துடன்

(ஆ) அவ்வாளுக்கெதிராக, அதே செயல், விட்டுவிடுகை அல்லது செயற்பாட்டுமுறை தொடர்பில் மேலதிக தவறுகளுக்காக, பின்னர் குற்றவழக்குத் தொடுக்கப்படு தல் கூடாது.

(5) பின்வரும் சந்தர்ப்பங்களில், ஆளொருவரினால், செயல், விட்டுவிடுகை அல்லது நடைமுறை தொடர்பில் அத்தியாயம; XVII இன் கீழ் தண்டம் ஏதும் செலுத்தப்படற்பாலதாகாது -

(அ) அவ்வாள், அதே செயல், விட்டுவிடுகை அல்லது செயற்பாட்டுமுறை தொடர்பில் இவ்வத்தியாயத்தின் கீழ் தவறொன்றுக்கு குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டுள்ளவிடத்தும்; அல்லது

(ஆ) தவறானது, சட்டமா அதிபரினால் இணக்கப்பட்டுள்ள விடத்தும்.

**உதவுதலும் உடந்தையாக விருத்தலும்.**

**187**. இவ்வத்தியாயத்தின்கீழ், குற்றவியல் தவறொன்றைப் புரிவதற்கு இன்னொரு ஆளுக்கு வேண்டுமென்றே உதவுகின்ற, உடந்தையாகவிருக்கின்ற, துணைபுரிகின்ற, ஆலோசனை அளிக்கின்ற, தூண்டுகின்ற அல்லது ஊக்குவிக்கின்ற ஆளொருவர், தவறானது அவ்வாளினால் புரியப்பட்டிருந்தால் விதிக்கப்பட்டிருக்கக்கூடிய அதே தண்டத்திற்கு குற்றத்தீர்ப்பின் மேல் ஆளாதல் வேண்டும்.

**வரையறைகளின் காலப்பகுதி.**

**188**. இவ்வத்தியாயத்தின் கீழான வழக்கு நடவடிக்கைகள், சார்த்தப்பட்ட தவறானது பின்வருவனவற்றை உள்ளடக்குகின்ற விடத்து தொடங்கப்படலாம்-

(அ) செயலொன்றைச் செய்ததன் பின்னர், பன்னிரண்டு ஆண்டுகளுக்குள் அச்செயலைச் செய்தல்;

(ஆ) தவறொன்று நிகழ்ந்ததன் பின்னர் பன்னிரண்டு ஆண்டுகளுக்குள் அல்லது அதன் பின்னராயின் தவறுகை ஆணையாளர் தலைமையதிபதிக்கு தெரிய வந்ததன் பின்னர் மூன்று ஆண்டுகளுக்குள் அச் செயலைச் செய்வதற்கு தவறுதல்; அல்லது

(இ) ஆளொருவரின் வரிசெலுத்துவதற்கான சரியான பொறுப்பு, அவ்வரிக்காலப்பகுதிக்கு இறுதியாக்கப்பட்ட பின்னர் மூன்றாண்டுகளுக்குள், அவ்வாளின் வரி செலுத்துவதற்கான பொறுப்பு, தொடர்பாக அவ்வாளினால் தகவல் வெளியிடப்படாமை அல்லது பிழையான வெளியிடுகை.

**வரித் தட்டிக்கழிப்பு.**

**189**. வரிமதிப்பீடு, கொடுப்பனவு அல்லது வரிச் சேகரிப்பை வேண்டுமென்றே தட்டிக்கழிக்கின்ற அல்லது தட்டிக்கழிப்பதற்கு முயற்சிசெய்கின்ற ஆளொருவர், அல்லது ஆளொருவர் எவ்வரி மீளளிப்பொன்றுக்கு உரித்துடையவர் இல்லையோ அவ்வரி மீளளிப்பு ஒன்றை வேண்டுமென்றும் மோசடியான முறையிலும் கோருகின்ற அவ்வாள், தவறொன்றிற்கு குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் பத்து மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணம் ஒன்றிற்கு அல்லது இரண்டு ஆண்டுகளை விஞ்சாத காலப்பகுதியொன்றிற்கான மறியற் தண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற்றண்டனை இரண்டுக்கும் ஆளாதல் வேண்டும்.

**190.** (1) இச்சட்டத்தை நிருவகிப்பதில், திணைக்களத்துக்கு வேண்டுமென்றே தடையாகவிருக்கின்ற அல்லது தடையாகவிருக்க முயற்சி செய்கின்ற ஆளொருவர், தவறொன்றிற்கு குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணம் ஒன்றிற்கு அல்லது ஓராண்டை விஞ்சாத காலப்பகுதியொன்றிற்கான மறியற் தண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற் தண்டனை இரண்டுக்கும் ஆளாதல் வேண்டும்.

வரி நிருவாகத்துக்குத் தடையாக விருத்தல்.

(2) ஆளொருவர், பின்வருவனவற்றைச் செய்தால் இப்பிரிவின் நோக்கங்களுக்காக, இச்சட்டத்தை நிருவகிப்பதில் தடையாக விருக்கிறார் -

(அ) அவரின் கட்டுப்பாட்டினுள் உள்ள ஆவணங்கள், பதிவேடுகள், ஆவணங்கள் அல்லது தரவைப் பரிசோதனை செய்வதற்கு திணைக்களத்தின் வரி அலுவலர்களின் மூலமான சட்டமுறையான வேண்டுகோள் ஒன்றுக்கு இணங்கியொழுகத் தவறுதல்;

(ஆ) அவர், திணைக்களத்தின் வரி அலுவலர்கள் முன்னிலையில், தோன்றுவதற்கான திணைக்களத்தின் அலுவலர்களின் மூலமான சட்டமுறையான வேண்டுகோள் ஒன்றுக்கு இணங்கியொழுகத் தவறுதல்;

(இ) வளாகங்களுக்குள் நுழைவதற்கான திணைக்களத்தின் வரி அலுவலர்களின் சட்டமுறையான உரிமையில் தலையிடுதல்;

(ஈ) விபரத் திரட்டொன்றை கோப்பிடுவதற்கு தவறுதல்;

(உ) பொய்யான வரிசெலுத்துநர் இனங்காணல் இலக்கம் ஒன்றை அல்லது அவருக்கு ஏற்புடையதானதல்லாத வரிசெலுத்துநர் இனங்காணல் இலக்கம் ஒன்றைப் பயன்படுத்துதல்;

(ஊ) காணியைச் சோதனையிடுவதற்கு அல்லது அளவிடுவதற்கு ஆணையாளர் தலைமையதிபதி அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு அனுமதியளிப்பதற்கு மறுத்தல் அல்லது ஏதேனும் நிலப்படம், வரைபடம், உரித்துறுதி, உரித்துச் சாதனம் அல்லது வேறு ஆவணத்தை சோதனையிடுவதற்காக ஒப்படைப்பதற்கு மறுத்தல்;

(எ) ஒரு முக்கியமான விபரத்தில் பொய்யான அல்லது பிழைவழிநடத்தும் கூற்றொன்றை வரி அலுவலர் ஒருவருக்குச் செய்தல்;

(ஏ) பிரிவு 170 இன் கீழ் வழங்கப்பட்ட அறிவித்தலொன்றுக்கு இணங்கியொழுகத் தவறுதல்;

(ஐ) தேவைப்படுத்தப்பட்ட பதிவேடுகளை பேணத்தவறுதல்; அல்லது

(ஒ) வேறுவகையில், தீர்மானம், வரிமதிப்பீடு அல்லது வரிச் சேகரிப்புக்கு தடையாகவிருத்தல்.

இரகசியம் பேணுவதற்குத் தவறுதல்.

**191.** பிரிவு 100 இன் உட்பிரிவு (2) அல்லது (3) இனை மீறும் ஆளொருவர் தவறொன்றிற்கு குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மேல் ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணம் ஒன்றிற்கு அல்லது ஓராண்டை விஞ்சாத காலப்பகுதியொன்றிற்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற்றண்டனை இரண்டுக்கும் ஆளாதல் வேண்டும்.

வரி அலுவலர்களின் தவறுகள்.

**192.** இச்சட்டத்தின் ஏற்பாடுகளை நிறைவேற்றுவதில் -

(அ) அலுவலரின் கடமைகள் சம்பந்தமாக, அலுவலர் சட்டமுறையாக பெறுவதற்கு உரித்துடையதல்லாத பணரீதியான அல்லது வேறு வகையான கொடுப்பனவை அல்லது வெகுமதியை அல்லது கொடுப்பனவு அல்லது வெகுமதிக்கான வாக்குறுதியொன்றை அல்லது பிணையத்தை நேரடியாகவோ அல்லது நேரடியாக வல்லாமலோ கேட்கின்ற அல்லது எடுக்கின்ற; அல்லது

(ஆ) இச்சட்டத்தின் ஏற்பாடுகள் அல்லது அலுவலரின் கடமையின் முறையான நிறைவேற்றுதலுக்கு முரணாக வுள்ள அல்லது வரி வருமானம் மோசடி செய்யப்படு கின்றது அல்லது மோசடி செய்யப்படலாம் என்ற பயனைக் கொண்டதான ஒரு செயலை அல்லது காரியத்தை செய்வதற்கு அல்லது செய்யாது தவிர்ப்பதற்கு, அனுமதிப்பதற்கு, மறைத்து வைப்பதற்கு அல்லது உட்கிடையாக ஆதரவளிப்பதற்கு உடன்படிக்கை யொன்றை செய்துகொள்கின்ற அல்லது இணங்கு கின்ற,வரி அலுவலர் ஒருவர் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மேல் ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணம் ஒன்றிற்கு அல்லது ஓராண்டை விஞ்சாத காலமொன்றிற்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற்றண்டனை இரண்டிற்கும் ஆளாதல் வேண்டும். அத்துடன் நீதிமன்றமானது குற்றப்பண மொன்றை விதிப்பதற்கு மேலதிகமாக அலுவலரின் பிழையான செயலின் விளைவாக செலுத்தப்படாததும் வரிக்கு ஆளாகவுள்ள ஆளிடமிருந்து நியாயமான முறையில் அறவிடப்படமுடியாததுமான வரித்தொகை ஒன்றை ஆணையாளர் தலைமையதிபதிக்கு செலுத்து வதற்கு குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட ஆளுக்கு கட்டளை யிடலாம்.

தவறுகளை இணக்குதல்.

**193.** (1) ஆளொருவர், பிரிவு 191 அல்லது 192 இன் கீழான தவறொன்று தவிர, இவ்வத்தியாயத்தின்கீழ் அல்லது இச்சட்டம் ஏற்புடையதாகும் வேறேதேனும் சட்டத்தின்கீழ் தவறொன்றைப் புரிகின்றவிடத்து, ஆணையாளர் தலைமையதிபதி, அது தொடர்பான வழக்கு நடவடிக்கைகளின் கேற்பு நீதிமன்றமொன்றினால் தொடங்கப்படுவதற்கு முன்னர் எச்சந்தர்ப்பத்திலும் தவறை இணக்கலாம் என்பதுடன், தவறுக்காக குறித்துரைக்கப்பட்ட குற்றப்பணத்தின் ஆகக்கூடிய தொகையை விஞ்சாத, ஆணையாளர் தலைமையதிபதியினால் குறித்துரைக்கப்பட்டவாறான பணத் தொகையைச் செலுத்துவதற்கு கட்டளையிடலாம்.

(2) ஆணையாளர் தலைமையதிபதி, சம்பந்தப்பட்ட ஆள், எழுத்துமூலம் அவ்வாறு செய்யுமாறு ஆணையாளர் தலைமை யதிபதியை வேண்டினால் மட்டும், இப்பிரிவின்கீழ் தவறொன்றை இணக்கலாம்.

(3) ஆணையாளர் தலைமையதிபதி, இப்பரிவின்கீழ் தவறொன்றை இணக்கஞ்செய்தால், உட்பிரிவு (1) இல் குறிப்பீடு செய்யப்பட்ட கட்டளையானது -

(அ) எழுத்தில் இருத்தல் வேண்டும் என்பதுடன், உட்பிரிவு (2) இல் குறிப்பீடுசெய்யப்பட்ட எழுத்திலான வேண்டுகோளை இணைத்திருத்தலும் வேண்டும்;

(ஆ) பின்வருவனவற்றை குறித்துரைத்தல் வேண்டும் -

(i) புரியப்பட்ட தவறு;

(ii) செலுத்தப்படவேண்டிய பணத்தொகை; அத்துடன்

(iii) கொடுப்பனவுக்கான உரிய தேதி; அத்துடன்

(இ) தவறைப்புரிந்த ஆளின் மேல் சேர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(4) உட்பிரிவு (3) இன் கீழான கட்டளையொன்று இறுதியான தாகவிருத்தல் வேண்டும் என்பதுடன் மேன்முறையீட்டுக்கு அமைந்த தாதலும் ஆகாது.

(5) ஆணையாளர் தலைமையதிபதி, இப்பிரிவின்கீழ் தவறொன்றை இணக்குகின்றவிடத்து, தவறாளர் அத்தவறு தொடர்பில் குற்றவழக்குத் தொடுப்புக்கு அல்லது தண்டத்திற்கு ஆளாதல் ஆகாது.

(6) இப்பிரிவின்கீழ் ஆணையாளர் தலைமையதிபதியின் தத்துவம் அரசியலமைப்பின்கீழானதும், 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க குற்றவியல் நடப்புமுறைக்கோவைச் சட்டத்தின் கீழானதுமான சட்டத்துறை தலைமையதிபதியின் தத்துவங்களுக்கு அமைந்ததாதல் வேண்டும் என்பதுடன் ஆணையாளர் தலைமையதிபதி, வரி செலுத்துநர் மீது கட்டளை சேர்ப்பிக்கப்படுகின்ற சந்தர்ப்பத்தில் உட்பிரிவு (3) இல் குறிப்பீடுசெய்யப்பட்ட கட்டளையின் பிரதி யொன்றை சட்டத்துறை தலைமையதிபதிக்கு வழங்குதல் வேண்டும்.

(7) உட்பிரிவு (1) இன் கீழ் செலுத்தப்படுவதற்கு கட்டளையிடப்பட்ட தொகை, இச்சட்டத்தின்கீழ் அது வருமதியான வரி அல்லது செலுத்தற்படற்பாலதான வரியாகும் என்றாற்போன்று அறவிடப்படற்பாலதாதல் வேண்டும்.

## அத்தியாயம் XIX

### ஒழுங்குவிதிகள்

**194.** (1) அமைச்சர், இச்சட்டத்தின் நெறிகளையும் ஏற்பாடுகளையும் நிறைவேற்றும் அல்லது அவற்றுக்குப் பயன்கொடுக்கும் நோக்கத்துக் காகவும் இச்சட்டத்தின்கீழ் ஆக்குவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட அல்லது விதித்துரைக்கப்பட்ட கருமங்களுக்காகவும் ஒழுங்கு விதிகளை ஆக்கலாம். ஒழுங்குவிதிகள்.

(2) இப்பிரிவின்கீழ் ஆக்கப்படும் ஒழுங்குவிதியொன்றை மீறிய மைக்காக அல்லது அதற்கிணங்கியொழுகத் தவறியமைக்காக -

(அ) தண்டமொன்றை விதித்துரைக்கின்ற; அல்லது

(ஆ) விதித்துரைக்கப்பட்ட தண்டத்தை அதிகரிக்கின்ற;

ஒழுங்குவிதி அல்லாததும் இப்பிரிவின்கீழ் ஆக்கப்பட்டதுமான ஒழுங்குவிதி ஒன்று வர்த்தமானியில் அது வெளியிடப்பட்ட தேதிக்கு முந்திய ஒரு தேதியிலிருந்து பயனுறுதல் வேண்டுமென வெளிப் படுத்தப்படலாம்.

(3) ஒழுங்குவிதியொன்றை மீறியமைக்காக அல்லது அதற்கு இணங்கியொழுகத் தவறியமைக்காகத் தண்டமொன்றை விதித் துரைக்கின்ற ஒழுங்குவிதியொன்று, அது பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டு அத்தகைய அங்கீகாரம் பற்றிய அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்படும் வரை நடைமுறைக்கு வருதல் ஆகாது.

(4) உட்பிரிவு (2) இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஒழுங்குவிதி ஒன்றைத் தவிர்ந்த, அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் வர்த்தமானியில் அது வெளியிடப்படும் தேதியன்று அல்லது ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(5) உட்பிரிவு (2) இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் வர்த்தமானியில் அது வெளியிடப்பட்டதன் பின்னர் வசதியாகக்கூடியளவு விரைவாக அங்கீகாரத்துக்கெனப் பாராளு மன்றத்தின் முன்னர் கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஏதேனும் அத்தகைய ஒழுங்குவிதி, அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி அங்கீகாரம் மறுக் கப்பட்ட தேதியிலிருந்து ஒழிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும். ஒழுங்குவிதியொன்று ஒழிக்கப்பட்டதாகக் கருதப்படும் தேதிபற்றிய அறிவிப்பு வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

## அத்தியாயம் XX

### பொருள்கோடல்

**195.** (1) இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப் படுத்தினாலொழிய - பொருள்கோடல்.

“கமத்தொழில் வியாபாரம்” என்பது கமத்தொழில், வீட்டு வேளாண்மை அல்லது ஏதேனும் விலங்கு விளைபொருளை உற்பத்தி செய்யும் வியாபாரம் எனப் பொருள்படுவதோடு கால்நடை வளர்ப்பு அல்லது கோழி வளர்ப்பு நோக்கத்துக்கான பொறுப்பு முயற்சி யொன்றையும் உள்ளடக்கும்;

"அங்கீகரிக்கப்பட்ட கணக்காளர்" என்பது -

(அ) இலங்கைப் பட்டயக்கணக்காளர்கள் நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவுள்ள கணக்காளரொருவர்;

(ஆ) எவரேனும் ஆளின் அல்லது ஏதேனும் பங்குடைமையின் வியாபாரத்தின் ஆண்டுக்கான மொத்த விற்பனை வரவு நூறு மில்லியன் ரூபாவை விஞ்சாதவிடத்து, கம்பெனியொன்று தவிர்ந்த அவ்வாள் அல்லது அப்பங்குடைமை தொடர்பில், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட இலங்கைக் கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர்கள் கழகத்தின் கூட்டு உறுப்பினரொருவராகவுள்ள கணக்காளரொருவர்,

எனப் பொருள்படும்;

"ஒழுங்கேற்பாடு" என்பது -

(அ) வெளிப்படையானதான அல்லது உட்கிடையானதான சட்ட நடவடிக்கைகளால் வலுவுக்கிடப்படக்கூடியதான வலுவுக்கிடப்படமுடியாததான மற்றும் ஒரு தலைப்பட்சமானதான அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட ஆட்களைக் கொண்டதான ஒரு நடவடிக்கை, உடன்படிக்கை, செயற்பாட்டு முறை, கையாளுகை, வாக்குறுதி, கொடுக்கல் வாங்கல், புரிந்துணர்வு அல்லது பொறுப்புமுயற்சி; அல்லது

(ஆ) பந்தி (அ) இல் விவரிக்கப்பட்ட விடயமொன்றின் பாகமொன்று;

எனப் பொருள்படும்.

"சொத்து" என்பது உருவ அல்லது அருவ சொத்து, நாணயம், நன்மதிப்பு, வழிவகை அறிவு, ஆதனம், வருமானம் அல்லது எதிர்கால வருமானத்திற்கான உரிமை, பன்னிரெண்டு மாதங்களுக்கு மேல் நீடிக்கின்ற நன்மையொன்று மற்றும் சொத்தொன்றின் பாகம் என்பவற்றை உள்ளடக்குகிறது;

பணி ஒன்று தொடர்பில் "அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்" என்பது ஆணையாளர் தலைமையதிபதி அல்லது திணைக்களத்தில் தொழிலுக்கமர்த்தப்பட்டும் பணியைப் புரிவதற்கு ஆணையாளர் தலைமையதிபதியினால் எழுத்துமூலம் அதிகாரமளிக்கப்பட்டவருமான எவரேனும் ஆள் எனப் பொருள்படும்.

"அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி" என்பது இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக ஆளொருவர் சார்பில் செயலாற்ற வென அவ்வாளினால் காலத்துக்குக் காலம் அதிகார மளிக்கப்பட்ட எவரேனும் தனியாளும் -

(அ) ஏதேனும் விடயத்தில் -

(i) இலங்கையின் பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவர்;

(ii) சட்டத்தரணியொருவர்;

(iii) அவ்வாளினால் கிரமமாக தொழிலுக்கமர்த் தப்பட்ட ஊழியர் ஒருவர்; அல்லது

(iv) 2000 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, இலங்கை வரிவிதிப்பு நிறுவகச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை வரிவிதிப்பு நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவர்;

(v) ஆணையாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்பட்டவரும், கம்பெனிகள் (கணக்காய்வாளர்கள்) ஒழுங்குவிதிகளின்கீழ் கணக்காய்வாளர் ஒருவராக பதிவு செய்யப் பட்டவருமான தனியாள் ஒருவர்;

(vi) ஆணையாளர் தலைமையதிபதியினால் குறித்துரைக்கப்பட்ட வேறு ஏதேனும் வகை யினதான தனியாள் ஒருவர்;

(ஆ) தனியாள் ஒருவர் விடயத்தில், உறவினர் ஒருவர்;

(இ) கம்பெனியொன்றின் விடயத்தில், அக்கம்பெனியின் பணிப்பாளர் ஒருவர் அல்லது செயலாளர்;

(ஈ) பங்குடைமையொன்றின் விடயத்தில், அப் பங்குடைமையின் பங்காளர் ஒருவர்;

(உ) ஆட்கள் குழுவொன்றின் விடயத்தில், அத்தகைய குழுவின் உறுப்பினரொருவர்;

எனப் பொருள்படும்.

"குழு" என்பது இலங்கையில் அமைக்கப்பட்டதான, அல்லது வேறு இடத்தில் அமைக்கப்பட்டதான, கம்பெனியொன்று, பங்குடைமை, நம்பிக்கைப் பொறுப்பு அல்லது வேறு ஆட்கள் குழு எனப் பொருள்படும்;

"வியாபாரம்" என்பது -

(அ) (i) வர்த்தகம், உயர்தொழில், வாழ்க்கைத் தொழில் அல்லது ஒழுங்கேற்பாட்டின் காலப்பகுதி எவ்வளவு குறுகியதாயிருப்பினும் வியாபாரத்தன்மை ஒன்றுடனான தனித்துவமான ஒழுங்கேற்பாட்டையும்; அத்துடன்

(ii) ஒரு இறந்தகால, நிகழ்கால அல்லது எதிர்கால வியாபாரத்தை

உள்ளடக்குகிறது; ஆனால்

(ஆ) ஊழியமொன்றை உள்ளடக்காது.

"மூலதனச் சொத்து" என்பது -

(அ) பின்வரும் ஒவ்வொரு சொத்தும் எனப் பொருளாகும்:-

(i) காணி அல்லது கட்டிடங்கள்;

(ii) கம்பெனி, பங்குடைமை அல்லது நம்பிக்கைப் பொறுப்பொன்றில் உறுப்பாண்மை அக்கறையொன்று;

(iii) பிணையம் ஒன்று அல்லது வேறு நிதிசார் சொத்து;

(iv) மேற்போந்த பந்திகளில் குறிப்பீடு செய்யப்பட்ட சொத்து ஒன்றில் விருப்புத்தேர்வு, உரிமை அல்லது வேறு அக்கறை; ஆனால்

(ஆ) வர்த்தகக் கையிருப்பு அல்லது தேய்மானத் திற்குட்படற்பாலதான சொத்தொன்றை உள்ளடக்காது;

"தரும நிறுவனம்" என்பது நம்பிக்கை பொறுப்பொன்றின் நம்பிக்கைப் பொறுப்பாளர் அல்லது நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் அல்லது தரும நோக்கத்துக்காக மட்டுமே தாபிக்கப்பட்ட அல்லது தரும நோக்கம் ஒன்றினை நிறைவேற்றுவதில் முழுமையாக ஈடுபட்டுள்ள கூட்டுத்தாபனம் அல்லது கூட்டிணைக்கப்படாத ஆட்கள் குழு எனப் பொருள்படும்;

"தரும நோக்கங்கள்" என்பது, இலங்கையிலுள்ள அல்லது இலங்கைக்கு வெளியேயுள்ள பொதுமக்களின் அல்லது பொதுமக்களின் எவரேனும் பிரிவினரின் நன்மைக்கானதும், பின்வரும் வகுதிகளையும் உள்ளடக்கியதுமான ஒரு நோக்கம் எனப் பொருள்படும்:

(அ) வறுமை நிவாரணம்;

(ஆ) வியாபார நோக்கங்களுக்காக தாபிக்கப்பட்ட ஏதேனும் நிறுவனத்தினால் அல்லது கம்பெனிகள் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட ஏதேனும் நிறுவனத்தினால் தவிர்ந்த கல்வி அல்லது அறிவை முன்னேற்றுதல்;

(இ) சூழலைப் பாதுகாப்பதற்கான செயற்பாடுகள் அல்லது சூழல் நட்பான செயற்பாடுகள்;

(ஈ) சமயத்தை முன்னேற்றுதல் அல்லது சமயம்சார் சடங்குகளையும் பழக்கங்களையும் பேணுதல் அல்லது பொது வழிபாட்டிடமொன்றை நிருவகித்தல்;

(உ) மேலுள்ள வகுதிகளின் எதனுள்ளும் அடங்காத, சமுதாயத்துக்கு நன்மை பயக்கும் ஏதேனும் வேறு நோக்கம்;

"ஆணையாளர் தலைமையதிபதி" என்பது உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதி எனப் பொருள்படும்;

"கம்பெனி" என்பது

(அ) கூட்டுத்தாபனம், கூட்டிணைக்கப்படாத கழகம் அல்லது வேறு ஆட்கள் குழு எனப் பொருள் படுவதுடன்

(ஆ) பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றது -

(i) நட்புச்சங்கம், கட்டிடச்சங்கம், ஓய்வூதிய நிதியம், சகாய நிதியம், இளைப்பாற்று நிதியம், மூப்பு ஓய்வூதிய நிதியம் அல்லது அதனை ஒத்த நிதியம் அல்லது சங்கம்; அத்துடன்

(ii) இலங்கை அரசாங்கம் தவிர்ந்த அரசாங்கம் ஒன்று, அரசாங்கமொன்றின் அரசியல் உபபிரிவு அல்லது சர்வதேச பொதுமக்கள் ஒழுங்கமைப்பு ஒன்று; ஆனால்

(இ) பங்குடைமையொன்றை அல்லது நம்பிக்கைப் பொறுப்பை உள்ளடக்காது; அத்துடன்

(ஈ) பின்வருவனவை கம்பெனியொன்றாகக் கருதப்படுதல் வேண்டும்.

(i) பங்குடைமையின் தனிசுகளுக்காக வரையறுக்கப்பட்ட பொறுப்புள்ள குறைந்தது இருபது பங்காளர்களையுடைய பங்குடைமை ஒன்று,அத்துடன்

(ii) பிரிவு 59 ஏற்புடையதாகின்ற கூறு நம்பிக்கைப் பொறுப்பு அல்லது பரஸ்பர நிதியம்.

“திணைக்களம்“ என்பது உண்ணாட்டரசிறைத் திணைக்களம் எனப் பொருள்படும்.

“தேய்மானத்திற்குற்படற்பாலதான சொத்து” என்பது -

(அ) வியாபாரம் ஒன்றிலிருந்து வருமானத்தைத் தோற்றுவதில் சொத்தொன்று எந்தளவுக்கு பயன்படுத்தப்படுகின்றதோ அவ்வளவானதும் தேய்வு மற்றும் உராய்வு, வழக்கொழிந்து போகின்றவை அல்லது காலம் கழிவதன் காரணமாக பெறுமதியை இழக்கக்கூடியதுமான ஒரு சொத்து எனப் பொருள்படும்; ஆனால்

(ஆ) நன்மதிப்பு, காணி மீதான அக்கறை, உருவகம் ஒன்றில் உறுப்பாண்மை அக்கறை மற்றும் வர்த்தகக் கையிருப்பு என்பவற்றை உள்ளடக்காது.

"*பங்கிலாபம்*" என்பது -

(அ) ஒழித்துக்கட்டுதல் அல்லது மீள நிர்மாணித்தலின் போது, மூலதனக்குறைப்பொன்றில் அல்லது பங்கை திரும்ப வாங்குவதில் இலாபங்களின் பிரிவொன்றாகப் பெறுவதான அல்லது வேறுவகையில் கம்பெனியொன்றிலிருந்து உறுப்பினரொருவரால் பெறப்பட்ட கொடுப்பனவு எனப் பொருள்படுவதுடன்;

(ஆ) (i) மிகை ஊதிய பங்கு வழங்குகை முறையில் பங்குகளுக்கு செலுத்தப்பட்ட தொகையில் அதிகரிப்பு மூலம் அல்லது வேறு வகையில் பெறப்பட்ட; அத்துடன்

(ii) தொகையொன்று பகிர்ந்தளிக்கப்பட்டதாயினும் அல்லது பகிர்ந்தளிக்கப்படாததாயினுமான இலாபங்களை மூலதனமாக்குதலை உள்ளடக்குகிறது; அத்துடன்

(இ) பின்வரும் கொடுப்பனவை உள்ளடக்காது -

(i) கொடுப்பனவொன்று எந்தளவுக்கு, கம்பெனிக்கு உறுப்பினரால் அளிக்கப்பட்ட கொடுப்பனவுடன் ஒத்திருக்கிறதோ அந்தளவான கொடுப்பனவு;

(ii) கொடுப்பனவொன்று எந்தளவுக்கு, மூலதனம், பங்கு கட்டுப்பணம் அல்லது ஒத்த கணக்குக்கு பற்று வைக்கப்படுகிறதோ அந்தளவான கொடுப்பனவு; அல்லது

(iii) கொடுப்பனவொன்று எந்தளவுக்கு, வேறு வகையில் இறுதிப் பிடித்து வைத்தற் செலுத்துகையாக அமைகின்றதோ அல்லது உறுப்பினரின் வருமானத்தை கணக்கிடுவதில் உள்ளடங்குகின்றதோ அந்தளவான கொடுப்பனவு.

"உள்நாட்டு சொத்து" என்பது -

(அ) (வெளிநாட்டுக்காணி அல்லது கட்டிடங்கள் அல்லது ஆளின் வெளிநாட்டு நிரந்தர தாபன மொன்றினால் வைத்திருக்கப்படும் சொத்து தவிர) வதிவுள்ள ஆளொன்றினால் சொந்தமாக வைத்திருக்கப்படும் அல்லது இலங்கை நிரந்தர தாபனமொன்றினால் வைத்திருக்கப்படும் சொத்தொன்று;

(ஆ) இலங்கையில் அமையப்பெற்றுள்ள காணி அல்லது கட்டிடம் ஒன்றின் மீதான அக்கறை; அத்துடன்

(இ) வதிவுள்ள கம்பெனியொன்றில் உள்ள பங்குகள்;

(ஈ) அக்கறையின் பெறுமானத்தின் ஐம்பது சதவீதத்திற்கு மேற்பட்டவை இலங்கையில் உள்ள காணி அல்லது கட்டிடங்களிலிருந்து ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட இடைச்செருகிய குழுக்களினூடாக நேரடியாகவோ மறைமுக மாகவோ பெறப்பட்டால், ஒரு குழுவில் உள்ள உறுப்பாண்மை அக்கறை,

எனப் பொருள்படும்.

"தகவுடைய முதலீட்டு வியாபாரம்" என்பது

(அ) மூலதனச் சொத்துக்கள்;

(ஆ) நிதிசார் சாதனங்கள்; அல்லது

(இ) வேறு ஒத்த சொத்துக்கள்

என்பவற்றை சொந்த மாக வைத்திருத்தல், முதலீடு செய்தல் அல்லது வர்த்தகம் செய்தலை பெருமளவில் உள்ளடக்கிய வியாபாரம் ஒன்று அல்லது முதலீடு எனப் பொருள்படும்.

"தொழில் தருநர்" என்பது ஊழியர் ஒருவரை வேலையில் ஈடுபடுத்துகின்ற அல்லது ஊதியம் வழங்குகின்ற அல்லது முன்னைய ஊழியர் ஒருவருக்கு அல்லது வேறு எவரேனும் ஆளுக்கு அத்தகைய முன்னைய ஊழியரின் கடந்த சேவைகளுக்காக ஓய்வூதியம் ஒன்றை அல்லது வேறு ஊதியத்தைச் செலுத்துகின்ற ஆள்

எனப் பொருள்படும்.

"ஊழியம்" என்பது

(அ) (i) வேறு ஒரு ஆளின் தொழிலில் தனியாள் ஒருவரின் நிலை;

(ii) உருவகம் ஒன்றின் முகாமையாளராக தனியாள் ஒருவரின் நிலை;

(iii) புரியப்பட்ட சேவைகள் தொடர்பில் நிர்ணயிக்கப்பட்ட அல்லது நிச்சயிக்கத்தக்க ஊதியம் ஒன்றினைப் பெற அவரை உரித்துடையவராக்கும் தனியாள் ஒருவரின் நிலை;

(iv) தனியாள் ஒருவரினால் வகிக்கப்படும் பகிரங்கப் பதவி;

(v) எந்தத் தனியாளுக்கு ஏதேனும் கொடுப்பனவு தொழில் தருநரால் செய்யப்படுகின்றதோ அல்லது அவரிடமிருந்து வருமதியாகவுள்ள பெறப்படுகின்ற அல்லது ஊழியர் ஒருவராக அல்லது அதன் ஒத்த தன்மையொன்றில் ஏதேனும் வேறு நன்மையைப் பெறுகின்ற அந்தத் தனியாளின் நிலை;

(vi) கூட்டுத்தாபனம் அல்லது கம்பெனிப் பணிப்பாளரான ஒரு நிலை

எனப் பொருள்படும்; அத்துடன்

(ஆ) இறந்தகால, நிகழ்கால அல்லது எதிர்கால தொழில் ஒன்றையும் உள்ளடக்குகின்றது.

“களியாட்டம்” என்பது எவரேனும் ஆளுக்கு உணவு, பானங்கள், புகையிலை, இடவசதி, கேளிக்கை, பொழுதுபோக்கு அல்லது ஏதேனும் வகையான விருந்தோம்பலை வழங்குதல் எனப் பொருள்படும்.

‘‘உருவகம்’’ என்பது கம்பெனி, பங்குடைமை அல்லது நம்பிக்கைப் பொறுப்பு எனப் பொருள்படும் ஆனால் தனியாளை உள்ளடக்காது;

“செலவினம்” அல்லது “செலவு” என்பது கொடுப்பனவைச் செய்வதனால் ஆளின் சொத்துக்களைக் குறைக்கின்ற, கொடுப்பனவு எனப் பொருள்படும்;

“நிதிசார் நிறுவனம்” என்பது -

(அ) வங்கித்தொழிலை கொண்டுநடாத்தும் ஏதேனும் கம்பெனி அல்லது ஆட்கள் குழு எனப் பொருள்படும் என்பதுடன் 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கித் தொழில் சட்டத்தின் கருத்தில் உரிமம் அளிக்கப்பட்ட விசேடித்த வங்கியொன்றையும் உள்ளடக்கும்;

(ஆ) பந்தி (அ) இல் வங்கி ஒன்றைப் போன்ற அதே முறையில் ஒழுங்குபடுத்தப்பட்ட வங்கித் தொழில் அல்லாத நிதிசார் நிறுவனம் ஒன்று எனப் பொருள்படும்; அல்லது

(இ) விதித்துரைக்கப்படக்கூடியவாறான வேறு ஏதேனும் ஆட்கள் வகுதி எனப் பொருள்படும்;

“வெளிநாட்டு நிரந்தர தாபனம்” என்பது, வியாபாரமானது தொடர்சியாக குறைந்தது ஆறு மாதங்களுக்கு நடாத்தப்படுகின்ற ஆனால் ஆயத்த நிலை அல்லது துணைத்தன்மையான செயற்பாடுகள் மட்டும் நடாத்தப்படுகின்ற ஏதேனும் இடத்தை உள்ளடக்காத வெளிநாடொன்றில் அமைந்துள்ள வதிவுள்ள ஆளொன்றின் வியாபாரத்துக்கான நிர்ணயிக்கப்பட்ட இடம் எனப் பொருள்படும்;

“நன்கொடை” என்பது பிரதிபயன் இல்லாத கைமாற்றம் அல்லது ஆதனத்தின் சந்தைப்பெறுமதி பிரதிபயனை விஞ்சுகின்ற அளவுக்கான பிரதிபயனுடனான கைமாற்றம் எனப் பொருள்படும்;

“அக்கறை” என்பது பின்வருவனவற்றை உள்ளடக்குகிறது -

(அ) மூலதன விபரத்திரட்டொன்றல்லாத கடன் கடப்பாடொன்றின்கீழ் ஆக்கப்பட்ட கழிவொன்று அல்லது கட்டுப்பணத்தை உள்ளடக்கிய கொடுப்பனவு ஒன்று;

(ஆ) அக்கறைக்கு தொழிற்பாட்டு ரீதியாக சமமான பண்டமாற்று ஒன்று அல்லது வேறு கொடுப்பனவு;

(இ) கடன் கடப்பாடொன்று அல்லது பண்டமாற்று உடன் படிக்கை தொடர்பில் செய்யப்பட்ட பொறுப் பேற்பு, உத்தரவாதம் அல்லது செலுத்தப்பட்ட சேவைக் கட்டணம்; அத்துடன்

(ஈ) கட்டிடச் சங்கம் ஒன்றினாலான பகிர்ந்தளிப்பு ஒன்று;

“முதலீடு” என்பது -

(அ) ஒத்த தன்மையுடைய ஒன்று அதற்கு மேற்பட்ட சொத்துக்கள் அல்லது ஒன்றிணைந்த முறையில் பயன்படுத்தப்படுகின்ற சொத்துக்களை உள்ளடக்கி ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சொத்துக்களை சொந்தமாக வைத்திருத்தல் எனப் பொருள்படும்; அத்துடன்

(i) இறந்தகால, நிகழ்கால, எதிர்கால முதலீடொன்றை உள்ளடக்குகின்றது; ஆனால்

(ii) வியாபாரத்தை அல்லது ஊழியத்தை உள்ளடக்காது; அல்லது

(ஆ) லொத்தர்கள், பந்தயம் கட்டல் அல்லது சூதாட்டம் உள்ளடங்கலாக வாய்ப்பு விளையாட்டு ஒன்று எனவும் பொருள்படும்.

"முதலீட்டுச் சொத்து" என்பது -

(அ) முதலீட்டின் பாகமாக வைக்கப்பட்டுள்ள மூலதனச் சொத்தொன்று எனப் பொருள்படும், ஆனால்

(ஆ) தனியாள் ஒருவரின் பிரதான வதிவிடத்தை உள்ளடக்காது; ஆயின் கையுதிர்ப்புக்கு முன்னர் தொடர்ச்சியாக மூன்றாண்டுகள் தனியாளுக்கு சொந்தமானதாகவும், அம்மூன்றாண்டுகளில் குறைந்தது இரண்டு ஆண்டுகள் அதில் வசித்திருத்தல் வேண்டும். (நாளாந்த அடிப்படை ஒன்றின் மேல் கணக்கிடப்பட்டது)

"காணி அல்லது கட்டிடங்கள்" என்பது காணி அல்லது கட்டிடங்களுக்கான கட்டமைப்புசார் சீராக்கல், காணி அல்லது கட்டிடங்கள் மீதான அக்கறை, காணி அல்லது கட்டிடங்களுக்கான கட்டமைப்புச் சீராக்கலிலான அக்கறை மற்றும் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றது;

(அ) காணி அல்லது கட்டிடங்களின் குத்தகை;

(ஆ) காணி அல்லது கட்டிடங்களுக்கான கட்டமைப்புசார் சீராக்கலின் குத்தகை; அல்லது

(இ) காணி அல்லது கட்டிடம் தொடர்பான ஆய்ந்து தேடுதல், தேடுதல், அபிவிருத்தி அல்லது அதனை ஒத்த உரிமை; அத்துடன்

(ஈ) பந்தி (இ) இல் குறிப்பீடு செய்யப்படும் உரிமை ஒன்று தொடர்பான தகவல்;

“குத்தகை” என்பது, வேறு ஒரு ஆளின் பணம் தவிர்ந்த சொத்து தொடர்பில் ஆளொருவருக்கு தற்காலிக உரிமையொன்றை வழங்கும் ஒழுங்கேற்பாடு எனப் பொருள்படும் என்பதுடன் உரிமம், வேறொரு ஆளின் நிலத்திலிருந்து எடுப்பதற்கான உரிமை விருப்பத்தேர்வு, வாடகை உடன்படிக்கை, அரசுரிமை உடன்படிக்கை அல்லது வாடகைக்குடியிருப்பு எனப் பொருள்படும்;

“உள்ளூர் அதிகாரசபை” என்பது ஏதேனும் மாநகரசபை, நகரசபை, பிரதேச சபை எனப்பொருள்படும் என்பதுடன் அத்தகைய ஏதேனும் சபையினால் பிரயோகிக்கப்படும், புரியப்படும் மற்றும் நிறைவேற்றப்படும் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு நேரொத்ததாகவுள்ள அல்லது அதனை ஒத்ததாகவுள்ள தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகளை பிரயோகிப்பதற்கும் புரிவதற்கும் நிறைவேற்றுவதற்குமான ஏதேனும் சட்டத்தால் அல்லது ஏதேனும் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட ஏதேனும் அதிகாரசபையை உள்ளடக்கும்.

உருவகம் ஒன்று தொடர்பில் “முகாமையாளர்” என்பது -

(அ) ஆலோசகர், பணிப்பாளர், முகாமையாளர், உறுப்பினர், அலுவலர் அல்லது உருவகம் சார்பாக

சிரேஷ்ட முகாமைத்துவ முடிபுகள் எடுப்பதில் தனியாகவோ அல்லது வேறு ஆட்களுடன் கூட்டாகவோ பங்குபற்றுகின்ற அல்லது பங்குபற்றக் கூடிய வேறு ஆள் எனப் பொருள்படும்; அத்துடன்

(ஆ) பின்வருவனவற்றை உள்ளடக்குகிறது -

(i) பங்குடைமையொன்றின் தொழிற்படு பங்காளர் மற்றும் நம்பிக்கைப் பொறுப்பொன்றின் நம்பிக்கைப் பொறுப்பாளர்;

(ii) வேறொரு வரிச் சட்டத்தினால் உருவகம் ஒன்றின் முகாமையாளர் ஒருவராகக் கருதப்படும் ஆள் ஒருவர்; அத்துடன்

(iii) ஆளினால் சொந்தமாக வைத்திருக்கப்படும் இலங்கை நிரந்தர தாபனம் ஒன்று தொடர்பில் வதிவற்ற ஆளொருவர்;

உருவகம் ஒன்று தொடர்பில் ''உறுப்பினர்'' என்பது உருவகத்தில் உறுப்பான்மை அக்கறையை சொந்தமாக வைத்திருக்கும் எவரேனும் ஆள் எனப் பொருள்படும்;

''உருவகம் ஒன்றில் உறுப்பாண்மை அக்கறை'' என்பது உருவகத்தின் வருமானம் அல்லது மூலதனத்தில் பங்குபற்றுவதற்கு எதிர்பாரா உரிமையொன்று உள்ளடங்கலாக, சட்டரீதியான அல்லது ஒப்புரவான தன்மையுடைய உரிமை ஒன்று எனப் பொருள்படும் என்பதுடன், பங்குடைமையொன்றில் பங்காளர் ஒருவரின் அக்கறையையும், நம்பிக்கைப் பொறுப்பு ஒன்றில் பயனுகரி ஒருவரின் அக்கறையையும் கம்பெனி ஒன்றின் பங்குகளையும் உள்ளடக்குகின்றது;

"அமைச்சர்" என்பது நிதி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சர் எனப் பொருள்படும்.

"இயற்கை வளம்" என்பது கனிப்பொருட்கள், பெற்றோலியம், நீர் அல்லது நிலம் அல்லது கடலிலிருந்து எடுக்கப்படக் கூடியதான ஏதேனும் உயிரற்ற அல்லது உயிருள்ள வளம் எனப் பொருள்படும்;

"இயற்கை வளக் கொடுப்பனவு" என்பது நிலம் அல்லது கடலிலிருந்து இயற்கை வளங்களை எடுப்பதற்கான உரிமைக்கான அல்லது நிலம் அல்லது கடலில் இருந்து எடுக்கப்படுகின்ற இயற்கை வளங்களின் அளவு அல்லது பெறுமானக் குறிப்பு மூலம் மொத்தமாக அல்லது பகுதியாக கணக்கிடப்பட்ட கட்டுப்பணம் அல்லது அதுபோன்ற தொகை உள்ளடங்கலான கொடுப்பன வொன்று எனப் பொருள்படும்;

குறிப்பிட்ட காலம் ஒன்றில் சொத்து அல்லது பொறுப்புக்கான "தேறிய செலவு" ஆனது -

(அ) தேய்மானத்திற்குட்படத்தக்க சொத்தொன்றின் விடயத்தில், தொகுதியில் எல்லாச் சொத்துக்களின் சந்தைப்பெறுமதிக்கும் இணங்க பங்கீடு செய்யப்பட்ட (நான்காம் அட்டவணையின் பந்தி 4) அந்நேரத்தில் அது எத்தொகுதியைச் சேர்ந்துள்ளதோ அத்தொகுதியின் எழுத்துப் பெறுமதியின் அதன் பங்குக்கும்; அத்துடன்

(ஆ) வேறு ஏதேனும் சொத்து அல்லது பொறுப்பின் விடயத்தில் எந்தத் தொகையினால் சொத்து அல்லது பொறுப்பின் ஒன்று திரண்ட செலவுகள் அந்நேரத்துக்கான சொத்து அல்லது பொறுப்புக்காக பெறப்பட்ட ஒன்று திரண்ட பிரதிபயனை விஞ்சு கின்றதோ

அந்தத் தொகைக்கும் சமமானதாகும்;

"அரச சார்பற்ற ஒழுங்கமைப்பு" என்பது கூட்டிணைக்கப் பட்டதான கூட்டிணைக்கப்படாததான தன்னிச்சையான அடிப்படையில் ஆளொன்றினால் அல்லது ஆட்கள் குழுவொன்றினால் அமைக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்கமைப்பு அல்லது கழகம் எனப் பொருள்படும்; அத்தகைய ஒழுங்கமைப்பு அல்லது கழகம் அரசுசார்பற்ற ஒழுங்கமைப்பு ஒன்றல்ல என ஆணையாளர் தலைமையதிபதியினால் தீர்மானிக்கப்பட்டாலே ஒழிய அரச சார்பற்ற தன்மையினதானதாகவும் பின்வருவன வற்றிற்காக தாபிக்கப்பட்டு அமைத்துருவாக்கப்படுகிறது-

(அ) வறியவர்களுக்கும், ஆதரவற்றவர்களுக்கும், பிணியாளர்களுக்கும், அநாதைகளுக்கும், விதவைகளுக்கும், இளைஞர்களுக்கும், சிறுவர் களுக்கும் மனிதாபிமான தன்மையினவான நிவாரணம் மற்றும் சேவைகளை வழங்குதல்; அல்லது

(ஆ) பொதுவாக தேவையுள்ளவர்களுக்கு நிவாரணம் வழங்கல்,

ஆனால், எல்லாச் சந்தர்ப்பங்களிலும் தரும நிறுவனம் ஒன்றை உள்ளடக்காது.

"பாரம்பரியமற்ற உற்பத்திப் பொருட்கள்" என்பது சிப்பம் அல்லது பொதி வடிவத்தில் இல்லாத கருந்தேயிலை தவிர்ந்த மற்றும் ஒரு கிலோகிராமுக்கு மேற்படாத எடையைக் கொண்ட ஒவ்வொரு சிப்பம் அல்லது பொதியில் உள்ள கிறேப் இறப்பர், தாள் இறப்பர், கழிவு இறப்பர், இறப்பர் அல்லது பசுமையான தேங்காய்கள், அல்லது கமத்தொழில்சார், வீட்டுத்தோட்ட அல்லது பால் பண்ணை உற்பத்தி எனப் பொருள்படும். அத்துடன் பால் பெருமளவிலான கரிமத் தேயிலையை உள்ளடக்கும்;

"பங்குடைமை" என்பது கழகமானது எழுத்துமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது என்பது எப்படியிருப்பினும், இலாபம் பெறும் நோக்கத்திற்காக கூட்டாக வியாபாரம் ஒன்றை கொண்டு நடாத்தும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தனியாட்களின் கழகம் அல்லது கூட்டுத்தாபனங்கள் எனப் பெருள்படும்.

“கொடுப்பனவு” என்பது ஆளொருவரினால் இன்னொரு ஆளுக்கு ஏதேனும் வடிவத்தில் பெறுமானம் அல்லது நன்மை ஒன்றை அளித்தல் எனப் பொருள்படுவதுடன் பின்வருவனவற்றை உள்ளடக்குகிறது -

(அ) ஆளொருவரினால் இன்னொரு ஆளுக்கு சொத்து அல்லது பணத்தைக் கைமாற்றுதல் அல்லது வேறொரு ஆளினால் ஆளொருவருக்கு பொறுப் பொன்றைக் கைமாற்றுதல்;

(ஆ) இன்னொரு ஆளுக்குச் சொந்தமான சொத்துரு வாக்கம் ஆள் ஒருவரினால் உருவாக்கப்படுதல் அல்லது இன்னொரு ஆளினால் செலுத்து வதற்குள்ள பொறுப்பொன்று ஆளொருவரினால் குறைக்கப்படுதல்;

(இ) ஆளொருவரினால் இன்னொரு ஆளுக்கு சேவைகள் வழங்குதல்; அத்துடன்

(ஈ) ஆளொருவர் சொந்தமாக வைத்துள்ள சொத் தொன்றை அல்லது பணத்தை வேறொரு ஆள் பயன்படுத்துவதற்கு கிடைக்கக்கூடியதாகச் செய்தல் அல்லது அத்தகைய சொத்து அல்லது பணத்தை இன்னொரு ஆளுக்கு பயன்படுத்து வதற்காக வழங்குதல்;

“ஆள்” என்பது தனியாள் ஒருவர் அல்லது உருவகம் எனப் பொருள்படும் என்பதுடன் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத ஆட்கள் குழுவொன்றையும் நிறைவேற்றுனரையும் அரச சார்பற்ற அமைப்பொன் றையும் மற்றும் தரும நிறுவனமொன்றையும் உள்ளடக்குகிறது;

“முந்தையப் பங்காளர்” என்பது இலங்கையில் வசிக்கும் முனைப்பான பங்காளர்களில் உள்ளவரும் -

(அ) பங்குடைமை உடன்படிக்கையில் முதலாவது பெயரிடப்பட்டவர்;

(ஆ) அத்தகைய உடன்படிக்கை எதுவும் இல்லாவிடில், பங்குடைமையின் வழக்கமான பெயரில் தனியாக அல்லது வேறு பங்காளர்களின் பெயருக்கும் முன்னராக அவரின் பெயரினால் அல்லது முதலெழுத்துக்கொண்டு குறித்துரைக்கப்பட்டவர்; அல்லது

(இ) 1987 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, வியாபாரப் பெயர்கள் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கூற்றில் முதலாவதாக பெயர் குறிக்கப்பட்டவர் எனப் பொருள்படும்;

''பகிரங்கக் கூட்டுத்தாபனம்'' என்பது அரசாங்கத்தினால் மானியம், கடன் அல்லது ஏனைய வழியில் முழுமையாக அல்லது பகுதியளவில் வழங்கப்பட்ட மூலதனத்துடன், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பெனிச் சட்டம் தவிர்ந்த, ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அல்லது சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்டிருக்கும் ஏதேனும் கூட்டுத்தாபனம், சபை அல்லது ஏனைய அமைப்பு எனப் பொருள்படும்;

ஆளொருவர் தொடர்பில் ''பெறப்பட்ட'' என்பது பின்வருவனவற்றை உள்ளடக்குகிறது -

(அ) ஆள் சார்பாக ஒன்றில் ஆளின் நெறியுறுத்தலின்படி அல்லது ஏதேனும் சட்டத்தின் கீழ் பயன்படுத்தப்பட்டவை;

(ஆ) ஆளின் நன்மைக்காக மீள முதலீடு செய்யப்பட்டவை, திரட்டப்பட்டவை அல்லது மூலதனமாக்கப்பட்டவை;

(இ) ஆளின் நன்மைக்காக கணக்கொன்றிற்கு வரவு வைக்கப்பட்டவை அல்லது ஏதேனும் இருப்புக்கு அல்லது மூழ்கு நிதியம் அல்லது காப்புறுதி நிதியத்திற்கு நகர்த்தப்பட்டவை; அல்லது

(ஈ) ஆளுக்கு கிடைக்கக்கூடியதாக ஆக்கப்பட்டவை;

“வாடகை” என்பது -

(அ) ஏதேனும் வகையான ஆதனத்தைப் பயன்படுத்துவதற்கு அல்லது பயன்படுத்துவதற்கான உரிமைக்கான கட்டுப்பணம் அல்லது அது போன்ற தொகை கொண்ட கொடுப்பனவொன்றை உள்ளடக்கிய கொடுப்பனவு எனப் பொருள்படும் என்பதுடன்;

(ஆ) பந்தி (அ) இல் குறிப்பீடு செய்யப்பட்ட பயன்படுத்தல் ஒன்றுக்கு அல்லது உரிமை ஒன்றிற்கு துணை உதவியை அளித்தல் அல்லது அளிப்பதற்கான பொறுப்புமுயற்சிக்கான கொடுப்பனவை உள்ளடக்குகிறது; ஆனால்

(இ) இயற்கை வளக் கொடுப்பனவு அல்லது அரசுரிமைப் பணத்தை தவிர்க்கிறது;

ஆளொருவர் தொடர்பில் “வதிவிடம்” அல்லது “வதிவுள்ளவர்,” பிரிவு 69 இற்கு இணங்க தீர்மானிக்கப்படுகின்றது;

‘‘அரசுரிமைப் பணம்’’ என்பது பின்வருவனவற்றிற்கு பிரதிபயனாக பெறப்பட்ட கட்டுப்பணம் அல்லது அது போன்ற தொகையொன்றின் கொடுப்பனவு ஒன்று உள்ளடங்கலான கொடுப்பனவொன்று எனப் பொருள்படும் -

(அ) வேலையானது இலத்திரனியல் வடிவத்திலாயினும் சரி அல்லது வேறு வகையிலான, ஒளிப்பதிவு செய்யப்பட்ட படங்கள், மென்பொருள்

அல்லது காணொளி அல்லது ஒலிப்பதிவுகள் உள்ளடங்கலாக இலக்கியம்சார், கலைசார் அல்லது விஞ்ஞானம் சார் வேலையின் பதிப்புரிமையைப் பயன்படுத்தல் அல்லது பயன்படுத்துவதற்கான உரிமை;

(ஆ) ஆக்கவுரிமை, வியாபாரக் குறி, வடிவமைப்பு அல்லது மாதிரி, திட்டம், அல்லது இரகசிய சூத்திரம் அல்லது செயல்முறையை பயன் படுத்துதல் அல்லது பயன்படுத்துவதற்கான உரிமை;

(இ) ஏதேனும் கைத்தொழில் சார், வணிகம் சார், விஞ்ஞானம் சார் சாதனத்தைப் பயன்படுத்துதல் அல்லது பயன்படுத்துவதற்கான உரிமை;

(ஈ) கைத்தொழில் சார், வணிகம் சார் அல்லது விஞ்ஞானம் சார் அனுபவம் சம்பந்தமான தகவலை பயன்படுத்தல் அல்லது பயன்படுத்துவதற்கான உரிமை;

(உ) பந்தி (அ), (ஆ), (இ) அல்லது (ஈ) இல் குறிப்பீடு செய்யப்பட்ட கருமம் ஒன்றிற்கு துணை உதவியை அளித்தல் அல்லது அளிப்பதற்கான பொறுப்புமுயற்சி; அல்லது

(ஊ) பந்தி (அ), (ஆ), (இ), (ஈ) அல்லது (உ) இல் குறிப்பீடு செய்யப்பட்ட கருமம் ஒன்று தொடர்பில் மொத்தமான அல்லது பகுதியான தவிர்ப்பு.

வரி மதிப்பீட்டாண்டொன்று தொடர்பில் -

‘‘சிரேஷ்ட பிரசை’’ என்பது பின்வருவனவாயிருக்கின்ற தனியாள் ஒருவர் -

(அ) வரிமதிப்பீட்டாண்டின் போது இலங்கைப் பிரசையாக இருக்கின்ற ஒருவர்;

(ஆ) வரி மதிப்பீட்டாண்டில் இலங்கையில் வதிப்பவர்; அத்துடன்

(இ) வரிமதிப்பீட்டாண்டின்போது எச்சந்தர்ப்பத் திலும் அறுபது வயதையுடையவர் அல்லது அதற்கு மேற்பட்டவர்;

''சேவைக்கட்டணம்'' என்பது சந்தைப் பெறுமானங்களின் அடிப்படையில், ஆளொருவரினால் அளிக்கப்பட்ட வியாபார சேவைகளுக்கு எந்தளவுக்கு நியாயமான வகையில் ஏற்றிக்கூறப்படற் பாலதாகவுள்ளதோ அந்தளவு வரையான கொடுப்பனவு எனப் பொருள்படும், ஆனால் வட்டி, வாடகை அல்லது அரசுரிமைப் பணத்தை உள்ளடக்காது;

''பங்குதாரர்'' என்பது கம்பெனி ஒன்றின் உறுப்பினர் ஒருவராகவுள்ள ஆளொருவர் எனப் பொருள்படும்.

''சிறிய நடுத்தர பொறுப்பு முயற்சி'' என்பது பின்வரும் நிபந்தனைகளைத் திருப்திப்படுத்தும் ஆள் ஒருவர் எனப் பொருள்படும்;

(அ) தனியாள் ஒருவர் உயர் தொழிற் தகைமையுடன் அல்லது பங்குடைமையில் தவிர இலங்கையில் தனியாக வியாபாரம் நடாத்தும் ஆள்;

(ஆ) உருவகம் ஒன்றாகவுள்ள இணையாளர் இல்லாத ஆள்; அத்துடன்

(இ) ஆளின் ஆண்டு முழு மொத்த விற்பனை வரவு ரூபா 500,000,000 இற்கு குறைவாகவிருத்தல்;

''குறித்துரைக்கப்பட்ட பெறுப்பு முயற்சி'' என்பது பின்வருவனவற்றில் ஈடுபடுகின்ற பொறுப்புமுயற்சி ஒன்று எனப் பொருள்படும் -

(அ) அத்தகைய பொறுப்புமுயற்சியினால் உற்பத்தி செய்யப்பட்ட, தயாரிக்கப்பட்ட அல்லது

கொள்வனவு செய்யப்பட்ட பாரம்பரியமற்ற பொருட்களை ஏற்றுமதி செய்தல்; அத்துடன்

(ஆ) கப்பல் பழுதுபார்த்தல், கப்பல் தகர்த்தல், கடல் சரக்கு கொள்கலன்களில் பழுதுபார்த்தல், புதுப்பித்தல் போன்ற ஏதேனும் சேவையைப் புரிதல், கணனி மென்பொருள், கணனி நிகழ்ச்சித்திட்டங்கள், கணனி முறைமைகளை வழங்குதல் அல்லது கணனி தரவைப் பதிவு செய்தல் அல்லது வெளிநாட்டு நாணயத்தில் செலுத்துவதற்கு வர்த்தமானியில் வெளியிடப் பட்ட அறிவித்தல் மூலம் அமைச்சரினால் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய வேறு சேவைகளை வழங்குதல்;

''இலங்கை நிரந்தர தாபனம்'' என்பது வதிவற்ற ஆள் வியாபாரத்தை நடாத்துகின்ற அல்லது அந் நோக் கத்திற்காக ஆளின் கையுதிர்ப்பில் உள்ள இலங்கையில் உள்ள இடம் ஒன்று எனப் பொருள்படுவதுடன், பின்வரு வனவற்றை உள்ளடக்குகிறது -

(அ) ஆளொருவருக்கு இருக்கின்ற, அல்லது அவர் பயன்படுத்துகின்ற அல்லது நிறுவுகின்ற கணிசமான சாதனம் அல்லது கணிசமான இயந்திரத்தொகுதி அமைந்துள்ள இலங்கையில் உள்ள இடம்;

(ஆ) எவரேனும் ஆள் கருத்திட்டம் தொடர்பாக மேற்பார்வை செயற்பாடுகளை நடாத்தும் இடம் உள்ளடங்கலாக, எவரேனும் ஆள் தொண்ணூறு நாட்கள் அல்லது அதற்கு மேலாக நிர்மாணிப்பு, பொருத்துதல் அல்லது கருத்திட்டத்தின் நிறுவலில் ஈடுபட்டிருக்கும் இலங்கையில் உள்ள இடம்;

(இ) இலங்கையில் சேவைகளை வழங்குதல், ஆனால் அத்தன்மை வாய்ந்த செயற்பாடுகள் (அதற்காக அல்லது ஒரு தொடர்பான கருத்திட்டத்துக்காக) ஏதேனும் பன்னிரண்டு மாத காலப் பகுதி யொன்றில் 183 நாட்கள் கொண்ட காலப்பகுதி அல்லது அதற்கு மேற்பட்ட காலப்பகுதிக்கு தொடர்ந்தால் மட்டும்;

(ஈ) (i) காப்புறுதித் தொழில் விடயத்தில் கட்டுப் பணங்களை சேகரித்தல் அல்லது இலங்கையில் உள்ள ஆபத்துகள் காப்புறுதி விடயத்தை உள்ளடக்கியும்; ஆனால்

(ii) அத்தகையதாக, தொழிலின் சாதாரண நெறிமுறையில் செயற்படும் சுயாதின நிலையிலான பொது முகவரின் தொடர்பு விடயத்தைத் தவிர்த்தும்;

வதிவற்ற ஆளொருவரின் தொழில் சார்பாக ஏதேனும் பணியைப்புரியும் முகவர் உள்ள, இலங்கையில் உள்ள இடம்.

"வரி" என்பது செலுத்துகையானது வரி, கட்டணம், தீர்வை, அறவீடு அல்லது வேறுவகையாக குறித்தளிக்கப் பட்டதைப் பொருட்படுத்தாது இச்சட்டம் எந்த சட்ட மொன்றிற்கு ஏற்புடையதாகின்றதோ அந்த சட்ட மொன்றின் கீழ் விதிக்கப்பட்ட அரசாங்கத்திற்கான கட்டாயச் செலுத்துகை ஒன்று எனப் பொருள்படுவதுடன், சந்தர்ப்பம் வேறு வகையாகத் தேவைப்படுத்தினாலன்றி, பிடித்துவைத்தல் வரி, தவணைக்கொடுப்பனவுகள், வட்டி, பிந்திய கட்டணம் அல்லது வரியொன்று தொடர்பில் தண்டத்தையும் உள்ளடக்குகிறது;

"வரி அலுவலர்" என்பது -

(அ) ஆணையாளர் தலைமையதிபதி; அத்துடன்

(ஆ) திணைக்களத்தினால் ஏதேனும் தன்மையில் நியமிக்கப்பட்ட, தொழிலுக்கமர்த்தப்பட்ட அல்லது ஈடுபடுத்தப்பட்ட எவரேனும் ஆள்; எனப் பொருள்படும்;

"வரி விபரத்திரட்டு" என்பது ஆளொருவர், திணைக்களத்திற்கு கோப்பிடுவதற்கு தேவைப்படுத்தப்படுகின்ற தகவல் விபரத் திரட்டொன்றை உள்ளடக்கிய தகவல் விபரத் திரட்டொன்று எனப் பொருள்படும்; அதில் அவ்வாளின் தகவல் அல்லது வேறு சில ஆட்களின் சாத்தியமான வரிப்பொறுப்பு வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்;

"வரி செலுத்துநர்" என்பது -

(அ) பூச்சியம் விதிக்கப்படற்பாலதான அல்லது வரிவிதிக்கப்படற்பாலதான அல்லது வரிமதிப் பீட்டாண்டொன்றிற்கான நட்டம் ஒன்றைக் கொண்ட ஆளொருவரை உள்ளடக்கியும், இச் சட்டம், எச்சட்டமொன்றுக்கு அல்லது ஒழுங்கு விதியொன்றுக்கு ஏற்புடையதாகவுள்ளதோ அச்சட்டம் அல்லது ஒழுங்குவிதியின்கீழ் வரி செலுத்துவதற்கு தேவைப்படுத்தப்பட்ட ஆளொருவர்; அல்லது

(ஆ) வரியைப் பிடித்து வைத்து அதனை திணைக் களத்திற்கு செலுத்துவதற்கு தேவைப்படுத்தப் பட்ட ஆளொருவர், எனப் பொருள்படும்;

''வர்த்தகக் கையிருப்பு'' என்பது ஆளொருவரின் வியாபாரத்தின் சாதாரண நெறியில் விற்கப்படுகின்ற அல்லது விற்கப்படுவதற்கு கருதப்பட்ட, அவ்வாளினால் சொந்தமாக வைத்திருக்கக்கூடிய சொத்துக்கள், அத்தகைய சொத்துக்கள்மேல் வேலை நடந்து கொண்டிருத்தல், அத்தகைய சொத்துக்களுக்கு கூட்டிணைக்கப்பட வேண்டிய மூலப்பொருட்களின் விவரப்பட்டியல் மற்றும் நுகரக்கூடிய களஞ்சியசாலைகள் எனப் பொருள்படும்;

"கைமாற்றல் விலையிடுதல் அலுவலர்" என்பது கைமாற்றல் விலையிடுதல் அலுவலராக ஆணையாளர் தலைமை யதிபதியினால் குறித்துரைக்கப்படும் எவரேனும் உண்ணாட்டரசிறை அலுவலர் எனப் பொருள்படும்;

"நம்பிக்கைப்பொறுப்பு" என்பது, நம்பிக்கைப்பொறுப்பாளர் ஒருவர் எவ்வொழுங்கேற்பாட்டின்கீழ் சொத்துக்களை வைத்திருக்கின்றரோ அவ்வொழுங்கேற்பாடு எனப் பொருள்படும்;

"நம்பிக்கைப் பொறுப்பாளர்" என்பது

(அ) சொத்துக்கள், தனியாக அல்லது கூட்டாக வேறு தனியாட்களுடன் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுக்களுடன் வைக்கப்பட்டிருந்தாலும் அல்லது வைக்கப்படாமலிருந்தாலும் ; அல்லது

(ஆ) செயலினால், இறுதிலிருப்பாலணமொன்றினால் அல்லது நீதிமன்றமொன்றின் கட்டளையினால் அல்லது வெளிப்படுத்துகையினால் அல்லது சட்டத்தின் ஏனைய நடைமுறைப்படுத்தலினால் நம்பிக்கைப்பொறுப்பாளராக நியமிக்கப்பட்ட அல்லது அமைத்துருவாக்கப்பட்ட தனியாள் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழு என்பதுடன் தனியாள்

நம்பிக்கைப் பொறுப்பாளராகவில்லாவிடினும் சரி அடையாளம் காணக்கூடிய ஆட்களின் நன்மைக்காக அல்லது சட்டத்தினால் அனுமதிக்கப்பட்ட சில நோக்கங்களுக்காக நம்பகமான தன்மை யில் சொத்துக்களை வைத்திருக்கும் கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றின் தனியாள் ஒருவர் எனவும் பொருள்படுகிறது.

(இ) பின்வருபவர்களை உள்ளடக்குகிறது –

(i) நிறைவேற்றுநர், நிருவாகி, காப்பாளர் அல்லது ஆதனப் பாதுகாப்பாளர்;

(ii) ஒழித்துக்கட்டுபவர், பெறுநர், வங்கி முறிவில் உள்ள நம்பிக்கைப் பொறுப்பாளர் அல்லது நிதி முகாமையாளர்;

(iii) பயனுரிமை அல்லது வேறு வரையறுக்கப்பட்ட அக்கறைக்கு அமைய சொத்துக்களின் நிருவாகம் அல்லது கட்டுப்பாட்டைக் கொண்டிருக்கும் ஆள் ஒருவர்;

(iv) ஆற்றலை இழந்த தனியாள் ஒருவரின் சொத்துக்களை முகாமை செய்யும் ஆள் ஒருவர்; அத்துடன்

(v) தனியார் மன்றமொன்றின் அல்லது வேறு ஒத்த ஒழுங்கேற்பாட்டின் கீழ் சொத்துக்களை முகாமை செய்யும் ஆள் ஒருவர்;

"அடிப்படைச் சொத்தாண்மைத் தன்மைகள்" என்பது -

(அ) உருவகம் ஒன்று தொடர்பில், தனியாட்களினால் அல்லது ஆளெவரும் உறுப்பாண்மை அக்கறை கொண்டிராத உருவகங்களினால், ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட இடைச்செருகப்பட்ட உருவகங்களினூடாக நேரடியாகவோ நேரடியாகவல்லாமலோ உருவகத்தில் சொந்தமாகக் கொண்டுள்ள உறுப்பாண்மை அக்கறைகள் எனப் பொருள்படும்; அல்லது

(ஆ) உருவகம் ஒன்று சொந்தமாகக்கொண்டுள்ள சொத்தொன்று தொடர்பில், சொத்தானது உருவகத்தின் அடிப்படை சொத்தாண்மை யைக் கொண்டுள்ள ஆட்களுக்கு சொந்தமானதாகவிருக்கின்றதென்றாற் போன்று உருவகத்தின் அச்சொத்தாண்மைக்குரிய விகிதத்தில் தீர்மானிக்கப்படுகின்ற சொத்து எனப் பொருள்படும்;

''ஐ அ டொ'' என்பது ஐக்கிய அமெரிக்க டொலர் எனப் பொருள்படும்;

''பிடித்து வைக்கப்படுபவர்'' என்பது இச்சட்டத்தின்கீழ் எந்தக் கொடுப்பனவொன்றிலிருந்து வரியைப் பிடித்து வைப்பதற்கு தேவைப்படுத்தப்படுகின்றாரோ அந்தக் கொடுப்பனவை பெறுகின்ற அல்லது பெறுவதற்கு உரித்துடையவராக்கப்பட்ட ஆளொருவர் எனப் பொருள்படும்; அத்துடன்

''பிடித்து வைக்கும் முகவர்'' என்பது இச்சட்டத்தின்கீழ் கொடுப்பனவொன்றிலிருந்து வரியை பிடித்து வைப்பதற்கு தேவைப்படுத்தப்பட்ட ஆளொருவர் எனப் பொருள்படும்.

இணை ஆட்கள்.

**196.** (1) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, இரு ஆட்களுக்கிடையிலான உறவு பின்வருவனவாக இருக்கின்றவிடத்து, அவ்விருவரும் இணையாளர்கள் அல்லது இணை ஆட்கள் ஆவார்கள் -

(அ) தனியாள் ஒருவர் மற்றும் தனியாளின் உறவினர் ஒருவர்;

(ஆ) அதே பங்குடைமையின் பங்காளர்கள்;

(இ) உருவகம் ஒன்று மற்றும் உட்பிரிவு (2) இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆளொருவர்; அல்லது

(ஈ) (அ) இலிருந்து (இ) வரையான பந்திகளால் மேவப்படாத ஏதேனும் விடயத்தில், மற்றையவரின் பணிப்புக்கள், வேண்டுதல்கள், மற்றையவரின் பரிந்துரைகள் அல்லது எண்ணங்களுக்கு இணங்க ஊழியர் ஒருவராக தவிர நியாயமான வகையில் செயற்படுவதற்கு எதிர்பாக்கப்படும் அத்தகையவர் -

(2) ஆளொருவர் மற்றும் உருவகம் ஒன்று பின்வருவனவற்றின் போது இணை ஆட்களாவார்கள் -

(அ) (i) ஒன்றில் தனியாக அல்லது இப்பிரிவின் வேறு ஏற்படைமையின் கீழ் அவ்வாளுடன் இணைந்துள்ள ஆட்களுடன் ஒன்றாக; அத்துடன்

(ii) நேரடியாக அல்லது ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட இடைச்செருகப்பட்ட உருவகங்களினூடாக

உருவகத்தைக் கட்டுப்படுத்துகின்றவிடத்து அல்லது உருவகத்தின் வருமானம், மூலதனம் அல்லது வாக்களிக்கும் தத்துவத்திற்கான உரிமைகளின் ஐம்பது வீதம் அல்லது அதற்கு மேற்பட்ட வீதத்திலிருந்து நன்மை பெறுகின்றவிடத்தும்; அல்லது

(ஆ) இப்பிரிவின் வேறு ஏற்புடைமையின்கீழ் பந்தி (அ) இல் குறிப்பீடுசெய்யப்பட்ட ஆளொருவருடன் இணைகின்ற விடத்தும் ஆகும்.

(3) இப்பிரிவில் தனியாள் ஒருவர் தொடர்பில் ''உறவினர்'' என்பது, திருமண வகையில் அல்லது தத்தெடுத்தல் வகையிலும் உள்ளடங்கலாக, தனியாளின் பிள்ளை, வாழ்க்கைத் துணை, பெற்றோர், பெற்றோரின் பெற்றோர், பேரப்பிள்ளை, உடன் பிறந்தவர், மாமா, மாமி, சகோதரன் அல்லது சகோதரியின் மகன், சகோதரன் அல்லது சகோதரியின் மகள் அல்லது முதல் மாமன் பிள்ளை எனப் பொருள்படும்.

வீட்டுச் செலவுகள்.

**197**. (1) தனியாள் ஒருவர், அவர் தொடர்பில் செலவினத்தை உறுமிடத்து, செலவினமானது பின்வருவனவற்றில், அது உறப்பட்ட அளவு வரை வீட்டுச் செலவினமாகவிருத்தல் வேண்டும் -

(அ) புகலிடம் மற்றும் உணவு, சிற்றுண்டி, களியாட்டம் அல்லது வேறு பொழுதுபோக்குச் செயற்பாடுகள் வழங்குவது உள்ளடங்கலாக தனியாளைப் பேணுவதில்;

(ஆ) வீட்டிலிருந்து பயணிப்பதற்கு தனியாளுக்கு;

(இ) வேலைக்கு வெளியே அணிவதற்கு பொருத்தமற்ற ஆடை தவிர்ந்த தனியாளுக்காக காலணிகள் உட்பட ஆடையைக் கொள்வதில்;

(ஈ) தனியாள் ஒருவரினால் நடாத்தப்படும் வியாபாரம் ஒன்றுடன் நேரடியாக இயைபாகும் கல்வி தவிர்ந்த மற்றும் பட்டமொன்று அல்லது டிப்ளோமாக்கு இட்டுச் செல்லாதவாறு அத்தனியாளுக்கு கல்வியூட்டுவதில்; அல்லது

(உ) தனியாளின் கடன் அட்டைத் தனிசுகள் உள்ளடங்கலாக ஏதேனும் தனிப்பட்ட தனிசுகளைச் செலுத்துவதில்.

(2) வேறொருவர், தனியாள் ஒருவருக்கு கொடுப்பனவொன்றைச் செய்வதில் அல்லது வேறு ஏதேனும் நன்மையை வழங்குவதில் செலவினத்தை உறுமிடத்து, செலவினமானது பின்வருவனவற்றின் அளவு வரை தவிர வீட்டுச் செலவினமாகவிருத்தல் வேண்டும்:-

(அ) தனியாளின் வருமானத்தை கணக்கிடுவதில் கொடுப்பனவு அல்லது நன்மை உள்ளடக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) தனியாள், கொடுப்பனவு அல்லது நன்மைக்கான சமமான சந்தைப் பெறுமதியைக் கொண்ட பிரதிபயனை வழங்கல்; அல்லது

(இ) செலவினத் தொகையானது, அதனை நியாயமற்றதாக ஆக்குவதற்கு அல்லது அதனை கணக்கில் கொள்வதற்கு நிருவாக ரீதியாக செயற்படுத்த முடியாதவாறு சிறியதாகவிருக்கின்றமை.

(3) உப்பிரிவு (1) மற்றும் (2) இல் குறிப்பீடு செய்யப்பட்ட செலவினம் அவ்வுப்பிரிவுகளில் குறிப்பீடு செய்யப்பட்ட முறையொன்றில் பயன்படுத்தப்பட்ட கடனெடுக்கப்பட்ட பணம் தொடர்பில் உறப்பட்ட வட்டியை உள்ளடக்குதல் வேண்டும்.

**198.** (1) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக,"நிதிசார் சாதனம்" என்னும் சொற்பதம் *நிதிசார் சாதனங்கள்.*

(அ) (i) கடன் கோரிக்கை அல்லது கடன் கடப்பாடு;

(ii) வழிவந்த சாதனம்;

(iii) வெளிநாட்டு நாணய சாதனம்; அத்துடன்

(iv) ஒழுங்குவிதிகளால் விதித்துரைக்கப்பட்ட அல்லது ஒழுங்குவிதிகள் இல்லாமையின் போது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நெறிகளால் நிதிசார் சாதனம் ஒன்றாக கருதப்பட்ட வேறு ஏதேனும் சாதனம் எனப் பொருள்படும்; ஆனால்

(ஆ) ஒழுங்குவிதிகளினால் விதித்துரைக்கப்படக்கூடிய வாறான அளவுக்கு தவிர, உருவகம் ஒன்றில் உறுப் பாண்மை அக்கறை ஒன்றை தவிர்க்கிறது.

(2) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக -

(அ) "கடன் கோரிக்கை" என்பது கடன் கடப்பாடொன் றின்கீழ் கொடுப்பனவொன்றைப் பெறுவதற்கான உரிமை ஒன்று எனப் பொருள்படும்;

(ஆ) "கடன் கடப்பாடு" என்பது செலுத்தப்படற்பாலதான கணக்குகள் மற்றும் வைப்புகள், தொகுதிக்கடன்கள், கையிருப்புகள், திறைசேரி உண்டியல், வாக்குறுதிப் பத்திரங்கள், மாற்றுண்டியல் மற்றும் முறிகள் உட்பட, பணத்தில் குறிக்கப்பட்டுள்ள கொடுப்பனவு ஒன்றை இன்னொரு ஆளுக்கு செய்வதற்கான கடமை எனப் பொருள்படும்;

(3) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, ஆளொருவர் -

(அ) நிதிசார் சாதனம் ஒன்று தொடர்பில் வட்டி அல்லது ஈட்டுகைகளைப் பெறுகின்றபோது நிதிசார் ஈட்டுகைகளைப் பெறுகிறார்; அத்துடன்

(ஆ) நிதிசார் சாதனம் ஒன்று தொடர்பில் வட்டி அல்லது நட்டங்களை உறுகின்றபோது நிதிசார் ஆகு செலவொன்றை உறுகின்றார்; அத்துடன்

(4) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, ஆளொருவர் -

(அ) வழிவந்த அல்லது வெளிநாட்டு நாணயச் சாதனம் ஒன்று தொடர்பில் நிதிசார் ஈட்டுகையொன்றைப் பெற்றுக்கொள்கின்றபோது இயைபான நிதிசார் ஈட்டுகையொன்றைப் பெறுகிறார்; அத்துடன்

(ஆ) பெறுகை அல்லது வெளிநாட்டு நாணயச் சாதனம் ஒன்று தொடர்பில் நிதிசார் ஆகு செலவொன்றை உறுகின்றபோது இயைபான நிதிசார் செலவொன்றை உறுகின்றார்.

(5) இப்பிரிவில் "பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நெறிகள்" என்பது சர்வதேச நிதிசார் அறிக்கை நியமங்கள் எனப் பொருள்படும்.

(6) அமைச்சர் -

(அ) வழிவந்த சாதனங்கள்; அத்துடன்

(ஆ) வெளிநாட்டு நாணயச் சாதனங்கள் என்பவற்றை ஒழுங்குவிதிகள் மூலம் விதித்துரைக்கலாம்.

## அத்தியாயம் XXI

### விசேட ஏற்பாடுகள்

பரஸ்பர நிருவாக உதவி உடன்படிக்கைகளை அமுலாக்குதல்.

**199.** (1) அமைச்சர், அரசாங்கத்தின் சார்பாக, வெளிநாட்டு அரசாங்கம் அல்லது அரசாங்கங்களுடனான பரஸ்பர நிருவாக உதவி உடன்படிக்கையை செய்துகொள்ளலாம், திருத்தலாம் அல்லது முடிவுறுத்தலாம்.

(2) எந்த பரஸ்பர நிருவாக உதவி உடன்படிக்கைக்கு பாராளு மன்றம் ஏற்றங்கீகரிப்புச் சாதனமொன்றை வழங்கியுள்ளதோ அந்த பரஸ்பர நிருவாக உதவி உடன்படிக்கை, அதன் நியதிகளுக்கு இணங்க இலங்கையில் சட்டப்பயனைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) எந்த பரஸ்பர நிருவாக உதவி உடன்படிக்கைக்கு உட்பிரிவு (2) ஏற்புடையதாகின்றதோ அந்த பரஸ்பர நிருவாக உதவி உடன்படிக்கையின் நியதிகளுக்கும் வேறு ஏதேனும் சட்டத்துக்கும் இடையில் ஏதேனும் முரண்பாடு இருக்குமிடத்து பரஸ்பர நிருவாக உதவி உடன்படிக்கை மேலோங்கி நிற்றல் வேண்டும்.

(4) இலங்கையில் சட்டப்பயனை உடைய வரி ஒப்பந்தம் அல்லது பரஸ்பர நிருவாக உதவி உடன்படிக்கையொன்று, தகவல் பரிமாற்றம் அல்லது வரி அறவிடுவதில் பரஸ்பர உதவி அல்லது தொழிற்பாட்டுச் சேவையை ஏற்பாடு செய்தால் ஆணையாளர் தலைமையதிபதி, இச்சட்டத்தில் அல்லது வேறு சட்டத்தில் –

(அ) "வரி" என்பதற்கான குறிப்பீடு, எந்த வெளிநாட்டு வரியொன்றிற்கு தகவல் பரிமாற்றம் அல்லது பரஸ்பர உதவி தொடர்பாகின்றதோ அந்த வெளிநாட்டு வரியை உள்ளடக்குகிறது;

(ஆ) "செலுத்தப்படாத வரி" (அல்லது அந்தப் பொருள்பட்ட சொற்கள்) என்பதற்கான குறிப்பீடு உரிய தேதியில் செலுத்தப்படாத பந்தி (அ) இல் குறித்துரைக்கப்பட்ட தொகையை உள்ளடக்குகிறது;

(இ) "வரி செலுத்துநர்" என்பதற்கான குறிப்பீடொன்று பந்தி (அ) இல் குறித்துறைக்கப்பட்ட தொகையொன்றுக்கு ஆளாகும் ஆளொருவரை உள்ளடக்குகிறது; அத்துடன்

(ஈ) "வரிச் சட்டம்" என்பதற்கான குறிப்பீடு, எச்சட்டத்தின் கீழ் பந்தி (அ) இல் குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு வரியொன்று விதிக்கப்படுகின்றதோ, அச்சட்டத்தை உள்ளடக்குகின்றது,

என்ற அடிப்படையில், உடன்பாடு அல்லது உடன்படிக்கையின்கீழ் இலங்கையின் கடப்பாடுகளை ஈடுசெய்வதற்கு இச்சட்டத்தின்கீழ் அல்லது வேறு ஏதேனும் சட்டத்தின்கீழ் கிடைக்கக்கூடிய தத்துவங்களை பயன்படுத்துதல் வேண்டும்.

(5) இப்பிரிவில் -

"சர்வதேச உடன்படிக்கை" என்பது இலங்கைக் குடியரசு மற்றும் வெளிநாட்டு அரசாங்கம் ஒன்று அல்லது அரசாங்கங்களுக்கிடையிலான உடன்படிக்கை எனப் பொருள்படும்;

"பரஸ்பர நிருவாக உதவி உடன்படிக்கை" என்பது வரித்தகவல் பரிமாற்ற உடன்படிக்கை அல்லது வரிவிதித்தல் கருமங்கள் தொடர்பில் பரஸ்பர நிருவாக உதவிக்கான வேறு சர்வதேச உடன்படிக்கை எனப் பொருள்படும்.

**பொருள்கோடல் மற்றும் ஐயங்களைத் தவிர்த்தல்**

வரிச்சட்டங்களின் பொருட்கோடலும் ஐயங்களைத் தவிர்த்தலும்.

***200***. (1) இச்சட்டத்தின் ஏற்பாடொன்றை பொருள்கோடல் செய்வதில், (நோக்கம் அல்லது குறிக்கோள் சட்டத்தில் வெளிப்படையாக கூறப்பட்டிருப்பினும் அல்லது கூறப்படாதிருப்பினும்) ஏற்பாட்டின் அல்லது சட்டத்தின் அடிப்படையானதான அல்லது குறிக்கோளை ஊக்குவிக்கும் கருத்தொன்று அந்த நோக்கத்தை அல்லது குறிக்கோளை ஊக்குவிக்காத கருத்தைவிட விரும்பத்தக்கதாகவிருத்தல் வேண்டும்.

(2) உட்பிரிவு (5) இற்கு அமைய, இச்சட்டத்தின்ஏற்பாடொன்றை பொருள்கோடல் செய்வதில், சட்டத்தின் பாகமாகி அமையாத ஏதேனும் விடயம், ஏற்பாட்டின் பொருளை நிச்சயிப்பதில் உதவுவதற்கு இயன்றதாகவிருந்தால், பின்வருவனவற்றிற்காக அவ்விடயம் கவனத்திற்கெடுக்கப்படலாம்:

(அ) ஏற்பாட்டின் பொருளானது, சட்டத்தில் அதன் சந்தர்ப்பத்தையும் சட்டத்தின் அடிப்படையாகவுள்ள நோக்கம் அல்லது குறிக்கோளையும் கருத்திற்கொண்டு, ஏற்பாட்டின் உரையினால் வெளிப்படுத்தப்பட்ட சாதாரண பொருள் என்பதை உறுதிப்படுத்துவதற்கும்; அல்லது

(ஆ) பின்வருவனவற்றின் போது ஏற்பாட்டின் பொருளைத் தீர்மானிப்பதற்கும்:

(i) ஏற்பாடானது குழப்பமான அல்லது தெளிவற்றதாக விருத்தல்; அல்லது

(ii) உரையினால் வெளிப்படுத்தப்பட்ட சாதாரண பொருளும் சட்டத்தில் அதன் சந்தர்ப்பத்தை கருத்திற் கொள்ளுதலும் சட்டத்தின் அடிப்படையாகவுள்ள நோக்கம் அல்லது குறிக்கோளும் வெளிப்படையாக அபத்தமான அல்லது நியாயமற்ற விளைவொன்றுக்கு இட்டுச் செல்லுதல்.

(3) உப்பிரிவு (2) இன் பொதுமையை வரையறுக்காமல், இச்சட்டத்தின் ஏற்பாட்டைப் பொருள்கோடல் செய்வதில் கவனத்திற்கெடுக்கப் படக்கூடியவாறான விடயம் பின்வருவனவற்றை உள்ளடக்குதல் வேண்டும்:-

(அ) அரசாங்க அச்சுத் திணைக்களத்தினால் அச்சிடப் பட்டவாறு சட்டத்தின் உரையைக் கொண்ட ஆவணத்தில் தரப்பட்டுள்ள சட்டத்தின் பாகமாக அமையாத எல்லாக் கருமங்கள்;

(ஆ) சட்டத்தில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் உடன்பாடு அல்லது வேறு சர்வதேச உடன்படிக்கை அல்லது சர்வதேச உதவி உடன்படிக்கை

(இ) ஏற்பாடு சட்டமாக்கப்படுவதற்கு முன்னர், அமைச்சர் ஒருவரினால் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு முன்னால் இடப்பட்ட அல்லது அவர்களுக்கு கொடுத்துதவப்பட்ட அவ்வேற்பாட்டைக் கொண்டுள்ள சட்டமூலம் தொடர்பான ஏதேனும் விளக்கமுறையான நிறுபம் அல்லது வேறு ஏதேனும் இயைபான ஆவணம்

(ஈ) அவ்வேற்பாட்டைக் கொண்டுள்ள சட்டமூலத்துடன் தொடர்புபட்ட, பிரேரணை ஒன்று செய்யப்பட்ட சந்தர்ப்பத்தில் அமைச்சர் ஒருவரினால் பாராளு மன்றத்தில் செய்யப்பட்ட உரை; அத்துடன்

(உ) பாராளுமன்றத்தின் விவாதங்கள் பற்றிய அல்லது சம்பந்தப்பட்ட சட்டமூலத்தைக் கவனத்திற்கெடுத்த தொடர்புடைய ஏதேனும் பாராளுமன்றக் குழுவின் விவாதங்கள் பற்றிய நடவடிக்கைகளின் ஏதேனும் அலுவலகமுறையான பதிவேட்டில் உள்ள ஏதேனும் இயைபான விடயம்.

**201.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

## அத்தியாயம் XXII

### தற்காலிக ஏற்பாடுகள் மற்றும் நிலைபெயர்கால ஏற்பாடுகள்

**202.** (1) ஆறாம் அட்டவணையின் ஏற்பாடுகள் தற்காலிகத் தன்மையொன்றின் சலுகைகளை ஏற்பாடு செய்கின்றதுடன் அதில் தரப்பட்டுள்ள காலப்பகுதிகளுக்காக இச்சட்டத்தின் ஏற்பாடுடைமையை திரிபுபடுத்துவதற்கு ஏற்புடையதாகின்றது.

*தற்காலிக ஏற்பாடுகள் மற்றும் நிலைபெயர்கால ஏற்பாடுகள்*

(2) முரணாக வெளிப்படையாக கூறப்பட்டாலே ஒழிய, ஆறாம் அட்டவணையின் ஏற்பாடுகள் -

(அ) கண்டிப்பாக ஏற்புடையனவாக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் அவைகளின் தெளிவான சொற்களுக்கு இணங்க மட்டுமே இருத்தலும் வேண்டும்; அத்துடன்

(ஆ) அவை நடைமுறைக்கு வந்ததன் பிறகு ஐந்து ஆண்டுகளில் முடிவுறுதலும் வேண்டும்.

(3) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, ஆறாம் அட்டவணையின் ஏற்பாடொன்று, குறிப்பிட்ட வியாபார வகையொன்று தொடர்பில் ஆளொருவருக்கு சலுகையொன்றை வழங்குவதற்கு ஏற்புடையதாகின்றவிடத்து -

(அ) வியாபாரமானது குறுகியளவில் பொருள்கோடல் செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன் அவ்வியாபாரத்திற்கு முழுமையாக மற்றும் புறநீங்கலாக அர்ப்பணிக்கப்பட்ட ஆளின் செயற்பாடுகள் மட்டுமே வியாபாரத்தின் பாகமாகக் கருதப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) வரிமதிப்பீட்டாண்டொன்றிற்கான வியாபாரத்திலிருந்தான ஆளின் வருமானம் அல்லது நட்டம் ஆளின் வேறு ஏதேனும் செயற்பாட்டிலிருந்து தனிவேறாக கணக்கிடப்படுதல் வேண்டும்.

நீக்கங்களும் பேணல்களும்.

**203.** (1) 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டம் இத்தால் நீக்கப்படுகின்றது.

(2) நீக்கப்பட்ட சட்டம் இச்சட்டம் நடைமுறைக்கு வந்த தேதிக்கு முன்னர் ஏற்பட்ட நிகழ்வுகள் தொடர்பில் தொடர்ந்து ஏற்புடையதாதல் வேண்டும்.

(3) நீக்கப்பட்ட சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்டதும் இச்சட்டம் தொடங்கும் தேதியில் உளதாயுள்ள எல்லா நியமனங்களும் கையளிப்புகளும், இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட நியமனங்களாகவும் கையளிப்புகளாகவும் கருதப்படுதல் வேண்டும்.

(4) நீக்கப்பட்ட சட்டம் தொடர்பாக பயன்படுத்தப்பட்ட எல்லாப் படிவங்கள் மற்றும் ஆவணங்கள், இச்சட்டத்தின் கீழ் தொடர்ந்து பயன்படுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன், நீக்கப்பட்ட சட்டத்துக்கு தோதான, ஏற்பாடுகள் மற்றும் சொல்லமைப்புக்களுக்கான அப்படிவங்கள் மற்றும் ஆவணங்களில் உள்ள எல்லாக் குறிப்பீடுகளும் இச்சட்டத்தின் நேரொத்த ஏற்பாடுகள் மற்றும் சொல்லமைப்புகளுக்கு குறிப்பீடு செய்வனவாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு முன்னர் தொடங்கிய மேன்முறையீடுகள், குற்றவழக்குத் தொடுப்புகள் மற்றும் வேறு வழக்கு நடவடிக்கைகள் தொடருதல் வேண்டும் என்பதுடன் இச்சட்டம் வலுவுக்கு வவரவில்லை என்றாற்போன்று கையுதிர்க்கப்படுதலும் வேண்டும்.

(6) தொடக்க தேதிக்கு முன்னர் உருவாகிய வரிப் பொறுப்புகள், இச்சட்டத்தின் கீழ் புதிய வழக்கு நடவடிக்கைகள்மூலம் அறவிடப்படலாம் ஆனால் வரி அறவிடுவதற்காக ஏலவே எடுக்கப்பட்ட நடவடிக்கைக்கு பங்கமின்றி அறவிடப்படுதல் வேண்டும்.

(7) இச்சட்டம் தொடங்குவதற்கு முன்னர் பயனுடைதாகவிருந்த வரி நிருவாகம் மற்றும் நடவடிக்கை முறை,சம்பந்தமான சட்டம் இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்ட கருமம் ஒன்று தொடர்பில் எதனையும் பற்றிக் கூறாதிருந்தால், இச்சட்டத்தில் இயைபான ஏற்பாடானது, வரையறைகள் காலப்பகுதியின் கீழ் நெருக்கமாகவிராத கருமங்களுக்கு கடந்தகாலத்தை உள்ளடக்கும் பயனுடன் ஏற்புடையதாதல் வேண்டும்.

**204.** (1) நீக்கப்பட்ட சட்டம், இச்சட்டம் பயனுக்கு வரும் தேதிக்கு முன்னர் தொடங்கும் வரிமதிப்பீட்டாண்டுகளுக்காக தொடர்ந்து ஏற்புடையதாதல் வேண்டும். *நிலைபெயர் கால ஏற்பாடுகள்.*

(2) இச்சட்டத்தில் -

(அ) முன்னைய வரிமதிப்பீட்டாண்டொன்றுக்கான குறிப்பீடு, சந்தர்ப்பம் தேவைப்படுத்துகின்றவிடத்து, நீக்கப்பட்ட சட்டத்தின் கீழான வரிமதிப்பீட்டாண்டொன்றிற்கான குறிப்பீடு ஒன்றை உள்ளடக்குகிறது; அல்லது

(ஆ) இச்சட்டம் அல்லது இச்சட்டத்தின் ஏற்பாடு ஒன்றிற்கான குறிப்பீடு, சந்தர்ப்பம் தேவைப்படுத்துகின்றவிடத்து, முறையே நீக்கப்பட்ட சட்டம் அல்லது நீக்கப்பட்ட சட்டத்தின் நேரொத்த ஏற்பாடொன்றிற்கான குறிப்பீடு ஒன்றை உள்ளடக்குதல் வேண்டும்.

(3) இவ்வுட்பிரிவு, நீக்கப்பட்ட சட்டத்தின் கீழ் ஆளொருவரின் வரிமதிப்பீட்டாண்டு, மார்ச் மாதம் 31 ஆம் தேதி முடியும் ஆண்டு தவிர 12 மாதங்கள் கொண்ட காலப்பகுதியொன்றாக இருக்கின்றவிடத்து (நீக்கப்பட்ட சட்டப் பயன் இல்லாது ஒழிந்த நேரத்தில்) ஏற்புடையதாகும் ஓர் ஆள் - இச்சட்டத்தின் கீழ் ஆளின் வரிமதிப்பீட்டாண்டாக அக்காலப்பகுதியைப் பயன்படுத்துவதற்கு பிரிவு 20 (2) இன் கீழ் ஆணையாளர் தலைமையதிபதியினால் அங்கீகாரம் வழங்கப்பட்டவராக கருதப்படுகிறார்.

(4) 2017, ஏப்ரல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் முதலாவது வரிமதிப்பீட்டாண்டுக்காக, பிரிவு 90 இன் கீழ் தவணைக் கொடுப்பனவு செலுத்துநர் ஒருவரால் செலுத்தப்படற்பாலதான ஒவ்வொரு வரித் தவணைக் கொடுப்பனவுத் தொகையை கணக்கிடும் நோக்கத்துக்காக, தவணைக் கொடுப்பனவு செலுத்துநர், அவ்வரி மதிப்பீட்டாண்டிற்கான செலுத்தப்படற்பாலதான அதனது தற்போதைய மதிப்பிடப்பட்ட வரியானது 5 சதவீத உயர்வால் அதிகரிக்கப்பட்ட முன்னைய வரிமதிப்பீட்டாண்டில் தவணைக் கொடுப்பனவு செலுத்துநரால் செலுத்தப்படற்பாலதாக விருந்த வரித் தொகைக்கு சமமாகும் என கருதலாம். ஆளொருவருக்கு முன்னைய வரிமதிப்பீட்டாண்டொன்றில் செலுத்தப்படற் பாலதான வரி இல்லாதவிடத்து, அவ்வாள் பிரிவு 90 இன் கீழ் காலாண்டு தவணைக் கொடுப்பனவுகள் மூலம் செலுத்துவதற்கு தேவைப்படுத்தப்படுதலாகாது.

(பிரிவு 2)

## முதலாம் அட்டவணை

*வரி வீதங்கள்*

### 1. வதிவிட மற்றும் வதிவற்ற ஆட்களுக்கான வரிவீதங்கள்

(1) உட்பந்தி (2) இன் ஏற்பாடுகளுக்கு அமைய, வரிமதிப்பீட்டாண்டொன்றிற்கான வதிவிட அல்லது வதிவற்ற தனியாள் ஒருவரின் வரிவிதிக்கப்படற்பாலதான வருமானம் பின்வரும் வீதங்களில் வரிவிதிக்கப்படுதல் வேண்டும்:

| வரிவிதிக்கப்படற்பாலதான வருமானம் | செலுத்தப்படற்பாலதான வரி |
|---|---|
| 600,000 ரூபாவை விஞ்சிய | 0. ரூபாவை விஞ்சுதலான தொகையின் 4 % |
| 600,000 ரூபாவை விஞ்சிய ஆனால் 1,200,000 ரூபாவை விஞ்சாத | 24,000 ரூபாவும், 600,000 ரூபாவை விஞ்சுதலான தொகையின் 8 %உம் |
| 1,200,000 ரூபாவை விஞ்சிய ஆனால் 1,800,000 ரூபாவை விஞ்சாத | 72,000 ரூபாவும், 1,200,000 ரூபாவை விஞ்சுதலான தொகையின் 12 %உம் |
| 1,800,000 ரூபாவை விஞ்சிய ஆனால் 2,400,000 ரூபாவை விஞ்சாத | 144,000 ரூபாவும், 1,800,000 ரூபாவை விஞ்சுதலான தொகையின் 16 %உம் |
| 2,400,000 ரூபாவை விஞ்சிய ஆனால் 3,000,000 ரூபாவை விஞ்சாத | 240,000, 2,400,000 ரூபாவை விஞ்சுதலான தொகையின் 20 %உம் |
| 3,000,000 ரூபாவை விஞ்சிய ஆனால் | 360,000 ரூபாவும், 3,000,000 ரூபாவை விஞ்சுதலான தொகையின் 24 %உம் |

(2) தனியாள் ஒருவரின் வரிவிதிக்கப்படற்பாலதான வருமானம், முதலீட்டுச் சொத்துக்களின் தேறிப்பெறுகையிலிருந்தான ஈட்டுகைகள் அல்லது உட்பந்திகள் (4) அல்லது (5) இல் குறிப்பீடு செய்யப்பட்ட வருமான வகைகளை உள்ளடக்குகின்றவிடத்து, அச்சந்தர்ப்பத்தில் -

(அ) முதலீட்டுச் சொத்துக்களின் தேறிப் பெறுகையிலிருந்தான அவ்வீட்டுகைகளுக்கு 10 சதவீதத்தில் வரிவிதிக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) வரிமதிப்பீட்டாண்டொன்றிற்காக உட்பந்தி (3) இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஊழியத்திலிருந்தான வருமான வகைகள் பின்வரும் விதங்களில் வரிவிதிக்கப்படுதல் வேண்டும்:

(i) பங்களிப்புக்காலம் அல்லது ஊழியக்காலம் 20 ஆண்டுகள் அல்லது அதனை விடக் குறைவாகவிருக்கின்றவிடத்து;

| **ஊழியத்திலிருந்தான மொத்த வருமானம்** | **செலுத்தப்படற்பாலதான வரி** |
|---|---|
| 2,000,000 ரூபாவை விஞ்சாத | 0.ரூபாவை விஞ்சுதலான தொகையின் 0% |
| 2,000,000 ரூபாவை விஞ்சிய ஆனால் 3,000,000 ரூபாவை விஞ்சாத | 2,000,000 ரூபாவை விஞ்சுதலான தொகையின் 5 % |
| 3,000,000 ரூபாவை விஞ்சியதாக | 50,000 ரூபாவும் 3,000,000 ரூபாவை விஞ்சுதலான தொகையின் 10 %உம் |

(ii) பங்களிப்புக் காலம் அல்லது ஊழியக்காலம் 20 ஆண்டுகளுக்கு மேலாக இருக்கின்றவிடத்து;

| **ஊழியத்திலிருந்தான மொத்த வருமானம்** | **செலுத்தப்படற்பாலதான வரி** |
|---|---|
| 5,000,000 ரூபாவை விஞ்சாத | 0.ரூபாவை விஞ்சுதலான தொகையின் 0% |
| 5,000,000 ரூபாவை விஞ்சிய ஆனால் 6,000,000 ரூபாவை விஞ்சாத | 5,000,000 ரூபாவை விஞ்சாத விஞ்சுதலான தொகையின 5 % |
| 6,000,000 ரூபாவை விஞ்சியதாக | 50,000 ரூபாவும் 6,000,000 ரூபாவை விஞ்சுதலான தொகையின் 10 % உம் |

(இ) உட்பந்தி (4) இல் குறிப்பீடு செய்யப்பட்ட வியாபார வருமான வகைக்கு 40 சதவீதத்தில் வரி விதிக்கப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ஈ) தனியாளின் வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்தின் எஞ்சியுள்ள தொகைக்கு மட்டும், உட்பந்தி (1) இல் குறிப்பீடு செய்யப்பட்ட வீதங் களில் வரிவிதிக்கப்படுதல் வேண்டும்.

(3) உட்பந்தி (2) இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஊழியத்திலிருந்தான வருமான வகைகள் பின்வருவனவாதல் வேண்டும்.

(அ) ஓய்வூதியம் ஒன்றை மாற்றியதில் பெறப்பட்ட தொகை;

(ஆ) இளைப்பாற்றுப் பணிக்கொடையொன்றாக பெறப்பட்ட தொகை;

(இ) பணிப்பாளர் தலைமையதிபதி, தொழில் தருநரினால் தொழிலுக்கமர்த் தப்பட்ட எல்லா தனியாட்களுக்கும் ஒருசீராக ஏற்புடையதாகின்ற தெனக் கருதும் திட்டமொன்றின் கீழ் பதவி அல்லது ஊழியத்தின் இழப்புக்காக நட்டஈடாக பெறப்பட்ட தொகை;

(ஈ) சகாய நிதியமொன்றுக்கான ஆளொருவரின் உதவுதொகைகளை பிரதிநிதித்துவப்படுத்தாத, ஆணையாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்பட்ட சகாய நிதியத்திலிருந்து ஊழியத்திலிருந்து இளைப் பாறும் நேரத்தில் அல்லது அதன் பின்னரான நேரத்தில் அவ் வாளுக்கு செலுத்தப்படும் தொகை;

(உ) வரியானது செலுத்தப்பட்ட அத்தகைய உதவுதொகைகள் மற்றும் அதன் மேல் ஒன்று திரண்ட வட்டியின்மேல், 15 சதவீதத் தில்தொழில்தருநரினால் செலுத்தப்பட்டிருந்தால், 1968 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1 ஆம் தேதிக்கு முன்னர் அச்சகாய நிதியத்திற்கு தொழில்தருநரினால் செலுத்தப்பட்ட உதவுதொகைகளைப் பிரதிபலிக் காத ஒழுங்குபடுத்தப்பட்ட சகாயமொன்றிலிருந்து ஆளொருவருக்கு செலுத்தப்பட்ட தொகை மற்றும் தொழில் தருநரினால் செலுத்தப்பட்ட அத்தகைய உதவுதொகைகளின் மேல் ஒன்றுதிரண்ட வட்டி; அத்துடன்

(ஊ) 1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, ஊழியர் நம்பிக்கை நிதியச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட, ஊழியர் நம்பிக்கை நிதியத் திலிருந்து,ஊழியத்திலிருந்து இளைப்பாறும் நேரத்தில் அல்லது அதன் பின்னரான நேரத்தில் ஆளொருவருக்கு செலுத்தப்பட்ட தொகை.

(4) உட்பந்தி (2) (இ) இல் குறிப்பீடு செய்யப்பட்ட வருமான வகை; பந்தயம் மற்றும் சூதாட்டம், மதுபானம் அத்துடன் / அல்லது புகையிலை என்பவற்றை உள்ளடக்கிய வியாபாரம் ஒன்றிலிருந்தான வருமானமாதல் வேண்டும்; அத்துடன்

**2. பங்குடைமைகளுக்கான வரி வீதம்**

பங்குடைமையொன்றின் வரிவிதிக்கப்படற்பாலதான வருமானம், முதலீட்டுச் சொத்துக்களின் தேறிப்பெறுகையிலிருந்தான ஈட்டுகைகளை உள்ளடக்குகின்ற விடத்து, அவ்வீட்டுகைகள் 10 சதவீதத்தில் பங்குடைமைக்கு வரிவிதிக்கப்படுதல் வேண்டும்.

**3. நம்பிக்கைப் பொறுப்புகளுக்கான வரி வீதங்கள்**

(1) உட்பந்தி (1) இன் ஏற்பாடுகளுக்கு அமைய, பிரிவு 56 இன் உட்பிரிவு (1) ஏற்புடையதாகும் வரிமதிப்பீட்டாண்டொன்றிற்காக நம்பிக்கைப்பொறுப்பொன்றின் வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்திற்கு ஜ24மூஸ சதவீதத்தில் வரிவிதிக்கப்படுதல் வேண்டும்.

(2) நம்பிக்கைப் பொறுப்பொன்றின் வரிவிதிக்கப்படற்பாலதான வருமானம், முதலீட்டுச்சொத்துக்களின் தேறிப்பெறுகையிலிருந்தான ஈட்டுகைகளை உள்ளடக்குகின்றவிடத்து, அச்சந்தர்ப்பத்தில்-

(அ) அவ்வீட்டுகைகள், 10 சதவீத்தில் நம்பிக்கைப் பொறுப்புக்கு வரிவிதிக்கப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) நம்பிக்கைப் பொறுப்பின் வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்தின் எஞ்சியுள்ள தொகை மட்டும் உட்பந்தி (1) இல் குறிப்பீடு செய்யப்பட்ட வீதத்தில் வரிவிதிக்கப்படுதல் வேண்டும்.

(3) (இப்பந்தியால் வேறு வகையாக மேவப்படாத) நம்பிக்கைப் பொறுப்பொன்றின் வரிவதிக்கப்படற்பாலதான வருமானமானது, முதலீட்டுச் சொத்துக்களின் தேறிப்பெறுகையிலிருந்தான ஈட்டுகைகளை உள்ளடக்கு கின்றவிடத்து, அவ்வீட்டுகைகள் 10 சதவீதத்தில் நம்பிக்கைப் பொறுப்புக்கு வரிவிதிக்கப்படுதல் வேண்டும்.

**4. கம்பெனிகளுக்கான வரி வீதங்கள்**

(1) உட்பந்திகள் (2) மற்றும் (3) இற்கு அமைய, வரி மதிப்பீட்டாண்டொன்றிற்கான கம்பெனியொன்றின் வரிவிதிக்கப்படற்பாலதான வருமானமானது 28 சதவீதத்தில் வரிவிதிக்கப்படுதல் வேண்டும்.

(2) வரிமதிப்பீட்டாண்டொன்றிற்கான கம்பெனியொன்றின் வரிவிதிக்கப்படற்பாலதான வருமானம் பின்வரும் வீதங்களில் வரிவிதிக்கப்படுதல் வேண்டும்.

(அ) சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் ஒன்று விடயத்தில் - 14%

(ஆ) பொருட்கள் மற்றும் சேவைகளை ஏற்றுமதி செய்தல்வியாபாரம் ஒன்றை தனியானதாக நடாத்தும் கம்பெனியொன்று விடயத்தில் - 14%

(இ) கமத்தொழில் அலுவலை தனியானதாக நடாத்தும் கம்பெனியொன்று விடயத்தில் - 14%

(ஈ) பந்தயம் மற்றும் சூதாட்டம், மதுபானம் அத்துடன் / அல்லது புகையிலையைக் கொண்ட வியாபாரம் ஒன்றிலிருந்தான வருமானத்துடனான கம்பெனியொன்று விடயத்தில் - 40% ;அத்துடன்

(உ) தனியானதாக கல்விசார் சேவைகளை வழங்கும் கம்பெனியொன்று விடயத்தில் - 14%

(ஊ) சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்காக பொறுப்புமுயற்சியொன்றில் தனியானதாக ஈடுபட்ட கம்பெனி ஒன்றின் விடயத்தில் - 14% ;அத்துடன்

(எ) தகவல் தொழில் நுட்பவியல் சேவைகளை தனியானதாக வழங்கும் கம்பெனி ஒன்றின் விடயத்தில் - 14%

(3) இப்பந்தியில் -

தகைமை பெற்ற தகவல் தொழில்நுட்பவியல் என்பது -

(அ) மென்பொருள் அபிவிருத்திச் சேவைகள்; அல்லது

(ஆ) வியாபாரச் செய்முறை வெளிவள ஒழுங்கேடற்பாடு ஒன்று அல்லது அறிவுச் செய்முறை வெளிவள ஏற்பாடொன்றின்கீழ் தகவல் தொழில் நுட்பச் சேவைகளின் ஏற்பாடு எனப் பொருள்படும்;

சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்கான பொறுப்புமுயற்சி என்பது பின்வருவனவற்றின் தொழிற்பாட்டிற்கான பொறுப்புமுயற்சியொன்று எனப் பொருள்படும் -

(அ) இலங்கை உல்லாசப் பிரயாணச் சபையால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஹோட்டல் அல்லது விருந்தினர் மனை.

(ஆ) "வகுப்பு A'' அல்லது "வகுப்பு B" இல் உள்ளதென்று இலங்கை உல்லாசப் பிரயாணச் சபையினால் தரப்படுத்தப்பட்ட ஏதேனும் சிற்றுண்டிச்சாலை;

(இ) இலங்கையில் உள்நாட்டுப் பயணத்துக்காக பயண முகாமைத்துவச் சேவைகளை வழங்கும் பயண முகவரின் ஏதேனும் வியாபாரம்;

(ஈ) சுற்றுலாப் பயணிகளை இடம்பெயர்த்தும் ஏதேனும் வியாபாரம் மட்டும்; அல்லது

(உ) பொழுதுபோக்கு அல்லது விளையாட்டுகளுக்காக வசதிகளை வழங்குவதற்காக இலங்கை உல்லாசப் பிரயாணச் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் வியாபாரம்.

(4) கம்பெனியொன்றின் வரிவிதிக்கப்படற்பாலதான வருமானம் முதலீட்டுச் சொத்துக்களின் தேறிப்பெறுகையிலிருந்தான ஈட்டுகைகளை உள்ளடக்குகின்ற விடத்து, அச்சந்தர்ப்பத்தில்

(அ) அவ்வீட்டுகைகள், 10 சதவீதத்தில் கம்பெனிக்கு வரிவிதிக்கப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) கம்பெனியின் வரிவிதிக்கப்படற்பாலதான வருமனத்தின் எஞ்சியுள்ள தொகை மட்டும், உட்பந்தி (1) இல் குறிப்பீடு செய்யப்பட்ட வீதத்தில் வரிவிதிக்கப்படுதல் வேண்டும்.

**5. கூறு நம்பிக்கைப்பொறுப்புகள் அல்லது பரஸ்பர நிதியங்களுக்கான வரி வீதங்கள்.**

(1) உட்பந்தி (2) இன் ஏற்பாடுகளுக்கு அமைய, வரிமதிப்பீட்டாண்டொன்றிற்கான, பிரிவு 58 ஏற்புடையதாகும் கூறு நம்பிக்கைப்பொறுப்பொன்றின் அல்லது பரஸ்பர நிதியத்தின் வரிவிதிக்கப்படற்பாலதான வருமானம்,[28%] சதவீதத்தில் வரிவிதிக்கப்படுதல் வேண்டும்.

(2) கூறு நம்பிக்கைப் பொறுப்பொன்றின் அல்லது பரஸ்பர நிதியமொன்றின் வரிவிதிக்கப்படற்பாலதான வருமானம், முதலீட்டு சொத்துக்களின் தேறிப் பெறுகையிலிருந்தான ஈட்டுகைகளை உள்ளடக்குகின்றவிடத்து, அச் சந்தர்ப்பத்தில் -

(அ) அவ்வீட்டுகைகள், 10 சதவீதத்தில் கூறு நம்பிக்கைப் பொறுப்புக்கு அல்லது பரஸ்பர நிதியத்திற்கு வரிவிதிக்கப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) கூறுநம்பிக்கைப் பொறுப்பொன்றின் அல்லது பரஸ்பர நிதிய மொன்றின் வரிவிதிக்கப்படற்பாலதான வருமனத்தின் எஞ்சியுள்ள தொகை மட்டும், உட்பந்தி (1) இல் குறிப்பீடு செய்யப்பட்ட வீதத்தில் வரிவிதிக்கப்படுதல் வேண்டும்.

**6. தரும நிறுவனங்களுக்கான வரி வீதங்கள்.**

(1) உட்பந்தி (2) இற்கு அமைய, வரி மதிப்பீட்டாண்டொன்றிற்கான தரும நிறுவனம் ஒன்றின் வரிவிதிக்கப்படற்பாலதான வருமானம் [14%] சதவீதத்தில் வரிவிதிக்கப்படுதல் வேண்டும்.

(2) தரும நிறுவனமொன்றின் வரிவிதிக்கப்படற்பாலதான வருமானம் முதலீட்டுச் சொத்துக்களின் தேறிப் பெறுகையிலிருந்தான ஈட்டுகைகளை உள்ளடக்குகின்றவிடத்து, அச்சந்தர்ப்பத்தில் -

(அ) அவ்வீட்டுகைகள், 10 சதவீதத்தில் தருமநிறுவனத்துக்கு வரிவிதிக் கப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) தருமநிறுவனத்தின் வரிவிதிக்கப்படற்பாலதான வருமனத்தின் எஞ்சியுள்ள தொகை மட்டும், உட்பந்தி (1) இல் குறிப்பீடு செய்யப்பட்ட வீதத்தில் வரிவிதிக்கப்படுதல் வேண்டும்.

**7. அரசசார்பற்ற ஒழுங்கமைப்புகளுக்கான வரிவீதங்கள்**

(1)உட்பந்தி (2) இற்கு அமைய, வரிமதிப்பீட்டாண்டொன்றிற்கான அரச சார்பற்ற ஒழுங்கமைப்பொன்றின் வரிவிதிக்கப்படற்பாலதான வருமானம் [28%] சதவீதத்தில் வரிவிதிக்கப்படுதல் வேண்டும்.

(2) அரசசார்பற்ற ஒழுங்கமைப்பொன்றின் வரிவிதிக்கப்படற்பாலதான வருமானம், முதலீட்டு சொத்துக்களின் தேறிப்பெறுகையிலிருந்தான ஈட்டுகைகளை உள்ளடக்குகின்றவிடத்து, அச் சந்தர்ப்பத்தில் -

(அ) அவ்வீட்டுகைகள், 10 சதவீதத்தில் அரச சார்பற்ற ஒழுங்கமைப்பு வரிவிதிக்கப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) அரச சார்பற்ற ஒழுங்கமைப்பின் வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்தின் எஞ்சியுள்ள தொகை மட்டும், உட்பந்தி (1) இல் குறிப்பீடு செய்யப்பட்ட வீதத்தில் வரிவிதிக்கப்படுதல் வேண்டும்.

(3) மானியம்,கொடை அல்லது உதவுதொகை, என்ற வகையில் அல்லது பிரிவு 68 இன் கீழ் வேறு ஏதேனும் முறையில் வரிமதிப்பீட்டாண்டொன்றில் பெறப்பட்ட தொகைகளின்மேல் அரசசார்பற்ற ஒழுங்கமைப்பொன்றினால் செலுத்தப்படற்பாலதான வரி வீதம் [28%] சதவீதமாகவிருத்தல் வேண்டும்.

**8. ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம், சகாய அல்லது ஓய்வூதிய நிதியங்கள் மற்றும் முடிவுறுத்துகை நிதியங்களுக்கான வரி வீதங்கள்.**

(1) ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம், அங்கீகரிக்கப்பட்ட சகாய அல்லது ஓய்வூதிய நிதியம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட முடிவுறுத்துகை நிதியத்தின் வரிமதிப்பீட்டாண்டொன்றிற்கான வரிவிதிக்கப்படற்பாலதான வருமானம் [14%] சதவீதத்தில் வரிவிதிக்கப்படுதல் வேண்டும்.

(2) இப்பந்திக்காக,"அங்கீகரிக்கப்பட்ட முடிவுறுத்துகை நிதியம்" என்பது, ஊழியர்களால் மட்டும் உதவு தொகைகள் செலுத்தப்படும் ஏதேனும் சிக்கனம், சேமிப்பு அல்லது கட்டிடச் சங்கம் அல்லது நலன்புரிநிதியம் அல்லது ஆணையாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்பட்டு,அத்துடன் 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, பணிக்கொடைக் கொடுப்பனவுச் சட்டத்தின் கீழ், ஊழியர்களுக்கு அவர்களது சேவை முடிவுற்றதன் மேல் பணிக்கொடை கொடுப்பனவு செய்யும் நோக்கத்திற்காகப் பேணப்படுவதுமான எவையேனும் பணிக்கொடை நிதியங்கள் எனப் பொருள்படும்.

**9. பண அனுப்புகை வரி வீதம்.**

பிரிவு 62 இன் கீழ் இலாபங்களை அனுப்பிய வதிவற்ற ஆள் ஒருவரினால் செலுத்தப்படற்பாலதான வரி வீதம் [10%] சதவீதமாகவிருத்தல் வேண்டும்.

**10. பிடித்து வைத்தல் வரி வீதங்கள்.**

(1) பிரிவு 81 இன் கீழ் கொடுப்பனவுகளிலிருந்து பிடித்து வைக்கப்பட வேண்டிய வரி வீதங்கள் பின்வருவனவாதல் வேண்டும்.

(அ) பிரிவு 83 ஏற்புடையதாகும் கொடுப்பனவுகளுக்காக -

(i) வதிவிட பிடித்துவைக்கப்பட்ட ஒருவரின் விடயத்தில் - ஆணையாளர் தலைமையதிபதியால் குறித்துரைக்கப்பட்டு வர்த்தமானியில் வெளியிடப்பட்ட வீதங்களில்; அத்துடன்

(ii) வதிவற்ற பிடித்து வைக்கப்பட்ட ஒருவர் விடயத்தில் - ஆணையாளர் தலைமையதிபதியால் குறித்துரைக்கப்பட்டு வர்த்தமானியில் வெளியிடப்பட்ட வீதங்களில்;

(ஆ) பிரிவு 84 (1) (அ) (i) ஏற்புடையதாகும் கொடுப்பனவுகளுக்காக -

(i) (சிரேஷ்டப் பிரசையொருவராகவிருக்கின்ற தனியாள் ஒருவருக்கு தவிர) வங்கி வைப்புக் கணக்கொன்று தொடர்பில் வதிவிட தனியாள் ஒருவருக்கு செலுத்தப்பட்ட வட்டி விடயத்தில் - 5% ;

(ii) சிரேஷ்டப் பிரசையொருவருக்கு செலுத்தப்பட்ட வட்டி விடயத்தில் - ஒழுங்குவிதிகளில் விதித்துரைக்கப்பட்ட வீதம் மற்றும் முறையில்

(iii) வதிவிட ஆளொருவருக்கு செலுத்தப்பட்ட வாடகை விடயத்தில் - 10% ; அத்துடன்

(iv) வேறு எல்லா விடயங்களில் - 14% ;

(இ) பிரிவு 85 ஏற்புடையதாகும் கொடுப்பனவுகளுக்காக -

(i) பிரிவு 85 (1) (அ) இல் குறிப்பீடு செய்யப்பட்ட சேவைக் கட்டணங்கள் விடயத்தில் - மாதத்திற்கு 50,000 ரூபாவை விஞ்சுகின்ற தொகையின் மேல் 5% ;

(ii) பிரிவு 85 (1) (ஆ) இல் குறிப்பீடுசெய்யப்பட்ட சேவைக் கட்டணங்கள் விடயத்தில் - 14 % ; அத்துடன்

(iii) பிரிவு 85 (1) (ஆ) இல் குறிப்பீடு செய்யப்பட்ட காப்புறுதிக் கட்டுப்பணம் விடயத்தில் - 14 % ;

(2) பிரிவு 53 (9) மற்றும் பிரிவு 84 (1) (அ) (ii) இன் கீழ், ஏதேனும் பங்குடைமை வருமானத்தின் ஒவ்வொரு பங்காளரின் பங்கிலிருந்து பிடித்துவைக்கப்படவேண்டிய வரி வீதம் தொகையின் 8 சதவீதமாதல் வேண்டும்.

(பிரிவு XX)

## இரண்டாம் அட்டவணை
## முதலீட்டு ஊக்குவிப்புகள்

### அதிகரிக்கப்பட்ட தேய்மான அனுமதிப்புகள்

1. (1) வரிமதிப்பீட்டாண்டொன்றின்போது அருவ சொத்துக்கள் தவிர தேய்மானத்திற்குறப்படற்பாலதான சொத்துக்கள் தொடர்பில் செலவுகளை உறும் ஆளொருவருக்கு, நான்காம் அட்டவணையின்கீழ் கணிப்பீடு செய்யப்பட்ட தேய்மான அனுமதிப்புகள் வழங்கப்படாமல், இப்பந்திக்கு இணங்க கணிப்பீடு செய்யப்பட்ட அதிகரிக்கப்பட்ட தேய்மான அனுமதிகள் வழங்கப்படுதல் வேண்டும்.

(2) வரிமதிப்பீட்டாண்டொன்றின்போது அருவ சொத்துக்கள் தவிர தேய்மானத்திற்குறப்படற்பாலதான சொத்துக்களின் மேல் ஆளொருவரினால் உறப்பட்ட செலவுகளின் 100 சதவீத தேய்மான அனுமதிப்பொன்று, வடமாகாணம் தவிர இலங்கையின் பாகம் ஒன்றில் பயன்படுத்தப்படுகின்ற (அருவ சொத்துக்கள் தவிர) தேய்மானத்திற்குறப்படற்பாலதான சொத்துக்களின் மேல் அவ்வாண்டின் போது அவ்வாளினால் உறப்பட்ட மொத்தச் செலவுகள் 3 மில்லியன் ஐ. அ. டொ இனை விஞ்சுகின்ற ஆனால் 5 மில்லியன் ஐ. அ. டொ இனை விஞ்சாதவிடத்தும், பிடித்து வைக்கின்ற முகவர் என்ற முறையில் அவ்வாள் பிரிவு 79 இன் கீழ் கோப்பிடுவதற்கு தேவைப்படுத்தப்படுகின்றகூற்றில் அவ்வாள் வரிமதிப்பீட்டாண்டொன்றின்போது குறைந்தது 250 புதிய ஊழியர்களை தொழிலுக்கமர்த்தியுள்ளாரென்றும் அறிக்கையிட்டிருப்பின், அவ்வாண்டிற்காக அவ்வாளுக்கு வழங்கப்படுதல் வேண்டும்.

(3) வரிமதிப்பீட்டாண்டொன்றின்போது அருவ சொத்துக்கள் தவிர தேய்மானத்திற்குறப்படற்பாலதான சொத்துக்களின் மேல் ஆளொருவரினால் உறப்பட்ட செலவுகளின் 200 சதவீத தேய்மான அனுமதிப்பொன்று, வடமாகாணத்தில் பயன்படுத்தப்படுகின்ற (அருவ சொத்துக்கள் தவிர) தேய்மானத்திற்குறப்படற்பாலதான சொத்துக்களின் மேல் அவ்வாண்டின் போது அவ்வாளினால் உறப்பட்ட மொத்தச் செலவுகள் 3 மில்லியன் ஐ. அ. டொ. இனை விஞ்சுகின்ற ஆனால் 5 மில்லியன் ஐ. அ. டொ. இனை விஞ்சாதவிடத்தும் பிடித்து வைக்கின்ற முகவர் என்ற முறையில் அவ்வாள் பிரிவு 79 இன் கீழ் கோப்பிடுவதற்கு தேவைப்படுத்தப்படுகின்ற கூற்றில் அவ்வாள் வரிமதிப்பீட்டாண்டொன்றின்போது குறைந்தது 250 புதிய ஊழியர்களை தொழிலுக்கமர்ததியுள்ளாரென்றும் அறிக்கையிட்டிருப்பின், அவ்வாண்டிற்காக அவ்வாளுக்கு வழங்கப்படுதல் வேண்டும்.

(4) வரிமதிப்பீட்டாண்டொன்றின்போது அருவ சொத்துக்கள் தவிர தேய்மானத்திற்குறப்படற்பாலதான சொத்துக்களின் மேல் ஆளொருவரினால் உறப்பட்ட செலவுகளின் 100 சதவீத தேய்மான அனுமதிப்பொன்று, வடமாகாணம் தவிர இலங்கையின் பாகம் ஒன்றில் பயன்படுத்தப்படுகின்ற (அருவ சொத்துக்கள் தவிர) தேய்மானத்திற்குறப்படற்பாலதான சொத்துக்களின் மேல் அவ்வாண்டின் போது அவ்வாளினால் உறப்பட்ட மொத்தச் செலவுகள் 5 மில்லியன் ஐ. அ. டொ. இனை விஞ்சுகின்ற ஆனால் 50 மில்லியன் ஐ. அ. டொ. இனை விஞ்சாதவிடத்தும் பிடித்து வைக்கின்ற முகவர் என்ற முறையில் அவ்வாள் பிரிவு 79 இன் கீழ் கோப்பிடுவதற்கு தேவைப்படுத்தப்படுகின்ற கூற்றில் அவ்வாள் வரிமதிப்பீட்டாண்டொன்றின்போது குறைந்தது 350 புதிய ஊழியர்களை தொழிலுக்கமர்த்தியுள்ளாரென்றும் அறிக்கையிட்டிருப்பின், அவ்வாண்டிற்காக அவ்வாளுக்கு வழங்கப்படுதல் வேண்டும்.

(5) வரிமதிப்பீட்டாண்டொன்றின்போது அருவ சொத்துக்கள் தவிர தேய்மானத்திற்குறப்படற்பாலதான சொத்துக்களின் மேல் ஆளொருவரினால் உறப்பட்ட செலவுகளின் 200 சதவீத தேய்மான அனுமதிப்பொன்று, வடமாகாணம் தவிர இலங்கையின் பாகம் ஒன்றில் பயன்படுத்தப்படுகின்ற (அருவ சொத்துக்கள் தவிர) தேய்மானத்திற்குறப்படற்பாலதான சொத்துக்களின் மேல் அவ்வாண்டின் போது அவ்வாளினால் உறப்பட்ட மொத்தச் செலவுகள் 5 மில்லியன் ஐ. அ. டொ. இனை விஞ்சுகின்ற ஆனால் 50 மில்லியன் ஐ. அ. டொ. இனை விஞ்சாதவிடத்தும் பிடித்து வைக்கின்ற முகவர் என்ற முறையில் அவ்வாள் பிரிவு 79 இன் கீழ் கோப்பிடுவதற்கு தேவைப்படுத்தப்படுகின்ற கூற்றில் அவ்வாள் வரிமதிப்பீட்டாண்டொன்றின்போது குறைந்தது 350 புதிய ஊழியர்களை தொழிலுக்கமர்த்தியுள்ளாரென்றும் அறிக்கையிட்டிருப்பின், அவ்வாண்டிற்காக அவ்வாளுக்கு வழங்கப்படுதல் வேண்டும்.

(6) வரிமதிப்பீட்டாண்டொன்றின்போது அருவ சொத்துக்கள் தவிர தேய்மானத்திற்குறப்படற்பாலதான சொத்துக்களின் மேல் ஆளொருவரினால் உறப்பட்ட செலவுகளின் 100 சதவீத தேய்மான அனுமதிப்பொன்று, இலங்கையின் பாகம் ஒன்றில் பயன்படுத்தப்படுகின்ற (அருவ சொத்துக்கள் தவிர) தேய்மானத்திற்குட்படற்பாலதான சொத்துக்களின் மேல் அவ்வாண்டின் போது அவ்வாளினால் உறப்பட்ட மொத்தச் செலவுகள் 50 மில்லியன் ஐ. அ. டொ. இனை விஞ்சினால் அவ்வாண்டிற்காக அவ்வாளுக்கு வழங்கப்படுதல் வேண்டும்.

(7) வரிமதிப்பீட்டாண்டொன்றின்போது அருவ சொத்துக்கள் தவிர தேய்மானத்திற்குறப்படற்பாலதான சொத்துக்களின் மேல் ஆளொருவரினால் உறப்பட்ட செலவுகளின் 150 சதவீத தேய்மான அனுமதிப்பொன்று

இலங்கையின் பாகம் ஒன்றில் பயன்படுத்தப்படுகின்ற (அருவ சொத்துக்கள் தவிர) தேய்மானத்திற்குட்படற்பாலதான சொத்துக்களின் மேல் அவ்வாண்டின் போது அவ்வாளினால் உறப்பட்ட மொத்தச் செலவுகள் 100 மில்லியன் ஐ. அ. டொ. இனை விஞ்சினால் அவ்வாண்டிற்காக அவ்வாளுக்கு வழங்கப்படுதல் வேண்டும்.

(8) இலங்கையின் ஏதேனும் பாகத்தில் துறைமுகமொன்று அல்லது விமானநிலையத்தின் அபிவிருத்திக்காக, வரிமதிப்பீட்டாண்டொன்றின் போது அருவ சொத்துக்கள் தவிர தேய்மானத்திற்குற்படற்பாலதான சொத்துக்களின் மேல் ஆளொருவரினால் உறப்பட்ட செலவுகளின் 100 சதவீத தேய்மான அனுமதிப்பொன்று, (அருவ சொத்துக்கள் தவிர) தேய்மானத்திற்குட்படற் பாலதான சொத்துக்களின் மேல் அவ்வாண்டின் போது அவ்வாளினால் உறப்பட்ட மொத்தச் செலவுகள் 2,000 மில்லியன் ஐ. அ. டொ. இனை விஞ்சினால் அவ்வாண்டிற்காக அவ்வாளுக்கு வழங்கப்படுதல் வேண்டும்.

(9) குறிப்பிட்ட வரிமதிப்பீட்டாண்டொன்று தொடர்பில் இப்பந்தி 1 இன் ஒரு உட்பந்தியின் கீழ் எழும் தேய்மான அனுமதிப்புகள் இன்னொரு உட்பந்தியுடன் ஒன்று திரட்டப்படமுடியாது என்பதுடன் அவ்வாண்டில் எடுக்கப்பட வேண்டும். அத்துடன் பின்னரான வரிமதிப்பீட்டாண்டொன்றிற்கு பிற்போடப்படுதல் வேண்டும்.

**கழிக்கப்படாத நட்டங்களை கழிப்பதற்கான நீட்டிய காலப்பகுதி**

(10) உட்பந்தி (9) இன் ஏற்பாடுகளுக்கு அமையவும் உட்பிரிவு 19 (1) இனைப் பொருட்படுத்தாதும் இப்பந்தியின்கீழ் கணிப்பீடு செய்யப்பட்டதும் பிரிவு 16 இன் கீழ் கழிக்கப்பட்டதுமான அதிகரிக்கப்பட்ட தேய்மான அனுமதிப்புகள் ஆளொரு வருக்கு கழிக்கப்படாத நட்டமொன்றை விளைக்கின்றவிடத்து, அக்கழிக்கப்படாத நட்டம், அடுத்துவரும் ஏதேனும் பத்து வரிமதிப்பீட்டாண்டுகளில் வரிமதிப் பீட்டாண்டொன்றிற்கான வியாபாரம் ஒன்றிலிருந்து ஆளின் வருமானத்தை கணக்கிடும் நோக்கங்களுக்காக அவ்வாளினால் கழிக்கப்படலாம்.

(11) **பிரிவு 19 இன் (1) ஆம் உட்பிரிவில் எது எவ்வாறிருப்பினும்,** ஆளொருவர், எந்த தேய்மானத்திற்குற்படற்பாலதான சொத்துக்கள் தொடர்பில், அதிகரிக்கப்பட்ட தேய்மான அனுமதிப்புகள் இப்பந்தியின்கீழ் கணிப்பீடு செய்யப்பட்டு பிரிவு 16 இன் கீழ் கழிக்கப்பட்டு ஆளொன்றுக்கு கழிக்கப்படாத நட்டத்தை விளைவிக்கின்றதோ அந்த தேய்மானத்திற்குற்படற்பாலதான சொத்துக்களின் (அருவ சொத்துக்கள் தவிர) மேல், 2,000 மில்லியன் ஐ. அ.

.டொ இற்கு மேல் உறுகின்றவிடத்து அந்த கழிக்கப்படாத நட்டம், அடுத்துவரும் ஏதேனும் இருபத்தைந்து வரி மதிப்பீட்டாண்டுகளில் வரிமதிப்பீட்டாண் டொன்றிற்கான வியாபாரம் ஒன்றிலிருந்து ஆளின் வருமானத்தை கணக்கிடும் நோக்கங்களுக்காக அவ்வாளினால் கழிக்கப்படலாம்.

**வரி மதிப்பிடற்பாலதான மாற்றங்கள் மற்றும் சமச்சீராக்கும் அனுமதிப்புகள்**

(12) இப்பந்தியின் கீழ், தேய்மான அனுமதிப்புகள் வழங்கப்பட்ட சொத் தொன்று வரிமதிப்பீட்டாண்டொன்றின்போது கையுதிர்க்கின்றவிடத்து (அல்லது கையுதிர்க்கப்பட்டதாக கருதப்படுகின்றவிடத்து)-

(அ) கையுதிர்ப்பிற்காக பெறப்பட்ட பிரதிபயன், சொத்தின் பெறுமதியை விஞ்சினால், விஞ்சுதொகையானது, தேய்மானத்திற்குட்படற்பாலதான சொத்துக்கள் பயன்படுத்தப்படுகின்ற அல்லது பயன்படுத்தப்பட்ட வியாபாரம் ஒன்றிலிருந்து வரிமதிப்பீட்டாண்டொன்றிற்கான ஆளொன்றின் வருமானத்தை கணக்கிடுவதில் உள்ளடக்கப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) சொத்தின் பெறுமதி, கையுதிர்ப்புக்காக பெறப்பட்ட பிரதிபயனை விஞ்சினால், மேலதிக தேய்மான அனுமதிப்பொன்று, விஞ்சு தொகைக்கு சமமான தொகையொன்றில் ஆண்டுக்காக வழங்கப்படுதல் வேண்டும்.

(13) இப்பந்தியில் -

''தேய்மான அனுமதிப்புச் செலவினம்'' என்பது இவ்வட்டவணையின் கீழ் தேய்மான அனுமதிப்புகள் கிடைக்கக்கூடியதாகவுள்ள செலவினம் எனப் பொருள்படும்; அத்துடன்

சொத்தொன்றின் ''எழுதப்பட்ட பெறுமதி'' என்பது ஆகு செலவில் உள்ளடக் கப்பட்ட செலவினம் தொடர்பில் வழங்கப்பட்ட எல்லா தேய்மான அனுமதிப்புகளையும் கழித்துவரும் அச்சொத்தின் ஆகு செலவு எனப் பொருள்படும்.

**முதலீட்டு வரி வரவு**

2\. (அ) இவ்வட்டவணையின் பந்தி 1 (1) இற்கு இணங்க முன்னைய வரிமதிப்பீட்டாண்டொன்றில் அதிகரிக்கப்பட்ட தேய்மான அனுமதிப்பைக் கோரிய; அத்துடன்

(ஆ) முன்னைய வரிமதிப்பீட்டாண்டின்போது அருவ சொத்துக்கள் தவிர தேய்மானத்திற்குற்படற்பாலதான சொத்துக்களின் மேல் 5 மில்லியன் ஐ அ டொ இற்கு மேலான செலவுகளை உற்ற,

ஆளொருவர், தற்போதைய வரிமதிப்பீட்டாண்டில் அவ்வாளினால் செலுத்தப்படற்பாலதான வருமான வரித் தொகை வரை அருவ சொத்துக்கள் தவிர தேய்மானத்திற்குற்படற்பாலதான சொத்துக்களின் மேல் அம்முன்னைய வரிமதிப்பீட்டாண்டில் அவ்வாளினால் உறப்பட்ட மொத்த செலவுகளின் ஐந்து சதவீதத்துக்கு சமமாக நடப்பு வரிமதிப்பீட்டாண்டில் வரிவரவொன்றைக் கோரலாம்.

**பிடித்து வைத்தல் வரியிலிருந்து குறித்த சில பங்கிலாபங்களை விலக்களித்தல்.**

3. **முதலாம் அட்டவணையில் எது எவ்வாறிருப்பினும்,** வதிவற்ற உறுப்பினர் ஒருவருக்கு கம்பெனியொன்றினால் செலுத்தப்பட்ட பங்கிலாபம் ஒன்றிலிருந்து பிடித்து வைக்கப்படவேண்டிய வரி வீதமானது, பங்கிலாபம் செலுத்தும் கம்பெனி இலங்கையில் உள்ள (அருவ சொத்துக்கள் தவிர) தேய்மானத்திற்குற்படற்பாலதான சொத்துக்களின் மேல் 2,000 மில்லியன் ஐ அ டொ இற்கு மேல் உற்று, அப்பங்கிலாபம் இவ்வட்டவணையின் கீழ், அதிகரிக்கப்பட்ட தேய்மான அனுமதிப்புகளால் பாதுகாக்கப்பட்ட இலாபங்களிலிருந்து செலுத்தப்பட்டால் பூச்சியமாகவிருத்தல் வேண்டும்.

**பிடித்து வைத்தல் வரியிலிருந்து ஊழிய வருமானத்தை விலக்களித்தல்**

4. முதலாம் அட்டவணையில் எது எவ்வாறிருப்பினும், வெளிநாட்டு ஊழியர் ஒருவருக்கு தொழில்தருநர் ஒருவரால் செலுத்தப்பட்ட கொடுப்பனவொன்றிலிருந்து பிடித்துவைக்கப்படவேண்டிய வரிவீதமானது, பங்கிலாபம் செலுத்தும் கம்பெனி இலங்கையில் உள்ள (அருவ சொத்துக்கள் தவிர) தேய்மானத்திற்குற்படற்பாலதான சொத்துக்களின் மேல் 2,000 மில்லியன் ஐ அ டொ இற்கு மேல் உற்று,அப்பங்கிலாபம் வெளிநாட்டு ஊழியர்களின் எண்ணிக்கை இருபதை விஞ்சாதவிடத்து இவ்வட்டவணையின்கீழ் அதிகரிக்கப்பட்ட தேய்மான அனுமதிப்புகளால் பாதுகாக்கப்பட்ட இலாபங்களிலிருந்து செலுத்தப்பட்டால் பூச்சியமாகவிருத்தல் வேண்டும்.

(பிரிவு 9)

## மூன்றாம் அட்டவணை

## விலக்களிக்கப்பட்ட தொகைகள்

பின்வருவன விலக்களிக்கப்பட்ட தொகைகளாதல் வேண்டும்:-

(அ) சனாதிபதியின் ஊழிய வருமானம்;

(ஆ) பின்வருவனவற்றால் பெறப்பட்ட தொகைகள் -

(i) ஏதேனும் அரசாங்கத் திணைக்களம் உட்பட இலங்கை அரசாங்கம் அல்லது உள்ளூர் அதிகாரசபையொன்று;

(ii) பணச் சபை உட்பட இலங்கை மத்திய வங்கி;

(iii) பல்கலைக்கழகம், அரசாங்க உதவிப் பாடசாலை, வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளை மூலம் அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்ட கூட்டுறவுச் சங்கம்;

(iv) இராஜதந்திர விடுபாட்டுரிமைச் சட்டத்தின் அல்லது அதனை ஒத்த சட்டமொன்றின்கீழ் குறித்தரைக்கப்பட்ட அளவு வரை வெளிநாடு ஒன்றின் அல்லது வெளிநாட்டு ஆள்புலம் ஒன்றின் அரசாங்கம்;

(v) இராஜதந்திர விடுபாட்டுரிமைச் சட்டம் ஒன்று அல்லது அதனை ஒத்த சட்டமொன்று அல்லது ஒழுங்கமைப்பு மற்றும் இலங்கை அரசாங்கத்துக்கிடையிலான உடன்படிக்கையொன்றின்கீழ் குறித்துரைக்கப்பட்ட அளவு வரை சர்வதேச ஒழுங்கமைப்பொன்று, ஆயின் உடன்படிக்கையின் கீழான விலக்களிப்பு இராஜதந்திர விடுபாட்டுரிமைச் சட்டம் அல்லது அதனை ஒத்த சட்டத்தையும் விட பரந்ததாகவிருத்தல் வேண்டும்.

(இ) பின்வருவன தொடர்பாக, ஆளொருவருக்கு நட்டஈடாக அல்லது பணிக்கொடையொன்றாக செலுத்தப்பட்ட மூலதனப் பணத் தொகைகள் -

(i) ஆளினால் உறப்படும் தனிப்பட்ட ஊறுகள்; அல்லது

(ii) இன்னொரு ஆளின் மரணம்;

(ஈ) ஓய்வூதிய வருமானமானது இலங்கை அரசாங்கத்தினால் அல்லது இலங்கை அரசாங்கத்தின் திணைக்களமொன்றினால் செலுத்தப்படுகின்றவிடத்து ஆளொன்றின் ஓய்வூதியம்;

(உ) ஊழியர் ஒருவருக்கு இளைப்பாறும் நேரத்தில் ஏதேனும் சகாய அல்லது ஓய்வூதிய நிதியத்திலிருந்து அல்லது 1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திலிருந்து பெறப்பட்ட வருமானத்தைக் குறிக்கின்றதாக, 1987, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஏதேனும் காலப் பகுதிக்கு அதனால் செய்யப்பட்ட முதலீடுகளிலிருந்து செலுத்தப்பட்ட தொகை;

(ஊ) பின்வருவனவற்றால் ஏற்பாடு செய்யப்பட்ட அளவுவரை சிறப்புரிமைகளுக்கு உரித்தாக்கப்பட்ட தனியாள் ஒருவரின் வருமானம் -

(i) இராஜதந்திர விடுபாட்டுரிமைச் சட்டம் அல்லது அதனை ஒத்த சட்டம்;

(ii) ஐக்கிய நாடுகளின் சிறப்புரிமைகள் மற்றும் விடுபாட்டுரிமைகளின் மேலான சமவாயம் மற்றும் ஐக்கிய நாடுகளின் சிறப்பு முகவர் நிலையங்களின் சிறப்புரிமைகள் மற்றும் விடுபாட்டுரிமைகளின் மேலான சமவாயத்திற்கு பயன்கொடுக்கும் சட்டம்; அல்லது

(iii) சர்வதேச ஒழுங்கமைப்பொன்று தொடர்பாக இச்சட்டத்தின் கீழ் அல்லது உட்பந்தி (i) அல்லது (ii) இல் குறிப்பீடுசெய்யப்பட்ட சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

(எ) 50,000 ரூபாவை விஞ்சாத முதலீட்டுச் சொத்தொன்றின் தேறிப் பொறுகையிலிருந்து வதிவுள்ள தனியாள் ஒருவரினால் செய்யப்பட்ட ஈட்டுகையும் வரிமதிப்பீட்டாண்டில் முதலீட்டுச் சொத்துக்களிலிருந்தான தேறிப்பெறுகையிலிருந்து வதிவுள்ள தனியாளினால் செய்யப்பட்ட மொத்த ஈட்டுகைகள் 600,000 ரூபாவை விஞ்சாத விடத்தும், பின்வருவன தவிர -

(i) இப்பந்தியின் அநுகூலத்தை எடுத்துக்கொள்ளும் நோக்கத்துக்காக இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பாகங்களில் முதலீட்டுச் சொத்தொன்று தேறிப்பெறப்பட்டுள்ளது என ஆணையாளர் தலைமையதிபதி திருப்திப்படுகின்றவிடத்து,

தேறிப்பெறுகையிலிருந்து எழும் ஏதேனும் ஈட்டுகை, எல்லாப் பாகங்களிலிருந்தான மொத்த ஈட்டுகை 50, 000 ரூபாவை விஞ்சாததும், வரிமதிப்பீட்டாண்டில் முதலீட்டுச் சொத்துக் களின் தேறிப்பெறுகையிலிருந்தான வதிவிட தனியாளினால் செய்யப்பட்ட மொத்த ஈட்டுகைகள் 600,000 ரூபாவை விஞ்சாதும் இருந்தால் மட்டும் இப்பந்தியின் கீழ் விலக்களிக்கப்படுதல் வேண்டும்;

(ii) கூட்டாகச் சொந்தமாகக் கொண்ட முதலீட்டுச் சொத்தொன்றின் தேறிப்பெறுகை விடயத்தில், இப்பந்தியானது, சொத்தின் தேறிப் பெறுகையின் மேல் முதலீட்டுச் சொத்தின் எல்லாச் சொந்தக் காரர்களினால் செய்யப்பட்ட மொத்த ஈட்டுகை 50,000 ரூபாவை விஞ்சாததும் வரிமதிப்பீட்டாண்டில் வதிவிட தனியாளினால் செய்யப்பட்ட மொத்த ஈட்டுகைகள் 600,000 ரூபாவை விஞ்சாதும் இருந்தால் மட்டும் ஏற்புடையதாகும்;

(ஏ) தனியாள் ஒருவரின் பிரதான வதிவிடத்தின் தேறிப்பெறுகையின் மேல் வதிவிட தனியாளினால் செய்யப்பட்ட ஈட்டுகை, ஆயின் தேறிப்பெறு வதற்கு முன்னர் தொடர்ச்சியாக மூன்றாண்டுகளுக்கு அவ்வாளினால் சொந்தமாகக் கொள்ளப்பட்டு அம்மூன்றாண்டுகளில் குறைந்தது இரண்டு ஆண்டுகளுக்கு அவ்வாள் அதில் வசித்திருத்தல் வேண்டும். (நாளாந்த அடிப்படையொன்றில் கணக்கிடப்பட்டது)

(ஐ) பிணையங்கள் மற்றும் இலங்கை பரிவர்த்தனை ஆணைக்குழுவினால் உரிமமளிக்கப்பட்ட ஏதேனும் பங்குத்தொகுதி பரிவர்த்தனை நிலையத்தினால் வெளியிடப்பட்ட ஏதேனும் அலுவலகமுறையான நிரலில் விலைகோரிப் பெறப்பட்ட பங்குகளைக் கொண்டுள்ள முதலீட்டுச் சொத்தொன்றின் தேறிப்பெறுகையின் மேல் செய்யப்பட்ட ஈட்டுகை;

(ஒ) தரும நிறுவனம் ஒன்றினால் பெறப்பட்ட வட்டி அத்தகைய தரும நிறுவனத்தினால் பேணப்படும் வீடொன்றில் சிறுவர்கள், வயோதிபர்கள் அல்லது ஊனமுற்றவர்களுக்கு பராமரிப்பு வழங்கும் நோக்கத்திற்காக மட்டுமே உபயோகிக்கப்படுகின்றது என ஆணை யாளர் தலைமையதிபதியின் திருப்திக்கு எண்பிக்கப்படுகின்றவிடத்து அத்தகைய வட்டி;

(ஓ) இலங்கைக் குடியரசின் சனாதிபதியினால் அல்லது ஆள் ஒருவரினால் உருவாக்கப்பட்ட ஒரு புத்தாக்கத்தை அல்லது மேற்கொள்ளப்பட்ட ஏதேனும் ஆராய்ச்சியை ஏற்று அங்கீகரிக்கும் முகமாக அரசாங்கத்தினால் அளிக்கப்பட்ட வெகுமதியொன்றாக அவ்வாளினால் பெறப்பட்ட பரிசு.

(ஔ) 1978 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, சனாதிபதி நிதியச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட சனாதிபதி நிதியத்திலிருந்து அல்லது 1985 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, தேசிய பாதுகாப்பு நிதியச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட தேசிய பாதுகாப்பு நிதியத்திலிருந்து ஆளொருவரினால் பெறப்பட்ட ஏதேனும் பணத்தொகை;

(க) இலங்கை அரசாங்கத்தால் அல்லது அதன் சார்பில் 2008 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 21 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் வழங்கப்பட்ட, வெளிநாட்டு நாணயத்தில் வகுக்கப்பட்ட ஏதேனும் இறையாண்மை முறியொன்றை வழங்குபவர் மூலம் எவரேனும் வதிவற்ற ஆளொருவருக்கு அல்லது இலங்கையில் உள்ள ஏதேனும் உரிமமளிக்கப்பட்ட வணிக வங்கிக்கு, விடயத்திற்கு ஏற்ப, செலுத்தப்பட்ட அல்லது அனுமதிக்கப்பட்ட வட்டி அல்லது கழிவுக்கு சமமான தொகை;

(ங) வங்கியொன்றிலிருந்து அல்லது 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, காப்புறுதித்தொழிலை ஒழுங்குபடுத்தும் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட காப்புறுதிக் கம்பெனியிலிருந்து ஆயுட்காலத்திற்கு பத்தாண்டுகளுக்கு குறையாத காலப்பகுதியொன்றிற்கு கொள்வனவு செய்யப்பட்ட ஆண்டுத்தொகையொன்றிலிருந்து சிரேஷ்ட பிரசையொருவரினால் பெறப்பட்ட ஏதேனும் தொகை;

(ச) எந்த லொத்தர் ஒன்றிலிருந்தான வெல்லுகையின் மொத்த தொகை 500,000 ரூபாவை விஞ்சாதிருக்கின்றதோ அந்த ஏதேனும் வெல்லுகை;

(ஞ) பங்கிலாபக் கொடுப்பனவொன்று பிரிவு 84 இன் கீழ், பிடித்து வைப்பதற்கு உட்பட்ட, வதிவிட கம்பெனியொன்றினால் அல்லது இன்னொரு வதிவிடக் கம்பெனியால் பெறப்பட்ட இன்னொரு பங்கிலாபத்திற்கு ஏற்றிக்கூறப்படற்பாலதான அல்லது அதிலிருந்து பெறப்பட்ட அளவு வரை உறுப்பினரொருவருக்கு அவ்வதிவிடக் கம்பெனியினால் செலுத்தப்பட்ட பங்கிலாபம் ஒன்று;

(பிரிவு 16)

## நான்காம் அட்டவணை

## தேய்மான அனுமதிப்புகள், சமச்சீராக்கும் அனுமதிப்புகள் மற்றும் வரிமதிப்பிடற்பாலதான விதிப்பனவுகள்

**தேய்மானத்திற்குற்படற்பாலதான சொத்துக்களின் வகைகளும் வகுப்பாக்கமும்.**

1. (i) தேய்மானத்திற்குற்படற்பாலதான சொத்துக்களின் வகைகளும் வகுப்பாக்கமும் பின்வருவனவாதல் வேண்டும்.

| வகுப்பு | தேய்மானத்திற்குற்படற்பாலதான சொத்துக்கள் |
|---|---|
| 1 | கணினிகளும் புறப்பரப்புச் சார்ந்த உபாயங்களுடனாகவுள்ள தரவு கையாளும் சாதனம் |
| 2 | பேரூந்துகள் மற்றும் சிற்றூந்துகள், சரக்கு வாகனங்கள்; நிர்மாணிப்பு மற்றும் நிலம்பெயர்க்கும் சாதனம், பொது நோக்கம் கொண்ட அல்லது விஷேடித்த கனரக பாரவூர்திகள், இணைப்புப் பெட்டிகள் மற்றும் இணைப்புப் பெட்டி ஏற்றப்பட்ட கொள்கலன்கள்; உற்பத்தியில் பயன்படுத்தப்படும் பொறித் தொகுதி மற்றும் இயந்திரத் தொகுதி |
| 3 | தண்டவாள புகைவண்டிப் பெட்டிகள், உந்து பொறிகள் மற்றும் சாதனம்; கப்பல்கள், ஓடங்கள்,இழுவைக் கப்பல்கள் மற்றும் அதனை ஒத்த நீர் இடம்பெயர்த்தல் சாதனம்; வானூர்தி; விசேடித்த பொதுப்பயன்பாட்டு பொறித்தொகுதி, சாதனம் மற்றும் இயந்திரத் தொகுதி; அலுவலக தளபாடங்கள், பொருத்திகள் மற்றம் சாதனம்; வேறு வகுப்பில் உள்ளடங்கப்படாத ஏதேனும் தேய்மானத்திற்குற்படற்பாலதான சொத்து |
| 4 | கட்டிடங்கள், நிரந்தரத் தன்மையான கட்டமைப்புகள் மற்றும் அதனை ஒத்த வேலைகள். |
| 5 | நன்மதிப்பு தவிர்ந்து அருவ சொத்துக்கள் |

(2) ஆளொருவருக்குச் சொந்தமான தேய்மானத்திற்குற்படற்பாலதான சொத்தொன்று, வரிமதிப்பீட்டாண்டொன்றின் இறுதியில் வியாபாரம் ஒன்றிலிருந்தான வருமானத்தை உருவாக்குவதில் பகுதியாக மட்டும் பயன்படுத்தப்படுகின்றவிடத்து, சொத்துக்கான ஆகுசெலவு மற்றும் பெறப்பட்ட பிரதிபயன், அவ்வியாபாரத்திலிருந்தான வருமானத்தை உருவாக்குவதில் பயன்படுத்தப்பட்ட சொத்தின் அப்பாகத்தின் சந்தைப் பெறுமதிக்கு இணங்கவும் அப்பாகத்துக் கிணங்கவும் பங்கிடப்படுதல் வேண்டும்.

**தேய்மான அனுமதிப்புகள்**

2. (1) இப்பந்திக்கு அமைய, அனுமதிப்பொன்று சொத்தாண்டிற்கான தேய்மானத்திற்கு சமமான, ஆளொருவரின் தேய்மானத்திற்குற்படற்பாலதான சொத்துக்களின் ஒவ்வொன்றுக்கும் வரிமதிப்பீட்டாண்டொன்றிற்கு அவ்வாளுக்கு வழங்கப்படுதல் வேண்டும் என்பதுடன் உட்பந்திகள் 2 இற்கு இணங்க கணக்கிடப்படுதலும் வேண்டும்.

(2) ஒவ்வொரு தேய்மானத்திற்குற்படற்பாலதான சொத்துக்காக, வரிமதிப்பீட்டாண்டொன்றிற்கான தேய்மானமானது, பின்வரும் சூத்திரத்தைப் பயன்படுத்திநேர்கோட்டு வரி முறைக்கு ஏற்ப கணக்கிடப்படுதல் வேண்டும்:

**A/B**

பின்வருவனவாகின்றவிடத்து -

A ஆனது வரிமதிப்பீட்டாண்டின் இறுதியில் சொத்தின் தேய்மான அடிப்படையாகின்றவிடத்து; அத்துடன்

B ஆனது, அச்சொத்துக்கு ஏற்புடையதான உட்பந்தி (3) இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஆண்டுகளின் எண்ணிக்கையாகின்றவிடத்தும் ஆகும்.

(3) உட்பந்தி (2) இல் குறிப்பீடு செய்யப்பட்ட தேய்மானத்திற்குற்படற்பாலதான சொத்தொன்றுக்கு ஏற்புடையதான ஆண்டுகளின் எண்ணிக்கை பின்வருவனவாகவிருத்தல் வேண்டும்:

| வகுப்பு | ஆண்டுகளின் எண்ணிக்கை |
|---|---|
| 1 | 5 |
| 2 | 5 |
| 3 | 5 |
| 4 | 20 |
| 5 | அருவ சொத்தின் உண்மையான பயன்படுகாலம் அல்லது அருவ சொத்து நிச்சயமற்ற பயன்படு காலத்தைக் கொண்டுள்ளபோது , |

(4) தேய்மான அனுமதிப்பு எதுவும், பின்வருவன தவிர சாலை வாகனம் ஒன்று தொடர்பில் ஆளொருவருக்கு வழங்கப்படுதலாகாது.

(அ) வணிக வாகனம்;

(ஆ) பேரூந்து அல்லது சிற்றூந்து;

(இ) சரக்கு வாகனம்; அல்லது

(ஈ) பொது நோக்கம் கொண்ட அல்லது விசேடித்த கனரக பாரவூர்திகள் அல்லது இணைப்புப்பெட்டி

(5) இப்பந்தியின் நோக்கங்களுக்காக "வணிக வாகனம்" என்பது -

(அ) அரைத் தொன் அல்லது 13 பயணிகளுக்கு மேலான சுமைகளைக் கொண்டு செல்வதற்கு வடிவமைக்கப்பட்ட சாலை வாகனம்; அல்லது

(ஆ) போக்குவரத்தொன்றில் அல்லது வாகன வாடகை வியாபாரத்தில் பயன்படுத்தப்பட்ட வாகனம்.

**தேய்மானத்திற்குற்படற்பாலதான சொத்தொன்றின் தேய்மான அடிப்படை**

*3*. வரிமதிப்பீட்டாண்டொன்றின் இறுதியில் ஆளொருவரின் தேய்மானத்திற் குற்படற்பாலதான சொத்தொன்றின் தேய்மான அடிப்படை பின்வருவனவற்றின் தொகையாதல் வேண்டும் -

(அ) முன்னைய வரிமதிப்பீட்டாண்டின் இறுதியில் சொத்தின் தேய்மான அடிப்படை; அத்துடன்

(ஆ) சொத்தின் ஆகுசெலவுக்கு சேர்க்கப்பட்டவை தொடர்பில் வரிமதிப்பீட்டாண்டின்போது சொத்தின் தேய்மான அடிப்படைக்கு சேர்க்கப்பட்ட தொகைகள்.

**சமச்சீராக்கும் அனுமதிப்புகள் மற்றும் வரிமதிப்பிடற்பாலதான விதிப்பனவுகள்**

*4*. *(1)* ஆளொருவரின் தேய்மானத்திற்குற்படற்பாலதான சொத்தொன்று வரிமதிப்பீட்டாண்டொன்றின் இறுதிக்கு முன்னர் ஆளினால் தேறிப் பெறுகின்ற விடத்து -

(அ) பின்வரும் வாய்ப்பாட்டுக்கு இணங்க கணக்கிடப்பட்ட ஆண்டிற் கான ஆளின் வருமானத்தை கணக்கிடுவதில் வரிமதிப்பிடற் பாலதான விதிப்பனவு உள்ளடக்கப்படுகிறது.

**A/B**

அல்லது

(ஆ) பின்வரும் வாய்ப்பாட்டுக்கு இணங்க கணக்கிடப்பட்ட ஆண்டுக்காக ஆளுக்கு சமச்சீராக்கும் அனுமதிப்பொன்று வழங்கப்படுகிறது.

**A/B**

பின்வருவனவாகின்றவிடத்து -

'A' ஆனது, சொத்துக்காக வரிமதிப்பீட்டாண்டின் போது ஆளினால் பெறப்பட்ட பிரதிபயன்; அத்துடன்;

'B' ஆனது, சொத்தின் தேறிப்பெறுகையின் நேரத்தில் சொத்தின் குறைந்து செல்லும் பெறுமதி.

(2) இப்பந்தியின் நோக்கங்களுக்காக, சொத்தின் தேறிப்பெறுகை நேரத்தில் சொத்தொன்றின் "குறைந்து செல்லும் பெறுமதி" என்பது, சொத்து தொடர்பில் பந்தி 2 இன் கீழ் ஆளொருவருக்கு வழங்கப்பட்ட எல்லா தேய்மான அனுமதிப்புகளால் குறைக்கப்பட்ட சொத்தைக் கொள்ளுவதில் அவ்வாளினால் உறப்பட்ட செலவுகள் எனப் பொருள்படும்.

(3) இப்பந்தியின் நோக்கங்களுக்காகவும் பிரிவு 39 இற்கு பங்கமின்றியும், எந்த வியாபாரம் தொடர்பில் செலவுகளானது இணையாளர் அல்லாத இன்னொரு ஆளுக்கு உறப்பட்டதோ அந்த வியாபாரத்தை ஆளொருவர் விற்றால்,அவ்வாள் தேய்மானத்திற்குற்படற்பாலதான சொத்தொன்றை தேறிப்பெறுகின்றார்.

(பிரிவு 52)

## ஐந்தாம் அட்டவணை

## தகைமையளிக்கின்ற கொடுப்பனவுகளும் நிவாரணங்களும்

1. பிரிவு 52 இல் குறிப்பீடு செய்யப்பட்ட தகைமையளிக்கின்ற கொடுப்பனவுகள் பின்வருவனவாதல் வேண்டும்:-

(அ) பின்வரும் அங்கீகரிக்கப்பட்ட தரும நிறுவனம் ஒன்றுக்கு தனியாள் ஒருவர் அல்லது உருவகத்தினால் பணமாக செய்யப்பட்ட நன்கொடை;

(i) பிணியாளர்களுக்கும் அல்லது தேவையுள்ளவர்களுக்கும் நிறுவனமயப்படுத்தப்பட்ட பராமரிப்பை வழங்குவதற்காக தாபிக்கப்பட்ட தரும நிறுவனம்; அத்துடன்

(ii) பின்வருவனவற்றின் ஆகக் கூடியதற்கு அமைய, இவ்வுட்பந்தியின் நோக்கங்களுக்காக அங்கீகரிக்கப்பட்ட தரும நிறுவனம் ஒன்றாக அமைச்சரால் வெளிப்படுத்தப்பட்டவை -

(ii அ) தனியாள் ஒருவரின் விடயத்தில், தனியாளின் வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்தின் மூன்றில் ஒரு பங்கு அல்லது எழுபத்தைந்தாயிரம் ரூபா என்பவற்றுள் எந்தத் தொகை குறைவாகவுள்ளதோ அது;

(ii ஆ) உருவகம் ஒன்றின் விடயத்தில், உருவகத்தின் வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்தின் ஐந்தில் ஒரு பங்கு அல்லது ஐந்து இலட்சம் ரூபா என்பவற்றுள் எந்தத் தொகை குறைவாகவுள்ளதோ அது

(அ) பின்வருவனவற்றிற்கு தனியாள் ஒருவரினால் அல்லது உருவகத்தினால் பணமாக அல்லது வேறு வகையில் செய்யப்பட்ட நன்கொடை:-

(i) இலங்கை அரசாங்கம்;

(ii) உள்ளூர் அதிகாரசபை;

(iii) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்டதாகக் கருதப்பட்ட ஏதேனும் உயர் கல்வி நிறுவனம்;

(iv) 1981 ஆம் ஆண்டின் 74 ஆம் இலக்க, பௌத்த, பாளி பல்கலைக்கழகச் சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட பௌத்த, பாளி பல்கலைக்கழகம் அல்லது ஏதேனும் உயர் கல்வி நிறுவனம்;

(v) இலங்கை அரசாங்கத்தினால் தாபிக்கப்பட்ட நிதியமொன்று;

(vi) உள்ளூர் அதிகார சபையொன்றினால் தாபிக்கப்பட்டதும் அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்டதுமான ஒரு நிதியம்;

(vii) 1979 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட தேசிய வீடமைப்பு அதிகாரசபையினால் உருவாக்கப்பட்டதும் நிருவகிக்கப்பட்டதுமான செவன நிதியம்;

(viii) மாகாண சபையொன்றினால் தாபிக்கப்பட்டு அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட நிதியம்;

(ix) 2008 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, அப்பி வெனுவென் அப்பி நிதியச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட அப்பி வெனு வென் அப்பி நிதியம்;

(x) 2006 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, இலங்கை தேசிய சிறுநீரக மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டத்தின்கீழ் தாபிக் கப்பட்ட தேசிய சிறுநீரக நிதியம்.

(இ) எந்தச் சட்டத்தினால் அல்லது எந்தச் சட்டத்தின்கீழ் பகிரங்கக் கூட்டுத்தாபனம் ஒன்று தாபிக்கப்படுகின்றதோ அந்தச் சட்டத்தினால் அல்லது அந்தச் சட்டத்தின்கீழ், சட்டத்தினால் தேவைப்படுத்து கின்றவாறு அத்தகைய கூட்டுத்தாபனத்தினால், 1978 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, சனாதிபதி நிதியச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட சனாதிபதி நிதியத்திற்கு அனுப்பப்பட்ட இலாபங்கள்.

2. பிரிவு 52 இல் குறிப்பீடு செய்யப்பட்ட நிவாரணங்கள் பின்வருமாறதல் வேண்டும் -

(அ) நம்பிக்கைப் பொறுப்பாளர், பெறுநர், நிறைவேற்றுநர் அல்லது ஒழித்துக்கட்டுபவர் ஒருவராக இருக்கின்ற ஆளொருவர், அத்தகைய நம்பிக்கைப்பொறுப்பாளர், பெறுநர், நிறைவேற்றுநர் அல்லது ஒழித்துக்கட்டுபவர் என்ற முறையில் இத்தனிப்பட்ட நிவாரணத்தை கழிப்பதற்கு உரித்தடையவராகமாட்டார் என்பதும் நிவாரணமானது, முதலீட்டுச் சொத்துக்களின் தேறிப்பெறுகை யிலிருந்தான ஈட்டுகைகளுக்கு எதிராகக் கழிக்கப்படுவதற்கு கிடைக்கக்கூடியதாகவிருக்காது என்பதும் தவிர ஒவ்வொரு வரிமதிப்பீட்டாண்டிற்கும் 500,000 ரூபா

(ஆ) ஊழியத்திலிருந்தான வருமானத்துடனான தனியாள் ஒருவரின் விடயத்தில், ஒவ்வொரு வரிமதிப்பீட்டாண்டுக்கும் ஊழியத்தி லிருந்தான தனியாளின் வருமானத்தின் மொத்தம் வரை அவ்வாண்டிற்கான 700,000 ரூபா;

(இ) முதலீட்டுச் சொத்தொன்றிலிருந்தான வாடகை வருமானத் துடனான தனியாள் ஒருவர் விடயத்தில், வரிமதிப்பீட் டாண்டிற்கான மொத்த வாடகை வருமானத்தின் 25 சத வீதத்திற்கு சமமான தொகை; இது முதலீட்டுச் சொத்து தொடர்பில் பழுதுபார்த்தல், பேணுகை மற்றும் தேய்மானத்திற்கு நிவாரணம் ஒன்றாகவிருக்கும் ஆனால் முதலீட்டுச் சொத்தொன்றின் பழுதுபார்த்தல், பேணுகை மற்றும் தேய்மானத்திற்காக வரி செலுத்துநரால் உறப்பட்ட ஏதேனும் உள்ளபடியான செலவினங் களுக்கு கழிப்பனவு அல்லது ஆகு செலவு எதுவும் கோரப்படாத அளவுக்கு மட்டும் அனுமதிக்கப்படுதல் வேண்டும்.

(ஈ) நிதிசார் நிறுவனமொன்றிலிருந்து பெறப்பட்ட வட்டி வருமானத் துடன் ஆண்டொன்றில் சிரேஷ்ட பிரஜையொருவராகவிருக்கின்ற தனியாள் ஒருவர் விடயத்தில், ஒவ்வொரு வரிமதிப்பீட்டாண்டுக்கும் தனியாளின் வட்டி வருமானத்தின் மொத்தம் வரை அவ்வாண் டிற்காக 1,500,000 ரூபா.

(பிரிவு 104)

## ஆறாம் அட்டவணை
## தற்காலிகச் சலுகைகள்

**அதிகரிக்கப்பட்ட தேய்மான அனுமதிப்புகள்**

(1) ஆளொருவர், வரிமதிப்பீட்டாண்டொன்றின் போது உட்பந்தி (3) இல் குறிப்பிடப்பட்ட தேய்மானத்திற்குற்படற்பாலதான சொத்துக்கள் தொடர்பில் செலவுகளை உற்றவராகவும் உள்ள ஆளொருவருக்கு, மூன்றாம் அட்டவணையின்கீழ் கணிப்பீடு செய்யப்பட்ட தேய்மான அனுமதிப்புகள் அன்றி இப்பந்திக்கு இணங்க கணிப்பீடுசெய்யப்பட்ட அதிகரிக்கப்பட்ட தேய்மான அனுமதிப்புகள் வழங்கப்படுதல் வேண்டும்.

(2) வரிமதிப்பீட்டாண்டொன்றின்போது உட்பந்தி (3)இல் குறிப்பிடப்பட்ட தேய்மானத்திற்குற்படற்பாலதான சொத்துக்களின் மேல் ஆளொருவரினால் 03 மில்லியன் ஐ அ டொ வரை உறப்பட்ட செலவுக்கான 100 சதவீத தேய்மான அனுமதிப்பு ஒன்று, வடமாகாணம் தவிர்ந்த, இலங்கையின் பாகம் ஒன்றில் தேய்மானத்திற்குற்படற்பாலதான சொத்துக்கள் பயன்படுத்தப்படுகின்றவிடத்து ஆண்டுக் காக அவ்வாளுக்கு வழங்கப்படுதல் வேண்டும்.

(3) வரிமதிப்பீட்டாண்டொன்றின்போது உட்பந்தி (3) இல் குறிப்பிடப்பட்ட தேய்மானத்திற்குற்படற்பாலதான சொத்துக்களின் மேல் 03 மில்லியன் ஐ அ டொ வரை வடமாகாணத்தில் பயன்படுத்தப்படுகின்ற ஆளொருவரினால் உறப்பட்ட செலவுகளுக்கான 200 சதவீத தேய்மான அனுமதிப்பொன்று, தேய்மானத்திற்குற்படற்பாலதான சொத்துக்கள் வடமாகாணத்தில் பயன்படுத்தப்படுகின்றவிடத்து ஆண்டுக்காக அவ்வாளுக்கு வழங்கப்படுதல் வேண்டும்.

(4) உட்பந்திகள் (1) மற்றும் (2) இல் குறிப்பீடு செய்யப்பட்ட தேய்மானத்திற்குட்படற்பாலதான சொத்துக்கள் பின்வருவனவாதல் வேண்டும் -

(அ) மூன்றாம் அட்டவணையின் பந்தி 1 இன் பொருளில் வகுப்பு 4 இன் சொத்துக்கள் கட்டிடங்கள், (நிரந்தரத் தன்மையொன்றின் கட்டமைப்புகள் மற்றும் அதனை ஒத்த வேலைகளாகவிருத்தல்); அத்துடன்

(ஆ) வியாபாரத் தொழிற்பாடுகளை அல்லது உற்பத்தித்திறனை சீராக்குவதற்கு பயன்படுத்தப்படுகின்றதும், வியாபார வளாகங்களுடன் பொருத்தப்பட்டதுமான பொறித்தொகுதி அல்லது இயந்திரத்தொகுதியை உள்ளடக்கி (அருவ சொத்துக்கள் தவிர) தேய்மானத்திற்குற்படற்பாலதான சொத்துக்கள்.

(5) குறிப்பிட்ட வரிமதிப்பீட்டாண்டொன்று தொடர்பில் எழுகின்ற தேய்மான அனுமதிப்புகள் அவ்வாண்டில் எடுக்கப்படவேண்டும் என்பதுடன் பின்னரான வரி மதிப்பீட்டாண்டொன்றிற்கு பிற்போடப்படுதல் ஆகாது.

**வரிமதிப்பிடற்பாலதான விதிப்பனவுகள் மற்றும் சமச்சீராக்கும் அனுமதிப்புகள்.**

2. (1) இப்பந்தியின்கீழ் தேய்மான அனுமதிப்புகள் வழங்கப்பட்ட சொத்தொன்று வரிமதிப்பீட்டாண்டொன்றின்போது கையுதிர்க்கப்படுகின்ற விடத்து (அல்லது கையுதிர்க்கப்பட்டதாக கருதப்படுகின்றவிடத்து)-

(அ) கையுதிர்ப்பிற்காகப் பெறப்பட்ட பிரதிபயன், சொத்தின் குறைந்து செல்லும் பெறுமதியை விஞ்சுகின்றவிடத்து, விஞ்சு தொகையானது, தேய்மானத்திற்குற்படற்பாலதான சொத்துக்கள் பயன்படுத்தப்படுகின்ற அல்லது பயன்படுத்தப்பட்ட வியாபாரம் ஒன்றிலிருந்து வரிமதிப்பீட்டாண்டொன்றிற்கான ஆளொன்றின் வருமானத்தை கணக்கிடுவதில் உள்ளடக்கப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) சொத்தின் குறைந்து செல்லும் பெறுமதி, கையுதிர்ப்புக்காக பெறப்பட்ட பிரதிபயனை விஞ்சுகின்றவிடத்து, மேலதிக தேய்மான அனுமதிப்பொன்று, விஞ்சுதொகைக்கு சமமான தொகையொன்றில் ஆண்டுக்காக வழங்கப்படுதல் வேண்டும்.

(2) இப்பந்தியில் -

"தேய்மான அனுமதிப்புச் செலவினம்" என்பது, இவ்வட்டவணையின் கீழ் தேய்மான அனுமதிப்புகள் கிடைக்கக்கூடியதாகவுள்ள செலவினம் எனப் பொருள்படும்; அத்துடன்

சொத்தொன்றின் "குறைந்து செல்லும் பெறுமதி" என்பது, ஆகு செலவில் உள்ளடக்கப்பட்ட செலவினம் தொடர்பில் வழங்கப்பட்ட எல்லா தேய்மான அனுமதிப்புகளையும் கழித்து வரும் அச் சொத்தின் ஆகுசெலவு எனப் பொருள்படும்.

**முடிவுறும் காலப்பகுதி**

3. இவ்வட்டவணையின் பந்தி 1 ஆனது, அது பயனுக்கு வந்து மூன்று ஆண்டுகளின் பின்னர் முடிவுறுதல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்